தொல்காப்பியம்

உரைவளம்

பொருளதிகாரம்

கற்பியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொகுப்பும் குறிப்பும்
ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம்-பொருளதிகாரம்

(உரைவளம்)

கற்பியல்

தொகுப்பும் குறிப்பும்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பிய உரைவளம்
வெளியீட்டுத் திட்டம் — வெளியீடு 22

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Tolkāppiyam-Karpiyal
Compiler	:	*A. Sivalinganar*
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, T.T.T.I. (Post), Taramani, Madras-600 113
Publication No.	:	177
Language	:	Tamil
Date of Publication	:	Nov. 1993
Edition	:	First
Paper used	:	Tamil Nadu Paper 16 Kg
Size of the book	:	21 × 14 cms
Printing types used	:	10, 12 Point
No. of copies	:	1200
No. of Pages	:	XIV + 312
Price	:	Rs. **50**/- (Rupees Fifty Only)
Printers	:	Pavai Printers Pvt. Ltd. Madras-14, Phone: 832441.
Binding	:	Card Board
Artist	:	Sathya
Subject	:	Grammar
Summary	:	Commentaries on Tolkappiyam Karpiyal

டாக்டர் அன்னி தாமசு
இயக்குநர்-பொறுப்பு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113

முன்னுரை

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் **கற்பியல் உரைவளம்** உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய உரைவள வெளியீட்டுத்திட்டத்தின் வாயிலாக வெளிவரும் 22-வது நூலாகும்.

இதன்கண் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. தொகுப்பாசிரியரின் குறிப்புகளும் அங்கங்கு இணைக்கப் பெற்றுள்ளன. சான்றுப்பாடல்களுக்குப் பெரும்பாலும் அடிக்குறிப்பில் பொருள் தரப்பெறுகின்றது. பாட வேறுபாடுகளும் பிற சில இலக்கணக் குறிப்புகளும் வெள்ளை வாரணனார் கருத்துகளும் தேர்ந்து சுட்டப்பெறுகின்றன. இறுதியில், இலக்குவனாரின் ஆங்கில மொழிபெயர்ப்பு இணைக்கப்படுகின்றது.

ஒவ்வொரு நூற்பாவையும் தொடர்ந்து பிற்கால இலக்கண நூல்களில் ஒத்த செய்தி காணப்படின் அவ்வாறே எடுத்து மொழியப்படுவது, ஒப்பீட்டுக் கல்விக்கு உதவுகின்றது.

இவ்வுரைவளத் தொகுப்பைப் பல ஆண்டுகட்கு முன்பே நிறைவாக்கிய அறிஞர் ஆ. சிவலிங்கனாரவர்கள் தமிழுலகின் பாராட்டுக்குரியவர்.

நூல் அச்சாகிய காலை, 'பொருட்சுருக்கம்' மற்றும் நூலின் முன்-பின் பகுதிகளை ஆக்கி உதவிய நிறுவன ஆய்வாளர் திரு. தி.மு. கந்தசாமி, எம்.ஏ., எம்ஃபில், அவர்கட்கு நன்றி.

சென்னை-113 **அன்னி தாமசு**
12-10-93

சுருக்க விளக்கம்

அகம்	—	அகநானூறு
அறநெறிச்	—	அறநெறிச் சாரம்
இல: வி.	—	இலக்கண விளக்கம்
இ-ள்	—	இதன் பொருள்
இளம்	—	இளம்பூரணர்
இறை. கள	—	இறையனார் களவியல்உரை
ஐங்குறு	—	ஐங்குறுநூறு
ஐந். எழு.	—	ஐந்திணை எழுபது
ஐந்திணையெழு	—	ஐந்திணையெழுபது
கலி	—	கலித்தொகை
குறள்	—	திருக்குறள்
குறுந்	—	குறுந்தொகை
சிலப்	—	சிலப்பதிகாரம்
சிவ	—	சிவலிங்கனார்
சூ	—	சூத்திரம்
சொல்	—	சொல்லதிகாரம்
திணை-நூற்	—	திணைமாலை நூற்றைம்பது
தொல்	—	தொல்காப்பியம்
நச்	—	நச்சினார்க்கினியர்
நம்பியகப்	—	நம்பியகப் பொருள்
நற்	—	நற்றிணை
நாலடி	—	நாலடியார்
நெடுநல்	—	நெடுநல்வாடை
பழ	—	பழமொழி
பி.இ.நூ.	—	பிற்கால இலக்கண நூல்கள்
முல்லை	—	முல்லைப்பாட்டு

சூத்திரநுவல் பொருள்

பொருட்சுருக்கம்

தமிழ் இலக்கணம் மூன்று வகைப்படும். அவை: எழுத்து, சொல், பொருள் என்பன. பொருளில் யாப்பு அணி என்பனவும் உட்படும். இவற்றுள், பொருள், பொதுவாக இரண்டு வகைப் படும். அவை: அகம், புறம் என்பன. இவற்றினுள் அகம் களவு என்றும் கற்பு என்றும் இரண்டாகப் பாகுபடும். அவற்றுள் கற்புப் பற்றிக் கூறுகின்ற இயலாகக் கற்பியல் அமைகின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கற்பியல் நான் காவது இயலாக அமைந்துள்ளது. முதலியல் அகம் பற்றிய பொதுச் செய்தியையும் இரண்டாவது இயல் புறம் பற்றிய செய்தியையும் மூன்றாவது இயல் கரணத்திற்கு முன்புள்ள களவு வாழ்க்கையைப் பற்றியும் அமைந்துள்ளன. அதனைத் தொடர்ந்த இயலாகக் கற்பியல் அமைந்துள்ளது. மேலும் கரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையைச் சுட்டுகின்றமையால் இது களவியலுக்கு அடுத்தமைந்துள்ளது.

கற்பு என்பது குறித்து இளம்பூரணம் கூறுகையில் "கற் பென்று சொல்லப்படுவது கரணத்தொடு பொருந்திக் கொள்ளு தற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினை யுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது" (இ. நூ. ப. 2); எனவே கற்பு என்பது கரணத்திற்குப் பிறகு தலைவனும் தலைவியும் கொள்ளுகின்ற வாழ் முறையாகும்.

தொல்காப்பியக் கற்பியல் ஆறு வகையான பொருண்மை களைக் கொண்டது. அவை:

1. மணம் 2. கூற்று 3. ஊடல் 4. அலர் 5. பிரிவு 6. தவம் என்பன.

மணம்

கற்பு என்பது கரணத்தின் அடிப்படையில் அமைவது. கரணம் கொடுப்போர்க்கும் கொள்வோர்க்குமிடையில் நிகழும் நிகழ்வாகும். இது கொடுப்போர் கொள்வோர் உடன்பாட்டிலும் நடைபெறும். கொடுப்பவர் உடன்படாவிட்டால் தலைமக்கள் தாங்களே (உடன்போகி) கரணம் செய்து கொள்வதுமுண்டு. (2)

கரணம் பொய்யும் வழும் தோன்றிய காலத்தில் அதனைக் கட்டுப்படுத்த, பெரியவர்களால் நிகழ்த்தப்பட்ட அமைப்பாகும்.

(4) இது மேலோர் என்று கருதப்படுகின்ற அந்தணர், அரசர், வணிகர் என்ற மூவருக்கு மட்டும் நிகழ்த்தப்பட்டு பிறகு கீழோர் என்கின்ற வேளாளருக்கும் நிகழ்த்தப்பட்டுள்ளது. (3)

கூற்று

கற்பியலில் தலைமகன், தலைவி, தோழி, செவிலி, காமக் கிழத்தி, அறிவர், கூத்தர், இளையோர் ஆகியவர்களின் கூற்று நிகழ்கின்றன.

தலைவன்

கற்பொழுக்கத்தில் 33 சூழலில் தலைவனின் கூற்று நிகழ் கின்றன. அவை: 1. களவு காலத்தில் உள்ள கட்டுப்பாடுகள் கற்புக் காலத்தில் விடுபட்ட நிலையில், 2. மகிழ்ச்சி மிகுதியாக ஏற்பட்ட நிலையில், 3. தலைவியின் கற்புச் சிறப்பைக் கூறு மிடத்து, 4. தலைவியின் மணவாழ்க்கையைக் கூறுமிடத்து, 5. களவு வாழ்க்கையில் ஏற்பட்ட குறைகளை எடுத்துரைக்கு மிடத்து, 6. தோழி ஏழுறு கடவுளை ஏத்துமிடத்து, 7. களவுக் காலத்தில் வருந்திய வருத்தம் தீர்ந்தது என்று கூறுமிடத்து, 8. தலைவியைப் புகழ்ந்துரைக்குமிடத்து, 9. பெரியவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுமிடத்து, 10. களவுக் காலச் சிறப்பை எடுத்துக் கூறுமிடத்து, 11. களவுக் காலக் குற்றங்களை மறந்துவிடுக என்று கூறுமிடத்து, 12. அழியல், அஞ்சல் என்று கூறிய கூற்றைப் பிழைத்த இடத்து, 13. தன்னுடைய குற்றங்களை உடன்பட்டுக் கூறுமிடத்து, 14. தலைவி முனிவர்க்கும் அந்தணர்க்கும் சிறப்புச் செய்யுமிடத்து, 15. பரத்தையின் ஊடலைத் தீர்க்கத் தலைவியை நாடியபோது, 16. தலைவியின் ஊடலைத் தீர்க்குமிடத்து, 17. பிரிவின் காரணமாகத் தலைவிக்கும் காமக்கிழத்துக்கும் ஏற்பட்ட வருத் தத்தைத் தீர்க்குமிடத்து, 18. பிரிவு ஏற்படுகையில் தலைவியின் அச்சத்தைத் தீர்க்குமிடத்து, 19. பிரிவில் ஏற்பட்ட வருத் தத்தை மீண்டும் அனுபவிக்குமிடத்து, 20. பொருளை விட காமம் வலிமையுடையது என்று கூறுமிடத்து, 21. பிரிந்த பிறகு தலைவியின் உயிரைக் குறித்து அஞ்சிய இடத்து, 22. பிரியேன் என்ற சொல்லைப் பிழைத்தவிடத்து, 23. தானும் உடன் வருவேன் என்று தலைவி கூறுமிடத்து, 24. மடமையால் தோழி கூறிய இடத்து, 25. பிரியக் கருதிய போது ஏற்பட்ட துன்பத்தின் போது, 26. பிரிந்து மீண்டு வந்த விடத்து, 27. மீண்டு வரும் போது சிறப்புக் கண்ட இடத்து, 28. அப்போது பாகனிடம் கூறு மிடத்து, 29. மீண்டு வந்த பிறகு தலைவியும் காமக்கிழத்தியும் உசாவியவிடத்து, 30. சென்ற இடத்தில் ஏற்பட்ட வருந்திய வருத்தத்தைக் கூறுமிடத்து, 31. வினை முடிந்து திரும்பிய பிறகு

உறவினரிடம் உசாவிய போது, 32. எதிர் கொள்பவர்கள் வினாவுமிடத்து, 33. எதிர் கொள்பவர்கள் கேட்டபோது எதிர் கூறுமிடத்து, என்ற முப்பத்துமூன்று இடங்களில் கூற்று நிகழும். (5)

தலைவி

கற்பொழுக்கத்தில் தலைவனுக்குக் கூற்றுகள் நிகழ்வது போன்று தலைவிக்கும் நிகழ்கின்றன. தலைவியின் கூற்று பத்தொன்பது சூழலில் அல்லது இடங்களில் நிகழ்கின்றன. அவை: 1. தலைவனை உயர்த்திக் கூறுமிடத்து, 2. தோழி கூறியவாறு தலைவனைத் தான் நிலைபெறுத்துமிடத்து, 3. தலைவனிடம் மாறாத அன்பு கொள்ளுமிடத்து, 4. பிரிவிடத்தில் அலமரல் அதிகரித்த நிலையில், 5. இன்பமும் துன்பமும் ஒருங்கு நேர்ந்த இடத்து, 6. புறத்தொழுக்கத்தால் தலைவன் தனக்கு இளிவரவு தோன்றிய இடத்து, 7. தலைவன் பரத்தமை ஒழுக்கத்தால் பிரிவு நேர்ந்த போது அப்பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டிக் கூறு மிடத்து, 8. தலைவன் தெளிவிக்க முயன்றபோது இதனை எங்கையர்க்கு உரை என்னுமிடத்து, 9. புதல்வனால் தடுக்கப் பெற்ற தலைவனைச் செல்க என விடுக்குமிடத்து, 10. காமக் கிழத்தி புதல்வனைத் தழுவிய விடத்து, 11. பின்புறமாக வந்து தலைவன் ஊடலைத் தீர்க்க முயன்றவிடத்து, 12. தலைவன் ஒழுக்கத்தைக் கொண்டு தன் புதல்வனைப் பழிக்குமிடத்து, 13. ஊடலில் தலைவனை விலக்கிக் கூறுமிடத்து, 14. தன் காலில் விழுந்து ஊடலைத் தீர்க்கமுயன்ற தலைவனிடம்''இது எங்கையர் காணின் நன்றன்று'' என்னுமிடத்து, 15. பரத்தையர் வீட்டிற்கு எடுத்துச் சென்று திரும்பிய புதல்வனை வெகுளுமிடத்து, 16. தலைவன் பொய்ச்சூளுரைத்தவிடத்து, 17. காமக்கிழத்தியைப் பழித்துரைக்குமிடத்து, 18. தோழியை நோக்கிக் காய்தல், உவத்தல் முதலியன பற்றி உரைக்குமிடத்து, 19. வாயில்களை நோக்கிக் கூறுமிடத்து என்ற சூழல்களில் கூற்று நிகழும். (6)

தோழி கூற்று

1. பொருள் முற்றி மீண்ட தலைவனைச் சிறப்பிக்கின்ற இடத்து, 2. களவில் ஏற்பட்ட வருத்தம் கற்பில் நீங்கிய இடத்து, 3. தலைவன் காரணமாகத் தெய்வக் கடன் கொடுக்குமிடத்து, 4. தலைவன் தலைவியை மறந்த நிலையில், 5. தலைவனின் புறத்தொழுக்கத்தால் மனம் வருந்திய தலைவியைத் தேற்று மிடத்து, 6. பரத்தையைப் பிரிந்து வந்தானைத் தலைவிக்குத்

தலையளி செய் என்னுமிடத்து, 7. தலைவனைப் பணிந்த மொழியால் வணங்குமிடத்து, 8. புறம் சென்ற தலைவனின் குற்றத்தை எடுத்துக் கூறுமிடத்து, 9. புதல்வன் பிறந்ததையும் நினையாமல் பரத்தையிடம் தலைவன் தங்கினதால் ஏற்பட்ட தலைவியின் தனிமையைக் கூறுமிடத்து, 10. தலைவியின் நலத்தைத் தந்து போ என்று கூறுமிடத்து, 11. தலைவனின் கொடுமையைத் தலைவி, தன்னிடம் கூறுவதற்கு நாணிய போது, 12. தலைவன் பொய்ச்சூளுரைத்தவிடத்து, 13. பெரியோரின் ஒழுக்கம் பெரிது என்று தலைவனிடம் கூறியபோது, 14. தலைவியின் ஊடலைத் தணிவிக்கும் போது, 15. தலைவியின் ஊடலைத் தணிவிக்குமாறு தலைவன் கோரியபோது, 16. களவுக் காலத்தில் அரியதாக இருந்த நான் கற்புக் காலத்தில் எளிதாக ஆகிவிட்டேன் என்று இரக்கமுற்ற நிலையில், 17. பாணர் முதலியோர் குறை வேண்டிய போது எடுத்துரைக்குமிடத்து, 18. பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனைக் கண்ணோட்டமின்றி விலக்குமிடத்து, 19. தலைவன் சேயிடத்துப் பிரியும்போது அதனை எதிர்த்துரைக்குமிடத்து எனத் தோழிக்குக் கூற்று நிகழும். (9)

அக வாழ்க்கையில் தலைவனுடனும் தலைவியுடனும் மிகவும் தொடர்பு கொள்ளும் ஒரு பாத்திரம் தோழி. பாத்திரத்தின் கூற்றைக் கொண்டும் கூற்றின் எண்ணிக்கையைக் கொண்டும் தொடர்பு கொள்ளும் முறைமையை எடுத்தியம்புகின்றது.

காமக்கிழத்தி கூற்று

தொல்காப்பியக் காலத்தில் தலைவன் தலைவியைத் தவிர்த்த பிற பெண்டிருடன் தொடர்பு கொண்டுள்ளான். அவர்கள் காமக்கிழத்தி என்றும் பரத்தை என்றும் பெயர் பெறுவர். காமக்கிழத்தியர் பின்முறை ஆக்கிக் கொள்ளப்படுவதுமுண்டு. பரத்தையர் ஆடலும் பாடலும் வல்லவர்; அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் நாடி ஒருவர் மாட்டும் தங்காதவர்கள். தொல்காப்பியம் முன்னதாகக் கூறிய காமக்கிழத்திக்கு எட்டுச் சூழலில் அல்லது இடத்தில் கூற்று நிகழ்கின்றன. அவை: 1. புல்லுதலைப் பொருளாகக் கொண்ட புலவி இடத்து, 2. மனையகத்தாரான தலைவனையும் தலைவியையும் இகழும் இடத்து, 3. தலைவியின் புதல்வனைக் கண்டு உவந்தவிடத்து, 4. பொறுக்கலாற்றாத துன்பத்தின் போது, 5. தலைவியைக் காய்தலின்றி உயர்த்திக் கூறித் தலைவன் பால் குற்றத்தைப் பொருத்துமிடத்து, 6. இறுதியாக வந்த புதல்வனை வாயிலாக ஏற்குமிடத்து, 7. தானும் தலைவியை ஒத்தலின் தன்னை ஒத்த

பிறர் தலைவனுக்குத் தேவையில்லை என்றுரைக்குமிடத்து, 8. ஆறும் குளனும் காவும் சென்று ஆடும் விளையாட்டித்து என்பதாக இவள் கூற்று நிகழும்.

செவிலி கூற்று

செவிலி தலைவியின் வளர்ப்புத் தாய். செவிலி தாயைப் போன்று பாசத்தோடும் தோழி போன்று அன்போடும் இருப் பாள். அதனால், தலைவியின் கடந்த கால வாழ்க்கை அல்லது இளமைப் பருவத்தையும் நிகழ்காலத்தின் தன்மையையும் உணர்ந்து, வரும் காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து நிகழ்வுகளைப் பகுத்தாய்ந்து நல்லன வற்றை உரைத்தலும் அல்லனவற்றைக் கடிந்து நல்வழிப்படுத் தலும் செவிலிக்குரிய பண்பாகும் (12). இந்தத் தன்மை அறிவர்க்கும் உண்டு. (13)

கூத்தர் கிளவி

கூத்தர் கிளவி முன்புள்ளவர் இவ்வாறு செய்வர் என்ற வழியும், நுகர்ச்சி இவ்வாறு இனியது என்று புகழ்ந்து கூறிய விடத்தும், இவ்வாறு செய்தல் சரியன்று என்று கூறி ஊடலைத் தவிர்க்குமிடத்தும், ஊடல் தணிந்ததினால் ஏற்பட்ட பயன் இது என்று கூறுமிடத்தும், தலைவியின் கெட்ட அறிவை இது என்று சுட்டிக்காட்டி அதனைக் குறைக்குமிடத்தும், பிறள் ஒருத்தி செய்த பிழையை எடுத்துக்காட்டி இது செய்யின் இது விளையும் என்று கூறி மாற்றுமிடத்தும், தலைவியின் மனந்துணியுமாறு காரணங் காட்டுமிடத்தும் நிகழும் (27). கூத்தர்களின் செயல் பாட்டால் குடும்பத்தில் தலைவன் தலைவிக்கிடையே கருத்து வேறுபாடு மாறி இயல்பு நிலையுண்டாகும்.

தலைவன் பிரிந்தவிடத்துச் சென்று கூறுதலும் தலைவி நின்ற நிலையை எடுத்துரைத்தலும் கூத்தர்க்கு உரிய பணியாகும்.

ஊடல்

தலைமகளுக்குக் களவு காலத்திலும் கற்புக் காலத்திலும் ஊடல் ஏற்படும், கற்பிடத்துத் தலைவி ஊடிய வழி, அவன் தேற்றத் தேறுமெல்லை இகந்தமையாலும் களவில் தலைவி செய்த குறியைத் தானே தப்பிய காலத்தும் சிறிது ஊடல் கொள்வர் (19). ஊடல் பெரும்பிரிவு கற்புக் காலத்தில் நிகழ்வ தால் இது கற்பியலில் வைக்கப்பட்டுள்ளது. தலைவியின் ஊடல் இரண்டு பொருண்மைகளில் அமைந்துள்ளன. ஒன்று தலைவனின்

குறிப்பறிதல் வேண்டியது. மற்றொன்று தலைவி தன்னுடைய அகமலிந்த ஊடல் நீங்குவது. இவ்விடங்களில் தலைவி அயன்மை யுடைய சொல்லைப் பயன்படுத்துவர். (20)

தலைமக்களின் புலத்தலையும் ஊடலையும் தீர்க்க தோழி பேசுவாள். பரத்தமை மறுத்தல், தலைவியிடம் அன்பு கொள்ளாமை என்ற இரண்டு பொருண்மையின் போதும் தலைவனைக் கடிந்துரைக்கும் உரிமை தோழிக்குண்டு (17).

அலர்

தலைவன் தலைவியிடை ஏற்பட்டுள்ள காதல் ஒழுக்கத்தைப் பற்றி ஊரார் பேசுகின்ற பேச்சு அலர். களவு காலத்திலும் கற்பு காலத்திலும் அலர் ஏற்படும் (21). அலர் தூற்றலினால் தலைவனுக்கும் தலைவிக்கும் காமத்தில் அதிக ஈடுபாடு (22) தோன்றும். பரத்தையர் சேரியில் தலைவன் ஆடியும் பாடியும் கண்டும் கேட்டும் இன்பம் நுகரும் விளையாட்டின் போதும் அலர் தோன்றும். (23)

பிரிவு

தலைவன் தலைவியிடை கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதன் காரணமாகப் பிரிவு ஏற்படலாம். கற்பில் ஓதல், தூது, பகை, பரத்தை என்ற முறையில் பிரிவு காணப்படுகிறது.

தவம்

தலைவனும் தலைவியும் தன்னுடைய வாழ்க்கையில் நுகர்ந்த நுகர்ச்சி நிறைவுறுகையில் மேற்கொள்ளும் நிலைதவமாகும்(51). இதனை வெள்ளைவாரணனார் கூறுகையில் ''மனை வாழ்க்கை யினை நிகழ்த்திய கணவன் மனைவி என்னும் இருவரும் தாம் விரும்பிய நுகர்ச்சிகளை நுகர்ந்து மனநிறை பெற்று மனையறத் தினை முடிவு போக நிறைவேற்றிய நிலையிலே தமக்குப் பாது காவலமைந்த பிள்ளைகளுடன் நிறைந்து அறத்தினை விரும்பிய சுற்றத்துடனே (உயிரினும்) சிறந்ததாகிய செம்பொருளை இடை விடாது எண்ணிப் போற்றும் நன்னெறியிற் பழகுதல் இதுகாறும் மேற்கொண்டு நிகழ்த்திய மனையறத்தின் முடிந்த பயனாகும்'' என்று சுட்டுகின்றார்.

தொல்காப்பியம் - பொருளதிகாரம்

உரைவளம்

கற்பியல்

கற்பு

140. கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே (1)

பிற்கால இலக்கண நூல்கள்

நம்பி அகப்பொருள் 171

வரைவு எனப்படுவது உரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

இலக்கண விளக்கம் 528

மாறன் அகப்பொருள் 63

வரைவு எனப்படுவது புரைதீர் கிழவோன்
உரைமலி கற்பின் உத்தமக் கிழத்தியைத்
தந்தையாய் மாதுலன் தம்முன் தமரொடும்
முந்திய-ஆசான் முதலோர் கொடுப்பக்
கரணம் வழுவாது கடியயர்ந்து கொளலே.

இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், கற்பியல் என்னும் பெயர்த்து. கற்புக்கு இலக்கணம் உணர்த்தினமையால் பெற்ற பெயர். கற்பென்பது யாதோவெனின், அஃதாமாறு இச் சூத்திரத்தில் விளங்கும்.

கற்பெனப்......கொள்வதுவே

என்பது சூத்திரம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், கற்பிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்) கற்பென்று சொல்லப்படுவது கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற் குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது என்றவாறு; 'கொளற்குரி மரபின்' என்பதனைக் 'கிழத்தி' என்பதனோடும் கூட்டியுரைக்க.

களவின் கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற் கூடி ஒழுகிய வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின், அஃதாகாதென்றற்குக் "கரணமொடுபுணர" என்றார். கரணம் என்பது—வதுவைச் சடங்கு. கொளற்குரி மரபிற் கிழவோன் என்றதனால் ஒத்தகுலத்தானும் உயர்ந்த குலத்தானும் என்று கொள்க. கொளற்குரி மரபிற் கிழத்தி யென்றதனால் ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளும்[1] என்று கொள்க. 'கொடைக்குரி மரபினோர்' என்றதனால் தந்தையும் தாயும் தன்னையரும் மாதுலனும் இவரில்லாத வழிச் சான்றோரும் தெய்வமும்[2] என்று கொள்க. கொடுப்பக் கொள்வது கற்பு என்றமையால் அது கொடுக்குங்கால், களவு வெளிப்பட்ட வழியும் களவு வெளிப்படாத வழியும் மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியான் உரிமை பூண்டவழியும் கொள்ளப்பெறும் எனக் கொள்க.

---

1. பிறப்பு குலம் முதலியவற்றால் தலைவன் மிக்கிருந்தல் அல்லது தலைவி மிக்கிருத்தல் ஆகாது என்பது நோக்கி இழிந்த குலத்தாள் என்றார்.

2. தெய்வம் என்றது வெறியாடலில் தெய்வம் கூறுவதை நோக்கி. கோயிலில் இறைவன் திருமுன்னர் மணப்பதை நினைந்து கூறியதாகவும் கொள்ளலாம்.

களவியற் சூத்திரத்துள்,
'இன்பமும் பொருளுமறனுமென்றாங்
கன்பொடு புணர்ந்த
(களவியல்-க)

என்பதனைத் தந்துரைத்து ஐந்திணை மருங்கிற் கற்பெனப் படுவது எனக் கூட்டுக.[1]

அஃதேல் கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண்வகையும் கொள்க. ''கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே, புணர்ந்துடன் போகிய காலையான''[2] என்னும் இது கற்பாகுமோ எனின், அவையும் கற்பாதல் ஒக்குமேனும் கந்திருவம் போல ஒத்த அன்புடையாராதல் ஒருதலை யன்மையின் கைக்கிளை பெருந்திணைப்பாற்படும். ஈண்டு ஐந்திணை தழுவிய அகத்திணையே களவு கற்பு எனப்பகுத்தார் என்று கொள்க.

நச்சினார்க்கினியர்

என்பது சூத்திரம். இவ்வோத்துக் களவு கற்பென்னுங் கைகோளிரண்டினுட் கற்புணர்த்தினமையிற்[3] கற்பியலென்னும் பெயர்த்தாயிற்று. கற்பியல் கற்பினது இயலென விரிக்க. இயல்—இலக்கணம்; அஃது ஆகுபெயரான் ஒத்திற்குப் பெயரா யிற்று. அது கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுது குரவர் கற்பித்தலானும் 'அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும், ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்' (146) ஒழுகும் ஒழுக்கந்

1. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
கற்பெனப் படுவது எனக் கூட்டுக.

2. ''கொடுப்போர் இன்றியும்......காலையான...... கற்பாகுமோ எனின்'' என்னும் இவ்வரிகள் தேவையில்லா இடைச் செருகலாகும். நீக்கித் தொடர்க. இது கற்பாகுமோ எனின் என ஒருமையாற் கூறிப் பின்னர் அவையும் எனப் பன்மையால் கூறுவது தவறு. அதனால் '' அஃதேல்...........கொள்க. அவையும் கற்பாதல்'' எனத் தொடர்க.

3. கற்புணர்த்தினமையின் — கற்பிலக்கணம் உணர்த்தினமையின்.

தலை மகன் கற்பித்தலானுங் கற்பாயிற்று. இனித் தலைவனும் களவின் கண் ஒரையும் நாளுந் தீதென்று அதனைத் துறந்தொழு கினாற் போல ஒழுகாது ஒத்தினுங் கரணத்தினும்யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று. களவு வெளிப்பட்ட பின்னராயினும் அது வெளிப்படாமை யாயினும் உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்த வழியாயினும் வரைதல் அக்களவின் வழியாதலின் மேலதனோடு இயைபுடைத்தா யிற்று. இச்சூத்திரம் கற்பிற்கு எல்லாம் பொதுவிலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்-கற்பு எனப்படுவது-கற்பென்று சிறப் பித்துக் கூறப்படுவது, கரணமொடுபுணர-வேள்விச் சடங்கோடே கூட,[1] கொளற்கு உரி மரபிற்கிழவன்—ஒத்த குலத்தோனும் மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினை யுடைய தலைவன், கிழத்தியை-ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளுமாகிய தலைவியை, கொடைக்கு உரி மரபினோர் கொடுப்ப - கொடுத்தற்குரிய முறைமையினையுடைய இருமுது குரவர் முதலாயினர் கொடுப்ப, கொள்வது - கோடற்றொழில் என்றவாறு.

'எனப்படுவது' என்னும் பெயர் 'கொள்வது' என்னும் பெயர்ப் பயனிலை[2] கொண்டது. இது சிறப்புணர்த்துதல் அவ்வச்சொல்லிற்கு' (தொல். சொல். 297) என்னும் சூத்திரத்துட் கூறினாம். 'கொடுப்போரின்றியும்' (143) என மேல்வருகின்ற தாகலின் இக்கற்புச் சிறத்தலிற் சிறந்ததென்றார். இஃது 'என' என்கிளை எச்சமாதலிற் சொல்லளவே எஞ்சி நின்றது. இதனாற் கரணம் பிழைக்கில் மரணம் பயக்கும், என்றார். அத்தொழிலின் நிகழுங்கால் இவளை இன்னவாறு பாதுகாப்பாயெனவும் இவற்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகெனவும் அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திர வகையாற் கற்பிக்கப்படுதலின் அத்தொழிலைக் கற்பென்றார். தலைவன் பாதுகாவாது பரத்தைமை செய்து ஒழுகினும்

---

1. வேள்விச் சடங்கு—திருமணச் சடங்கு.

2. கொள்வது என்பது கொள்ளுதல் எனும் பொருளுடைய தொழிற் பெயராம். அது கொண்டு ஒழுகும் ஒழுக்கத் தைக் குறிக்கும்.

பின்னர் அது கைவிட்டு இல்லறமே நிகழ்த்தித் துறவறத்தே செல்வுனென்றுணர்க. இக் கற்புக் காரணமாகவே பின்னர் நிகழ்ந்த ஒழுகலாறெல்லாம் நிகழ வேண்டுதலின் அவற்றையும் கற்பென்று அடக்கினார். இருவரும் எதிர்ப்பட்ட ஞான்று தொடங்கி உழுவன்பால் உரிமை செய்து ஒழுகலிற் 'கிழவனும் கிழத்தியும்' என்றார். தாயொடு பிறந்தாருந் தன்னையருந் தாயத்தாரும் ஆசானும் முதலியோர் கொடைக்குரியர் என்றற்கு 'மரபினோர்' என்றார்.

உதாரணம்

" உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவைப்
பொருஞ் சோற்ற மலைநிற்ப நிரைகாற்
றண் பெரும்பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனை விளக்குறுத்து மாலை தொடரிக்
கனை யிருளகன்ற கவின் பெறுகாலைக்
கோள்காணீங்கிய கொடுவெண்டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம்பெண்டிர்
முன்னவும் பின்னவுமுறை முறைதரத்தரப்
புதல்வற் பயந்த திதலை யவ்வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த வீரிதழலரி
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத்தமர்தர
வோரிற் கூடியவுடன் புணர் கங்குற்
கொடும் புறம் வளைஇக்கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த வோர் புறந்தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப
வஞ்சின ளுயிர்த்த காலை யாழநின்
னெஞ்சம் படர்ந்த தெஞ்சாதுரையென
வின்னகை யிருக்கைப்பின் யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
வகமலியுவகையளாகி முகனிகுத்

தொய்யென விறைஞ்சியோளே மாவின்
மடங்கொண் மதைஇய நோக்கி
னொடுங் கீரோதி மாஅயோளே".[1] (அகம். 86)

இதனுள், வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறும் தமர் கொடுத்த வாறுங் காண்க. சுற்றஞ் சூழ்ந்து நிற்றலானும் தமர் அறிய மணவறைத் தேறலானும் களவாற் சுருங்கி நின்ற நாண் சிதைந்தமையைப் பின்னர்த் தலைவன் வினவ அவண் மறுமொழி கொடாது நின்றமையைத் தலைவன் தோழிக்குக் கூறியவாறு காண்க. இதனானே இது களவின் வழி நிகழ்ந்த கற்பாயிற்று.

சிவலிங்கனார்

இச்சூத்திரம் கற்பொழுக்கமாவது யாது என்பது உணர்த்து கின்றது.

---

1. பொருள்: உளுந்து பெய்துசமைத்த பொங்கலாகிய உணவுக் குவியல் பலராலும் உண்ணப்பட, வரிசையாகக் கால்களமைத்துப் போடப்பட்ட பந்தரில் புதுமணல் பரப்பி, விளக்கேற்றி, தோரணங்கள் தொங்கவிட்டு, விடியற்காலையில் தீயகோள்களை நீங்கிய திங்களை உரோகணிநாள்கூடியநேரம் வந்ததாக, தலையில் குடம் தாங்கியவரும் கையில் மண்டை எனும் கலம் கொண்ட வருமாகிய திருமணச் சடங்குகளைச் செய்யும் முதிய பெண்டிர்கள் மங்கலப் பொருள்கள் முன்னும் பின்னு மாகத் தரத்தர, புதல்வர் பெற்ற மகளிர் நால்வர் கூடி மணமகளை நோக்கிக் கற்பொழுக்கத்துவழாமல் நல்ல மனையறங்களைச் செய்து கணவன் விரும்பும் பெண் ஆகுக எனக் கூறி நீருடன் அலர்களையும் நெல்லையும் தூவி வாழ்த்த அவை மணமகள் கூந்தலில் விளங்க இப்படித் திருமண நிகழ்ச்சி கழிந்த பின்னர் சுற்றத் தார் சிலர் திடீரென வந்து நீ மனைக்கிழத்தியாவா யாக எனச் சொல்லி என்னுடன் கூட்டத் தனி அறையில் புணர்தற்குரிய இரவிலே, அவள் முதுகு புறத்தை வளைத்து ஆடைக்குள் மறைந்த அவள் உடம்பைத் தழுவி புணரும் விருப்பத்தால் அவள் முகத்தை மூடி யிருந்த கைகளை அகற்றியபோது மாயோளாகிய அவள் அஞ்சியவளாய் பெருமூச் செறிய, யான் உன் மனதில் உள்ளதை மறையாது உரை என்று கூற, அவள் மனமகிழ்ந்தவளாய் ஒய்யென நாணித் தலை கவிழ்ந் தாள்.

இதன் பொருள்: கற்பொழுக்கம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதெனின், கொள்ளுதற்காம் மரபினை உரிமையாகவுடைய ஒருவன், தன்னால் மணந்து கொளற்கு உரிமை பொருந்திய ஒருத்தியைக் கொடுத்தற்குரிய மரபினை யுடைய தந்தையர் தன்னையர் முதலியோர் திருமண விதி முறைப்படிப் பொருந்தக் கொடுக்க மணம் செய்து கொண்டு ஒழுகும் ஒழுக்கமாகும்.

கற்பு என்பது கற்றலையும் கற்பித்தலையும் குறிக்கும். எனவே கற்பு என்பது கிழவனும் கிழத்தியும் தாம் கற்றவாறும் பிறர் தமக்குக் கற்பித்தவாறும் ஒழுகும் ஒழுக்கம் ஆகும். தாம் கற்றவாறு ஒழுகலாவது நூலைக் கற்றவாறும் பிறர் வாழ்க்கை கண்டு கற்றவாறும் ஒழுகல். பிறர் கற்பித்தவறு ஒழுகலாவது கிழவன் கற்பித்தவாறு கிழத்தி ஒழுகலும் இருவரும் தந்தையர் தன்னையர் சான்றோர் முதலியோர் கற்பித்தவாறு ஒழுகலும் ஆம்.

கிழவனும் கிழத்தியும் தாம் கற்றவாறும் பிறர் கற்பித்த வாறும் ஒழுகுவது இல்லிருந்து ஆதலின் இல்லிருந்து அவ்வாறு ஒழுகும் வாழ்க்கை இல்வாழ்க்கை எனப்படும். அதனால் கற்பொழுக்கம் என்பது இல்வாழ்க்கையைச் சிறப்பாகக் குறிக்கும். எனவே இல்வாழ்க்கை நிகழ்ச்சிகளே கற்பியலிற் கூறப்படும் என்க.

ஒவ்வொன்றற்கும் விதிமுறைப்படிச் செய்யும் செயல் கரணம் எனப்படும். அதனைச் சடங்கு என்றனர் பிற் காலத்தார்.

கொளற்குரிய மரபாவது பிறப்பு குடிமை முதலியவற்றால் கிழத்தியோடு ஒத்தும் அல்லது மிக்கும் அமைந்த முறைமை. களவின் வழிவந்தாராயின் கிழத்தியை மணந்தேயாக வேண்டும் என்னும் முறைமை.

கொளற்குரிய மரபுடையவனைக் கிழவன் என்றதற்கு ஏற்பக் கிழத்தி என்பதும் கொளப்படற்குரிமையுடையாள் என்பதை உணர்த்தும்.

புறனடை

141. கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையான (2)

பி.இ.நூ.

நம்பி அகப் பொருள் 57

களவின் வழிவந்த கற்பின் புணர்ச்சி
கிளைஞரின் எய்தாக் கேண்மையும் உடைத்தே
உடன்போய் வரைதலும் உண்மை யான

இலக்கண விளக்கம் 425

நம்பியகப்பொருட் சூத்திரமே.

மா. அக.

கொண்டுதலைக் கழிந்துழிக் கொடுப்போர் இன்றியும்
கரணம் உண்டெனக் கழறினர் புலவர்.

இளம்

இது மேலதற்கோர் புறனடை.

(இ-ள்) கொடுப்போரின்றியும் கரண நிகழ்ச்சி உண்டு, புணர்ந்துடன் போகிய காலத்து என்றவாறு.

எனவே கற்பிற்குக் கரண நிகழ்ச்சி ஒருதலையாயிற்று. இதன்னேறே கொடுப்போரில்வழியும் கரண நிகழ்ச்சி உண்மையும் ஒழுக்கக் குறைபாடுஇன்மையும்[1] கொள்க.

''பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொல் மூதாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழியாய் கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே''[2] (குறுந்-15)

---

1. உடன்போக்கும் உடன் போய பின்னர் சென்ற விடத்துத் தாமே கரண நிகழ்ச்சி கொண்டு மணப்பதும் ஆகியவை ஒழுக்கக் குறைபாடுடையன அல்ல என்பது கருத்து.

2. பொருள் : தோழீ! ஆலமரத்துக்கீழ்ப் பொதுமன்றத்தில் வந்து தங்கிய நாலூர்க்கோசர் சொல் தவறாதவர்கள். அவர்கள் சொல் என்றும் நல்லதாக அமையும். அந்நாலூர்க் கோசர் நன்மொழி உண்மையாவதுபோல வெள்வேல் விடலையொடு நம் மடந்தை பறை யொலிக்கச் சங்கு முழங்கக் கொண்ட நட்பு உண்மை யாகியது.

இதனுள் விடலையொடு மடந்தை நட்பு பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொண்டு நாலூர்க்கோசர் நன்மொழிபோல வாயாயிற்று எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும், விடலை எனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறினமையானும் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்ந்தவாறு காண்க.

நச்

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி.

இதன்பொருள்:—கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே—முற்கூறிய கொடைக்குரிய மரபினோர் கொடுப்பக் கோடலன்றியுங் கரணம் உண்டாகும்; புணர்ந்து உடன் போகிய காலையான—புணர்ந்து உடன் போகிய காலத்திடத்து என்றவாறு.

இது புணர்ந்து உடன் போயினார் ஆண்டுக் கொடுப்போரின்றியும் வேள்வியாசான் காட்டிய சடங்கின் வழியாற் கற்புப் பூண்டு வருவதும் ஆமென்றவாறு. இனி ஆண்டு வரையாது மீண்டு வந்து கொடுப்பக்கோடல் உளதேல் அது மேற்கூறியதன் கண் அடங்கும். இனிப் போயவழிக் கற்புப்பூண்டலே கரணம் என்பாருமுளர். எனவே கற்பிற்குக் கரணம் ஒருதலையாயிற்று.

'' பறைபடப் பணிலமார்ப்ப விறைகொள்பு
தொன்முதாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழிபோல
வாயாகின்றே தோழி யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தைநட்பே ''[1] (குறுந்-15)

இதனுள் 'வாயாகின்று' எனச் செவிலி நற்றாய்க்குக் கூறியமையானும் 'விடலை' எனப் பாலை நிலத்துத் தலைவன் பெயர் கூறினமையானும் இது கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்தது. 'அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட்குறுமகள்' (அகம்-195) என்பதும் அது.

---

1. பொருள் பக்கம் 8ல் காண்க.

சிவ

இச்சூத்திரம் களவொழுக்கம் மேற்கொண்டவர் உடன் போக்கினை மேற்கொண்டு சென்ற இடத்திலேயே கற்பொழுக் கத்தைப் பெறுதலாம் என்கின்றது.

இ—ள் : கொடுத்தற்குரியராகிய தந்தையர் தன்னையர் முதலியோர் இல்லாமலும் திருமண விதிமுறைகளின்படிக் கற்பொழுக்கத்தை மேற்கொள்ளலும் உண்டு; அது எப்போ தெனின் களவில் கிழவனும் கிழத்தியும் புணர்ந்துடன் போகிய காலத்தில் என்க.

இக்கற்பு மேற்கோடலானது கிழவன் கிழத்தியர் ஊர்களில் ஒன்றில் நிகழ்வதின்றி உடன்போய காலத்து யாதேனும் ஓர் ஊரில் சான்றோர் முன்னிலையில் நிகழ்வதாகும்.

கரணம் உண்டு என்பதற்குக் கரணமொடு பொருந்த மேற்கொள்ளும் கற்பொழுக்கம் எனப் பொருள் கொள்க. கொடுப்போர் இல்லையாயினும் சென்ற ஊரில் உள்ள சான்றோரே கொடுப்போராவர் என்க. எனவே இதுவும் கொடுப்பக் கொள்வதாகவே அமையும்.

142. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே (3)

பி. இ. நூ.

மா. அ 168

மேலோர் கரணமும் கீழோர் கரணமும்
நூலோர்ந் துரைத்த நுண்ணிய மார்க்கம்
வேற்றுமைப்பட விதித்தனர் . துறவுடையோரே.

இளம்

இதுவுமது.

இ—ள் : மேற்குலத்தாராகிய அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூன்று வருணத்தார்க்கும் புணர்ந்த கரணம் கீழோராகிய வேளாண்மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு என்றவாறு.

இதனாற் சொல்லியது முற்காலத்துக் கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும் பிற்காலத்து வேளாண்

மாந்தர்க்குத் தவிர்ந்தது எனவும் கூறியவாறு போலும். அஃதாவது தரும சாத்திரம் வல்லாரைக் கொண்டுணர்க.[1]

நச்

இது முதலூழியில் வேளாளர்க்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்— வேதநூல்தான் அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம், கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டு— அந்தணர் முதலியோர்க்கும் மகட்கொடைக்குரிய வேளாண் மாந்தர்க்குந் தந்திரமந்திர வகையான் உரித்தாகிய காலமும் உள என்றவாறு.

எனவே, முற்காலத்து நான்கு வருணத்தார்க்கும் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது என்பதாம். அஃது இரண்டாம் ஊழி தொடங்கி வேளார்க்குத் தவிர்ந்தது என்பதூஉந் தலைச் சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தார் என்பதூஉங் கூறியவாறாயிற்று. உதாரணம் இக்காலத்திலின்று.

சிவ

இச் சூத்திரம் திருமண விதிமுறைகளுக்குரியார் யார் என்பது கூறுகின்றது.

இ-ள்: அந்தணராகிய மேலோர் அரசர்வணிகர் வேளாளர் என்ற மூவர் ஆகிய நால்வருக்கும் விதித்த கரணம் அடியோர் பாங்கு வினைவல பாங்கு முதலிய கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டு என்றவாறு.

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர் ஆதலின் அந்தணர் மேலோர் எனப்பட்டனர். அந்நால்வரின் கீழ்ருந்து குடிமக்களாய் ஏவல் செய்து வாழ்தலின் அடியோர் பாங்கும் வினைவலபாங்கும் கீழோர் எனப்பட்டனர்.

---

1. இவ்வுரைக்கேற்ப இச்சூத்திரப் பொருள் வருமாறு: இக்காலத்தில் அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூன்று மேற்குலத்தார்க்கும் புணர்த்த கரணம் முற்காலத்தில் வேளாளர்க்கும் உரியதாய் நால்வருக்கும் ஆகி இருந்ததும் உண்டு. நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும் பார்க்க.

கரணங்கள் அந்தணர் முதலிய நால்வர்க்கே முதலில் விதிக்கப்பட்டன. கீழோர் தாம் வேண்டியவாறு ஒழுகுபவ ராதலின் கரணம் அவர்க்கு இயையாதாயிற்று. பின்னர் அவர்க்கும் நால்வர்க்குப் புணர்த்த கரணம் உரியதாக வகுத்தனர். தொல்காப்பியர் காலத்து யாவர்க்கும் கரணம் பொதுவாகவே அமைந்தது. அதனால் அவர் கீழோர்க்காகிய காலமும் உண்டு எனத்தங்காலத்துக்கு முன்னரே வகுத்த நிகழ்ச்சிபோல் கூறினார்.

மேலோராகிய அந்தணர், தமக்கேயன்றி மற்றை அரசர் வணிகர் வேளாளர் ஆகிய மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோராகிய அடியோர் பாங்கு வினைவல் பாங்கு முதலிய வர்க்கும் ஆகிய காலமும் உண்டு எனினும் ஆம்.

கரணம் வரக் காரணம்

143. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (4)

பி. இ. நா.

மா. அ 168

மேலோர் கரணமும் கீழோர் கரணமும்
நூலோர்ந் துரைத்த நுண்ணிய மார்க்கம்
வேற்றுமைப்பட விதித்தனர் பொய்யும் வழுவும்
தோற்றிய பின்னர்த் துறவுடையோரே.

இளம்

என்றது கரணமாகியவாறு உணர்த்துதல் நுதலிற்று

(இ—ள்:) பொய்கூறலும் வழூஉப்பட ஒழுகலும் தோன்றிய பின்னர் முனிவர் கரணத்தைக் கட்டினர் என்று சொல்வர் என்றவாறு.

இரண்டும் தோன்றுவது இரண்டாம் ஊழியின்கண்[1] ஆதலின் முதலூழியிற்[2] கரணம் இன்றியே இல்வாழ்க்கை நடந்தது என்பதூஉம் இவை தோன்றிய பின்னர்க் கரணந்

1, 2. இரண்டாம் ஊழி முதல் ஊழி என்பன கால இடைவெளிகளைக் குறிப்பனவாகக் கொள்ளல் நன்று.

தோன்றினது என்பதூஉம் கூறியவாறாயிற்று. பொய்யாவது செய்ததனை மறைத்தல். வழுவாவது செய்ததன்கண் முடிய நில்லாது தப்பி யொழுகுதல். கரணத்தொடு முடிந்த காலையின் அவை இரண்டும் நிகழாவாம் ஆதலாற் கரணம் வேண்டுவ தாயிற்று.

நச்

இது, வேதத்திற் கரணம் ஒழிய ஆரிடமாகிய கரணம் பிறந்தவாறும் அதற்குக் காரணமுங் கூறுகின்றது.

இதன் பொருள்:— பொய்யும் வழுவுந்தோன்றிய பின்னர் ஆதி ஊழி கழிந்த முறையே அக்காலத் தந்தந் தொடங்கி இரண்டாம் ஊழி முதலாகப் பொய்யும் வழுவுஞ் சிறந்து தோன்றிய பிற் காலத்தே ஐயர் யாத்தனர் கரணம் என்ப, இருடிகள் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் வேறுபடக் கட்டினாரென்று கூறுவர் என்றவாறு.

ஈண்டு 'என்ப' என்றது முதனூலாசிரியரையன்று[1] வடநூலோரேக் கருதியது. பொய்யாவது: செய்த ஒன்றனைச் செய்திலே னென்றல், வழுவாது சொல்லுதலே அன்றி ஒழுக் கத்து இழுக்கி ஒழுகல். அஃது அரசரும் வாணிகருந் தத்தம் வகையாற் செய்யத் தகுவன செய்யாது சடங்கொப்புமை கருதித் தாமும் அந்தணரோடு தலைமை செய்தொழுகுதலுங் களவொழுக்கத்தின் இழுக்குதல் போல்வனவும் அவர்க்கிழுக்கம். ஏனை வேளாளரும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்ப் பொய்யும் வழுவுந் தோன்றி வழுவுதல் அவர்க்கிழுக்கம். இவற்றைக் கண்டு இருடிகள் மேலோர் மூவர்க்கும் வேறுவேறு சடங்கினைக் கட்டி கீழோர்க்குங் களவின்றியும், கற்பு நிகழும் எனவும் சடங்கு வேறு வேறு கட்டினர். எனவே, ஒருவர் கட்டாமல் தாமே தோன்றிய கரணம் வேத நூற்கே உள தென்பது பெற்றாம். ஆயின் கந்தருவ வழக்கத்திற்குள் சிறந்த களவு விலக்குண்ட தன்றோ எனின் ஒருவனையும் ஒருத்தி யையும் எதிர்நிறீஇ 'இவளைக் கொள்ள இயைதியோ நீ' எனவும், 'இவர்க்குக் கொடுப்ப இயைதியோநீ' எனவும், இருமுதுகுரவரும் கேட்ட வழி அவர் கரந்த உள்ளத்தான் இயைந்த வழிக் கொடுப்பவாகலின் அதுதானே ஒருவகை யாற் கந்தருவ வழக்கமாம். களவு ஒழுக்கம் நிகழாதாயினும் என்பது கரணம் யாத்தோர் கருத்தென்பது பெற்றாம்.

---

1. தமிழிலக்கணம் செய்த முதல் நூலாசிரியரையன்று

இதனானே இயற்கைப் புணர்ச்சிக்கண் மெய்யுறு புணர்ச்சியையும் உள்ளப் புணர்ச்சியென்று கூறி அதன் வழிக் கற்பு நிகழ்ந்த தென்றுங் கூறவும் படும். இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின் முதனூலாசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழுமாறுங் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறுங் கூறினார். அக்களவின் வழி நிகழ்ந்த கற்புங் கோடற்கென்று உணர்க.

* **உதாரணம்**

''மைப்புறப் புழுக்கி நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந்தினிய வாகத் தெள்ளொளி
யங்கணிரு விசும்பு விளங் கத்திங்கட்
சகடம் வேண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப் பணையிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணு மிமையோர் நோக்குபு மறைய
மென்பூவாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று குறிக்கும் பயம் பமலறுகைத்
தழங்குரல் வானந் தலைப் பெயற்கீன்ற
மண்ணு மணியன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத்துவன்றி
மழைபட்டன்ன மணன் மலிபந்த
ரிழையணி சிறப்பிற் பெயர் வியர்ப் பாற்றித்
தமர் நமக்கீந்த தலைநாளிரவி
னுவர் நீங்கு கற்பினெ முயிருடம் படுவி
முருங்காக் கலிங்க முழுவதும் வளைஇப்
பெரும் புழுக் குற்றநின்பிறை நுதற் பொறிவிய
ருறுவளி யாற்றச் சிறுவரை திறவென
வார்வநெஞ்சமொடு போர்வை வௌவலி
னுறைகழி வாளி னுருவு பெயர்ந்திமைப்ப
மறைதிறனறியாளாகி யொய்யென
நாணினளிறைஞ்சி யோளே பேணிப்

---

* இப்பாடலில் ஆரியச்சடங்கு யாதொன்றும் இல்லாமையும் தமிழ்ச் சடங்கேயுள்ளமையும் காண்க.

பருஉப்பகையாம்பற் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பி மிராய் மலர் வேய்ந்த
விரும்பல் கூந்தலிருண் மறையொளித்தே''[1]

(அகம்-136)

எனவரும்.

சிவ

இச் சூத்திரம் கரணம் தோன்றிய காலம் உணர்த்துகின்றது.

இ-ள் : தமிழரல்லாப் பிறர் தலையீட்டால் தமிழரிடையே பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்த் தமிழ் முனிவர் கரணங்களை வகுத்தனர் என்பர் முன்னோர்.

பொய்யாவது கொளற்குரிய மரபை மாற்றிக் கூறுதலும் கொடைக்குரியோரை மாற்றுதலும் நிகழ்ந்ததை நிகழவில்லை என்பதும் போல்வது. வழுவாவது மணமுறைகளை மாற்றிச் செய்வது. அவரவர் தொழில் முறைக்கேற்பச் செய்யாது மாற்றி வேண்டியவாறு செய்தலும் ஆம். யாத்தல் - ஒன்றன்பின் ஒன்றை இணைத்துக் கட்டுதல். மணம் செய்முறைகளை இதன்

---

1. பொருள்: நெஞ்சமே! இறைச்சியொடு கூடிய நெய்ச் சோற்றைச் சுற்றத்தார்க்கு விருந்திட்டு, புள்ளின் சகுனம் பார்த்து, திங்களை உரோகிணி கூடிய நல்ல நேரத்தில், மனையை அலங்கரித்து, கடவுள் வாழ்த்தி, முரசமொடு சங்கு ஒலிப்பத் திருமணச் சடங்கைச் செய்த மகளிர் விரைவாகத் தம் கண்களால் நோக்கி மறையச் சுற்றத்தார் வாகையின் கவர்ந்த இலையை அறுகம் புல்லின் கிழங்கிடத்து அரும்பிய அரும்புகளுடன் சேரக் கட்டிய நூலை மணமகளுக்குச் சூட்டி ஆடையாற் பொலிவு பெறச் செய்து விருப்பம் பொருந்தச் செய்து மணவொலியுடைய பந்தரில் அவளுக்கு இழையணிந்த சிறப்போடு உண்டாய வியர்வையை மாற்றி நமக்கு ஈந்த அந்த முதல் நாள் இரவில் சிறந்த கற்புடைய நம் உயிர்க்கு உடம்பாக அடுத்த அவளை நோக்கி யான், கசங்காத ஆடை உடம்புமுழுதும் போர்த்தமையால்நின் நெற்றி வியர்த்தது; அது ஆறுமாறு காற்று வீசநின்முகப் போர்வையைச் சிறிது திறப்பாயாக எனக் கூறி ஆர்வத்தால் போர்வையை விலக்கினேன்; அப்போது உறையிலிருந்து கழிக்கப்பட்ட வாள் ஒளி விடுவது போலத் தன் உடம்பு ஒளியுடன் தோன்ற உடனே மறையும் இடம் அறியாளாய் ஒய்யென நாணித் தன் கூந்தலால் மறைப்பிடங்களை மறைத்த வளாய்த் தலை கவிழ்ந்து நின்றாள்.

பின் இது எனச் சீர்ப்படுத்தி வகுத்தனர் என்பது யாத்தனர் என்பதால் விளங்கும்.

பழங்காலத்தில் தமிழரிடையே களவு கற்பு என்னும் கைகோள் இரண்டும் முறையாகவே போற்றும்படி நிகழ்ந்தன என்பதும், இடையில் அவை பொய்யும் வழுவும் கலந்து நிகழத் தொடங்கின என்பதும், அது கண்ட முனிவர் முறைப்படுத்தினர் என்பதும் இவை தொல்காப்பியர் காலத்துக்குப் பல நூற்றாண்டுக்கு முன்னர் நிகழ்ந்தன என்பதும் புலனாம்.

பிறர் தலையீட்டால் பொய்யும் வழுவும் தோன்றுவதை இக் காலத்தும் காணலாம். ஒளிவிளக்கு ஏற்றுதற்குப் பதிலாகப் பிறந்த நாளில் விளக்கு அவிக்கும் சடங்கு தமிழரிடையும் வரக் காரணம் மேலை நாட்டார் வரவேயாம் அன்றோ? திருமண நாளிலேயே மணமக்களை அருந்ததி கண்டதாகச் சொல்லச் செய்து பொய்யைப் புகுத்தும் சடங்கு இன்று நிகழ்கின்றதன்றோ?

தலைவன் கூற்று

144. கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை யவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி யிறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும் சொல்லென
ஏனது சுவைப்பினும் நீனகத் தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்[1]
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி

1. தொடுதற் கண்ணும்—பாடம்

அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்
அந்தரத்து எழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சல் என்றாயிரு பொருளினும்
தானவட் பிழைத்த பருவத்தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப்[1]
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்த புனிறுதீர்[2] பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது[3]
உயங்குவனள்[4] கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல்[5] முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின்[6] ஊடல்மிகுத் தோனைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பிரிவு நீக்கிய[7] பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்
சென்றுகை யிகந்துபெயர்த் துள்ளிய வழியும்
காமத்தின் வலியும் கைவிடின் அச்சமும்
தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறற் செய்கையொ டன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழி கண்ணும்[8]
வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்
மீட்டுவரை வாய்ந்த வகையின் கண்ணும்
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்
பேரிசை யூர்திப் பாகர் பாங்கினும்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்

---

1. *மெய்கொள வருளிய—நச். பாடம்*
2. *புதல்வர்ப் பயந்த புனிறு சேர்–பாடம்*
பாடம்:
3. *துணையணை புல்லிய புல்லாது*
4. *உயங்கவள்*
5. *புல்கென*
6. *உறலருங் குண்மையின்*
7. *பிரிவின் நீக்கிய*
8. *தோழிக்கண்ணும்*

ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்றே தேஎத்து உழப்புநனி விளக்கி
இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்
அருந்தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை யேந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனைய வாயிலோர் எதிரொடு தொகைஇப்
பண்ணமை பகுதிமுப் பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன. (5)

இளம்

இது தலைவற்குரிய கிளவியெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: கரணத்தின் அமைந்து முடிந்தபின்பு நெஞ்சுதளை யவிழ்ந்த புணர்ச்சி முதலாக ஏனை வாயிலோரெர்திரொடு கூடிப் பண்ணுதல் அமைந்த பகுதியினையுடைய முப்பதின் மூன்றிடத் தினும் கூறல் எண்ணுதற்கரிய சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றவாறு.

இடம் என்பது வகையிற் கூறியவதனால் உரைக்கப்பட்டது. கூற்றென்பது வருகின்ற சூத்திரத்தினும் கொணர்ந்துரைக்கப் பட்டது*.

கரணத்தினமைந்து முடிந்த காலை என்பது–ஆசான் புணர்த்த கரணத்தினால் வதுவை முடிந்தபின் என்றவாறு.

---

* சூத்திரத்தில் முப்பதின் ஒரு மூன்றும் என்று கூறப்பட்ட தானது முப்பத்து மூன்றுதான் என்பதின்றி முப்பத்து மூன்று வகை என்பதை உணர்த்துமாதலின் அவ் வகைகள் அவை நிகழும் இடங்களையுணர்த்தும். அதனால் முப்பதின் ஒரு மூன்றும் என்பதற்கு முப்பத்து மூன்று இடங்களிலும் எனப் பொருள் உரைக்கப் பட்டது.

முப்பத்து மூன்றிடத்தினும் கிழவோன்மேன என்றால் தொடர் ஒழுங்கில்லையாதலின் முப்பத்து மூன் றிடத்திலும் கூறல் என்று பொருள் கொள்ள வேண்டுவ தாயிற்று. அக்கூறல் என்பது அடுத்துவரும் சூத்திரத் தில் (6) கிழவோள் செப்பல் என வருவதில் செப்பல் என வருவதில் செப்பல் (கூறல்) என்பது இங்குக் கொணர்ந்து கூட்டியுரைக்கப்பட்டது.

நெஞ்சு தளையவிழ்தலாவது-தலைவியைத் தலைவன் கண்ணுற்ற ஞான்று தலைவன் மாட்டு உளதாகிய பெருமையும் உரனும் தலைவிமாட்டு உளதாகிய அச்சமும் நாணும் மடனும் ஏதுவாக இயற்கைப்புணர்ச்சி இடையீடுபட்டுழி வேட்கை தணியாது வரைந்தெய்துங்காறும் இருவர் மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டுவிடப்படுதல். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் அலரறிவுறுக்கப்பட்டு நீங்கி வரைந்தெய்துங் காறும் புணர்ச்சி வேட்கையாற் செல்கின்ற நெஞ்சினை இருவரும் வேட்கை தோற்றாமல் தளைக்கப்பட்டதனைத் தளை என்றலும் ஒன்று. இவையிரண்டினும் மிகுதி[1] பொருளாகக் கொள்க.

உதாரணம்

“உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ் சோற்றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனை விளக்குறுத்து மாலைதொடரிக்
கனையிருள் அகன்ற கவின் பெறுகாலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம்பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர் பயந்த திதலை யவ்வயிற்று
வாலிழை மகளிர் நால்வர்கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடுதயங்க
வதுவை நன்மணங் கழிந்தபின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத்தமர்தர
ஓரிற் கூடியவுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக்கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினன் கிடந்தனள் ஓர்புறந்தழீஇ

1. மிகுதி-சிறப்பு. சிறப்புடையதை இங்குப் பொருளாகக் கொள்க என்பது.

முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சா துரையென
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலின்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி உவகையாள்ஆகி முகன் இகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீ ரோதி மாஅயோளே''[1]

(அகம்-86)

இதனுள் 'முயங்கல் விருப்பொடுமுகம் புதை திறப்ப அஞ்சினள் உயிர்த்த காலை' என்பதனால் இயற்கைப் புணர்ச்சி யின்மையும் 'அகமலி யுவகையளாகி முகனிகுத்து ஒய்யென விறைஞ்சி' என்பதனால் உள்ளப் புணர்ச்சி யுண்மையும் அறிக. பிறவும் அன்ன.

எஞ்சா மகிழ்ச்சி யிறந்து வரு பருவத்தும் என்பது-ஒழியாத மகிழ்ச்சி மிக்கு வருங்காலத்துத் தலைவன்கட்கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"குனிகா யெருக்கின் குவிமுகிழ் விண்டலொடு
பனிவார் ஆவிரைப் பன்மலர் சேர்த்தித்
தாருங் கண்ணியுந் தைஇத்தன்னிட்டு
ஊரும் மடவோன் உலர்வன் கொல்லென
நீர்த்துறைப் பெண்டிர் நெஞ்சழிந்திரங்கினும்
உணராளூர் தோறு
அணிமடற் கலிமா மன்றத் தேறித்தன்
அணிநலம் பாடினும் அறியா ளென்றியான்
பெருமலை நெடுங்கோடேறிப் பெறுகென்று
உருமிடித் தீயின் உடம்பு சுடர்வைத்த
என்னுறு விழுமம் நோக்கிப் பொன்னொடு
திருமணி இமைக்குங் கோடுயர் நனந்தலை
இரவுடைப் பெண்டிரிடும்பை நோக்கித்
தெளிவு மனங்கொண்ட தீதறு காட்சி
வெளியன் வேண்மாள் விளங்குகரிபோல

1. பொருள்: பக்கம் 6ல் காண்க.

மலிகடல் உடுத்த மணங்கெழு நனந்தலைப்
பலபாராட்டவும் படுவமாதோ
கடைந்து கவித்தன்ன கால்வீங்கு கருங்கட்
புடைதிரள் வனமுலை புலம்பல் அஞ்சிக்
காமர் நுழைநுண் நுசுப்பின்
தாமரை முகத்தியைத் தந்தபாலே[1]

(குணநாற்பது)

எனவரும்.

அஞ்ச வந்த உரிமைக் கண்ணும் என்றது-தலைவன் தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவி மாட்டு உளதாகிய கற்பாகிய உரிமைக் கண்ணும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.[2]

---

1. 'அறிதோறறியாமை' என்னும் குறளை நச்சினார்க்கினியர் காட்டியதே மிகப் பொருந்தும்.
பொருள்: எருக்க மலரொடு ஆவிரை மலரைச் சேர்த்திக் கட்டிய தாரும் கண்ணியும் கட்டித் தானணிந்து மடலூரும் மடவோன் இறந்துபடுவன் போலும் என நீர்த்துறைப் பெண்டிர் இரங்கவும் அதனை உணராதவளாயும், பொதுமன்றத்தேறி அவள் நலம்பாடினாலும் அறியாதவளாயும் உள்ள அவளை நான் வரைபாய்ந்து அடைவேன் என்றுகூறி உடம்பில் வெப்பம் மிகக் கொண்ட என் துன்பத்தைப் பார்த்து, பொன்னும் மணியும் உடைய தலையுடைய இரவுடைப் பெண்டிரின் துன்பம் நோக்கித் தெளிவுமனம் கொண்ட வெளியன் வேண்மாள் என்பவன் கூறிய கரியானது (சான்று) பலராலும் பாராட்டப்படுவது போலக் கடைந்து கவிழ்ந்து வைத்தாற்போல உள்ள கருங்காம் புடைய புடைதிரண்ட முலைகளையும், நுசுப்பையும் தாமரை முகத்தையும் உடைய இத்தலைவியை யான் நினைந்து புலம்புதற்கு அஞ்சி எனக்குத் தந்த ஊழ் பலவாகப் பாராட்டப் பொருந்துவதாகும். இது களவு நிகழ்ச்சியில் அரிதாகிய புணர்ச்சி கற்பில் அரிதின்றி நிகழ்வதைக் கருதிக் கூறியது எனக் கொள்க.

2. உதாரணம் நச்சினார்க்கினியர் காட்டியதே சாலும்.

''கோவலன் கண்ணகியை நோக்கி,
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுது குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழுவெனும் பாரேன்
எழுகென எழுந்தாய் என்செய்தனை'' (சிலப்)

எனக்கூறியதைக் கொள்ளலாம்—சிவ.

நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளினும் என்றது- நன்னெறிக்கட் செல்லா நின்ற தொன்னலப் பொருண்மைக் கண்ணும் என்றவாறு.

நன்னெறியாவது அறம் பொருளின்பம் வழுவாதநெறி. தலைமகன் சிறப்புத் தொன்று தொட்டு வருதலிற் குடிநலத்தைத் தொன்னல மென்றார். இதனாற் சொல்லியது அறம்பொருள் இன்பங்களை வழாமல் தன் குலத்திற் கேற்ற மனைவாழ்க் கையைத் தலைமகள் நடத்துதற் கண்ணும் தலைவன்கண் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண் தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறை நுதற் பொறித்த சிறு நுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டிலோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று
சிறிய முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங் காண்கம்மே''[1].

(நற்றிணை-120)

இதனுள் ஊடற் குறிப்பினளாகிய தலைவி மனைவாழ்க்கைத் தருமமாகிய விருந்து புறந்தருதல் விருப்பினளாதலின் நன்னெறிப் படர்தல் ஆயிற்று.

---

1. பொருள்: எருமைக் கன்றுகள் கட்டப்பட்டு காண்தகும் வீட்டில், காதணியுடைய செய்ய பேதையாகிய நம் தலைவியானவள் விரல் சிவக்கும்படி வாழையிலை அரிந்து தண்டு பிளந்து ஒழுங்குபடுத்தித் தாளிதப் புகையுண்ட கண்ணளாய் நெற்றிவியர்வையைப் புடைவைத் தலைப்பால் துடைத்து நம்மையும் புலந்த வளாய்ச் சமையல் அறையில் உள்ளாள். இப்போது எங்களுக்கு விருந்து வருக; வரின் அவள் என்னைச் சினவாள். சிறிய முட்போலும் பல் சிறிது தோன்ற விருந்தை வரவேற்கப் புன்முறுவல் கொள்ளும் அவள் முகத்தைக் காண்போம்,

பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்துரைப்பினும் என்றது-வரைந்து பெற்றவழித் தலைவியைப் பெருமையின் கண்ணே நிறுத்திக் களவுக் காலத்துக் குற்றஞ்சான்ற பொருளை யெடுத்துக் கூறிய வழியும் என்றவாறு.

உதாரணம்

> ''அதிரிசையருவிய பெருவரைத் தொடுத்த
> பல்தேன் இறாஅல் அல்குநர்க் குதவு
> நுந்தை நன்னாட்டு வெந்திறல் முருகென
> நின்னோய்க்கியற்றிய வெறி நின்தோழி
> என் வயினோக்கலிற் போலும் பன்னாள்
> வருந்திய வருத்தந் தீரநின்
> திருந்திழைப் பணைத்தோள் புணர்ந்து வந்ததுவே''[1]

இதனுள் 'நுந்தை நன்னாட்டு' என்றதனால் தலைவி பெருமையும் நின்னோய்க்கியற்றிய வெறி நின்தோழியென் வயினோக் கலிற்போலும்' என்றதனால் குற்றஞ்சான்ற பொருள்[2] என்பதும் அறிந்து கொள்க.

நாமக் காலத் துண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும் என்பது-அச்சக் காலத்து நமக்குத் துணையாயிற் றெனத் தோழி ஏமுறு கடவுளை ஏத்துதற் கண்ணும் தலைவன் கட் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம் வந்த வழிக் காண்க.

அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும் என்பது-தலைவி தன் துன்பந்தீர ஆர்வத்தொடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மைக் கண்ணும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு, என்றது களவுக் காலத்து வருந்திய

---

1. பொருள்: தலைவியே! யான் பலகால் வருந்திய வருத்தம்தீர நின்தோளைப் புணர்ந்து (மணம் செய்து) வந்ததற்குக் காரணம் களவுக் காலத்தில் நின் தந்தையின் நல்ல நாட்டில் நீயுற்றநோய் முருகனால் வந்தது என்று வெறியாட்டு அயர்ந்ததை நின்தோழி என்னைப் பார்த்துக் கூறி வரைவுகடாயதேயாகும் போலும்.

2. குற்றம் சான்ற பொருள் என்றது தலைவியின் நோய்க்கு முருகன் காரணம் என்று கொண்டு வெறியாடியதை.

வருத்தந்தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற் பொருளின் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

''யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதுஞ்
செம்புலப் பெய்ந்நீர்போல
அன்புடை நெஞ்சந்தாங்கலந்தனவே''[1]

(குறுந்-40)

எனவரும்.

சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந் தொடுத்தற் கண்ணும் என்பது - யாதானும் ஒன்றை நுகரினும் நீ கையால் தொட்டது வானோர் அமிழ்தம் புரையும் இதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் தொடுத்தற் கண்ணும் பூத்தொடுத்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு; வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் சாந்து முதலியன வும் கொள்க.

உதாரணம் வந்த வழிக் காண்க.

''வேம்பின் பைங்காயென் தோழிதரினே
தேம்பூங் கட்டி''[2]

எனத் தலைவன் கூறினமை தோழி கூறலானும் அறிக.

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கம் காட்டிய குறிப்

---

1. பொருள்: என் தாயும் நின் தாயும் யார் யாரோ? என் தந்தையும் நின் தந்தையும் என்னவுறவுடையர்? நீயும் யானும் ஒருவரை யொருவர் எப்படியறிவோம்? நெடிய மலையில் வெவ்வேறிடத்துப் பெய்த மழையின் நீர் ஓடி வீழ்ந்து ஓர் இடத்திற் கலப்பதுபோல நம் இருவர் நெஞ்சமும் ஒன்றுபட்டன அல்லவா? — இப்படித் தலைவன் திருமண முடிந்த பின்னர் ஒருநாள் அன்பை வியர்ந்து கூறினான்.

2. பொருள்: முன்எல்லாம் வேப்பங்காய் போல் கசப் பான பொருளை என் தோழியாகிய தலைவி நுமக்குக் கொடுத்தாலும் அதை தேன்பெய்தமென்மையான கற்கண்டுக் கட்டி என உண்டீர்,

பினும் என்பது-பார்ப்பார் கண்ணும் சான்றோர் கண்ணும் மிக்க சிறப்பினையுடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைக் குறிப்பினால் காட்டிய இடத்தினும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க.

ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமர லுள்ளமோ டளவிய விடத்தும் என்பது - ஒழுக்கத் தினுங் களவுக் காலத்து நிகழ்ந்த அருமையைத் தனித்துச் சுழன்ற உள்ளத் தோடே உசாவிய விடத்தும் என்றவாறு.[1]

உதாரணம் வந்தவழிக் காண்க.

அந்தரத் தெழுதிய வெழுத்தின்மான வந்த குற்றம் வழி கெட ஒழுகலும் என்பது-களவுக் காலத்தொழுகிய ஒழுக்கக் குறைபாட்டான் நிகழ்ந்த குற்றத்தை ஆகாயத்தெழுத்துபோல வழிகெட ஒழுகுதற் கண்ணும் என்றவாறு.[2]

உதாரணம் வந்த வழிக் காண்க.

அழியல் அஞ்சலென்றாயிரு பொருளினுந் தானவட் பிழைத்த பருவத்தானும் என்பது-அழியல், அஞ்சல் என இயற்கைப் புணர்ச்சிக்கட் கூறிய அவ்விரு பொருளைப் பிழைத்த காலத்தினும் தலைவன்கண் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது[3] புறப்பெண்டிர் மாட்டுப் பிரிதல்.

> ‘‘ நகுகம் வாராய் பாண பகுவாய்
> அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்

---

1. களவின் ஒழுக்கத்துள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி உள்ளமொடு உசாவி அலமரல் இடத்தும் என இயைக்க. களவுக் காலத்து நிகழ்ந்த அரிய செயல்களை இக்கற்புக் காலத்துத் தனித்திருந்து உள்ளத்தோடு வினவிச்சுழலும் வருத்தத்திடத்தும் எனப் பொருள் கொள்க.

2. கற்பொழுக்கத்தில் மேற்கொள்ளும் சிறப்புச் செயல் களால் களவுக் காலத்தில் மேற்கொண்ட குற்றமான களவு நிகழ்ச்சிகள் யாவும் உருவில்லாத ஆகாயத்தில் எழுதும் எழுத்து மறைவதுபோல நினைவுக்கு வராதபடி மறக்கப்படும். அப்படி மறக்கப்படுமாறு கற்பொழுக்கம் அமையும் காலத்துக் கூற்று நிகழும்.

3. அஃதாவது-பிழைத்தலாவது. நச். உரை வேறுபாடு காண்க.

தேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமநெஞ்சந் துரப்ப யாந்தம்
முயங்கல் விருப்பொடு குறுகினேம் ஆகப்
பிறைவனப் புற்ற மாசறு திருநுதல்
நாறிருங் கதுப்பினெங் காதலி வேறுணர்ந்து
வெரூஉமான் பிணையின் ஒரீஇ
யாரையோ வென்று இகந்து நின்றதுவே''[1]

(நற்றிணை-250)

எனவரும்.

நோன்மையும் பெருமையும் மெய் கொள வருளிப் பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னினாகிய தகுதிக் கண்ணும் என்பது-பொறைமையும் பெருமையும் மெய்யெனக் கொள்ளுமாறு அருளி ஆராய்தல் அமைந்த வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னான் ஆகிய தகுதிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

அருளிப் பொருந்திக்கூறும் எனக் கூட்டுக. எனவே தலைமகன் என்பதூஉந் தலைமகள் என்பதூஉம் எஞ்சி நின்றன. கூற்று என்றது அதிகாரத்தான் வந்தது. அஃதாவது பொறுத்தல் வேண்டும் எனவும் சிறுமை செய்தல் குற்றம் எனவும் கூறுதலும், தலைமகள் தன்னால் வந்ததனை என்னால் வந்தது எனவும் இவ்வாறு கூறுதல். பன்னல் சான்ற வாயிலாவது, நீ என் செய்தனை இவள் வெகுடற்குக் காரணம் என்னை, என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்க. பொருந்தலாவது வேறுபடாது உடம்படுதல். அவை வருமாறு:

---

1 பொருள்: பாணனே! வருக. காலில் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில் நடைவண்டியால் நடக்கக் கற்றுக் கொள்ளும் என் மகனை அவன் வாய்நீர் என் மார்புச் சந்தனத்தைச் சிதைப்ப அணைத்தபடி, காமம் செலுத்தக் காதலியை முயங்கும் விருப்பத்தோடு அவளைக் குறுகினேமாக அவள் என் மார்புச் சந்தனம் சிதைந்ததற்குப் பரத்தையர் புணர்ச்சி என வேறாக எண்ணி வெகுண்ட மான்பிணை போல் நீ எமக்கு என்ன உறவுடையை (யார் நீ) என்று கூறி விலகி நின்றாள். அதை இப்போது எண்ணிச் சிரிப்போம் நாம். தானவட் பிழைத்த பருவத்தானும் என்பதைத் தனிக்கூற்றாகக் கொள்வர் நச். பார்க்க, பக், 49-50

"யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று"[1] (குறள்-1314)

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரே என்று"[2] (குறள்-1318)

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்"[3] (குறள்-1315)

"தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று"[4] (குறள்-1319)

"கோட்டுப் பூச்சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று"[5] (குறள்-1313)

எனவரும். பிறவும் அன்ன.

புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி ஐயர்பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ் செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும் என்பது-புதல்வனைப் பயந்த ஈன்றணிமை நீங்கின பொழுதின்கண் நெய்யணி மயக்கம் புரிந்தவளைக் குறித்து முனிவர் மாட்டும் அமரரைக்

1—5. பொருள்: மற்றவரைக் காட்டிலும் நாம் சிறந்த காதலுடையோம் என்றேன். அவ்வளவில் அவள் யாரைக் காட்டிலும் யாரைக் காட்டிலும் என்று ஊடினாள். யான் உலகக் காதலர் யாவரினும் என்று சொன்னதை அவள் எனக்குப் பல காதலியர் இருப்பதாகக் கருதி விட்டாள்.

அவட்குப் பயந்து தும்மலை அடக்கினேன். உடனே அவள் யாரோ நினைக்க அதை எனக்கு மறைத்தீர் என அழுதாள்.

இப்பிறவியில் நாம் பிரியோம் என்றேன். அவள் உடனே அடுத்த பிறவியில் பிரிவோமோ என எண்ணிக் கண்ணீர் விட்டாள்.

அவள் ஊடலை நான் நீக்க முற்பட்டால் இப்படித் தானே பிறமகளிர் ஊடலையும் நீக்குவீர் எனப் புலந்தாள்.

கோட்டுப்பூவை அவள் கூந்தலில் சூடினும் என் மூலம் ஒருத்திக்கு நின் கருத்தைக் கூறச் சூடினீர் என்று புலப்பாள்.

இவை ஐந்திலும் தலைவன் இயல்பாகச் செய்தன வற்றைத் தலைவி தவறாகக் கருதி ஊடியதாகக் கூறப் பட்டமை காண்க.

குறித்தும் செய்யா நிற்கும் பெரிய சிறப்பொடு சேர்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

நெய்யணி மயக்கமாவது வாலாமை நீங்கி நெய்யணிதல் நோக்கிச் சேர்தல் எனக் கூட்டுக.[1]

வாராய் பாண நகுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூல் நங்குடிக்குதவி
நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வனை யீன்றெனப் பெயர்பெயர்த்து அவ்வரித்
திதலை அல்குல் முதுபெண்டாகித்
துஞ்சுதியோ மெல்அஞ்சில் ஓதியெனப்
பன்மாண் அகட்டிற் குவளைஏற்றி
உள்ளினென் உறையும் எற்கண்டுமெல்ல
முகை நாள் முறுவல் தோற்றித்
தகைமலர் உண்கண் புதைத்து வந்ததுவே[2]

(நற்றிணை–370)

எனவரும்.

பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி அல்கல் முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி புல்லிய இரவினும் என்பது– தலைவன் பரத்தையிற் பிரிந்துழி ஊடற் கருத்தினளாய்ப் பயங்கெழு துணை அணையைப் புல்லிப் புல்லாது வருந்திக் கிடந்த தலைவியைக் கிட்டித் தங்குதலைக் குறித்த நிறையழி

1. வாலாமை-தூய்மையின்மை. நெய்யணிதல்-எண்ணெய் நீராட்டுதல். இது குழந்தை பெற்ற பத்துநாள் கழித்துச் செய்யப்படுவது.

2. பொருள்: பாண! வருக. சுற்றம் காக்கக் கடுஞ்சூலு டையளாய் இருந்து நம் குடிக்கு மகவையீன்று நெய்யொடு விளங்கும் வெண் சிறுகடுகு எங்கும் சிதறிக் கிடக்கப் பாயலில் கிடந்தவளாகிய நேரிழையைக் குறுகி 'அம்சில் ஓதி! நீ புதல்வனைப் பெற்றமையால் மனைவி எனும் பெயரினைத் தாய்எனும்படி மாற்றி முதிய பெண்டு ஆகி தூங்குகின்றாயோ' என என் கைக் குவளையால் அவள் வயிற்றில் தடவி சிலபொழுது அங்குத் தங்கிய என்னைநோக்கி முறுவலித்துத் தன் கண்களைப் புதைத்தாள். அது எனக்கு நகையுடையதா யிருந்தது. இப்போது இவள் ஊடியிருக்கும் நேரத்தில் அதை நினைந்து நகுவோம்.

பொழுதில் தலைவியது மெல்லென்ற சீறடியைப் புல்லிய இரத்தற் கண்ணும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவதன்று கொல் என்று''[1] (குறள்-1307)

''ஊடுக மன்னோ ஒளியிழை யாம் இரப்ப
நீடுக மன்னோஇரா''[2] (குறள்-1329)

''ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடுபெறும்''[3] (குறள்-1322)

எனவரும்,

உறலருங்குரைமையி[4]னூடன் மிகுத்தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும் என்பது—ஊடல் மிகுத்தோர் உறுதற் கருமையாற் பிறபிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்தற் கண்ணும் என்றவாறு.

''புனவளர் பூங்கொடி யன்னாய்'' என்னும் மருதக் கலியுள்,

''ஒருத்தி, புலவியாற் புல்லாதிருந்தாள் அலவுற்று
வண்டினம் ஆர்ப்ப இடைவிட்டுக் காதலன்
தண்தார் அகலம் புகும்''[5] (கலி-12)

1—3. பொருள்: புணர்ச்சி நீடிக்குமோ நீட்டியாதோ எனக் கருதலால் புணர்ச்சிக்கு இன்பம் தரும் ஊடலிலும் ஓர் துன்பம் உண்டு.

ஒளியிழை ஊடல் கொள்க; அவள் ஊடலைத் தீர்க்கும்வரை இரவும் நீடிப்பதாக.

ஊடல் காரணமாகத் தோன்றும் சிறிய துன்பம் அவளின் தலையளிவாடினும் பின்னர்ச் சிறப்புப் பெறும்.

4. உறல் அருங்குரைமையின்—உறல் அருமையின்—இதில் குரை என்பது அசைநிலையிடைச் சொல்.

5. பொருள்: ஒருத்தி தலைவன்பாற் கொண்ட புலவியால் அவனைப் புல்லாதிருந்தாள். வண்டினம் ஆர்ப்பரித்து மொய்க்கையால் வருத்தமுற்று இடையே புலவியைக் கைவிட்டு அவள் தன்னை வணங்குதலால் அவன் தண்தார் மார்பில் முயங்கும்.

எனப் பிறபிற பெண்டிரைக்காட்டித் தலைவன் ஊடலுணர்த்திய வாறு அறிந்து கொள்க.

பிரிவினெச்சத்துப்[1] புலம்பிய விருவரைப் பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும் என்பது–பிரிவு நிமித்தமாக வருந்திய மனையாளையும் காமக் கிழத்தியையும் அவ் வருத்தத்து நின்று நீக்கிய பகுதிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. அஃதாவது[2] பிரியேன் என்றல்.

''பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்
போதும் பணையும், போலும் யாழநின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்
இவை காண்தோறும் அகமலிந்து யானும்
அறநிலை பெற்றோர் அனையேன் அதன் தலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறு புலத்து இலனே, நினையின்
யாதனிற் பிரிவாம் மடந்தை
காதல் தானுங் கடலினும் பெரிதே''[3]

(நற்றிணை–166)

இக்கூற்று இருவர்[4] மாட்டும் ஒக்கும்.

நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும் என்பது–நிலைநிற்க மிகப் பிரியும் பிரிவின்கண் அஞ்சிய நோயின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

''ஆள் வழக்கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தாள் யாத்துப்

---

1. பிரிவின் எச்சம்-பிரிவு நிமித்தம்.

2. அஃதாவது–பிரிவு வருத்தத்தை நீக்குதலாவது.

3. பொருள்: மடந்தையே! நின்மேனி பொன்; நின் கூந்தல் நீலமணி; நின்கண் நீலப்பூ; நின்தோள் மூங்கில். இவற்றைக் காணும்தோறும் யான் அறத்தில் நிலை பெற்றார் பெறும் பயனை அடைந்தேன் ஆவேன். புதல்வனும் விளையாட்டைக் கற்றான் வேறு இடத்துச் சென்று யான் செய்யும் தொழிலும் இல்லை. மேலும் நின்பாற் காதல் பெரிதுடையேன். இப்படியிருக்க நாம் எவ்வாறு எக்காரணம் கொண்டு நாம் பிரிவோம்? பிரியேம் ஆதலின் வருந்தி என்னையும் வருத்தாதே.

4. இருவர்-மனையாள், காமக் கிழத்தி

போழ்வளி முழங்கும் புல்லென் உயர்சினை
முடைநசை இருக்கை பெடைமுகம் நோக்கி
ஊன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
எருவைச் சேவல் கரிபு சிறை தீய
வேனில் நீடிய வேயுயர் நனந்தலை
நீயுழந் தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅயோள்வயிற்
பிரியிற் புணர்வதாயிற் பிரியாது
ஏந்துமுலை முற்றம் வீங்கப் பல்லூழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப
நினைமாண் நெஞ்சம் நீங்குதல் மறந்தே''[1]

(அகம்—51)

எனவரும்.

சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழியும் என்பது-மேற்கூறியவாறினைக் கையிகந்து[2] முன்னொருகாற் சென்று மீட்டும் அந்நெறியினைப் போக நினைந்த வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

''இருங்கழி முதலை மேந்தோல் அன்ன
கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை ஈன்றிளைப்பட்ட
கொடுவாய்ப் பேடைக்கல் திரை தரீஇ
மான்று வேட்டெழுந்த செஞ்செவி எருவை
வான் தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்
துளங்கு நடை மரையா வலம்படத் தொலைச்சி

---

1. பொருள்: ஆள் போக்குவரவு அற்ற சுரத்தில் வெய்யில் காய அதனால் உண்டான எரி பற்றிய யாமரத்தின் கிளையில் புலால் விரும்பி இருக்கும் பேடையை நினைந்து எழுகின்ற செஞ்செவியுடைய ஆண் பருந்தின் சிறகு கரியும்படியான வேனிற்காலம் நீண்ட பரந்த இடங்களில் நெஞ்சமே நீ உழந்து அடையும் பொருள்கள், மாயோளிடத்தினின்று பிரிந்து சென்றால் கைகூடுவதாயினும் அவளை விட்டுப் பிரிதலை மறந்து அவள் முலை வீங்கவும் அணிகள் ஒலிக்கவும் தழுவி அதனால் மனைக்கு முதல்வியாகிய அவள் மனையறச் செயல்களோடு மகிழ்ந்திருக்கும்படியாக நினைவாயாக.

2. மேற்கூறிய ஆறினைக் கையிகந்து - மேற்கூறிய கடத்தற்கரிய வழியினைக் கடந்து.

ஒண்செங் குருதி யுவறி யுண்டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடைக்
கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும்
புல்லிலை மராஅத்த அகன்சேண் அத்தங்
கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்
பின்நின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
வாய்போற் பொய்ம்மொழி எவ்வமென் களைமா
கவிரிதழ் அன்ன காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்கம்
நெடுஞ்சேண் ஆரிடை விலங்கு ஞான்றே''[1].

(அகம்–3)

எனவரும்.

காமத்தின் வலியும் என்பது–பொருளினுங் காமம் வலியுடைத்து என உட்கொண்ட வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''விரி திரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிது பெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர் சாலாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி

---

1. உப்பங்கழி முதலையின் மேல்தோல் போலச் சொர சொரப்புடைய அடிமரத்தையுடைய ஓமை மரத்தின் கிளையில் அகன்ற இடத்தில் முட்டையிட்டுக் காவற் பட்ட பேடைக்கு இரை கொண்டு தரவேண்டி எழுந்த செஞ்செவிப் பருந்தானது, புலியால் மலையடுக்கத்தில் மானைக் கொன்று இரத்தம் உண்டு ஊனையருந்தி விட்டு விட்டுச் சென்ற மான்தசையை கொள்ளையடிப் பார்போலக் கவர்ந்து செல்லும்படியான நெடிய வழியைப் பல்வேறு கலன்களை ஈட்டிவரும் உள்ளத் தோடு கடந்து செல்வதாகக் காட்டி என் பின்னே யிருந்து துரத்தும் என் நெஞ்சமே! செல்லும் அந்த அரிய வழியில் செவ்வாயும் இனிய சொல்லும் இழையும் உடைய மடந்தையின் பார்வை நம் செலவை விலக்கு மானால் அந்நாளில் நின் மெய்போலும் பொய் மொழி யானது என் துன்பத்தை எவ்வாறு போக்கும்?

இதில் வழியருமை நேரிற் கண்டமைபோற் கூறலின் முன் ஒருகால் சென்று வந்தமை புலப்படும்.

மாண்வரி அல்குற் குறுமகள்
தோள் மாறுபடூஉம் வைகலோ டெமக்கே"[1]

(குறுந்-101)

எனவரும்.

கைவிடின் அச்சமும் என்பது-தலைவியைக் கைவிட்டவழி அவளது உயிர்ப்பொருட்டு அஞ்சுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"அளி நிலை பொறாஅது அமரிய முகத்தள்
விளி நிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம் வடுக்கொளாஅக்
குறுக வந்து தன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை ஒண்ணுதல்
வினை தலைப்படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்
மாய்த்தபோல மழுகு நுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை யதர
பரன்முரம்பாகிய பயமில்கானம்
இறப்ப எண்ணுதிராயின் அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்னவாக வென்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமைபிணையல்

---

1. பொருள்; இவ்வுலக இன்பமும் தேவர் உலக இன்பமும் ஆகிய இரண்டையும் உண்கண்ணும் பொன்மேனியும் வரியல்குலும் உடைய குறுமகளின் தோள்களை மாறி மாறித் தழுவலால் பெறும் இன்பத்துடன் கூடிய நாளொடு ஒத்திட்டு ஆராய்ந்து பார்க்கின் இவ்வின்பத்துக்கு அவை ஒப்பாக மாட்டா.

மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனஞ் செலவே ஒண்தொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதுநாம் எனினே''[1] (அகம்-5)

எனவரும்.

தானவட் பிழைத்த நிலையின் கண்ணும் என்பது—தலைவன் தலைவியை நின்னிற் பிரியேன் என்ற சொல்லிற் பிழைத்த நிலையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

பிழைத்தலாவது பிரிதல்:

'' வயங்குமணி பொருதவகையமை வனப்பிற்
பசுங்காழ் அல்குல் மாஅயோளொடு
வினை வனப்பெய்திய புனைபூஞ் சேக்கை
விண்பொரு நெடுநகர்த் தங்கிஇன்றே
இனிதுடன் கழிந்தன்று மன்னே காளைப்
பொருந்தாக் கண்ணேம் புலம்புவந்துறுதரச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்து
அதர்கூட்டுண்ணும் அணங் குடைப்பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகைவெரீஇ
ஊரெழுந் துலறிய பீரெழு முதுபாழ்
முருங்கை மேய்ந்த பெருங்கையானை

---

1. பொருள்: நெஞ்சமே! ஒண்ணுதலானவள், யான் அழகு செய்தலைப் பொறாது மாறுபட்ட முகத்தளாய், அழைக்கவும் கேளாளாய் குணம் நீங்கத் தனித்து மெல்ல மெல்ல நிலம் வடுக்கொள நடந்துவந்து, கூரிய பற்கள் தோன்றப் பொய்யான முறுவலுடன் அவள் எண்ணியதையான் அறியுமுன் யான் வினைமேற் பிரிதலுக்கு இசையாத நினைவோடு, ஐயனே! கான வழியில் எம்மைப் பிரிந்து கடக்க நினைப்பீராயின் காதலரைப் பிரிதல் அறமன்று என்று கூறிய பழமொழி பொருளற்று அப்படியே கழிக, என்று குறிப்பால் முகத்தால் உரைத்துக் கண்ணீர் நிறைந்த நோக்கமொடு தன் புதல்வன் தலையில் சுற்றிய மாலையை மோந்து உயிர்த்தபோது யான் அவளது அணியிழந்த தோற்றம் கண்டு செலவு ஒழிந்தேன். யான் பக்கத்திருக்கவும் இப்படி வருந்துபவள் பிரிந்தால் உயிர்வாழாள் அல்லளோ?

வெரிந் ஓங்கு சிறுபுறம் உரிஞ ஒல்கி
இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்
பானாய் துன்னிய பறைக்கட் சிற்றில்
குயில் காழ் சிதைய மண்டி அயில்வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர்மடி நல்லிறைப் பொதியிலானே''[1] (அகம்-167)

எனவரும்.

உடன் சேறற் செய்கையொடு என்பது-உடன்போக வேண்டுமெனச் சொல்லிய வழியும் என்றவாறு. ஒடு எண்ணின் கண் வந்தது.

''செருமிகு சினவேந்தன்'' என்னும் பாலைக் கலியுள்
''எல்வளை எம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத்தோய்ந்தவை போலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ''[2]
(கலித்-13)

எனவரும்.

---

1. பொருள்: நெஞ்சமே! மாயோளொடு வானைத்தொடும் நெடிய வீட்டில் புனையப்பட்ட படுக்கையில் இருத்தலால் இன்று இனிதாகப் பொழுது கழிந்தது. நாளை, வழிப்போம் வணிகர்களைக் கொன்று கொள்ளையிட்டுண்ணும் வேட்டுவராகிய பகைவர்க்கு அஞ்சி குடிபெயர்ந்த பாழிடத்து, யானை தன் முதுகை உராய்ந்ததால் சுவரில் உள்ள விட்டமரம் வீழ தங்கியிருந்த மணிப்புறா விட்டு ஓடிய மரம் சோர்ந்த மாடத்தையும், கடவுட் பூசையில்லாமையால் பொலிவற்ற திண்ணையில் ஈன்ற அணிய நாய் தங்கும் சிறிய வீட்டினையும், சிதல்கள் மூடிக் கொள்ளுதலின் கூரை மடிந்து இற்ற இறப்பினையும் உடைய அம்பலத்தில் நாம் தனிமை முற்பட மூடாத கண்ணேமாய்த் தங்கி இருப்போமோ என் செய்வோம்.

இது பிரிந்துவந்தபின் நெஞ்சுக்குக் கூறியது.

2. பொருள்: ஒளிமிக்க வளையலையுடையாய்! என்னொடு நீ பாலை வனவழிவரின் அங்குள்ள கற்கள் உறுத்தலால் நின் தாமரைச் சேவடியானது அல்லியின் இதழ்கள் அரக்குத் தோய்ந்து நிறம் மாறிக் காணப்படுதல் போல் இரத்தமே கட்டிக் கருமையாய்க் காணப்படுமல்லவோ?

அன்னவை பிறவும் மடம்பட வந்த தோழி கண்ணும் என்பது-மேற்சொல்லப்பட்டவையிற்றினும் மடம்பட வந்த தோழி மாட்டும் கூற்று நிகழும் என்றவாறு.

அவையாவன:

> இல்லென் இரந்தோர்க் கொன்றீயாமை இழிவெனக்
> கல்லிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ''[1]
>
> (கலித்-2)

எனவரும்.

இந்நிகரன[2] கூறியவழித் தலைவன் கூற்று நிகழும். இவ்வழிக் கூறுங் கூற்று காமமாகத் தோன்றாது பொருளாகத் தோன்றும், காமத்திற்கு மாறாகக் கூறல் வேண்டுதலின்.

> ''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பந்துடைத் தூன்றுந் தூண்'' (குறள்-615)

எனவரும்

வேற்று நாட்டகல்வையின் விழுமத்தானும் என்பது வேற்று நாட்டு அகலும் வழி வரும் நோயின் கண்ணும் என்றவாறு.

அஃதாவது[4], பிரிவு ஒருப்பட்ட பின்பு போவேமோ தவிர்வேமோ எனச் சொல்லும் மனநிகழ்ச்சி.

---

1. பொருள்: யானொன்றும் இல்லேன்; ஏதேனும் ஈக என வந்து இரந்தவர்க்கு ஒன்று ஈயாமை இழிவாகும் என்று நினைந்து கற்பாறை வழிகடந்து ஈட்டிவர நினைத்த பொருள் இவளினும் சிறந்தபொருளா குமோ?

2. இந்நிகரன — இல்லென......பொருளாகுமோ என்பது போலும் கருத்துகள்.

3. இந்நிகரன...எனவரும்-'இல்லென்......பொருளாகுமோ' என்பது போல்வன தோழி கூறுமிடத்துத் தலைவன் கூற்று காமம் காரணமாக இன்றிப் பொருள் காரண மாக நிகழும். ஒருவன் தன் காமத்தை மட்டும் விரும்பாமல் செய்யும் தொழிலையே விரும்பி ஒழுகுவா னாயின் அவன் தன் உற்றார்க்கு வரும் துன்பம் போக்கித் தாங்கும் தூண்போல்வான் என்று வருதல் கண்டு உணரலாம்.

4. அஃதாவது—நோயாகது

உதாரணம்

"உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத் தான்றோர் போல
வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லும்
கானயானை கவினழி குன்றம்
இறந்து பொருள் தருதலும் ஆற்றாய் சிறந்த
சில்ஐங் கூந்தல் நல்லகம் பொருந்தி
ஒழியின் வறுமை யஞ்சுதி அழிதக
உடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவேல் எஃகிலை இமைக்கும்
மழைமருள் பஃறோல் மாவண் சோழர்
கழுமாய் காவிரி கடல்மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஓதம் போல
ஒன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே"[1]

(அகம்-123)

எனவரும்.

மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும் என்பது-பிரிந்த தலைவன் மீட்டு வரவுவாய்ந்த வகையின் கண்ணும் என்றவாறு. 'வரவு' என்பது கடை குறைந்தது.[2]

உதாரணம்

"தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை இனிய சிதறி ஊழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி இடித்திடித்துப்

---

1. பொருள்: நெஞ்சமே! உண்ணாமையால் வாடிய வயிற்றையும் நீராடாத விரதத்தையும் உடைய சமணச் சான்றோர் போல மலை வழிப்போம் யானைகள் அழகழியும்படியான குன்றம் கடந்து பொருள் ஈட்டு தற்கும். பிரியாய் சிலவான ஐம்பால் எனும் கூந்த லுடையாளின் மார்பைப் பொருந்தி மனையகத்தே தங்க நினைத்தால் பொருளில்லா வறுமைக்கு அஞ்சிப் போக நினைக்கின்றாய். இது எப்படியிருப்பது எனின், சோழரது காவிரி கலக்கும் கடற்றுறையில் கடல் அலையானது இறால் மீனொடு கரைசேர்வதும் உடனே அங்கு விழவயர்ந்தோரால் விடப்பட்ட மாலைகளை அடித்துக் கொண்டு மீளவும் கடல் சேர்வதுமாக ஒரு நிலையில் இல்லாதது போல் இருக்கிறது. என்னே நின் இருபாற்பட்ட நிலை.
2. வரவு என்பது 'வர' எனக் கடை குறைந்து நின்றது.

பெய்யினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாள் மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணையேமே.''[1]

(குறுந்-270)

இது வந்துபுகுந்த தலைவன் கூற்று.

அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும் என்பது—தலைவன் பிரிந்துழிப்[2] பெருகிய சிறப்பினும் கூற்று நிகழும் என்றவாறு,

''கோடல் எதிர்முகைப் பசுவீமுல்லை
நாறிதழ்க் குவளை யொடிடைப்பட விரைஇ
ஐது தொடை மாண்ட கோதை போல
நறிய நல்லாள் மேனி
முறியினும் வாயது முயங்குகம் இனியே.''

(குறந்-62)

எனவரும்.

பேரிசை யூர்திப் பாகர் பாங்கினும் என்பது - தானுற்ற வின்பத்தினைப் பாகற்குக் கூறுதற் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

''மறத்தற் கரிதால் பாக பன்னாள்
வறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை

---

1. பொருள்: பெருவானமே! யாம் வினைமுடித்துத் தலை நிமிர்ந்த உள்ளமொடு இவளையடைந்து இவளின் மலர் நாறும் கூந்தலாகிய பாயலிடத்து உள்ளேம். அதனால் நீ இருள் நீங்கமின்னி இனிய துளிகளைச் சிதறி முரசென முழங்கி இடித்து இடித்துப் பெய்க.

2. பிரிந்துழி என்பது பிரிந்து வந்துழி என்றிருத்தல் வேண்டும். உதாரணச் செய்யுள் அதற்கேற்ப அமைந்தது காண்க.

3. பொருள்: காந்தள் மலர் முல்லையரும்பு குவளைமலர் இவற்றை இடையிடையிட்டுத் தொடுத்த மாலை போல்பவளாகிய இவள் நறு நாற்றம் உடையள் நல்லவள்; இவளது மேனி தளிரினும் அழகுடையது முயங்குதற்கும் இனியது.

மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர்வல்லே
இல்புக் கறியுநராக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறாஅ
அவிழ் பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே''[1]

(நற்றிணை-42)

எனவரும்.

காமக் கிழத்தி மனையோளென்றிவ ரேமுறு கிளவி சொல்லிய வெதிரும் என்பது— காமக் கிழத்தியும் மனையாளும் என்று சொல்லுமிருவரும் பாதுகாவலாகக் கூறிய கூற்றி னெதிரும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு.

இவ்விருவரும் இல்லுறை மகளிராதலின் தலைவன் மாட்டு நிகழுமவை இருவருக்கும் ஒக்கும் என்க.

அஃதாவது[2] வழிவந்தவாறென்னை யெனவும் வருத்த முற்றீரெனவும் இந்நிகரன பல கூறுதல்.

உதாரணம்

எரிகவர்ந்துண்ட என்றூழ் நீளிடை
அரிய வாயினும் எளிய அன்றே
அவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பக்

---

1. பொருள்: பாகனே! வறட்சியொடு இருந்த உலகம் மகிழ்வுடன் தொழில் செய்யுமாறு பழமைபோலவே மழைபொழியப் புதுநீர் உள்ள குளங்களில் நாவால் ஒலியெழுப்பும் தவளைகள் இடும் ஒலியால் நம் தேர் மணி யொலியைக் கேளாதவளாய் உள்ள தலைவியிடம் என் வரவுகூறுமின் என இளையரைவிடுப்ப அவர் சென்றுகூற உடனே அவள், இதுநாள் வரையும் கழு வாத கூந்தலை அழுக்குப் போகக் கழுவி நீர் ஆடி, மலர்கொண்டு கூந்தலிற் சூடியிருந்த அந்நிலையில் யான் சென்றேனாக உடனேதன் உடல் துவள வந்து கூந்தல் முடியவிழ என்னை அணைத்து மகிழ்ந்த அந் நாள் நிலைமை இந்நாள் யான் மறத்தற்கரிதாகும்.

2. அஃதாவது—பாதுகாவலாகக் கூறுதலாவது.

கடுமான் திண்டேர் கடைஇ
நெடுமானோக்கி நின் உள்ளியாம் வரவே''[1]

(ஐங்குறு - 360)

எனவரும்.

சென்ற தேஎத் துழப்பு நனி விளக்கி யின்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும் என்பது-தான் சென்ற தேயத்து வருத் தத்தை மிகவும் விளக்கித் தலைவியை யொழித்துச் சென்ற தன்னிலைமை கிளப்பினும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்து
உள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க
நோய்முந்துறுத்து நொதுமல் மொழியல் நின்
ஆய்நலம் மறப்பெனோ மற்றே சேணிகந்து
ஒலிகழை பிசைந்த நெலிசொரி ஒண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுல் மீமிசை வளி சுழற்றுறாஅக்
காடுகவர் பெருந்தீ ஓடுவயின் ஓடலின்
அதர் கெடுத்தலறிய சாத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்து
இனந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்று தோன்றவிர் சுடர் மான்றாற் பட்டெனக்
கட்படர் ஓதி நிற்படர்ந்துள்ளி
அருஞ்செல வாற்றா ஆரிடை ஞெரேரெனப்
பரந்து படு பாயல் நவ்வி பட்டென
இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்டு
இன்னகை இனைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்கு வந்தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்னர் அமைத்து

---

1. பொருள்: நெடுமான் நோக்கி! நின்னை விரும்பும் என் நெஞ்சம் நின்னைத் தழுவுதற்குப் பெரிதும் விரும்ப அதனால் விரையும் குதிரை பூட்டிய திண்ணிய தேரினைச் செலுத்தி நின்னை நினைத்து வருதலால் எரிபரந்தால் ஒத்த ஞாயிற்றொளி மிக்க நெடியவழி கடத்தற்கரியதாயினும் எனக்கு எளிதாகும்.

வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்
போற்றா யாகலின் புலத்தியால் எம்மே''[1]

(அகம்-39)

எனவரும்.

அருந்தொழின் முடித்த செம்மற்காலை விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும் என்பது—அரிய வினையை முடித்துவந்த தலைமைக் காலத்து விருந்தினரோடு கூட நல்லவற்றைக் கிளத்தி விருப்பமுறுத்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு,

உதாரணம் வந்தவழிக் காண்க.

மாலை ஏந்திய பெண்டிரு மக்களுங் கேளி ரொழுக்கத்துப் புகற்சிக் கண்ணும் என்பது-தலைவனை எதிர்கொண்டு மங்கலமாக மாலையேந்தி நின்ற பெண்டிரும் மக்களும் கேளிரும் ஒழுகும் ஒழுக்கத்து விருப்பத்தின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

கேளிரும் என்னும் உம்மை எஞ்சி நின்றது[2]. ஈண்டு ஒழுக்க மாவது சொல்லாது பெயர்ந்தீர் என்றானும், இளமையும்

---

1. பொருள்: பெண்டிர்க்குத் துயர்தரக் கூடாது என்று பெரியோர் விலக்கியதைப் பழித்த உள்ளமொடு சுரவழிச் சென்றவிடத்து எம்மை நினைத்தீரோ என என்னை வினவும் தலைவீ! முறுவல் மறைய வருந்திப் புறம்பான சொல்லைச் சொல்லாதே. நின் அழகை மறப்பேனோயான்? மூங்கில்கள் உரசலால் எழுந்த தீயானது காற்றால் எங்கும் பரக்கப் புல்லிடங்களும் பற்ற எங்கும் வழி தெரியாமல் அடைபட வழிச் செல்லும் வணிகரோடு புலிக்கு வெருவிய யானைகளும் வழிதெரியாமல் மயங்கும்படியான காட்டு வழியில், நின்னையே நினைந்து மேலே செல்ல வியலாத அரிய வழியில், திடீரெனப் படுக்கையில் வந்த மான்போல கழலும் வளையல்களைச் செறித்து தாழ்ந்த பார்வை யுடன் நிலத்தைக் கிளறும் நிலையில் நின்ற நின்னைப் பார்த்து, நாம் இப்படிச் சேர்ந்திருக்கவும் என்னிடம் ஊடல் நினக்கு எப்படி வந்தது எனக்கூறி நின் புருவம் நுதல்களைத் தடவிக் கூந்தலைக் கோதிய நல்ல சமயத் தில் கூந்தலில்லா வெறுங்கையை ஆக்கிய அப்பொய்க் கனவில் தூக்கத்தைக் கொண்டு நின்னைக் காணாது உற்ற வருத்தத்தை நீ அறியாய்; ஆதலின் என்னைப் புலந்து பேசுகின்றாய்.
2. கேளிரும் என்பது கேளிர் என நின்றது நோக்கிக் கூறியது.

காமமும் நோக்காது பெயர்ந்தீர் என்றானும் கூறி இதற்குக் காரணம் என்னை எனத் தலைவன் வந்துழி அவர் நிகழ்த்தும் நிகழ்ச்சி.

உதாரணம்

"உள்ளினென் அல்லனோ யானே உள்ளி
நினைந்தனென் அல்லனோ பெரிதே நினைந்து
மருண்டனென் அல்லனோ உலகத்துப் பண்பே
நீடிய மராத்த கோடுதோய் மலிர்நிறை
யிறைத்துணச் சென்றற் றாங்கம்
அனைப்பெருங் காமம் மீண்டுகடைக்கொளவே"[1]

(குறுந்-33)

எனவரும்.

ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇ என்பது-பெண்டிருமல்லாத வாயில்களாயினார் எதிர்கூறுங் கூற்றும் தலைவன் மாட்டு நிகழும் என்றவாறு.

இவையெல்லாம் காமப் பொருளாகத்[2] தோன்றா, அவர் செயல் பொருளாகத் தோன்றும்.

உதாரணம் வந்தவழிக் காண்க.

பண்ணமைப் பகுதி பதினொருமூன்றும் எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன என்பது-செய்தலமைந்த பகுதியினையுடைய முப்பத்து மூன்றிடத்திலும் நிகழும் கூற்றுமிக்க சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றவாறு.

மிக்க சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றமையால் மிகாத சிறப்பினையுடையார் மாட்டு இவையெல்லாம் ஒருங்கு நிகழ்தலில் என்று கொள்க செயலமைப் பகுதி என்றதனான்,

---

1. பொருள்: நின்னை நினைத்தேன். நினைத்துக் காமத்தைப் பெரிதாக நினைத்தேன். பெரிதாக நினைத்தேனாயினும், நீண்ட மரக்கிளைகளைத் தோயும்படிப் பெருக்கெடுத்தோடிய வெள்ளம் ஓடி ஓடி இறைத்து உண்ணும் அளவுக்குக் குறைந்த தன்மைபோல என் காமமும் நின்னிடத்து வந்ததனால் குறைந்தது நினைக்கும் போது யான் உலகத்தார் இயல்பு இது எனக் கண்டு மருண்டேன் அல்லனோ? (இம்மருட்சியே மனைக்கு மீளச் செய்தது என்பது கருத்து).

2. காமம் பொருளாக—காமம் காரணமாக

இவ்விடங்களின் வரும் பொருள் வேறுபாடுகட்கும் இவையே இடமாகக் கொள்க.

நச்

இது, பார்ப்பார் முதலிய பன்னிருவருங் (501-2) கற்பிடத்துக் கூற்றிற்கு உரியராயினும் அவருள் தலைவன் சிறந்தமையின் அவன் கூற்றெல்லாந் தொகுத்துக் களவிற் கூறியாங்கு முற்கூறுகின்றது.

இதன் பொருள்: கரணத்தின் அமைந்து முடிந்தகாலை— ஆதிக்கரணமும் ஐயர் யாத்த கரணமுமென்னும் இருவகைச் சடங்கானும் ஓர்குறைபாடின்றாய் மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகி நான்காம் பகலெல்லை முடிந்த காலத்து.*

ஆன்றோராவார், மதியுங் கந்தருவரும் அங்கியும்.

நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்—களவிற் புணர்ச்சி போலும் கற்பினும் மூன்று நாளுங் கூட்டமின்மை யானும் நிகழ்ந்த மனக்குறை தீரக்கூடிய கூட்டத்தின் கண்ணும்.

அது நாலாம் நாளை யிரவின் கண்ணதாம்.

உதாரணம்

"விரிதிரைப் பெருங்கடல்வளைஇயவுலகமு
மரிதுபெறு சிறப்பிற் புத்தேணாடு
மிரண்டுந் தூக்கிற் சீர்சாலாவே
பூப்போலுண்கட் பொன்போன் மேனி

---

* திருமணம் முடிந்த முதல் மூன்று நாளும் தலைவன் தலைவியைக் கூடாமல் நான்காம் நாளில் கூடவேண்டும் என்பது ஆரியர் கோட்பாடு. முதல்நாள் மதிக்கும் இரண்டாம் நாள் கந்தருவர்க்கும் மூனறாம் நாள் நெருப்புக்கும் தலைவியைப் புணரக் கொடுத்து நாலாம் நாளே தலைவன் புணர்தல் வேண்டும் என்பது ஆரியர் கொள்கை. பிறை தொழுதாலேயே கற்புக்கு இழுக்கு என நினைக்கும் தமிழ் மகளிர்க்கு அக் கொள்கை பொருந்தாது. அதனால் நச்சினார்க்கினியரின் உரை தமிழ் மரபுக்கு ஏற்புடைத்தாகாது—சிவ.

மாண்வரி யல்குற் குறுமக
டோண்மாறு படூஉம் வைகலொடெமக்கே''[1]

(குறுந்-101)

இது நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சி.

''முகனிகுத், தொய்யென விறைஞ்சியோளே'' (அகம்-86) என முற்காட்டியது கரணத்தின் அமைந்து முடிந்தது.

எஞ்சா மகிழ்ச்சி இறந்து வரு பருவத்தும்-அதன் பின்னர் ஒழியாத மகிழ்ச்சி பலவேறு வகையவாகிய நுகர்ச்சிக்கட் புதிதாக வந்த காலத்தினிடத்தும்.

உதாரணம்

''அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு''

(குறள்-11 10

என்றது பொருள்களை உண்மையாக உணர்ந்த இன்பத்தை அறியுந்தோறும் அவற்றை முன்னர் இவ்வாறு விளங்க உணராத அறிவின்மையை வேறுபடுத்துக் கண்டாற் போலுஞ் சேயிழை மாட்டுச் செறியுந்தொறுந் தலைத் தலை சிறப்பப் பெறுகின்ற காமத்தை முன்னர் அறியப் பெற்றிலே மென்று வேறுபடுத்த் லென்றவாறு.

அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்-தலைவனும் பிறரும் அஞ்சும்படி தலைவிக்கட்டோன்றிய உரிமைகளி த்தும்.

அவை இல்லறம் நிகழ்த்துமாறு தன் மனத்தாற் பல வகையாகக் காணலும் பிறர்க்குத் தான் கொடுத்தலுங் கற்புச் சிறத்தலுமாம்.

உதாரணம்

''உள்ளத்துணர்வுடையானோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான் கணொண்பொரு—டெள்ளிய
வாண்மகன் கையிலயில் வாளனைத்தரோ
நாணுடையாள் பெற்றநலம்[2] (நாலடி-386)

---

1. பொருள்: பக்கம் 33ல் காண்க.
2. பொருள்: நாணம் உடைய மனைக்கிழத்தி பெற்ற அழகு, உள்ளத்தில் இயற்கையான உணர்வுடையவன் ஓதிய கல்வி போன்றது; வள்ளலின் கைப்பட்ட ஒள்ளிய பொருள் போன்றது; தெளிந்த ஆண்மகன் கைப்பட்ட வாள்போன்றது.

இதனுள் நலமென்றது இம்மூன்றினையும்.[1] தலைவி இல்லறப் பகுதியை நிகழ்த்துமாறு பல வகையாகக் காணும் தன்மை உணர்வுடையோன் ஓதிய நூல் விரியுமாறு போல விரியா நின்ற தெனவும், இவள் கொடை நலம் வள்ளண்மை பூண்டான் பொருளனைத் தெனவும், இவளது கற்புச் சிறப்புப் பிறர்க்கு அச்சஞ் செய்தலின் வாளனைத் தெனவும், தலைவன் அவளுரிமைகளை வியந்து கூறியவாறு காண்க.

நன்னெறிப் படரும் தொல் நலப் பொருளினும்-இல்லறத்திற்கு ஓதிய நெறியின் கண் தலைவி கல்லாமற் பாகம்பட ஒழுகுந் (பழ-6:4) தொன்னலஞ் சான்ற பொருளின் கண்ணும்.

பொருள் வருவாய் இல்லாத காலமும் இல்லற நிகழ்த்துதல் இயல்பாயிருத்தற்குத் 'தொன்னலம்' என்றார்,

உதாரணம்

''குடநீரட்டுண்ணு மிடுக்கட் பொழுதும்
கடனீரற வுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்''

(நாலடி-382)

இஃது ஒரு குடம் நீராற் சோறமைத்து உண்ணுமாறு மிடிப் பட்ட காலத்தும் மனைக்கு மாட்சிமை யுடையாள் கடல் நீரை வற்ற உண்ணுங்கேளிர் வரினும் இல்லற நிகழ்த்துதலைக் கைக்கு நெறியாகக் கொள்ளுமெனத் தலைவன் வியந்து கூறினான்.

பெற்றதேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ் சான்ற பொருள் எடுத்து உரைப்பினும்-தலைவி அங்ஙனம் உரிமை சான்ற இடத்து அவளைப் பெருமையின் கண்ணே நிறுத்திக் குற்றமமைந்த களவொழுக்கத்தை வழுவியமைந்த பொருளாகக் கேளிர்க்காயினும் பிறர்க்காயினும் உரைப்பினும்.

அது களவொழுக்கத்தையுந் தீய ஓரையுள்ளுந்[2] துறவாது ஒழுகிய குற்றத்தையும் உட்கொண்டும் அதனைத் தீதென்னாமற் கூறுதலாம்.

---

1. மூன்று—அறிவு, கொடை, கற்புச் சிறப்பு

2. தீயஓரை—புணர்ச்சிக்குப் பொருந்தாத நாள்கள்.

உதாரணம்

''நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுதை சோரினு—மேலாய
வல்லளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லாளமைந்ததேயில்''[1]

(நாலடி-383)

இதனுள் மனைவி அமைந்து நின்ற இல் நிலையே இல்லற மாவதெனவே யாம் முன்னரொழுகிய ஒழுக்கமும் இத்துணை நன்மையாயிற்று என்றானாயிற்று. இது குறிப்பெச்சம்.

நாமக் காலத்து உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்; தோழி நாமக் காலத்து ஏமுறு கடவுள் உண்டென ஏத்திய மருங்கினும்-தோழி இன்னது விளையுமென்று அறியாது அஞ்சுதலையுடைய களவுக் காலத்தே யாம் வருந்தா திருத் தற்குக் காரணமாயதோர் கடவுள் உண்டு எனக்கூறி அதனைப் பெரிது மேத்திய இடத்துத் தலைவன் வதுவைகாறும் ஏதமின் றாகக் காத்த தெய்வம் இன்னுங்காக்குமென்று ஏத்துதலும்; அது,

''குனிகா யெருக்கின் குவிமுகிழ்
தாமரை முகத்தியைத் தந்தபாலே''

என்னுங் குணநாற்பதில் ஏமுறு கடவுளைத் தலைவன் தானே ஏத்தியது போலாது,

''நேரிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வமுவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலை பாடிக்காண்''[2]

(கலி-39)

1. பொருள்: தங்குதற்குரிய வீடு எனப்படுவது யாது எனின், இடிந்ததால் நாலா பக்கமும் வழியுடையதாய், மிகச் சிறியதாய், கூரைமேல் வழியாகத் தன்மேல் மழைநீர் சோர்வதாக இருந்தாலும், மேல் நடக்க வேண்டியவற்றை ஆராய்ந்து செய்ய வல்லவளாய், தான் வாழும் ஊரார் தன்னைப் புகழும்படியான கற்போடு உள்ள மனைக் கிழத்தி அமர்ந்திருக்கும் வீடே வீடாகும்.

2. பொருள்: நேரிழையே! நீயும் நின் கணவனும் கூடி யிருக்க மலைவாழ் தெய்வம் மகிழ விரும்பிக் குரவைக் கூத்து நாம் ஆட அக்கூத்துள் நீ தலைவனைக் காத்துக் கொண்டிருந்த நிலையை ஒருவர் முன்பாடப் பின் அதை நீ பாடிக் காண்பாயாக-தோழி கூற்று.

எனத்தான் பராய தெய்வத்தினைத் தோழி கற்புக் காலத்துப் பரவுக் கடன் கொடுத்தற்கு ஏத்திய வழித் தலைவனும் ஏத்துதலாம்.

உதாரணம்

"அதிரிசை யருவிய பெருவரைத் தொடுத்த
பஃறேணிறாஅ லல்குநர்க்குதவு
நுந்தை நன்னாட்டு வெந்திறன் முருகென
நின்னோய்க்கியற்றிய வெறி நின்றோழி
யென்வயி நினோக்கலிற்போலும் பன்னாள்
வருந்திய வருத்தந் தீரநின்
றிருந்திழைப் பணைத்தோள் புணரவந்ததுவே"[1]

தேன் இறாலை அல்குநர்க்கு உதவும் நாடாதலின் நின் நோய்க்கு இயற்றிய வெறி நுமக்குப் பயன்படாது எமக்குப் பயன்றரு மென்றோன்[2] என்வயின் நோக்கலின் என்றது.

எனக்குப் பயன் கொடுக்க வேண்டுமென்று பராவுதலிற் றோளைப் புணர்ந்து உவந்தது என்றான். இது கற்புக் காலத்துப் பரவுக்கடன் கொடுக்கின்ற காலத்துத் தலைவன் கூறியது.

அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும்—வரைந்த காலத்து மூன்று நாட் கூட்டமின்மைக்குக் காரணமென்னென்று தலைவி மனத்து நிகழா நின்ற வருத்தந் தீரும்படி மிக்க வேட்கையோடு கூடியிருந்து வேதஞ் சொல்லு தலுற்ற பொருளின் கண்ணும்; தலைவன் விரித்து விளங்கக் கூறும்.[3]

அது முதனாள் தண் கதிர்ச் செல்வற்கும் இடைநாள் கந்தருவர்க்கும், பின்னாள் அங்கியங் கடவுட்கும் அளித்து நான்காநாள் அங்கியங் கடவுள் எனக்கு நின்னை அளிப்ப யான் நுகர வேண்டிற்று. அங்ஙனம் வேதங் கூறுதலால் எனத் தலைவிக்கு விளங்கக் கூறுதல். உதாரணம் இக்காலத்தின்று.

---

1. பொருள்: பக்கம் 23ல் காண்க.

2. என்றான் என்றிருத்தல் வேண்டும்.

3. இவ்வுரையும் விளக்கமும் ஆரியர்க்கேற்பன. தமிழ் மரபுக்கு ஏலா. இளம்பூரணர் உரையே கொள்க. ஆரியச் சார்பாக உள்ளவிடங்களிலும் தமிழ் மரபுக் கேற்பக் கொள்க.

சொல்லென ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந் தொடுதற் கண்ணும்-அமுதிற்கு மாறாகிய நஞ்சை நுகரினும் நீ கையால் தீண்டின பொருள் எமக்கு உறுதியைத் தருதலின் தேவர்களுடைய அமிழ்தத்தை ஒக்கும் எமக்கெனப் புனைந் துரைத்து இதற்குக் காரணங் கூறென்று அடிசிலும் பூவுந் தலைவி தொடுதலிடத்தும் கூற்று நிகழும்.

உம்மை, இழிவு சிறப்பு.

"வேம்பின் பைங்காயென்றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர்"

(குறுந்–196)

எனத் தலைவன் கூற்றினைத் தோழி கொண்டு கூறியவாறு காண்க.

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கங்காட்டிய குறிப்பினும்-வேட்பித்த ஆசிரியனுங் கற்பித்த ஆசிரியனுமாகிய பார்ப்பார் கண்ணும், முற்ற உணர்ந்து ஐம்பொறியையும் அடக்கியோர் கண்ணும், முடிவில்லாச் சிறப்பினையுடைய தேவர்கள் கண்ணும் ஒழுகும் ஒழுக்கத்தினைத்தான் தொழுது காட்டிய குறிப்பின் கண்ணும்:

"பிறர் பிறர்" என்றார் தேவர் மூவரென்பது பற்றி. தன்னையன்றித் தெய்வந்தொழாதாளை இத்தன்மையோரைத் தொழல் வேண்டுமென்று தொழுது காட்டினான். குறிக் கொளுங் கூற்றால் உரைத்தலிற் 'குறிப்பினும்' என்றார். உதாரணம் வந்துழிக் காண்க.

ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்-வணக்கஞ் செய்தும் எதிர்மொழியாது வினாயவழிப் பிறராற் கூற்று நிகழ்த்தியும் எதிர்ப்பட்டுழி எழுந்தொடுங்கியும்தான் அக்காலத்து ஒழுகும் ஒழுக்கத்திடத்து முன்னர்க் களவுக்காலத்து நிகழ்ந்த கூட்டத் தருமையைத் தனித்துச் சுழலுதலையுடைய உள்ளத்தோடே உசாவிய இடத்தும் தலைவற்குக் கூற்று நிகழும்.

உதாரணம் வந்துழிக் காண்க. 'கவவுக்கடுங்குரையுள்' (குறுந்–132) என்பது காட்டுவாரும் உளர்'[1]

---

1. யார் எனத் தெரியவில்லை.

அந்தரத்து எழுதிய எழுத்தின் மானவந்த குற்றம் வழிகெட ஒழுகலும்: வந்த குற்றம் அந்தரத்து எழுதிய எழுத்தின் மானவழிகெட ஒழுகுதலும்—களவுக் காலத்து உண்டாகிய பாவம் ஆகாயத்தெழுதிய எழுத்துவழி கெடுமாறு போல வழி கெடும்படி பிராயச்சித்தஞ் செய்து ஒழுகுதற் கண்ணும்.

அது முன்பு போலக் குற்றஞ்சான்ற பொருளை வழுவமைத்துக் கொள்ளாது குற்றமென்றே கருதிக் கடிதலாம்.

'' பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தால் ''

(கலி—15.14-15)

என்ற வழி 'மையற்ற படிவம்' எனத் தலைவன் கூறியதனைத் தோழி கூறியவாறு காண்க.

அழியல் அஞ்சல் என்று ஆயிருபொருளினும்—வந்த குற்றம் நினக்கு உளதென்று அழியலெனவும் எனக்குளதென்று அஞ்சலெனவுஞ் சொல்லப்படும் அவ்விரு பொருண்மைக் கண்ணும்.

இவை இரண்டாகக் கொள்ளின்[1] முப்பத்து நான்காமாதலின் இருவர் குற்றமுங் குற்றமென ஒன்றாக்கியது. தெய்வத்தினாதலின் ஏதம் பயவாதென்றான்.

'' யாயுஞாயும் யாராகியரோ
வெந்தையு நுந்தையுமெம்முறைக்கேளிர்
யானு நீயு மெவ்வழியறிதுஞ்
செம்புலப் பெய்ந்நீர் போல
வன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே[2]

(குறுந்—40)

இது நம்மானன்றி நெஞ்சந் தம்மில் தாங்கலத்தலின் தெய்வத்தான் ஆயிற்றெனத் தெருட்டியது.

தான் அவட் பிழைத்த பருவத்தானும்-அங்ஙனந் தெய்வத்தினான் ஆயிற்றேனுங் குற்றமேயன்றோ என உட்கொண்ட அவட்கு யான் காதன் மிகுதியாற் புணர்ச்சி வேண்ட

---

1. இரண்டு-நினக்குளதென்று அழியல் என்பதும் எனக்குளதென்று அஞ்சல் என்பதும். இப்படி இரண்டாகக் கொள்ளின் சூத்திரத்தில் முப்பதின் ஒரு மூன்று என்றதற்கு மாறுபட்டு முப்பத்து நான்காகும்.

2. பொருள்: பக்கம் 24ல் காண்க.

என் குறிப்பிற்கேற்ப ஒழுகினையாகலின் நினக்கோர் குற்ற மின்றென்று தான் பிழைத்த பருவமுணர்த்தும் இடத்தும், கூற்று நிகழும்.

உதாரணம்

'' நகைநீ கேளாய் தோழி தகைபெற
நன்னாட் படராத் தொன்னில் முயக்கமொடு
நாணிழுக் குற்றமை யறிகுநர் போல
நாங்கண்டனையநங் கேள்வர்
தாங்கண்டனைய நாமென்றோரே''[1]

இதனுள், நன்னாள் வேண்டுமென்னாது கூடிய கூட்டத்துள் தங்கி நாணுச் சுருங்கி வேட்கை பெருகிய நம்மினும் ஆற்றா ராயினர் போல நாங் குறித்தவழி வந்தொழுகிய தலைவர் தாங் குறித்தனவே செய்தனமென நமக்குத் தவறின்மை கூறின ரெனத் தோழிக்குத் தலைவி கூறியவழித் தலைவன் பிழைப்புக் கூறியவாறு காண்க.

நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிய பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்: தன்னின் ஆகிய நோன்மையும் பெருமையும் மெய்கொள-தலைவனான் உளதாகிய பொறையையுங் கல்வி முதலிய பெருமையையும் உடைய மகவைத் தலைவி தன் வயிற்றகத்தே கொள்கையினாலே; பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தி அருளிய தகுதிக் கண்ணும்–வேதத்தை ஆராய்தல் அமைந்த அந்தணரோடு கூடி இருத்தற்குச் செய்யத் தகுஞ் சடங்குகளைச் செய்த தகுதிப்பாட்டின் கண்ணும்.

தன்னினாகிய மெய்–கருப்பம். அவிப்பலி கொள்ளும் அங்கியங் கடவுட்கும் அது கொடுக்குந் தலைவற்கும் இடையே நின்று கொடுப்பித்தலின் அந்தணரை 'வாயில்' என்றார்.

---

1. பொருள்: தோழீ! நகைப்புக்குரிய நிகழ்ச்சியொன்று கேட்பாயாக. முன்னர் முயங்குதற்கேற்கும் நல்ல நாளைப் பாராது நினைத்தபோது முயங்கிய முயக்கத் தில் நம் நாண் சுருங்கிய நிலையை அறிந்தவர் போலத் தாமும் ஆற்றாராய் நாம் குறித்த குறியிடத்துத் தவறாது வந்து கூடிய நம் தலைவர் இன்று தாம் குறித்த இடத்துத் தவறாது நாம் வந்து கூடியதாக நம்பால் குற்றம் இல்லை என்பதைக் கூறினார்.

"ஆற்றல் சான்ற தாமே யன்றியு
நோற்றோர் மன்ற நங்கேளிரவர்தகைமை
வட்டிகைப் படூஉந்திட்ட மேய்ப்ப
வரிமயிரொழுகு நின்னவ்வயிறருளி
மறைநவி லொழுக்கஞ் செய்துமென்றனர்
துனிதீர் கிளவி நந்தவத்தினு
நனிவாய்த்தன வான்முனிவர் தஞ்சொல்லே"[1]

இதனுள், நந் தலைவரே யன்றிச் சுற்றத்தாரும் நோற்று ஓர் கருப்பந்தங்கிய நினது வயிற்றைக் கண்டு உவந்தெனவும் அதற்கேற்ற சடங்கு செய்து மென்றாரெனவும், முற்காலத்து நாங்கேட்ப நமக்குக்கூறிய முனிவர் சொல்லும் உண்மையா யிற்றெனவுங் கூறியவாறு காண்க. தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதின்-அங்ஙனஞ்சிறப் பெய்திய புதல்வனைப் பெற்ற ஈன்றணுமை சேர்ந்த காலத்தே.

நெய் அணி மயக்கம் புரிந்தோள் நோக்கின்-சுற்றக் குழாத் துடனே வாலாமை வரைதலின்றி எண்ணெயாடும் மயக்கத்தை விரும்பிய தலைவியை முகமனாகக் கூறுதலைக் குறித்து.

ஐயர் பாங்கினும் – முனிவர் மாட்டும்.

அமரர்ச்சுட்டியும்-தேவர்கள் புதல்வனைப் பாதுகாத்தலைக் கருதியும்.

செய் பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்-அக்காலத்துச் செய்யும் பெரிய சிறப்புக்களைக் குறித்த மனத்தோடே சென்று சார்தற் கண்ணும்.

சிறப்பாவன: பிறந்த புதல்வன் முகங்காண்டலும் ஐம்படை பூட்டலும் பெயரிடுதலும் முதலியனவும், எல்லா முனிவர்க்குந் தேவர்க்கும் அந்தணர்க்குங் கொடுத்தலும். சேர்தல் கூறவே, கருப்பம் முதிர்ந்த காலத்துந் தலைவன்

---

1. பொருள்: தோழீ! ஆற்றலமைந்த நம் தலைவரே யன்றிச் சுற்றத்தாரும் மிக நோற்றுள்ளனர். அவர்கள் வட்டிகையில் பொருள் பொதிந்த திட்டம்போல மயிர் ஒழுங்குள்ள நம் வயிற்றில் கருவமைந்துள்ளது கண்டு மகிழ்ந்து வேதத்துக் கூறிய சடங்குகளைச் செய்வோம் என்றும் கூறினர். ஒரு காலத்தில் முனிவர் நம்மிடம் கூறிய மகப்பேறு பற்றிய சொல்லானவை நம் தவத் தினைக் காட்டிலும் நமக்கு வாய்ப்புடையனவாயின.

பிறரொடு கூட்டமுண்மையும் கூறிற்றாம். ஆண்டுத்தோழி கூறுவனவும் 'ஒன்றென முடித்த'லாற் கொள்க.

''வாராய் பாண நகுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூனங்குடிக் குதவி
நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வனை யீன்றெனப் பெயர் பெயர்த்தவ்வரித்
திதலை யல்குன் முதுபெண்டாகித்
துஞ்சுதியோ மெல்லஞ்சி லோதியெனப்
பன்மாண கட்டிற் குவளையொற்றி
யுள்ளினெ னுள்ளுறை யெற்கண்டு மெல்ல
முகை நாண் முறுவலொன்றித்
தகைமல ருண்கண்கை புதைத்ததுவே''[1] (நற்-370)

இது நெய்யணி மயக்கம் பற்றித் தலைவன் கூறியது.

''நெடுநா வொண்மணி கடிமனையிரட்டக்
குரையிலை போகிய விரவு மணற்பந்தர்ப்
பெரும்பாண் காவல்பூண்டென வொருசார்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த வறுவை மெல்லணைப்
புனிறு நாறு செவிலியொடு புதல்வன்றுஞ்ச
வையவி யணிந்த நெய்யாட்டீரணிப்
பசிநோய் கூர்ந்த மென்மையாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமைபொருந்த
நள்ளென் கங்குற் கள்வன்போல
வகன்றுறை யூரனும்வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே''[2] (நற்றிணை-40)

---

1. பொருள்: பக்கம் 28ல் காண்க.
2. பொருள்: கடிமனையில் மணிநா ஒலிக்க கீற்று வேய்ந்த பந்தரில் சுற்றிலும் ஒரு காலத்தில் பாணர் தலைவனைப் பரத்தையர் வளைத்துச் சூழ்ந்தது போல மகளிர் சூழ்ந்து நல்ல நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க ஈன்ற அணிமையுடைய புதல்வன் செவிலித்தாயொடு அணை மீது தூங்க, வெண் சிறு கடுகு கலந்த நெய் தேய்த்து நீராடிப் பசிநோய் மிகுந்த மெல்லிய உடம்பையுடைய மடந்தை தன் இரண்டு இமைகளும் மூடியிருக்கும் வேளையில் நள்ளென் இரவில் கள்வன் போலத் தலைவன் தன் தந்தை பெயரனாகிய தன் புதல்வன் பிறந்ததைக் காணும் காரணத்தால் வந்தான்.

இது, முன்வருங்காலத்து வாராது சிறந்தோன்பெயரன்[1] பிறத்தலான் வந்தானெனத் தோழி கூறினாள்

''குவளை மேய்ந்த குறுந்தாளெருமை
குடநிறை தீம்பால் படூஉமூர
புதல்வனை யீன்றிவ ளெய்யாடினளே''

இதுவுமது,

பயங்கெழு துணையணை புல்லிய புல்லாது உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப் புக்கு என முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி புல்லிய இரவினும்—தலைவி தனது ஆற்றாமை மிகுதியால் தழுவி ஆற்றுதற்குக் குளிர்ந்த பயன்கொடுத்தல் பொருந்திய பல அணைகளைத்தழுவி தன்னைப் புல்லுதல் பெறாதே வருந்திக் கிடந்த தலைவியை அணுகித் தான் கூடுதலைக் கருதின நிறையழிந்த காலத்தே அவளது மெத்தென்ற சிறிய அடியைத் தீண்டிய இரத்தற் கண்ணும்.

இதனானே மகப்பெறுதற்கு முன்னர் அத்துணை யாற்றாமை எய்திற்றிலனென்றார். இப்பிரிவு காரணத்தால் தலைவனும் நிறையழிவ னென்றார்.

''அகன்றுறையணிபெற'' என்னும் மருதக்கலி (73)யுள்
''என்னை நீ செய்யினு முணர்ந்தீ வாரில்வழி
முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிமன்
னிரை தொடி நல்லவர் துணங்கையுட் டலைக் கொள்ளக்
கரையிடைக் கிழிந்த நின் காழகம் வந்துரையாக்கால்'[2]

என இதனுட் சீறடிப் புல்லிய இரவினைத் தலைவி கூறியவாறு காண்க. தலைவன் கூற்று வந்துழிக் காண்க.

---

1. சிறந்தோன் பெயரன்-சிறந்தவனாகிய தந்தைதக்குப் பெயரன்.

2. பொருள்: நிரை தொடிப் பரத்தையர் ஆடும் துணங்கைக் கூத்தில் நீ சென்று தலைக்கைக் கொடுத்த லால் அவர் சிலம்பு மாட்டிக் கரையிடந்தே கிழந்த நின் நீல ஆடை நினக்கு உட்பகையாய் வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாதபோது, எப்படிப் பட்ட குறைகளை நீ செய்தாலும் இக்குறைகளைச் செய்தாயே என்று சொல்வார் இல்லாத விடத்து அடியில் பணிந்து எம்மை ஊடலுணர்த்த வருவாய் அதனாற் பயன் என்?

உறலருங்கு உண்மையின்[1] **ஊடல் மிகுத் தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்**-தலைவற்குச் சாந்தழி பெருங்குறி பெற்றார் கூந்தல் துகளும் உண்மையின் அவனைக் கூடுதல் அருமையினாலே ஊடன் மிகுந்த தலைவியைப் பிற பிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்துதலிடத்தும்: என்றது, உலகத்துத் தலைவரொடு கூடுந் தலைவியர் மனை யறத்து இவ்வாறொழுகுவரென அவர் ஒழுக்கங் காட்டி அறத்துறைப் படுத்தலாம். மறைவெளிப்படுத்தலும் தமரிற் பெறுதலும் மலிவும் முறையே கூறிப் பின்னர்ப் புலவி நிகழ்ந்து ஊடலாய் மிகுதலின் 'ஊடல் மிகுத்தோள்' என்றார். இரத்தற் பாலினும் பெண்பால் காட்டிப் பெயர்த்தலிற் 'பிற பிற பெண்டிர்' என்றார்.

''புனம் வளர் பூங்கொடி'' என்னும் மருதக் கலி (92)யுள்
''ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தாளலவுற்று
வண்டின மார்ப விடை விட்டுக் காதலன்
றண்டாரகலம் புகும்''

எனக்கூறி.

''அன்ன வகையால் யான்கண்ட கனவுத்தான்
நனவாக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மின் நீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பவிழ் பூஞ்சினை தோறுமிருங்குயி
லானாதகவும் பொழுதினான் மேவர
நான்மாடக் கூடன் மகளிருமைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந்தாடுமா
ரானா விருப்போடணியயர்பு காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு''[2]

---

1. உறலருங்குரைமையின் என்பதே பாடம். குரை அசை நிலை. உறலருமையின் என்க.

2. பொருள்: ஒருத்தி, புலவியால் புல்லாதிருந்தாள்; அப்புலவியை இடையில் விட்டுவிட்டுக் காதலன் மார்பை முயங்கினாள்...... நன்னுதால்! குயில்கள் பூங்கொம்புகளில் இருந்து ''பல்காலும் கூடிப்புணர்ந் தவர்களே! பிரியாதீர்கள்; புணர்ச்சி நீட்டிக்கப் பிரிந்தவர்களே இனிக் கூடிப் புணர்வீர்களாக'' என்று கூறுவனபோலத் தத்தம் பெடைகளை அழைக்கும்படி யான இளவேனிற் காலத்தில் காமனுக்கு விழவுவர மேற்கொண்டு கூடலிடத்துள்ள மகளிரும் அவர் தம் கணவரும் சோலையில் கூடியிருந்து விளையாட அணி களை அணிந்தனர்; ஆதலால் பிரிதலும் கூடலும்

எனவே[1], புல்லாதிருந்தா ளென்றதனான் ஊடன் மிகுதி தோன்றுவித்து மகளிரும் மைந்தரும் வேனில் விழாச் செய்கின்றார் நாமும் அது செய்ய வேண்டுமென்று கூறியவாறு காண்க.

பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் பிரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்-பரத்தையிற் பிரிவினது தவிர்ச்சிக் கண்ணே தனிமையுற்றிருந்த தலைமகனையுந் தலைமகளையுந் தன தருளினாலே தானும் பிரிவினெச்சத்துப் புலம்பி நின்றான் ஒருவன் தலைவிதனைக் கண்டருளுதற்கு அப்பிரிவினின்று நீக்கிய கூறுபாட்டின் கண்ணும்.[2]

''யாயிடைக் கவவுக்கை நெகிழ்ந்தமைபோற்றி
மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க்கொத்தனிர் நீயிரிஃதோ
செல்வற் கொத்தனெம் யாமெனமெல்லவென்
மகன்வயிற் பெயர்தந்தேனே யதுகண்
டியாமுங் காதலே மவற் கெனச்சாராய்ச்
சிறபுறங் கவையினனாக வுறுபெயற்
றண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்சேய்
மண்போன் நெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சிறை பேகிய வறிவினேற்''

இதனுள், ஒருத்தியை வரைந்து கூறாது நல்லோரைப் பொதுவாகக் கூறியவாறும் வேண்டினமெனப் புலம்பக காட்டிக் கலுழ்ந்ததென ஈரங் கூறியவாறுங் காண்க.

பிரிந்து வந்துழியல்லது புலத்தல் பிறவாமையின 'எச்சத்து' என்றார். உதாரணம் வந்துழிக் காண்க. இதுவும் ஊடற் பகுதியாம்.

நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும்-முன்னில்லாதொரு சிறைப்போய் நின்று நீட்டித்துப் பிரிவினால் தலைவன் அஞ்சிய நோயின் கண்ணும்: இது துனி.

ஆகிய கூறுபாடுகளால் யான் கண்ட கனவு நன்றாயிருந்தது அது உண்மையாம்படி என் நெஞ்சமே கருதுவாயாக.

1. எனவே—என்று தலைவன் கூறவே

2. இளம்பூரணர் உரையே சிறக்கும். நச். உரை வலிந்துரை.

"மையற விளங்கிய" என்னும் மருதக்கலி (81)யுள்,

"ஏதப்பா டெண்ணிப்புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
னாணை கடக்கிற்பார் யார்"[1]

எனச் சேய் நின்றென்றதனால் துனித்து நின்றவாறும், சினவ லென்றதனாற் பிரிவு நீட்டித்தவாறும், நின்னாணை கடக் கிற்பார் யாரென அஞ்சியவாறு கூறியவாறுங் காண்க.

"பொய்யெல்லா மேற்றித் தவறுதலைப் பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தேனருளினி"[2]

(கலி-95)

என்பதும் அச்சமாதலின் இதன் கண் அடங்கும்.

சென்று கை இகந்து பெயர்த்து உள்ளிய வழியும்: சென்று தலைவன் ஆற்றானாய்த் துனியைத் தீர்த்தற்கு அவளை அணுகச் சென்று, கையிகந்து—அவன் மெய்க்கட் கிடந்த தவறுகண்டு தலைவி ஆற்றாளாய் நீக்கி நிறுத்தலானே, பெயர்த்து-அவன் ஒருவாற்றான் அவளாற்றாமையைச் சிறிது மீட்கையினாலே, உள்ளிய வழியும்-அவள்கூடக் கருதியவிடத்தும் தலைவன் கூற்று நிகழும்.

இதுவுந் துனி தீர்ப்பதோர் முறைமை கூறிற்று. உதாரணம் முற்கூறிய (கலி—81) பாட்டுள்,

"அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலை பொருத வேதிலாள் முச்சி
யுதிர் துகளுக்க நின்னாடையொலிப்ப
வெதிர் வளிநின்றாய் நீசெல்;

---

1. பொருள்: ஊர்மதிலிடத்துக் காவல்புரிவோர்கள்வரைத் தம் கண்களாற் காணாதிருக்கவும் கண்டேம் எனக் கூறுவார் போல நீயும் தொலைவில் இருந்து யான் செய்யாத குற்றத்தைச் செய்தது போலச் சொல்லிச் சினவாதே. நின் ஆணைவழி நிற்பதன்றிக் கடப்பார்யாருளர்?—தலைவன் கூற்று.

2. பொருள்: நல்லவளே! பொய்யெல்லாம் சேர்த்துக் குற்றங்களை என் தலையில் வைத்து கையோடு கண்டு பிடித்தாய். ஏதோ தவறுடையேன் ஆனேன். இனி அருள்க-தலைவன் கூற்று.

இனி எல்லாயாந் தீதிலேமென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்றுமெங்கண் மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரன் யாங்கொள்வேந்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லும்
ஆபோற் படர்தக நாம்''[1]

எனத் தலைவன் கூறியவாறு காண்க.

காமத்தின் வலியும்—அவள் அது நீத்து நீங்கியவழி முற்கூறியவாறன்றிக் காமஞ் சிறத்தலின் ஆற்றாமை வாயிலாகச் சென்று வலித்துப்புக்கு நெருங்கிக் கூடுமிடத்தும் தலைவன் கூற்று நிகழும்.

இதுவுந் துனி தீர்ப்பதோர் முறைமை கூறிற்று.

உதாரணம்

''யாரிவனெங் கூந்தல் கொள்வானிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத்தெம்மனை
வாரனீ வந்தாங்கே மாறு''[2] (கலி-89)

என வலிந்து சென்றதனைத் தலைவி கூறியவழி,

ஏஎயிவை, ஒருயிர்ப்புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவனீகூறியென்
னாருயிர் நிற்குமாறியாது''

---

1. பொருள்: நடுக்கமில்லாத வஞ்சனையாலே வருந்தி என் மகன் மேல் வேட்கை நிகழ நினையாயாய் வந்து, பூண் முலைகளால் நின் மார்போடு பொருத பரத்தை முடியிலிருந்து உதிர்ந்த துகள் சிந்திக் கிடந்த நின் ஆடையது துகளை விளக்கக் காற்றின் எதிரே நின்றாய், இங்ஙனம் நில்லாதே செல்—இது தலைவி கூற்று.

அது கேட்ட தலைவன், ஏடி! யாம் தீங்குடையேம் அல்லேம் என்று சூளுறவும் அதனைக் கடந்து எம்மிடத்துச் சிறிதேனும் புலந்த நிலைமையில் மீட்சி யில்லையாயின் தன் கன்றைக் கட்டியவிடத்தே செல்லும் பசுப்போல நாம் இனி நம்பால் படர்தல் தகும்படி மேம்பட்ட எந் தந்தைக்குப் பெயரனையாம் எடுத்துக் கொள்வோம் என்றான்.

2—3 பொருள்: (தலைவன் கூந்தலைத் தடவினானாக) எங்கூந்தலைப் பிடிப்பான் இவன் யார்? (எனத் தனக்குள்ளே கூறிப் பின்னர் அவனை நோக்கி) இப்படிக் கூந்தலைப் பிடிப்பது பிறர்க்கும் இவ்வாறு உதவி செய்யும் வஞ்சனையையுடையதாகும். அதனால் எம்மனைக்கு வரவேண்டா. வந்தபடியே திரும்பிச்

என ஆற்றாமை மிகுதியாற் சென்றமை கூறியவாறு காண்க.

கைவிடின் அச்சமும்—தலைவிதான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப் பிரியில் தான் அவளை நீங்குதற்கு அஞ்சிய அச்சத்தின் கண்ணும், தலைவற்குக் கூற்று நிகழும்.

அஃது, உணர்ப்புவயின் வாராவூடலாம்.

" எவ்வி யிழந்த வறுமையாழ்ப்பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினை மதிவாழிய நெஞ்சேமனைமரத்
தெல்லுறு மௌவனாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே"[1]

(குறுந்—19)

இதனுள் அவளையின்றி வருந்துகின்ற நெஞ்சே அவள் நமக்கு யாரெனப் புலத்தலன்றி ஆண்டு நின்றும் பெயர்தல் கூறாமையிற் கைவிடின் அச்சமாயிற்று.

தான் அவட் பிழைத்த நிலையின் கண்ணும்—தலைவன் தலைவியைப் பிழைத்த பிரிவின் கண்ணும்.

'பிழைத்த' என்றார் ஆசிரியர், இயற்கைப் புணர்ச்சி தொடங்கிப் பலகாலும் பிரியேனெனத் தெளிவித்ததனைத் தப்பலின்.

உதாரணம்

" அன்பு மடனுஞ் சாயலு மியல்பு
மென்பு நெகிழ்க்குங் கிளவியும்பிறவு
மொன்றுபடு கொள்கையொடொராங்கு முயங்கி
யின்றே யிவணமாகி நாளைப்

செல்க என்றாள். அது கேட்ட தலைவன், இருதலை ஒருயிர்ப்புள்ளின் ஒரு தலையானது மற்றைத் தலையொடு போர் செய்தல் போல நீ என்னைப் புலந்து பேசுதலாற் பயன் என்? அது விட்டு என் அரிய உயிர் நிற்கும் வழியைக் கூறுக என்றான்.

1. பொருள்: மனைத் தோட்டத்து மரத்தில் படரும் முல்லை மலர்போல நறுமணம் கமழும் இக் கூந்தலுடையாள் நமக்கு என்ன உறவுடையவள்; யாரோ ஏதிலாள் ஆவள். அதனால் எவ்வி என்பவனையிழந்ததனால் வறுமையுற்ற யாழ்ப்பாணர் தலைகள் பொற்பூக்களைச் சூடாமையால் புல்லென்றது போல நெஞ்சே நீ வருந்துக. வாழி.

புதலிவராடமைத் தும்பி குயின்ற
வகலா வந்துளை கோடை முகத்தலி
னீர்க்கியங் கினநிரைப்பின்றை வார்கோ
லாய்க்குழற் பாணியி னைதுவந் திசைக்குந்
தேக்கமழ் சோலைக்கடறோங் கருஞ்சுரத்
தியாத்த தூணித்தலை திறந்தவைபோற்
பூத்த விருப்பைக் குழைபொதி குவியிணர்
கழறுளை முத்திற் செந்நிலத்துதிர
மழைதளி மறந்த பைங்குடிச்சீறூர்ச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே பூப்புனைப்
புயலென வொலிவருந் தாழிருங்கூந்தற்
செறிதொடி முன்கை நங்காதலி
யறிவுனுர் நோக்கமும் புலவியு நினைந்தே''[1]

(அகம்—225)

இது நெஞ்சினாற் பிரியக் கருதி வருந்திக் கூறியது.

'' வயங்குமணி பொருத'' (அகம்-167) என்பதும் அது.

உடன் சேறல் செய்கையொடு அன்னபிறவும் மடம்பட வந்த தோழிக்கண்ணும்; அன்னவும் பிற-நீ களவில் தேற்றிய தெளிவகப்படுத்தலுந் தீராத்தேற்றமும் பொய்யாம். செய்கை யொடு உடன்சேறல் - அவைபொய்யாகாதபடி செய்கை களோடே இவளை உடன்கொண்டு செல்க, மடம்பட வந்த தோழிக் கண்ணும் - தன்னறியாமை தோன்றக்கூறிவந்த தோழிக்கண்ணும்; கூற்று நிகழும்.

உடன் கொண்டுபோதன் முறைமையன்றென்று அறியாமற் கூறலின் 'மடம்பட' என்றார். செய்கைகளாவன:—தலைவன்

---

1 பொருள்: நெஞ்சமே! அன்பும் மடனும் சாயலும் இயல்பும் எலும்பையும் உருக்கும் சொல்லும் பிறவும் ஆகியவற்றுடன் தலைவியோடு ஒத்து ஒருசேர அவளை முயங்கி இவ்விடத்து இன்று உள்ளோம். நாளையோ எனின், வண்டு துளைத்த மூங்கில் துளையில் மேல் காற்றுப் புகுந்து வெளிப்படுதலால் எழும் ஓசை கோவலர் குழல்ஓசை போல் ஒலிக்கும்படியாகவுள்ள தேக்குமரச் சோலைப்பக்கம் உள்ள காடு ஓங்கிய கடத்தற்கரிய சுரவழியில் அம்பறாத்தூணி மூடித் திறந்ததுபோல் உள்ள தழை பொதிந்த இருப்பைப் பூக்கள் நூலறுபட்டுவிழும் முத்துகள்போல் உதிரும் படியான மழைமறந்த சிற்றூரில் கூந்தலும் முன்கையும் உடைய நம் காதலியின் அறிவு கலங்கிய பார்வையையும் புலவியினையும் நினைந்து தனித்துத் தங்கியிருப் போமோ?

'கைபுனைவல்வில்' நாண் ஊர்ந்தவழி இவள் 'மையில் வாண் முகம் பசப்பூர்'தலும் அவன் 'புனை மாண் மரீஇய அம்பு' தெரிந்தவழி இவள் இனைநோக்குண்கண்ணீர்நில்லா' மையும் பிறவுமாம்.

''பாஅலஞ்செவி'' என்னும் பாலைக்கலி (5)யுள்
''ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர் நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ[1]''

'' அந்நாள் கொண்டிறக்குமிவளரும் பெறலுயிரே''[2]
என, உடன் கொண்டு சென்மினெனத் தோழி கூறியது, கேட்ட தலைவன் இவளை உடன்கொண்டு போதல் எல்லா வற்றானும் முறையன்றென்று தோழிக்குக் கூறுவனவும் நெஞ்சிற்குக் கூறுவனவும் பிறவுங் கொள்க.

''வேட்டச் செந்நாய் கிளைத் தூண்மிச்சில்
குளவிமொய்த்த வழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொடுணீஇய
வருக தில்லம்ம தானே
யளியளோவளிய ளென்னெஞ்சமர்ந்தோளே''[3]
(குறுந்-56)

இது, தோழி கேட்பக் கூறியது.

''நாணகையுடைய நெஞ்சே கடுந்திறல்
வேனினீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூறிய மன்னீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கிற் றுவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறு கொண்டாடிய வேறுபடு வயக்களிறு

---

1. பொருள்: தாமரைப் பொய்கையுள் நீர்வற்றிய காலத்து மலர் வாடுதல்போல நீ இவளைப் பிரியின் ஓர் நாள் இரவிலாயினும் வாழ்வாளோ?

2. பொருள்: நீ பிரிந்த நாள் கொண்டு இவள் பெறலரிய உயிர் போய்விடும்.

3. பொருள்: என் நெஞ்சத்து அமர்ந்தாளாகிய தலைவி, வாழவிரும்பும் செந்நாய்கள் தோண்டியுண்ண எஞ்சி யுள்ள காட்டு மல்லிகையிலைகள் விழுந்ததனால் அழுகிய சிறிது நீரை என்னோடு உண்ணுமாறு என் னுடன் உடன்போக வருவாளாக. அதுவே என் விருப்பம். அவ்வாறுவரின் அவள் இரங்கத் தக்கவளே யாவாள்.

செங்கோல் வாலிணர் தயங்கத் தீண்டிச்
சொறிபுற முரிஞிய நெறிய யன்மராஅத்
தல்குறு வரிநிழலசைஇ நம்மொடு
தான் வருமென்ப தடமென்றோளி
யுறுகணை மழவருள் கீண்டிட்ட
வாறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்
கன்மிசைக் கடுவளி யெடுத்தலிற் றுணைசெத்து
வெருளேறு பயிலு மாங்கட்
கருமுக முசுவின் கானத்தானே''[1]

(அகம்-121)

இது நெஞ்சிற்குக் கூறியது.

வேற்று நாட்டு அகல் வயின் விழுமத்தானும்-அங்ஙனம் வேற்று நாட்டிற் பிரியுங்காலத்துத் தானுறும் இடும்பையிடத்து தலைவற்குக் கூற்று நிகழும்.

விழுமமாவன: பிரியக் கருதியவன் பள்ளியிடத்துக் கனவிற் கூறுவனவும், போவேமோ தவிர்வேமோ என வருந்திக் கூறுவனவும், இவள் நலன் திரியுமென்றலும், பிரியுங்கொலென்று ஐயுற்ற தலைவியை ஐயந்தீரக் கூறலும், நெஞ்சிற்குச் சொல்லி அழுங்குதலும் பிறவுமாம்.

'நெஞ்சு நடுக்குற' என்னும் பாலைக்கலி (24)யுள் கனவிற் கூறியவாறு காண்க.

''உண்ணாமையினுயங்கிய மருங்கி
னாடாப்படிவத் தான்றோர்போல

---

1. பொருள்: நெஞ்சமே! பிறர்க்குத் துன்பம் தரும் மழவர் ஓட்டிய வண்டிச் சக்கரம் பிளந்திட்ட வழியில் வணிகர்கள் தாம் கட்டுச்சோறு உண்டு கழித்த பனைக் குடைகளைக் காற்றடிக்க எழும்போது உண்டாம் ஒலிகேட்டு பெண்மானின் குரல் என எண்ணி ஆண் மான் அதை அழைக்கும் படியானதும் கருமுகக் குரங்குகள் உள்ளதும் ஆனகாட்டில் வெப்பம் மிக்க மேகம் பொழியாது மேலே சென்றதால் உலர்ந்த வழியில் நாளும் வறுமை மிக்க குளிக்கத் தோண்டிய சிறு குளத்தில் உண்ணுதற் கேலாத மண்ணொடுசேர்ந்த கலங்கிய நீரைக் கன்றொடுகூடிய மடப்பிடியைக் கழுவிப் பின்னர்த்தான் சேறாடிய களிறானது தன் முதுகு புறத்தை உராயும் மராமரத்தின் நிழலில் தங்கி உடன் வருவேன் என்று நம் தலைவி கூறுகிறாள்.

இதைக் கேட்ட யாம் நகை மிகவுடையேம் ஆனேம்.

வரைசேர் சிறுநெறி நிரைபுடன் செல்லுங்
கான யானை கவினழி குன்ற
மிறந்து பொருடருதலு மாற்றாய் சிறந்த
சில்லையங் கூந்தனல்லகம் பொருந்தி
யொழியின் வறுமை யஞ்சுதியழிதக
வுடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவே லெஃகினிமைக்கு
மழைமருள் பஃறோன் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடன் மண்டு பெருந்துறை
யிறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங் கடலோதம் போல
வொன்றிற் கொள்ளாய் சென்று தருபொருட்கே''[1]
(அகம்-123)

இதுபோவேமோ தவிர்வேமோ என்றது.

''அருவியார்க்கும் பெருவரையடுக்கத்
தாளி நன்மான் வேட்டெழற் கோளுகிர்ப்
பூம்பொறி யுழுவை தொலைச்சிய வைந்நுதி
யேந்து வெண்கோடு வயக்களிறிழக்குந்
துன்னருங் கான மென்னாய் நீயே
குவளை யுண்கணி வளீண்டொழிய
வாள்வினைக் ககறியாயினின்னொடு
போயின்று கொல்லோ தானே படப்பைக்
கொடுமுளீங்கை நெடுமா வந்தளிர்

1. பொருள்: நெஞ்சமே! உண்ணாமையால் வாடிய வயிற்றையும் நீராடாமல் மாசுபட்ட உடம்பும் உடைய விரதமுடைய சான்றோர்போல் அழகழிந்த யானைகள் செல்லும் மலைப்பக்கத்தில் கடந்துசென்று பொருளீட்டி வரவும் செய்யாய். தலைவியில் ஆகத்திற் பொருந்திக் கிடக்கின் வறுமை நீங்காது என அஞ்சுகிறாய். சோழரது காவிரியானது கடலிற் கலக்கும் பெருந்துறையில் கடலலையானது இறால் மீனோடு கரைவந்து பின் கரையில் உள்ள மாலைகளோடு பெயர்வதுபோல நீயும் பொருளீட்டுதல், மனைக் கண் இருத்தல் என்னும் இரண்டில் ஒன்றன்பாற் சாராது உள்ளாய்?

நீர்மலி கதழ்பெய றைலஇய
வாய்நிறம் புரையுமிவண் மாமைக் கவினே''[1]
(நற்-205)

இஃது இவள் நலனழியுமென்று செலவழுங்கியது
''தேர்செல வழுங்கத் திருவிற்கோலி
யார்கலி யெழிலிசோர் தொடங்கின்றே
வேந்துவிடு விழுத் தொழிலொழிய
யான்றொடங்கினனானிற் புறந்தரவே''[2]
(ஐங்குறு-428)

இஃது ஐயந் தீர்த்தது.
'' ஈதலுந் துய்த்தது மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே''[3]
(குறுந்-63)

இது தலைவியை வருகின்றாளன்றே எனக் கூறிச் செலவழுங்கியது.

மீட்டு வரவு ஆய்ந்த வகையின் கண்ணும்-பிரிந்த தலைவன் இடைச்சுரத்து உருவு வெளிப்பட்டுழியும் மனம் வேறுபட்டுழியும் மீண்டு வருதல் ஆராய்ந்த கூறுபாட்டின் கண்ணும்.

---

1. பொருள்: நெஞ்சமே! மலையடுக்கத்தில் யாளியானது புலியால் அடிக்கப்பட்டு இழுத்துவரப்படும் களிற்றினை இரையாக விரும்பித்தான் இழுக்கும்படியான கொடிய காட்டிடம் என்று நீ கருதாமல் ஆள்வினை ஒன்றையே கருதிப் பிரிவாயாயின், மழை நீர் ஏற்ற இண்டின் மரத் தளிரினது கரிய அழகிய நிறம் போலும் இவள் மாமையழகும் இன்றோடு யோயிற்றாம். அதனால் பிரிவாயாயின் ஆராய்ந்து செய்க.
2. பொருள்: தேரானது செல்லுதலைத் தவிரும்படி ஒலி மிக்க மேகம் மழை பொழியத் தொடங்கியது. அதனால் வேந்தன் ஏவிய சிறந்த தொழில் தவிர்ந்தது. அதனால் யான் நின்னைப் புறந்தருதலாகிய தொழிலைத் தொடங்கினேன்.
3. பொருள்: நெஞ்சே! பிறர்க்குக் கொடுத்தலும் தாம் இன்பம் துய்த்தலும் ஆகிய இரண்டும் பொருள் இல்லாதார்க்கு இல்லை எனக் கருதிப் பொருள் செய்வினைக்கு விருப்பம் மிக எண்ணுகிறாய். அப்படிச் செய்வினைக்கு அகல்வாயாயின் நம் காதலியும் உடன் வருமோ. வாராளாயின் என்னை மட்டும் போகத் தூண்டுவையோ? கூறுக.

"உழை யணந்துண்ட விரைவாங்குயர்சினைப்
புல்லரை யிரத்திப் பசுங்காய் பொற்பக்
கல்சேர் சிறுநெறி மல்கத்தாஅம்
பெருங் காடிறந்து மெய்தவந்தனவா
லருஞ் செயற் பொருட்பிணி முன்னியாமே
சேறுமடந்தை யென்றலிற்றான்ற
னெய்தலுண் கண்பைதல் கூரப்
பின்னிருங் கூந்தலின் மறையினள் பெரிதழிந்
துதியன் மண்டிய வொலிதலை ஞாட்பி
னிம்மென் பெருங்களத்தியவ ரூது
மாம்பலங் குழலினேங்கிக்
கலங்கஞுருறுவோள் புலம்புகொணோக்கே[1]

(நற்-113)

இஃது உருவு வெளிப்பட்டுக் கூறியது.

"ஒன்றுதெரிந்துரைத்திசி னெஞ்சே புன்காற்
சிறியிலை வேம்பின் பெரியகொன்று
கடாஅஞ் செருக்கிய கடுஞ்சினமுன்பிற்
களிறு நின்றிறந்த நீரலீரத்துப்
பால்வீ தோன்முலை யகடு நிலஞ்சேர்த்திப்
பசியட முடங்கிய பைதற் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்
விருந்தின் வெங்காட்டு வருந்துதும் யாமே
யாள்வினைக் ககல்வா மெனினு
மீள்வா மெனினு நீ துணிந்ததுவே"[2]

(நற்றிணை-103)

---

1. பொருள்: மடந்தையே! பொருளீட்டற்காகப் போகின்றேன் எனக் கூறியபோது தன் கண்கள் துயர்கூரத் தனது பின்னிய கரியகூந்தலில் தன்முகம் புதைய மறைந்து, உதியன் சினந்த போர்க்களத்தில் இயவர் (வாத்தியக்காரர்) ஊதும் ஆம்பற்குழல்போல அழுது வருந்தியவளின் பார்வையானது மான்கள் தழையை நிமிர்ந்து உண்ணலால் சிறிது வளைந்த கிளைகளையுடைய இலந்தை மரத்தின் காய்கள் பால் நிறைந்த வழியிடங்களில் உதிர்ந்து கிடக்கும்படியான பெரிய காட்டிடத்தில் கடந்து நாம் வந்தபோதிலும் தோன்றா நின்றது.

2. பொருள்: நெஞ்சமே! வேப்பங்கிளையை முறித்து மதம் செருக்கிச் சினம் மிக்க களிறானது நின்று சென்ற விடத்தில் நீரால் இல்லாத ஈரமான இடத்தில் பால்

இது வேறுபட்டு மீட்டுவரவு ஆய்ந்தது.

“ஆள்வழக்கற்ற பாழ்படு நனந்தலை
வெம்முனை யருஞ்சுரநீந்தி நம்மொடு
மறுதருவது கொறானே செறிதொடி
கழிந்துகு நிலையவாக
வொழிந்தோள் கொண்டவெனுரங் கெழுநெஞ்சே”[1]

(ஐங்குறு—329)

இது மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைவன் உழையர்க்கு உரைத்தது.

“நெடுங்கழை முறிய வேனினீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
யொண்ணுத லரிவையை யுள்ளுதொறுந்
தண்ணியவாயின சுரத்திடையாறே”[2]

(ஐங்குறு-322)

இஃது இடைச்சுரத்துத் தலைவி குணம் நினைந்து இரங்கியது. இன்னும் ‘இரட்டுறமொழிதல்’ என்பதனாற் செய்வினை முற்றி

வற்றிய முலையுடன் உடம்பும் கீழே படியும் படியாகப் பசி வருத்தக் கிடந்த செந்நாய்ப் பிணவினது கெடாத வேட்கைக்குப் போன ஆண் செந்நாயானது முன் தன் பிணவுடன் கூடிய உண்மையான முயக்கத்தை நினைந்து வருந்தும்படியான நாம் புதியதாக வந்த இக் கொடிய காட்டில் நாம் வருந்துகின்றோம். இனி நாம் ஆள் வினைக்கு இங்கிருந்து போவோம் என்றாலும் அல்லது அதை விலக்கி மனைக்கே மீள்வோம் என்றாலும் நீ துணிந்ததை உணர்ந்து கூறுவாயாக.

1. பொருள்: தோளிற் செறிந்த தொடி நெகிழ மனையில் தனித்திருக்கும் தலைவியால் பிணித்துக் கொள்ளப்பட்ட எனது வலியுள்ள நெஞ்சமானது ஆள் வழங்குதலற்ற பாழ்பட்ட அகன்ற இடத்தையுடை கொடிய சுரவழி நம்மொடு வந்து இப்போது திரும்பிப் போவதுவோ?

2. பொருள்: ஒண்ணுத லரிவையைப் பிரிந்து செல்லு முற்காலத்தில் பாலை நில வழிகள் நெடிய மூங்கில் வெடிப்ப வேனிற்பருவம் நீளுதலால் கடுங்கதிர் ஞாயிறு பாறை பிளவுபட எரித்தலால் வெப்பமாயின. ஆனால் பிரிந்துவந்த இப்பொழுது அவளை நினைத்தலால் இனியவாயின. (அவளை நினைக்கக் காரணம் புள் விலங்குகளின் அன்புச் செயல்களைக் கண்டதாம்)

மீண்டு வருங்கால் வருந்தி நெஞ்சொடு கூறுவனவும் பிறவுங் கொள்க. அது,

"என்று கொலெய்து ஞான்றே சென்ற
வளமலை நாடன் மடமக
ளிளமுலையாகத் தின்னுயிர்ப் புணர்ப்பே"[1]

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்
வில்லோர் தூணி வீங்கப்பெய்த
வப்புநுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்படரன்ன செங்குழை யகந்தோ
றிழுதினன்ன தீம்புழற்றுய்வா
யுழுதுகாண் டுளையவாகி யார்கழல்
பாலிவானிற் காலொடு பாறித்
துப்பினன்ன செங்கோட்டியவி
னெய்த்தோர் மீமிசை நிணத்திற்பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடு நுண்ணோதி மகளிரோக்கிய
தொடி மானுலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையொடிரட்டுங்
குன்று பினொழியப் போகியுரந் துரந்து
ஞாயிறு படினுமூர் சேய்த்தெனாது
துனைபரி துரக்குந் துஞ்சாச்செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணோங்கிய நல்லி லொருசிறை நிலைஇப்
பாங்கர்ப்பல்லி படுதொறும் பரவிக்
கன்று புகுமாலை நின்றோளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக்குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகண்
மென்றோள் பெறநசைஇச் சென்றவெனெஞ்சே"

(அகம்—9)

எனவரும். இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

---

1. பொருள்: வளமலை நாடனின் மடமகளின் இளமுலையிடத்து இனிய உயிரோடு கூடிய புணர்ச்சி என்றைக்கு நமக்கு எய்துவதாகும்.

அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்-பிரிந்தவிடத்துத் தான்பெற்ற பெருக்கம் எய்திய சிறப்பின் கண்ணும் மனமகிழ்ந்து கூறும்.

சிறப்பாவன[1] பகைவென்று திறை முதலியன கோடலும் பொருண் முடித்தலுந் துறை போகிய ஒத்தும்[2] பிறவுமாம்.

உதாரணம்

'கேள்கே டூன்றவுங் கிளைஞராரவும்'-(அகம்-93) எனவும், 'தாழிகுடுமிய' (குறுந்-270) என்பதனுட் 'செய்வினை முடித்த செம்மலுள்ளமொடு' எனவும் மனமகிழ்ந்து கூறியவாறு காண்க. 'முன்னிய முடித்தனமாயின்' எனனும் (169) நற்றிணையுட் பொதுப்படச் சிறப்புக் கூறியவாறு காண்க.

பேரிசை ஊர்திப்பாகர் பாங்கினும்-அச்சிறப்புக்களை எய்திய தலைவன் பெரிய புகழையுடைத்தாகிய தேரையுடைய பாகரிடத்தும் கூற்று நிகழ்த்தும்.

அவரது சிறப்பு உணர்த்துதற்குப் பாகரெனப் பன்மையாற் கூறினார்[3].

''இருந்த வேந்த னருந்தொழின் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானு

---

1. பொருள்: வெண்ணிற இருப்பைப் பூக்கள் காம்பு இற்று பனிக்கட்டிகள் வீழ்வன போலக் காற்றால் அலைக்கப்பட்டுப் பவளம் போலும் நிறமுடைய மேட்டுவழிகளில் குருதியின் மேல்பரக்கும் கொழுப்புப் போலப் பரந்து விழும்படியான வழிகளில் உள்ள சிற்றூர்களில் மகளிரின் உலக்கைப் பாடல் கோட்டான் குரலோடு இசைக்கும் மலைகள் பின்னிடச் சென்று ஞாயிறு மறையினும் செல்லும் ஊர் நெடுந்தொலையது என்று கருதாமல் விரைந்து குதிரையைத் துரந்து மூடாத கண்களுடன் செல்லும் என்னைக் காட்டிலும், குறுமகளது மென்தோளை விரும்பிச் சென்ற என் நெஞ்சமானது வீட்டின் ஒரு பக்கத்தில் பல்லியின் ஓசையைக் கேட்டு சகுனம் பார்த்து நிற்பாளாகிய தலைவியை அடைந்து கைகவித்துச் சென்று அவள் கண்களைப் பொத்தி அவள் கூந்தலைத் தீண்டித், தோளைத் தடவிக் கொடுத்து அவளொடு கலந்ததுவோ?
2. துறைபோகிய ஒத்தும்—கல்வியில் துறைபோகியதும்.
3. அவரது சிறப்பு உணர்த்துதற்குப் 'பாகன்' என ஒருமையாற் கூறாது 'பாகர்' எனப் பன்மையாற் கூறினார்.

மேறியதறிந் தன்றல்லது வந்தவாறு
நனியறிந்தன்றோ விலனே தாஅய்
முயற்பற ழுகளு முல்லையம் புறவிற்
சுவைக்கதிர் வரகின் சீறூ ராங்கண்
மெல்லிய லரிவையில் வயினிறீஇ
யிழிமினென்ற நின்மொழி மருண்டிசினே
வான்வழங்கியற்கை வளிபூட்டினையோ
மானுருவாக நின் மனம் பூட்டினையோ
வுரைமதி வாழியோ வலவ வெனத்தன்
வரைமருண் மார்பி னளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கன னெடுந்தகை
விருந்தோ பெற்றன டிருந்திழை யோளே''[1]

(அகம்–384)

இதனாற் பாகன் சிறப்புக் கூறியவாறு காண்க.

''மறத்தற் கரிதாற்பாக பன்னாள்
அறத்தொடு வருந்திய வல்கு தொழிற்கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீரவல்வர்
நாநவில் பல்கிளை கறங்குமாண்வினை
மணியொலி கேளாள் வாணுதலதனா
லேகுமி னென்ற விளையர் வல்லே
யில்புக்கறியுணர்வாகமெல்லென
மண்ணாக் கூந்தன் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரலழுத்திய
வந்நிலைப்புகுதலின் மெய்வருத்துராஅ
யவிழ்பூமுடியள் கவைஇய
மடமா வரிவை மகிழ்ந்தயர் நிலையே''[2]

(நற்றிணை—42)

---

1. பொருள்: வலவ! நம் வேந்தன் வெற்றி கொண்டு பகைவினை முடித்தானாக நான் தேரில் ஏறியதை யறிவேன்; ஆனால் இங்கு எப்படி வந்தேன் என்பதை யறியேன். சீறூரில் மெல்லியல் அரிவையின் மனைக் கண் தேரை நிறுத்தி இறங்குமின் என்று நீ கூறியதைக் கேட்டு மருண்டேன். நீ காற்றைக் குதிரையாகப் பூட்டினாயா? அல்லது நின் மனத்தைப் பூட்டினாயா என்று தலைவன் தன் வலவனைத் தழுவிக் கொண்டு மனைபுக உடனே திருந்திழையாகிய தலைவி அவர்களை விருந்தெதிர் கொண்டனள்.

2. பொருள்: பக்கம் 39ல் காண்க.

இது தானுற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறியது.

''ஊர்கபாக வொருவினை கழிய''
(அகம்-44)

''செல்கதேரே நல்வலம் பெறுந'' (அகம்-34. 374)

எனவும் வரும்.

''தயங்கிய களிற்றின் மேற்றகை காணவிடுவதோ
தான்வளம் படவென்ற தகைநன்மா மேல்கொண்டு'
(கலி-31)

என வருவன தலைவி கூற்றாதலின் தலைவன் மீண்டு வருங்காற் பாகற்கே கூறுவனென்றார்.

காமக்கிழத்தி மனையோள் என்று இவர் ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்; காமக் கிழத்தி மனையோளென்றிவர் சொல்லிய ஏமுறு கிளவி எதிரும்-இற்பரத்தை தலைவியென்று கூறிய இருவர் சொல்லிய வருத்தமுற்ற கிளவியின் எதிரிடத்தும் கூற்று நிகழ்த்தும்.

அவை 'அருஞ் சுரத்து வருத்தம் உற்றீரே' எனவும் 'எம்மை மறந்தீரே' எனவுங் கூறுவனவும் பிறவுமாம்.

''எரிகவர்ந்துண்ட வென்றூழ்நீளிடை
யரியவாயினு மெளியவன்றே
யவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பிக்
கடுமாண்றிண்டேர் கடைஇ
நெடுமா னோக்கிநின் னுள்ளியாம் வரவே.''[1]
(ஐங்-360)

இது வருத்தம் உற்றிரே என்றதற்குக் கூறியது.

,,தொடங்குவினை தவிரா வசைவி னோன்றாட்
கிடந்துயிர் மறுகுவதாயினுமிடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
த்ாவி லுள்ளந் தலைத் தலைச் சிறப்பச்
செய்வினைக் ககன்ற காலை யெஃகுற்
றிருவேறாகிய தெரிதகுவனப்பின்
மாவின றுவடிபோலக் காண்டொறு
மேவறண்டா மகிழ் நோக்குண்க
ணினையாது கழிந்த வைக லெனையதூஉம்
வாழலென் யானெனத் தேற்றிப் பன்மாண்

1. பொருள்: பக்கம் 40ல் காண்க.

டாழக் கூறிய தகைசானன்மொழி
மறந்தனிர்போறி ரெம்மெனச்சிறந்தநின்
னெயிறுகெழு துவர்வாயின்னகையழுங்க
வினவலானாப் புனையிழைகேளினி
வெம்மை தண்டா வெரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய வியவுள்யானை
நீர்மருங் களியாது தேர்மருங் கோடி
யறுநீரம்பியி னெறிமுதலுணங்கு
முள்ளுநர்ப்பனிக்கு மூக்கருங்கடத்திடை
யெள்ளனோனாப் பொருடரல் விருப்பொரு
நாணுத்தளையாகவைகி மாண்வினைக்
குடம்பாண்டொழிந்தமையல்லதை
மடங்கெழு நெஞ்ச நின்னுழையாதுவே''[1]

(அகம்-29)

இது மறந்தீர்போலும் என்றதற்கும் கூறியது.

''உள்ளினெனல்லெனோ யானேயுள்ளி
நினைந்தனெனல்லனோ பெரிதே நினைந்து
மருண்டென னல்லனோ வுலகத்துப்பண்பே
நீடியமராஅத்த தோடுதோய்மலிநிறை
யிறைத்துணச் சென்றற்றாஅங்
கனைப்பெருங்காம மீண்டுகடைக் கொளவே''[2]

(குறுந்-99)

'பிறவும்' என்றதனான் இத்தன்மையனவுங் கொள்க. இவை இருவர்க்கும் பொது. இவற்றைக் காமக்கிழத்தி விரைந்து கூறுமென்றற்கு அவளை முற்கூறினார்.

---

1. பொருள்: மாவடுப் பிளவுபோலும் நின கண்களை நினையாது கழியும் நாள்கள் யான் வாழா நாளாகும் என எம்முடன் இருந்தபோது கூறிய சொற்களை, தான் அடித்தயானை இடப்பக்கம் வீழப் பசி வருத்தினும் அதனை உண்ணாமல் வேறு யானையை யடிக்கச் சொல்லும் புலிபோலும் ஊக்கமுடன் பொருளீட்ட எம்மைப் பிரிந்து சென்ற காலத்தில் மறந்து விட்டீர்போலும் என என்னை வினவும் ஆயிழையே கேள்; கொடிய வெப்பம் நீங்காத வழியில் யானை யானது நீர்பெறாது பேய்த்தேர் காணும் இடமெல்லாம் ஓடி மயங்கும் படியான நீரற்ற வழிகளையுடைய காட்டிடத்து, பிறர் இகழ்வதைப் பொறாத ஊக்கமொடு பொருளீட்டுதலை விரும்பி உடம்பு அங்கே இருந்ததேயல்லாமல் என் அறிவற்ற நெஞ்சம் நின்னிடத்தேதான் கிடந்தது.

2. பொருள்: பக்கம் 42ல் காண்க.

சென்றதேஎத்து உழப்பு நனிவிளக்கி இன்றிச் சென்றதம் நிலை கிளப்பினும்-அங்ஙனங் கூறிய இருவர்க்குந்தான் சென்ற தேயத்தில் வருத்தத்தை மிகவும் விளங்கக்கூறி நனவினாற் சேறலின்றிக் கனவினாற் கடத்திடைச் சென்ற தம்முடைய நிலையைத் தலைவன் கூறினும்.

உதாரணம்

''ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்
துள்ளியுமறிதிரோ வெம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவலழுங்க
நோய்முந் துறுத்து நொதுமலமொழியனின்
னாய்நல மறப்பெனோ மற்றே சேணிகந்
தொழிகழை மிசைந்த ஞெலிசொரி யொண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுன் மீமிசைவளி சுழற்றுறாஅக்
காடுகவர் பெருந்தீ யோடுவயினோடலி
னதர் கெடுத்தலறிய சாத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇயமையல் வேழத்
தினந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றாற் பட்டெனக்
கட்பட ரோதி நிற்படர்ந் துள்ளி
யருஞ் செலவாற்றா வாரிடை ஞெரேரெனப்
பரந்துப டுபாய னவ்விபட்டென
விலங்குவளை செறியா விருத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்
டின்னகை யினையமாகவு மெம்வயி
னூடல் யாங்கு வந்தன்றெனயாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதனீவி
நறுங்கதுப்புளரிய நன்ன ரமயத்து
வறுங்கை காட்டிய வாயல்கனவி
னேற்றேக் கற்ற வுலமரல்
போற்றா யாகலிற் புலத்தியா லெம்மே''[1]

(அகம்-39)

இதனுள், வறுங்கை காட்டிய வாயல் கனவினென நனவின்றிச் சென்றவற்றைத் தலைவன் கூறியவாறு காண்க. இதுவும் இருவர்க்குமாம்.

---

1. பொருள்: பக்கம் 41ல் காண்க

அருந்தொழில் முடித்த செம்மற்காலை விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்-செயற்கு அரிதாகிய வினையை முடித்த தலைமையை எய்திய காலத்தே தலைவி விருந்தெதிர் கோடலோடே நீராடிக் கோலஞ் செய்தல் முதலியவற்றைக் காண்டல் வேண்டிய இடத்தும் தலைவன் கூற்று நிகழ்த்தும்.

உதாரணம்

'' முரம்புதலை மணந்த நிரம்பாவியவி
னேங்கித்தோன்று முமண்பொலி சிறுகுடிக்
களரிப்புளியிற் காய்பசி பெயர்ப்ப
வுச்சிக் கொண்ட வோங்குடைவம்பலீர்
முற்றையுமுடையமோ மற்றேபிற்றே
வீழ்மா மணிய புனைநெடுங் கூந்த
னீர்வார் புள்ளி யாக நனைப்ப
விருந்தயர் விரும்பினள் வருந்துந்
திருந்திழையரிவை தேமொழி நிலையே''[1]

(நற்றிணை-374)

என இதனுள் விருந்தயர் விருப்பினளென விருந்தொடு நல்லவை வேட்டுக் கூறியவாறு காண்க.

மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்-வினை முற்றிப் புகுந்த தலைமகனை எதிரேற்றுக் கொள்ளும் மங்கல மரபினர் மாலையேந்திய பெண்டிரும் புதல்வருங் கேளிரும் ஆகலான் அக்கேளிர் செய்யும் எதிர்கோடலொழுக்கத்துக் கண்ணும், தலைமகன் உள்ள மகிழ்ந்துரைக்கும்.

உம்மை விரிக்க, பெண்டிரும் மக்களுமாகிய கேளி ரென்றுமாம்.

---

1. பொருள்: பரல் நிரம்பிய சென்றுமுடியாத வழியில் உள்ள உமணர் சிறுகுடியில் களர் நிலத்து விளைந்த புளிச்சுவையுடைய உணவுண்டு பசி தீர்ந்து உச்சியில் குடைபிடித்தவராய்ச் செல்லும் புதியவர்களே! எம் காதலியைப் பிரிந்துவந்த பிற்காலத்தில் யாம் வினை முற்றி மீளுவதறிந்து நீலமணி போலும் கூந்தலி னின்றும் நீராடியமையால் நீர்த் துளிகள் வீழ்ந்து உடம்பை நனைப்ப எமக்கு விருந்தயரும் விருப்பத்தோடு அட்டில் அமைக்க வருந்தும் அவளது நிலையை முற்காலத்து யாம் அறிதலுடையேமாய் இருந்தோமோ இல்லையோ. இப் பிற்காலத்து உடையே மாயினேம்.

உதாரணம்

" திருந்துங் காட்சிப் பெரும்பெயர்க் கற்பி
னாணுடையரிவை மாணகர் நெடுந்தே
ரெய்தவந் தன்றாற் பாக நல்வர
விளையரிசைத்தலிற் கிளையோ ரெல்லாஞ்
சேயுயர் நெடுங்கடைத் துவன்றினரெதிர்மார்
தாயரும் புதல்வருந் தன்முன் பறியாக்
கழிபேருவகை வழிவழி சிறப்ப
வறம்புரி யொழுக்கங் காண்கம்
வருந்தின காண்க நின்றிருந்து நடைமாவே"

ஏனைவாயில் எதிரொடு தொகைஇ-சிறந்த மொழியை ஒழிந்து நின்ற வாயில்கட்கு எதிரே கூறுங் கூற்றோடே முற் கூறியவற்றைத் தொகுத்து;

உதாரணம்

" நகுகம் வாராய் பாண பகுவா
யரிபெய் கிண்கிணி யார்ப்பத்தெருவிற்
றேர்நடைபயிற்றுந் தேமொழிப்புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சந் துரப்ப யாந்தம்
முயங்கல் விருப்பொடு குறுகினேமாகப்
பிறைவனப்புற்ற மாசறிருநுத
னாறிருங் கதுப்பி னெங்காதலி வேறுணர்ந்து
வெரூஉமான்பிணையினொ ரீஇ
யாரையோவென் றிருந்து நின்றதுவே"[1]

(நற்றிணை-250)

இஃது, ஏனைவாயிலாகிய பாணற்கு உரைத்தது.

பண்ணமை பகுதி முப்பதினொரு மூன்றும்-ஓதப்பட்ட இவையே இடமாக நல்லறிவுடையோர் ஆண்டாண்டு வேறு வேறாகச் செய்யுள் செய்து கோடற்கு அமைந்து நின்ற கூறுபாட்டை உடையவாகிய முப்பத்து மூன்று துறையும்.

எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன்மேன-களவுபோல இழி தொழிலன்றி ஆராய்தற்கரிய சிறப்போடு கூடிய தலைவன் கண்ண என்றவாறு.

---

1. பொருள் பக்கம் 26 ல் காண்க.

சிறப்பாவன: வந்த குற்றம் வழிகெட ஒழுகலும் இல்லறம் நிகழ்த்தலும் பிரிவாற்றுதலும் பிறவுமாம். இன்னவிடத்தும் இன்னவிடத்தும் நிகழுங் கூற்றுக்களை வாயிலெதிர் கூறுங் கூற்றோடே தொகுத்துப் பண்ணுதற்கமைந்த பகுதியுடைய வாகிய முட்பத்து மூன்று துறையுந் தலைவன் கண் நிகழ்வன என்று முடிக்க. எடுத்துரைப்பினுந் தந்நிலை கிளப்பினும் அக் கூற்றுக்களையும் வாயிலெதிரொடு தொகைஇயென முடிக்க.

இவற்றுட் பண்ணிக்கொள்ளும் பகுதியாவன. யாம் மறைந்து சென்று இவனைக் கண்ணைப் புதைத்தால் தலை நின்றொழுகும் பரத்தையர் பெயர் கூறுவனென்று உட்கொண்டு காமக்கிழத்தியாதல் தலைவியாதல் சென்று கண் புதைத்துழித் தலைவன் கூறுவனவும், பள்ளியிடத்து வந்திருந்து கூறுவனவும் இவள் ஊடற்குக் காரணம் என்னென்று தோழி வினாயவழிக் கூறுவனவும் பிரிந்த காலத்து இவளை மறந்தவாறென்னென்ற தோழிக்குக் கூறுவனவும் பிறவுமாம்.

உதாரணம்

''சிலம்புகமழ் காந்தணறுங்குலையன்ன
நலம்பெறு கையினெங்கண்புதைத்தோயே
பாயலின்றுணையாகிய பணைத்தோட்
டோகை மாட்சியமடந்தை
நீயல துளரோ வென்னெஞ்சமர்ந்தோரே''[1]

(ஐங்-293)

''தாழிருடுமிய மின்னித் தண்ணென
வீழுறையினிய சிதறி யூழிற்
கடிப்பிகு முரசின் முழங்கியிடித்திடத்துப்
பெய்கினி வாழியோ பெருவான்யாமே
செய்வினை முடித்த செம்மலுள்ளமொ
டிவளின் மேவினமாகிக் குவளைக்
குறுந்தாணாண்மலர்நாறு
நறுமென் கூந்தன் மெல்லணையேமே''[2]

(குறுந்-270)

1. பொருள்: மலையெங்கும் மணக்கும் காந்தளினது கொத்துப்போலும் கைகளினால் என் கண்ணைப் புதைத்தாய். துயிலத் துணையாகும் பருத்த தோளும் மயில் சாயலுமுடைய மடந்தையே என் நெஞ்சத்து அமர்ந்தோர் நீயலது வேறு உளரோ-இல்லை.

2. பொருள்: பக்கம் 38ல் காண்க.

''இம்மைப் பிறப்பிற் பிரியலமென்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள்''[1]

(குறள்-1315)

''தன்னை யுணர்த்தினுங்காயும் பிறர்க்குநீ
ரிந்நீரராகுதிரென்று''[2] (குறள்-1319)

''எரிகவர்ந்துண்ட வென்றூழ் நீளிடைச்
சிறிது கண்படிப்பினுங் காண்குவென்மன்ற
நள்ளென்குங்குனளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கிற்
றேம்பாய் கூந்தன் மாஅயோளே''[3]

(ஐங்குறு-324)

எனவும் வரும். இன்னும் அதனானே ஊடலைவிரும்பிக் கூறு வனவுங் கொள்க.

''ஊடலினுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவதன்றுகொலென்று''[4] (குறள்-1307)

''ஊடுகமன்னோவொளியிழையாமிரப்ப
நீடுக மன்னோவிரா''[5] (குறள்—1329)

எனவரும். இன்னுங் கற்பியற்கண் தலைவன் கூற்றாய் வேறுபட வரும் சான்றோர் செய்யுட்களெல்லாம் இதனான் அமைத்துக் கொள்க.

---

1. பொருள்: இப்பிறவியில் நாம் பிரியேம் என்றேன்; அவ்வளவில் தன் கண்ணில் நிறைந்த நீர் கொண்டு அழுதாள்.
2. பொருள்: தன்னை யான் ஊடலுணர்த்தினாலும் அவள் இப்படித்தானே பிறரிடத்தும் (பிறமகளிரிடத்தும்) ஊடல் உணர்த்துவீர் என்று சொல்லி மேலும் புலப்பாளாவாள்.
3. பொருள்: நெருப்புக் கவர்ந்து பற்றிய ஞாயிற்றின் வெப்பம் மிக்க சுரத்திடையே நடுஇரவில் யான் சிறிது பொழுது கண் அயரினும் சுணங்கும் கூந்தலும் உடைய மாயோளைக் காண்பேன். அதனால் அவளை யான் மறக்குமாறில்லை.
4. பொருள்: கூடியிருப்பதால் வரும் இன்பம் இவ்வூடலால் நீட்டித்துவருவது அன்றுபோலும் என எண்ணுவதால் ஊடலாலும் ஓர் துன்பம் உண்டு.
5. பொருள்: ஒள்ளிய இழையணிந்த தலைவி இன்னும் ஊடுவாளாக; அவ்வூடலைத் தீர்க்கும் பொருட்டு யாம் அவளை இரக்க வேண்டி இராப்பொழுதும் நீட்டிப்பதாக.

தலைவி கூற்று

145\. அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையிற் றிரியா வனப்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியின் நீக்கிய விளிவரு நிலையும்
புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு
அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி
எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணும்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக்கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட் டிறுதிக் கண்ணும்
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு[1] தன்வர வறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்
தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்[2]
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணும்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை யுள்ளிய வழியும்
தன்வயிற் சிறப்பினும் அவன்வயிற் பிரிப்பினும்

பாடம். 1. உள்ளமொடு
2. நெருங்கலும்

இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்
காமக் கிழத்தி நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை யொழுக்கத்துத் தோழிக் குரியவை
வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயினின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவது என்ப. (6)

இளம்

என்-எனின், கற்பின்கண் தலைவி கூற்று நிகழும் இடம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஏற்றல் முதலாக வாயிலின் வரூஉம் வகையொடு கூடத் தலைவி கூறல் உரியதாகும் என்றவாறு.

அவனறிவாற்ற மறியுமாகலின் ஏற்றற் கண்ணும் என்பது-தலைவனது நினைவைத்[1] தலைவி மிக அறியுமாகலின் அவனை யுயர்த்துக் கூறுதற்கண்ணும் தலைவி கூற்று நிகழும்.

உதாரணம்

"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்தோள் பிரிபறியலரே
தாமரைத் தண்தாதூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன்போலப்
புரைய மன்ற புரையோர்கேண்மை
நீரின்றமையா உலகம் போலத்
தம்மின்றமையா நந்நயந்தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறியலரே"[2]

(நற்றிணை-1)

---

1. அறிவு-நினைவு என்றது தன்னையே நினைவன் தலைவன் எனத் தலைவி எண்ணுதல். உதாரணத்தில் நின்ற சொல்லர், தோள் பிரிவு அறியலர் என வருவன வற்றால் அறியலாம்.

2. பொருள்: என்றும் தவறாது நிலைத்த சொல்லுடையர்; எனக்கு எப்போதும் இனியவர்; என்றும் என் தோளைப் பிரியக் கருதாதவர். அப்படிப்பட்டவரது உயர்ந்த நட்பு தாமரைத்தாது ஊதிச் சந்தன மரத்தில் கட்டிய

எனவரும்.

நிறுத்தற் கண்ணும் என்பது-தலைவனது பண்பினைத் தோழி கூறியவாற்றால் தான் நிறுத்துக் கூறுதற் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

"முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழருவிப் பாறைமருங்கின்
ஆடுமயில் முன்னதாகக் கோடியர்
விழவுக்கொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிருங் குன்றநாடன்
குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ
வல்லகூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணில் காதலந்தோழி
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரும் பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாணமகள்
எண்ணுமுறை நிறுத்த பண்ணின்உள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே."[1]

(அகம்-352)

என வரும்.

தேன்போல உயர்ந்ததாகும். நீரை இன்றியமையாத உலகம் போலத் தம்மையின்றியமையாத நம்மை நயந்து தாம்பிரிதலால் என்நுதல் பசலையுறுதற்கு அஞ்சிச் செய்வதறியாத அவர் சிறுமை (பிரிதல்) அடைவரோ? மாட்டார்.

1. பொருள்: ஆடும் விறலிக்குப் பின் நிற்கும் முழவு வாசிக்கும் கோடியர்போல ஆடுமயில் முன்நிற்கப் பாறைப் பக்கமாகப் பலாப்பழத்தைத் தழுவியவண்ணம் ஆண் குரங்கானது நின்று தன் பிணையை அழைக்கும் படியான குன்றத்துக்குரிய தலைவன், நற்குடிப் பிறந்தவன், கூடியவரைப் பிரியாதவன், கெடுமொழி கூறாதவன். அன்புடையவன் எனத் தோழீ! நீ நல்லன கூறி அவனை என்னோடு சேர்த்தாய். நீ நல்லவளே. அஞ்சி என்பானின் புகழ் அமைந்த பாடலில் பாணமகள் அமைத்த பண்ணைக் காட்டினும், அவள் புதியதாக அமைத்த திறத்தைக் காட்டினும், எம் திருமண நாளைக் காட்டினும் இன்று எனக்கு இனியனாவான்.

உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா அன்பின் கண்ணும் என்பது-தலைவிக்கு உரிமையைக் கொடுத்த கிழவோன் மாட்டுப் பெருமையிற்றிரியா அன்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே''[1]

(குறுந்-3)

எனவரும்.

கிழவன் மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும் என்பது-தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல் பெருகிய காமத்தின் மிகுதியின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''நீர் நீடாடிற் கண்ணும் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனிராயின்எம் இல்லுய்த்துக் கொடுமோ
அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவில்
நடுங்கஞர் எவ்வங் களைந்த எம்மே''[2]

(குறுந்-354)

எனவும்,

''என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியுந்
தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்

---

1. பொருள்: குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு பெருந்தேன் கூடுகட்டும் நாடனொடு கொண்ட நட்பானது நிலத்தினும் பெரியது. வானினும் உயர்ந்தது. கடல்நீரினும் அளவில்லாதது.

2. பொருள்: பண்டு எம்மூரிற் பாம்பு உலவும் தெருவில் நடுங்கு துயர்களைந்து சென்றாய். நீண்ட நேரம் நீராடிற் கண் சிவக்கும். உண்டோர் வாயில் மிகுதியாயின் தேனும் புளிக்கும் அவ்வாறு நெடுநாள் இவளுடன் மகிழ்ந்த நீவிர் இப்போது பிரிய நினைந்தீராயின் எம் வீட்டில் விடுத்துச் செல்வீராக.

அன்னைபோல இனிய கூறியும்
கள்வர்போலக் கொடியன்மாதோ
மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கைதாய ஓங்குமலை அடுக்கத்து
ஆடுகழை நிவந்த பைங்கண்மூங்கில்
ஓடுமழை கிழிக்குஞ் சென்னிக்
கோடுயர் பிறங்கல் மலைகிழவோனே.''[1]

(நற்றிணை-28)

எனவும்,

''மனைநடுவயலை வேழம் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமைநாணி
நல்லன் என்றும்யாமே
அல்லனென்னும்என் தடமென்தோளே''[2]

(ஐங்குறு-11)

எனவும்,

''வீழுநர் வீழப்படுவார்க் கமையுமே
வாழுநம் என்னுஞ் செருக்கு''[3] (குறள்-1192)

எனவும் வரும்.

இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும் என்பது-தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

---

1. பொருள்: மலைகிழவோன் முன்னெல்லாம் என்கைக் கொண்டு தன் கண்ணில் ஒற்றியும் தன் கைக்கொண்டு என் கூந்தல் நீவியும் அன்னைபோல இனிய சொல்லியும் இருந்தான். இன்றோ கள்வர்போலக் கொடியன் ஆயினான்.

2. பொருள்: மனையில் நட்ட வயலைக்கொடி கொறுக்கந் தட்டையைச் சுற்றிப் படரும் துறைபொருந்திய ஊரனை அவன் நமக்குச் செய்த கொடுமைக்கு நாணி அவன் நல்லவன் என்று யாம் கூறுவாம். ஆனால் எம்தோள் அவன் பிரிவால் மெலிந்து காட்டி அவன் நல்லன் அல்லன் என்று கூறும்.

3. பொருள்: தம்மால் விரும்பப்பட்ட தலைவரால் விரும்பப் படும் மகளிர்க்குத் தலைவன் பிரிந்த காலத்தும் விரைந்து வருவார் என்னும் நினைவால் நன்கு வாழ்வேம் என்னும் தருக்கு அமையும்.

உதாரணம்

''இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு''[1]

(குறள்-1152)

எனவும்,

''குக்கூ என்றது கோழி அதனெதிர்
துட்கென்றற் றென்றூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப்பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே''[2]

(குறுந்-157)

எனவும் வரும்.

கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய இளிவரு நிலையும் என்பது- புதல்வன்றோன்றிய நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறுமாறு பண்ணிச் செறிவு நீக்கிய இளிவந்த நிலையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

இளிவந்த நிலையானது தன்னை அவமதித்தான் என்னுங் குறிப்பு.

உதாரணம்

''கரும்புநடு பாத்திக் கதிர்த்த ஆம்பல்
சுரும்பு பசிகளையும் பெரும்புனலூர
புதல்வனை யீன்ற வெம்மேனி
முயங்கல்மோ தெய்யநின் மார்பு சிதைப்பதுவே''[3]

(ஐங்குறு-65)

எனவரும்.

---

1. பொருள்: களவுக் காலத்து அவர் பார்வை புணர்ச்சி குறித்தமையால் இனிமையுடையதாய் இரா நின்றது. இன்று அவர் புணர்ச்சி பிரிவை நினைவுபடுத்துவதால் அஞ்சும் துன்பம் உடையதாய் இராநின்றது.
2. பொருள்: கோழி குக்கூ எனக் கூவியது. அதுகேட்டு என் நெஞ்சம் அதற்கு எதிராக நம் தோளைப் புணரும் காதலரை நம்மிற் பிரிக்கும் வைகறைப் பொழுதானது வந்ததே எனத்துட்கு என நடுங்கியது.
3. பொருள்: கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியில் முளைத்துத் தழைத்த ஆம்பலானது வண்டின் பசியைத் தேன் கொடுத்துப் போக்கும் பெரும்புனல் ஊரனே! புதல்வனைப் பயந்த; எம்மேனியைத் தழுவுதலைவிடுக; அது நின் மார்பின் அழகைச் சிதைத்துவிடும் ஆதலால்.

புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்றகிழவனைப் புலம்புநனி காட்டி இயன்ற நெஞ்சந்தலைப் பெயர்த்தருக்கி எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும் என்பது—விருப்பமுடைய உள்ளத்தோடே புதுவோரது நலத்தின் பொருட்டு அகன்ற கிழவனைத் தனது தனிமை மிகவும் காட்டி அவன் மாட்டுச் செல்கின்ற நெஞ்சத்தை மீட்டு அருகப்பண்ணி அவன் காதலித் தாளை எதிர்ப்பெய்து கொண்டு புணர்ச்சியை மறுத்த ஈரத்தின் கண்ணும் கூற்று நிகழும்.

ஈரமாவது முற்றும் மறாமை.

* "கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழைகண் டன்ன தூம்புடைத்திரள்கால்
களிற்றுச் செவியன்ன பாசடைமருங்கில்
கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை
முறுவல் முகத்திற் பன்மலர் தயங்கப்
பூத்த தாமரைப் புள்ளிமிழ்பழனத்து
வேப்புநனை அன்ன நெடுங்கண் நீர்ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற்றள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி விரைந்து தன்
ஈர்மலி மண்ணளைச் செறியும் ஊர
மனைநகு வயலை மரனிவர் கொழுங்கொடி
அரிமலர் ஆம்பலோடார் தழைதைஇ
விழவாடு மகளிரொடு தழுவணிப்பொலிந்து
மலரேர் உண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலுநின் காதலி எம்போல்
புல்உளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின்றுறைய
என்ன கடத்தளோ மற்றே தன்முகத்து

* பொருள்: தாமரை பூத்துள்ள புட்கள் ஒலிக்கும் வயலில் நீர் நண்டானது வெளியில் சென்று ஆங்கு இரை தேர்ந்து வந்த வெண்ணிற நாரையைக் கண்டு அஞ்சி மீளவும் தன் சேற்று வளையில் வந்து தங்கும்படியான ஊரனே! நின் காதலியாகிய பரத்தையானவள் வயலைக் கொடியால் ஆம்பலோடு கட்டிய தழையுடையுடுத்து விழாக் கொள்ளும் மகளிரொடு தழுவியாடுதலாற் பொலிவு பெற்று மையுண்ட கண்களோடு விளங்கு பவளாகிய அவள் தன் தொடியணிந்த கைகளால்

எழுதெழில் சிதைய அழுதனள் ஏங்கி
வடித்தென உருத்த தித்திப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு
கூர்நுனை மழுகிய எயிற்றள்
ஊர்முழுது நுவலுநிற் காணிய சென்மே.''

(அகம்-176)

எனவரும்.

தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற் கண்ணும் என்பது-பிறள் மாட்டுத் தங்கிய ஒழுக்கத்துக் கிழவனைத் தாழ்ந்து எங்கையர்க்கு உரை[1]யென வேண்டிக் கோடற் கண்ணுங்கூற்று நிகழும் என்றவாறு.

'அகன்றுறை' என்னுங் கலியுள், (73)

''நோதக்காய் எனநின்னை நொந்தீவார் இல்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
நெகிழ் தொடி இளையவர் இடைமுலைத்தாதுசோர்ந்து
இதழ்வனப் பிழந்தநின் கண்ணிவந் துரையாக்கால்
....
....
மண்டுநீர் ஆரா மலிகடல் போதுநின்
தண்டாப் பரத்தை தலைக்கொள நாளும்
புலத்தகைப்பெண்டினைரத் தேற்றி மற்றியாமெனில்
தோலாமோ நின்பொய் மருண்டு''[2]

வளைத்துத் தழுவிய தழுவல் விடுபடின் அதற்கே வருந்துபவளாவாள். மேலும் தன்னிடத்து எழுதிய அழகுசிதைய அழுதவளாய் ஏக்கமுற்றுப் பொன்னை உருக்கி வார்த்தாற்போலும் தேமலும் மெல்விரலையும் பல்லால் கடித்ததால் மழுங்கிய பற்களையும் உடைய வளாய் நின்னைப் பற்றி அலர் தூற்றும் ஊரெங்கும் நின்னைக் காணச் செல்வாளானாள். அப்படிப் பட்டவள் புதல்வற் பயந்த என்னைப்போல மனையின் கண் நின்னைப் பிரிந்து தங்கியிருக்க என்ன கடப்பாடுடையள் ஆவாள்?

1. உரை—நின்குறையையுரை

2. பொருள்: தலைவ! நின்பிரிவால் நெகிழும் தொடியுடைய பரத்தையர் முலையிடைப் புணர்ந்ததனால் அழகிழந்தநின் கண்ணி நின் பரத்தமையை எமக்குச் சொல்லாதபொழுது, நீ பரத்தமையால் எமக்குத் துன்பம் செய்கின்றாய் என்று நின்னிடம் சொல்வார் இல்லையென்றால் 'யான் தீதிலேன் என்று சொல்லித்

எனக் கூறுதலால் தான் தாழ்ந்தவாறும், எங்கையர்க்கு உரை இற்றெனக் கூறியவாறும் காண்க.

> ''நினக்கே அன்றஃதெமக்குமார் இனிதே
> நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை
> வேண்டிய குறிப்பினை ஆகி
> ஈண்டு நீ யருளாது ஆண்டுறைதல்லே''[1]
>
> (ஐங்குறு-46)

இதுவும் அது.

செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும் என்பது தலைவன் போகாத காலத்துப் போவெனக் கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

> ''பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
> நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
> ஆங்கே அவர்வயிற்சென்றீ அணிசிதைப்பான்
> ஈங்கெம் புதல்வனைத் தந்து''[3]
>
> (கலித்-79)

எனவரும்.

தெளிவிக்க வருவாயாக. அதனாற் பயன் என்-இது தலைவி கூற்று......யாற்றுநீரால் நிறையாத கடல்போல நாளும் புணர்ந்தும் பரத்தைமை குறையாத நின்னொடு புலந்து நிற்கும் பெண்டிரைத் தெளிவிப்பாயாக. நின் பொய்க்கூற்றை மெய்யாகக் கொள்ளுதலால் நினைக்கு யாம் தோற்பேம். யாம் தோற்கும்படியாக நின் தெளிவிப்பு அமையின் பயன்என்.

1. பொருள்: பெரும! நின்மார்பை விரும்பிய நன்னுதல் அரிவை (பரத்தை) விரும்பிச் செய்யும் குறிப்பினையுடையையாய் இங்கு (தலைவியிடம்) வாராது அங்கேயே நீ தங்குதல் நினக்கு மட்டுமன்றி எமக்கும் நல்லதே.

2. தன்னை விட்டுச் செல்லாதபோது பரத்தையரிடம் செல்க எனப் புலந்துரைத்து விடுதல்.

3. பொருள்: எம் புதல்வனைப் பல பொய் கூறிப் பாராட்டி அவனை நீங்காமல் நிற்கிறாய். பரத்தையின் கால எல்லையும் கடத்துகின்றாய். நெடிய இந்த வாயிலில் நில்லாதே. சேரியிலுள்ள பரத்தையரிடமே செல். இப் புதல்வனை அங்கு அழைத்துச் சென்றால் இவன் அப்பரத்தையர் அழகைச் சிதைப்பான். அதனால் விட்டுச் செல்.

காமக்கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும் என்பது-காமக்கிழத்தி தலைவி மகவைத் தழீஇ ஏமுற்ற விளையாட்டின் இறுதிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும்பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
காணுநர் இன்மையிற் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்தாங்கு இளமுலை
வருக மாளஎன் உயிரெனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோள் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமகளெவன்பே துற்றனை
நீயுந் தாயை இவற்கென யான்தன்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரில் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோள் நிலை கண்டியானும்
பேணினென் அல்லனோ மகிழ்ந வானத்து
அணங்கருங் கடவுள் அன்னோள் நின்
மகன்தாயாதல் புரைவதாங்கெனவே"[1]

(அகம்-16)

எனவரும்.

---

1. பொருள்: அங்கையும் அழகிய வாயும் மழலைத் தீம் சொல்லும், பொன்தொடியும் உடைய யாவரும் கண்டு விரும்பும் என் புதல்வனை தான்தேர் உருட்டிச் செல்லும் தெருவில் தனியனாய் இருப்பக் கண்டு நின் பரத்தையானவள் அக்கம்பக்கம் யாரும் இல்லாமையை நோக்கி அவனை என் உயிரே வருக எனத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு நின்றாள். அது கண்டயான் 'நீயும் அவனுக்குத் தாய்தான்' என்று அவளைத் தழுவிக் கூறினேன். அவள் உடன் நாணினாள்; அவள் நிலை கண்டு தலைவனே! நின்மகனுக்கு அவளும் தாயாவாள் என அவளை விரும்பியேற்றேன் அல்லனோ?

சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி யறம்புரி நெஞ்சமொடு தன் வரவறியாமை புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும் என்பது-சிறந்த செய்கையினையுடைய அவ்விடத்துத் தலைவன் தோன்றி அறம்புரி நெஞ்சத்தோடே தனது வரவைத் தலைவியறியாளாக நின்று தலைவியைப் புறஞ்செய்து அவள் மாட்டுளதாகிய ஊடலைப் பெயர்த்தல் வேண்டின இடத்தும் தலைவி மாட்டுக் கூற்று நிகழும் என்றவாறு.

அவ்வழி என்றது—தலைவியுங் காமக்கிழத்தியைப் போலத் தன் மகனைக் கொண்டு விளையாடிய வழியும் என்றவாறு.

'' மையற விளங்கிய'' என்னும் மருதக்கலியுள் (81)

'' பெரும், விருந்தொடு கைதூவா வெம்மையும் உள்ளாய்
பெருந்தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் யாம்கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின்றற்றாப்
பெருந்த காய்கூறு சில''[1]

எனவும்,

''எல்லிழாய்,
சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந்தாங்கே
வாயோடி ஏனாதிப்பாடியம் என்றற்றா
நோய்நாந் தணிக்கும் மருந்தெனப் பாராட்ட
ஓவா தடுத்தடுத்தத் தத்தா என் பான்மான
வேய் மென்தோள் வேய்த்திறஞ் சேர்த்தலும் மற்றிவன்
வாயுள்ளிப் போகான் அரோ''[2]

எனவும்,

'' உள்ளி உழையே ஒருங்கு படைவிடக்
கள்வர் படர்தந்ததுபோலத் தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே ஈங்கு''[3]

எனவும், இவ்வாறு வரும்.

1–3 பொருள்: (தலைவி மகனைப் பார்த்து) பெரும! பெருந்தகாய்! விருந்தினர் வருதலால் விட்டு வாராத எம்மையும் நீ நினையாமல் தெருவிலே தாய்மார் நினக்குச் சொற்களைக் கற்றுத்தரக் கற்றுத்தரத் திருத்தமாக நீகற்ற சொற்களை நின்னால் இயல்பாகவே இன்பமுடன் இருக்கும் எம் நெஞ்சம் மேலும் அமுதம் உண்டாற்போல இனிமை பெறச் சில சொல்வாயாக என்றாள். பின்னர்த் தோழியைப் பார்த்து, தோழீ! நம் பாணனை எங்குள்ளாய் என யாம் கேட்க அவன்

தந்தையர் ஒப்பர் மக்கள்[1] என்பதனால் அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும் என்பது-தந்தையரை மக்கள் ஒப்பர் என்பதனால் அந்தமில்லாத சிறப்பினையுடைய மக்களைப் பழித்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

''மைபடு சென்னி மழகளிற்றோடை'' என்னும் மருதக் கலியுள் (86)

''வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதன் மாட்டொத்தி பெரும மற்றொவ்வாதி
மாதர் மெல்நோக்கின் மகளிரை நுந்தைபோல்
நோய்கூர நோக்காய் விடல்''[2]

எனவரும்.

நம்மை விட்டுப் பரத்தையர் சேரியனாய் நமக்குச் சேயனாய் நின்று 'ஏனாதிப் பாடியில் உள்ளேம் என்று தலைவனையும் சேர்த்துக் கூறினான். நாம் புதல்வன் நமக்குத் தலைவன் பிரிவில் ஆறுதலாய் இருத்தலைப் பாராட்டிக் கூறிக் கொண்டிருக்க இவன், நாம் தோளில் சேர்த்து அணைத்திருக்கவும் அத்தா அத்தா என அடுத்தடுத்துக் கூறுகின்றான். அவ்வாறு கூறுவதைத் தன் வாயிலிருந்து நீக்காதவனாகின்றான். இதற்குக் காரணம் என்னை? (தலைவன் தலைவிக்குப் பின்புறமாக வந்து நின்றான். அதை அறிந்த புதல்வன் அத்தா அத்தா எனக் கூறினான். தோழி அறிந்திருந்தும் தலைவன் குறிப்பால் தலைவிக்கு அவன் வரவைக் கூறவில்லை. அதனால்தான் தலைவி தோழியிடம் அவ்வாறு கூறினாள்.)

தோழியின் குறிப்பாலும் புதல்வன் அத்தா அத்தா என்றதாலும் தலைவன் வரவையறிந்த தலைவி மீண்டும் தோழியிடம் பகைவரிடத்துப் படைக்கலங்களைச் சேர விடுவது போல நம்மை யிகழ்தற்கே இவர் வந்தார்; நம்பால் அன்பு கொண்டு வந்தாரல்லர் என்று தலைவன் கேட்பக் கூறினாள்.

1. தந்தையை ஒப்பர் மக்கள் என்பது அக்காலப் பழமொழி.

2. பொருள்: பெரும! (மகனே!) நன்மையுடையார் கெடுதலல்லது தான்கெடாத பொருளைப் பிறர்க்குக் கொடுக்கும் குணத்தினளவில் நீ நின் தந்தையை யொப்பாயாக. காதலுடைய நோக்கினையுடைய மகளிரை அவர் நோய்மிகும்படியாக நின் தந்தை நோக்காது விடுதல்போலும் குணத்தில் நீயும் மகளிரை நோய்மிக நோக்காது விடுதலை ஒழிவாயாக,

கொடியோர் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும் என்பது*-கொடியாரது கொடுமை சுடாநின்றதெனப் புணர்ச்சியை ஒடியாது புகழை விரும்பினோர் சொல்லோடே ஒருப்பட்டு வேறுபடுதலின் நீங்கிய தகுதிக் கண்ணும் என்றவாறு.

அஃதாவது,** அக்காலத்துத் தக்கதறிதல். புகழை விரும்பி னோர் சொல்லும் சொல்லாவது, காமம் விரும்பும் பரத்தை யரைப் போலாது அறத்தை விரும்புதல்.

உதாரணம்

'யாரிவனெங் கூந்தல்' என்னும் மருதக்கலியுள் (89)
''மாண மறந்துள்ளா நாணிலிக்கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே
உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎமென நெருங்கில் தப்பினேன்
என்றடி சேர்த்தலுமுண்டு''[1]

என்பது ஆற்றமை வாயிலாகப் பகுதியினீங்கிய தகுதி.

பாணன் முதலானோர்க்கு வாயில் நேர்ந்தது வந்த வழி காண்க.

கொடுமை யொழுக்கங் கோடல்[2] வேண்டி யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதலெங்கையர் காணின் நன் றென மாதர் சான்ற வகையின் கண்ணும் என்பது-தலைவனது கொடுமை யொழுக்கத்தினைத் தலைவியே பொறுக்க வேண்டி

---

* கொடியோராகிய தலைவனது பரத்தையிற் பிரிவாகிய கொடுமை தன்னைச் சுடும் என்று புணர்ச்சியை மறாது நல்லிசை நயந்த அறிஞரது அறச்சொற்களோடு உள்ளம் பொருந்தித் தன்னின் தலைவனை வேறுபடுத்திக் காணாது அவனொடு ஒன்றுபட்டு ஒழுகும் தகுதிக் கண்ணும்.

** அஃதாவது—தகுதியாவது.

1. பொருள்: நெஞ்சமே! இத்தலைவனைப் பொய் சொல்லித் தப்பிக்க விடேம்என்று நினைந்து நெருங்கிச் சினந்து கூறினால், இவனோ தவறு செய்து விட்டேன் என்று நம் அடிக்கண் வீழ்தலும் செய்வான். ஆதலால் நாம் மகிழ்வாய் இருத்தலை மறந்து நம்மை நினையாத நாணிலியாகிய தலைவனிடம் ஊடுதலாகிய போரில் தோற்று அதனால் வரும் புணர்ச்சியாகிய பயனை எய்துவாயாக.

2. கோடல்-பொறுத்துக் கொள்ளுதல்.

அவளடிமேல் வீழ்ந்தவனை நெருங்கி நின்மாட்டுக் காதலை யுடைய எங்கையர் காணின் இப்பணிதல் நன்றா[1]மெனக் காதல மைந்த வகையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

''நில்லாங்கு நில்லா'' என்னும் மருதக்கலியுள், (95)

''நல்லாய், பொய்யெல்லாம் ஏற்றித் தவறுதலைப் பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தேன்: அருளினி
அருளுகம் யாம் யாரே மெல்லாதெருள
அளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோடாடி யளித்தி
விடலைநீ நீத்தலின் நோய்பெரி தேய்க்கும்
நடலைப் பட்டெல்லா நின்பூழ்''[2]

இதனுள் ''கையொடு கண்டை பிழைத்தேனருள்'' என அடி மேல் வீழ்ந்தவாறும், 'அருளுகம் யாம் யாரேம்' எனக் காதலமைந்தவாறும், 'நீ நீக்கலின் நின் பூழெல்லாம் நடலைப் பட்டு நோய் பெரிதேய்க்கும்' அவற்றையின்னும் விளித்து நின் பாணனோடாடியளித்துவிடும் எனவும் இப்பணிதல் நின் பெண் டிர்க்கு நன்றாகுமே எனவுங் கூறியவாறு காண்க. ஈண்டுப்பூழ் என்றது குறிப்பினாற் பரத்தையரை.

தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளியவழியும் என்பது-தாயரைக் கிட்டிய நல்ல அணியை யுடைய புதல்வனை மாயப்பரத்தை குறித்த வழியுங் கூற்று நிகழும் என்றவாறு.

புதல்வனைப் பரத்தைமை குறித்தலாவது தலைவன் புறப்பெண்டிர் மாட்டுப் போகியவழி வெகுளுமாறுபோலப்

---

1. நன்றாம் என்பது நன்றன்றாம் என்னும் குறிப்பில் வந்தது. எள்ளல் சுவை.

2. பொருள்: நல்லாய்! யான் செய்த தவறுகளை என்மேல் ஏற்றி என் பொய்யுரைகளையெல்லாம் எனக்குத் தெளிவித்து என் களவைக் கையொடு பிடித் தாய். நான் தவறு செய்தவனே. இனி இரங்குவாயாக- இவ்வாறு தலைவன் தலைவியிடம் வேண்ட அவள், இரங்குவேம்; ஆனால் யாம் நினக்கு யார்? நின் பரத்தையராகிய குறும்பூழ்ப் பறவையெல்லாம் நீ முன் அளித்துப் பின் கைவிடுதலாலே நினது நடிப்பில் அகப் பட்டு நோய் பெரிது கொள்ளும் அவை வருந்தாதபடி நினக்கு ஆகும் அப்பரத்தையராகிய குறும்பூழ்ப் பறவை கள் எல்லாவற்றையும் பாணனால் அழைத்து அவை மனந்தெளிய அளித்து உடன் ஆடுவாயாக என்றாள்,

புதல்வனையும் அவரிடைச் சென்ற வழி வெகுளல். கண்ணிய நல்லணியெனவே அவர் கொடுத்த நல்லணியென்பது பெறுதும். பரத்தைமை உள்ளாதவழி இவள் மாட்டுக் குறிப்பு நிகழாதாம். மாயமென்பது பரத்தைக்குப் பண்பாகி இனஞ்சுட்டாது வந்தது.[1]

உதாரணம்

* ''உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்
நறுவடியாரிற்றவை போலழியக்

1. செந்தாமரை என்றால் அது வெண்டாமரையைச் சுட்டி அதனினும் வேறுபட்டது என்று அறியலாம். செஞ்ஞாயிறு என்றால் கருஞாயிறு என அதனினும் வேறுபட்ட ஒன்று இல்லாமையின் அது இன்னொரு இனத்தைச் சுட்டவில்லை. அதுபோல பரத்தையர்க்கெல்லாம் மாயம் இயல்பாகலின் மாயம் இல்லாப் பரத்தையர் இல்லாமையால் மாயப்பரத்தை என்பது வேறுபாடு சுட்டும்படியாக இல்லாமல் நின்றது. அதனால் பரத்தையை அடுத்தமாயம் என்பது இனம் சுட்டாது வந்தது.

* கருத்து. ஏடிசேடீ! நீ நம்மனை வாசற்படியை விட்டு வெளியில் போதலைச் செய்தபோது நின்னைப் பார்த்து இப்புதல்வனைத் தேவர் கோயில்களில் அழைத்துச் சென்று வலம் கொள்ளச் செய்துவா என்றேன். நீ அதை விட்டு விட்டாய். காற்றடித்தலால் கிளையினின்றும் காம்பு ஒடிந்து வீழும் மாவடுவில் பால்பிலிற்றுதல்போல் என் முலையைக் கையால் அமுக்கி அரக்கவும் என் கைக்கு அடங்காமல் பருத்துச் சுரந்த முலைப்பால் வீணாகும்படியாக, இவன் தந்தையின் பரத்தையருள் எவள் வீட்டில் இவனைக் கொண்டு சென்றாய்? கூறு என்றாள் தலைவி. அதற்குச் சேடியானவள், நீர்க்கு மேல் உயர்ந்து விரிந்த தாமரையின் கீழ்த் தாமரைப்பூ மலர்ந்தாற்போலக் குடை நிழலில் வரும் நின் மகனைத் தாயர் (பரத்தையர்) பார்த்துவிட்டு, 'என்னை மதியாது சென்ற தலைவனின் மகனாவான் இவன்' என்று எண்ணி வீட்டை விட்டு வெளியே வந்து தடுத்தனர். அவர்கள் வீட்டிற் சென்றான் இவன். அதனால் அவர்கள் இவனுக்குக் கைக் காணியாகத் தகுந்த அணிகளை அணிந்தனர் என்றாள். தலைவி மகனை இவன் பரத்தையர் கொடுத்தவற்றை வாங்குவானாம்; சீ, நம்மால் தலைவன் புலத்தற்குரியவன் எனதன் நெஞ்சிற் கூறிக் கொண்டாள். பின்னர் பரத்தையர் நினக்கு இட்ட மோதிரங்களைக் காட்டுக; பார்ப்பேன் என்ன அவன் காட்ட, ஒரு மோதிரம் சுறாமீன் குறித்ததாக இருக்கக் கண்டு இம்மோதிரத்தை பரத்தை

கரந்தியான் அரக்கவும் கைநில்லா வீங்கிச்
சுரந்த என் மென்முலைப் பால்பழு தாகநீ
நல்வாயிற் போத்தந்த பொழுதினான் எல்லா
கடவுட் கடிநகர் தோறும் இவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
ஈரமிலாத இவன்தந்தை பெண்டிருள்
யாரில் தவிர்ந்தனை கூறு;
நீருள் அடைமறை யாயிதழ்ப் போதுபோற்கொண்ட
குடைநிழல் தோன்று நின் செம்மலைக் காணூஉ
இவன்மன்ற யான்நோவ உள்ளங்கொண்டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில்வரை இறந்து போத்தந்து தாயர்
தெருவில் தவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தம் கலங்களுட் கையுறை என்றிவற்கு
ஒத்தவை ஆராய்ந்தணிந்தார் பிறன்பெண்டிர்
ஈத்தவை கொள்வானாம் இஃதொத்தன் சீத்தை
செறுதக்கான் மன்றபெரிது,
சிறுபட்டி, ஏதிலார் கைஎம்மை எள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு
அவற்றுள் நறாஇதழ் கண்டன்ன செவ்விரற்கேற்பச்
சுறாவேறெழுதிய மோதிரம் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி என்றுஞ்
செறியாப் பரத்தை இவன் தந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வல் என்பது தன்னை
அறீஇய செய்தவினை

நினக்கு இட்டதன் நோக்கம் இதனைவேறொன்றால் ஒற்றி அதை நின்மார்பில் ஒற்றி நானும் அங்கு வருவேன் என எனக்கு அறிவிக்கவேயாம் என்றாள். பின் மகனைப் பார்த்து நீயும் அப்படி எம்மை இகழ்பவனோ தான் என்றாள். பின் தன் மனதில் இதுவும் நமக்கு வேண்டுவதே என்றாள். பின் சேடியிடம் வெந்த புண்ணில் வேலெறிந்ததுபோல் இவன் தந்தை தொடியையும் இவன் கையில் அணிந்தவள் யாவள்? என்னைப் போலவே இவள் அழகைக் காண்க பிறரும் என்று தன்னைப் புகழும் ஒருத்தி இத்தொடியைத் தந்தாளா, யார்கூறு. அஞ்சாதே மகனே, நீயும் குற்றமுடையையல்லன்: இந்தொடியை இட்ட அப்பரத்தையரும் தவறுடையரல்லர். வேனிற் புதுப்புனல்போல் யாவர்க்கும் பயன்படும் இவன் தந்தையையும் நோவார் இல்லை. இத்தொடியை இவன் கைத்தந்தவர் யார் என்று வினாவும் யானே தவறுடையேன் என்றாள்.

அன்னையோ, இஃதொன்று
முந்தை கண்டும் எழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்றா இஃதொன்று
தந்தை இறைத்தொடி மற்றவன் தன்கைக்கண்
தந்தாரியார் எல்லா இது
என்னொத்துக் காண்க பிறரும் இவற்கென்னும்
தன்னலம் பாடுவி தந்தாளா நின்னை
இதுதொடு கென்றவர் யார்.
அஞ்சாதி, நீயுந் தவறிலை நின்கை இதுதந்த
பூவெழில் உன்கண் அவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்றும் எள்ளி இது இவன் கைத்தந்தாள்
தானியாரோ என்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடையேன்.''

எனவரும்.

தன்வயிற் சிறப்பினும் அவன் வயிற் பிரிப்பினும் இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும் என்பது-தன் மாட்டு நின்ற மிகுதியானும் அவன் மாட்டு நின்ற வேறுபாட்டானும் இன்னாத பழைய சூளுறவைத் தலைவியெடுத்த வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

''தலைமகள் மாட்டு மிகுதி யாதோவெனின்
மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய.''

(பொருளியல்-32)

என்றாராகலான், அக்காலத்து மிகுதியுளதாம்

'' தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர் மயங்கி
நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு''[1]

(கலித்-88)

எனவரும்.

---

1. பொருள்: தலைவ! நீ தேரில் வரக்கண்டு மயங்கி!! மாலையணிந்த அப் பரத்தையரின் மாலையினை நின் மாலையாக மயங்கி அணிந்து வந்த நின் தவறுக்கு அஞ்சி யாம் ஊடிய போரில் கலங்கி இப்போது செய்யும் பொய்ச்சூளுறவு வருத்தம் செய்யின் எம்மேலன்றி யார் மேல் வருத்தம் செய்யும்? இவ்வாறு கூறி ஊடல் தீர்ந்தாள்,

காமக்கிழத்தி நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் என்பது-காமக்கிழத்தி நலத்தினைப் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு[1].

நலம் பாராட்டுவாள் தலைவி. அவள் பாராட்டுதல் தீமை பற்றி வருதலான், அதனாற் சொல்லி முடிப்பது பிற பொருளா யிற்று.

உதாரணம்

''காண்டிகும் அல்லமோ கொண்க நின்கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவுவோளே''[1]

(ஐங்குறு-122)

இதனான், அவள் மிக்க இளமை கூறித் தலைவனைப் பழித் தாளாம். ஒருமுகத்தாற் புலந்தவாறு, இன்னுந் தலைமகள் நலம் பாராட்டிய வழிக் கூறவும் பெறும்.

''அணிற்பல் அன்ன கொங்குதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச்சேர்ப்ப
இம்மை மாறி மறுமையாயினும்
நீயாகியர் எம் கணவனை
யான்ஆகியர்நின் நெஞ்சு நேர்பவளே''[2]

(குறுந்-46)

எனவரும்.

கொடுமை ஒழுக்கத்துந் தோழிக்குரியவை வடுவறு சிறப்பின் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும் என்பது-தலைவி கொடுமை யொழுக்கத்துத் தோழிக்குக் கூறுதற்குரியவை குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பின்கண் திரியாது தலைவனைக் காய் தலும் உவத்தலும் நீக்கி நிறுத்தலும் பேணிக்கோடலும்

---

1. காமக்கிழத்தியின் நலத்தைப் பாராட்டுவது போன்ற- ஆனால் தலைவனின் புறத்தொழுக்கமாகிய தீமையை முடித்துக் காட்டும் செயலில் கூற்று நிகழும்.

2. பொருள்: கடற்கரைத் தலைவ! இப்பிறப்பு நீங்கி மறுபிறப்பு எமக்கு வரினும் எம் கணவனாக நீயே ஆகுக. ஆனால் நின் நெஞ்சுக்கு ஏற்றவளாக யானே ஆகுக. இது என் விருப்பம் (எம் என்றது பரத்தை யையும் தன்னையும்).

அவ்விடத்து வரும் பலவாய் வேறுபட்டுவரு நிலையினும் தலைவி கூற்று நிகழும் என்றவாறு.

தோழிக்குரியவை என்றதனால் தோழிக்குக கூறத்தகாதனவும் உள என்று கொள்க.

உதாரணம்

"நன்னலந் தொலைய நலமிகச்சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல் அவர் நமக்
கன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புல்லிய தெவனோ அன்பிலம் கடையே"[1]

(குறுந்-93)

இது காய்தல் பற்றி வந்தது.

"நாமவர் திருந்தெயி றுண்ணவும் அவர் நமது
ஏந்துமுலை யாகத்துச் சாந்து கண்படுப்பவுங்
கண்டுசுடு பரத்தையின் வந்தோற் கண்டும்
ஊடுதல் பெருந்திரு உறுகெனப்
பீடுபெறல் அருமையின் முயங்கியேனே"[2]

எனவும்,

"காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல்லவை."[3]

(குறள்-1286)

எனவும் இவை உவத்தல் பற்றி வந்தன.

---

1. பொருள்: தோழீ! அவரது பரத்தமை காரணமாக நல்ல அழகு கெட்டு உயிர் போவதாயினும் அவரிடம் நாம் புலந்துள்ளோம் எனக் கூறாதே. ஏன் எனின் அவர் நமக்கு அன்னையும் தந்தையும் போன்ற அன்பினர். அன்றியும் அவர் நம்மாட்டு அன்பிலராயின் நாம் புலந்து கொள்வதாலும் பயன் இல்லை.

2. பொருள்: தோழீ! நாம் அவர் எயிறு சுவைக்கவும் அவர் நமது முலை மார்பத்தைச் சந்தனம் படத் தழுவவும் கண்டு சுடுசொல் சொல்லிய பரத்தையினின்று வந்த அவரைக் கண்டு நம் ஊடல் சிறப்புறுவதாக என எண்ணின் அவரையடையும் பெருமை நம்மாற் பெறற்கு அரிதாகிவிடும் ஆதலின் யாதும் ஊடாமல் முயங்கியேன்.

3. பொருள்: தோழீ! தலைவனைக் காணும்போது அவரிடம் தவறுகள் உள்ளனவாகக் காணேன். அவரைக் காணாதபோது அவரிடம் தவறல்லாதன வற்றைக் காணேன் என்ன வியப்பு!

" அடும்பவிழ் அணிமலர் சிதைஇமீன் அருந்துந்
தடந்தாள் நாரை யிருக்கும் எக்கர்த்
தண்ணந்துறைவற் றொடுத்து நன்னலங் கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டக்
கொடுத்தவை தாஎனக் கூறலின்
இன்னாதோ நம் மன்னுயிர் இழவே"

இது பிரித்தல் பற்றி வந்தது.

" நீரார் செறுவில் நெய்தலொடுநீடிய
நேரிதழ் ஆம்பல் நிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை ஒலிப்பஓடும்
ஓரை மகளிர் ஓதை வெரீஇ யெழுந்து
ஆரலார்கை அஞ்சிறைத் தொழுதி
உயர்ந்த பொங்கர் உயர்மரம் ஏறி
அமர்க்கண் மகளிர் அலப்பிய அந்நோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்றும்
உயர்ந்த போரின் ஒலி நல்லூரன்
புதுவோர்ப் புணர்தல் வெய்யனாயின்
வதுவை நாளால் வைகலும் அஃதியான்
நோவேன் தோழி நோவாய் நீயென
எற்பார்த்துறுவோய் கேளினித் தெற்றென"

" எல்லினை வருதி எவன் குறித்தனை யெனச்
சொல்லா திருப்பேன் ஆயின் ஒல்லென
விரிஉளைக் கலிமான் தேரொடு வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்பல் என்றும்"

"வாடிய பூவொடு வாரல் எம் மனையென
ஊடி யிருப்பேனாயின் நீடா
அச்சாறாக உணரிய வருபவன்
பொய்ச்சூள் அஞ்சிப் புலவேன் ஆகுவல்,

" பகலாண் டல்கினை பரத்த என்றியான்
இகலி இருப்பேனாயின் தான்தன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்

ஆங்க,

விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்

ஆங்கவிந் தொழியும் என்புலவி தாங்கா
தவ்வவ் விடத்தான் அவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் தோழி கடன் நமக்கெனவே*

(கலித்-75)

இது பெட்பின் கண் வந்தது.[1]

''நகையா கின்றே தோழி நெருநல்
மணிசண் டன்ன துணிகயந் துளங்க
இரும்பியன் றன்ன கருங்கோட்டெருமை

---

* பொருள்: தோழீ! நெய்தலொடு ஆம்பல் மலர்பறிக்கச் சிலம்பொலிக்க ஓடும் மகளிர் எழுப்பும் ஒலியால் மீன் உண்ணவுள்ள பறவைகள் அஞ்சிப் பறந்து உயர்கிளை களில் இருந்து கூவுதல் மகளிர் தம்மைச் செய்த துன்பத் தைச் சுற்றத்தார்க்கு அறிவிப்பது போல் உள்ள ஊரன் நாளும் புதிய பரத்தையரைப் புணர்பவனாயின் அவனுக்கேற்ற நாள்களும் அமையின் அதற்கு நான் வருந்த நீ மட்டும் அவன் வரவை உடனே எதிர் கொள் கிறாயே ஏன் என என்னைக் கேட்கிறாய். கூறுகிறேன். தலைவனை நீ பரத்தைக் கூட்டத்தால் விளக்கமுடை யனாய் வருகிறாய் என்ன நினைத்தாய் எனப் புலந்து அவனுடன் பேசாதிருப்பேன், ஆனால் அவன் தேரில் அழைத்துவந்த விருந்தை எதிர்கொள்ளுதலின் புலவா தொழிவேன்.

பரத்தையரைக் கூடியமையால் வாடிய பூவோடும் என் வீட்டிற்கு வாராதே என்று ஊடுவேன். ஆனால் எனக்கு அவன் அஞ்சும் அச்சத்தையே வாயிலாகக் கொண்டு வருதலுடன் பொய்ச்சூளுறுதலின் அதற்கு அஞ்சிப் புலவாதொழிவேன்.

பகலெல்லாம் பரத்தையரிடத்திருந்தாய் என்று புலப்பேன். ஆனால் தன் தந்தைப் பெயரனாகிய தன் புதல்வனைத் தழுவி இரவெல்லாம் தூங்கான் அதற் காகப் புலவாதொழிவேன்.

தலைவனது பரத்தமையால் அவர் தம் வீடுகள் தோறும் புலவியால் தலைவனுக்கு உண்டாக்கிய வடுக் களைக் காணுமாறுளதே என்று வருந்துவேன். ஆனால் அவனுடன் வரும் விருந்தைக் கொள்வதாலும், பொய்ச் சூளுறவுக்கு அஞ்சுவதாலும், மகனொடு உறக்கம் கொள்ளாததாலும் புலவி நீங்கிவிடும். இதுவேயான் உறும்துயர். அறிக.

1. பெட்பின்கண் வந்தது. தலைவன்பால் கொண்ட விருப்பத்தால் வந்தது.

ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பல்மலர் மாந்திக் கரைய
காஞ்சி நுண்டா தீர்ம்புறத்துறப்ப
மெல்கிடு கவுள அல்குநிலை புகுதரும்
தண்துறை யூரன் தண்டார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி அழிபட்
டெம்மனை புகுதந்தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்
றிம்மனை யன்றஃதும்மனை என்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினன் தொழுதுநின் றதுவே.''[1]

(அகம்-56)

இது மேற்கூறிய வாற்றானன்றிப் பிறவாற்றான் வந்தது.

''ஒலிபுனல் ஊரனை ஒரு தலையாக
வலிநமக் காவது வலியென்றொழியப்
பந்தர் மாட்டிய பரூஉச்சுடர் விளக்கத்துக்
கந்த முனித்தலைத் தும்பி ஆர்ப்பக்
காலை கொட்டிய தவர்தோற் சிறுபறை
மாலை யாமத்து மதிதர விடாது
பூண்டு கிடந்து வளரும் பூங்கட் புதல்வனைக்
காண்டலுங் காணான்தன் கடிமனை யானே''[2]

1. பொருள்: தோழீ! நேற்றைய நாளில் எருமைகள் தெளிந்த நீர்க்குளம் கலங்க ஆம்பல் இலைகள் கிழியக் குவளை மலர்களை மாந்தி, தரையில் உள்ள காஞ்சி மலர்த் தாதுகள் தம்முதுகின் புறத்தே சிந்த அசை போடும் வாயினவாகித் தாம் தங்கும் கொட்டிலில் புகும்படியான ஊரன் மார்பகத்துப் புதுப் பரத்தை யரைச் சேர்க்கவந்த பாணன், தெருவில் புனிற்றுப் பசுப் பாய்ந்ததாகக் கலங்கி யாழைக் கீழே போட்டு விட்டு எம்மனையிற் புகுந்தான். அது கண்டு உடலில் வந்த மகிழ்ச்சியை மறைத்து அவனைப் பார்த்து நீ தேடிவந்த மனை இதுவன்று அதுவாகும் என்றேன். அவன் என்னையும் தன்னையும் மாறிப் பார்த்து என்னைத் தொழுது நின்றான். அந்நிலை எனக்கு நகையாகியது.

2. பொருள்: தோழீ! புனலூரனை உறுதியாக நமக்கு வலியுடையனாவது வன்மையாகும் (அரிதாகும்) என்று நாம் வாளா விட்டுவிடவும், பந்தரில் ஏற்றிய விளக்கு வெளிச்சத்தில் வண்டொலிக்கக் காலையில் கொட்டிய

எனவரும்.[1]

வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக் கிழவோள் செப்பல் கிழவதென்ப என்பது-வாயில்கள் மாட்டு வரூஉங் கூற்று வகையுளப்படத் தலைவி கூற்று நிகழும் என்றவாறு.

வாயில்களாவார்:- பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர்.

இவருள் தோழி வாயிலாதல் மேற்கூறுதலின் ஒழிந்த வாயில்கள் ஈண்டுக் கொள்ளப்படும்.

''அன்னாய் இவனோர் இளமாணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.''[2]

(குறுந்-33)

இது பாணன் வாயிலாக வந்துழிக் கூறியது.

''நீகண்டனையோ கண்டோர்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நகையின மொழிமோ
வெண்கோட்டியானை சோணை படியும்
பொன்மலிபாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.''[3]

(குறுந்-75)

இது வருகின்றான் என்ற உழையர்க்குக் கூறியது.

பறையினை மாலைக் காலத்து நிலவு வெளிப்படவும் கைவிடாமல் தன் போட்டுக் கிடந்து உறங்குகின்ற தன் புதல்வனைக் கண்ட அளவிலே தனது பரத்தையரின் மணமனையினை நினையாதவனாய்த் தங்கினான்.

1. என வரும் என்பதை என இப்படியும் வரும் எனக் கொள்க.

2. பொருள்: அன்னாய் (தோழீ) இப்பாணன் வயது குறைந்த மாணாக்கன் போல்வான். இரந்துண்ணுதலால் நிரம்பாத உடம்புடனே தனக்குப்(புதிய) வேற்றூராகிய இவ்வூரிடத்துப் பெரிய தலைமையுடையான் போல் பேசுகின்றான். இவன்தன் ஊர்ப் பொது மன்றத்து எப்படிப்பட்டவனாய் இருப்பானோ!

3. பொருள்: பாணனே! எம் காதலர் வரவை நீ நேரிற் கண்டாயோ? அல்லது பிறர்கூறக் கேட்டாயோ? பிறர் கூறக் கேட்டாயாயின் யார் வாய்க் கேட்டாய்? யானை சோணையாற்றிற் படிந்து நீராடும்படியான பொன் மலிந்த பாடலி என்னும் ஊரை நீ பெறுவாயாக.

''ஆடியயல் விழவின் அழுங்கல் மூதூர்
உடையோர் பான்மையிற் பெருங்கைதூவா
வறனில் புலத்தி யெல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடாமாலை துயல்வர ஓடிப்
பெருங்கயிறு நாலும் இரும்பனம்பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க ஊங்காள்
அழுதனள் பெயரும் அஞ்சி லோதி
நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்
ஊசல் உறுதொழிற் பூசலூட்டா
நயனின் மாக்களொடுகுழீஇப்
பயனின் றம்மவிவ் வேந்துடை அவையே.''[1]

(நற்றிணை-90)

இது பாங்கனைக் குறித்துக் கூறியது.

''நெய்யுங் குய்யும் ஆடிமையொடு
மாசுபட்டன்றே கலிங்கமுந் தோளுந்
திதலை மென்முலைத்தீம்பால் பிலிற்றப்
புதல்வர்ப்புல்லிப் புனிறு நாறும்மே
வாலிழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற் கொத்தனெம் அல்லேம் இதனாற்
பொன்புரை நரம்பின் இன்குரற் சீறியாழ்
எழாஅல் வல்லை யாயினுந் தொழாஅல்
புரையோரன்ன புரையுநட்பின்
இளையோர் கூம்புகை மருள்வோர் ஆங்குக்
கொண்டுசெல் பாணநின் தண்துறையூரனைப்
பாடுமனைப் பாடல் கூடாது நீடுநிலைப்

1. பொருள்: தோழீ! விழவொலியுடைய மூதூரில் ஆடை யொலிக்கும் புலைத்தி (வண்ணாரப் பெண்) இரவில் கஞ்சியிட்டுக் காயவைத்ததான நான் உடுத்திய ஆடையொடு வாடாமாலையும் அசையப் பெண்மைக் குணங்களால் வறிய பரத்தையருள் பெதும்பைப் பருவத்தாள் ஒருத்தித் தோழியர் ஆட்டவும் ஊஞ்சல் ஆடாளாய் அழுது நீங்க அவளை ஊஞ்சலில் ஆடும்படிச் செய்து நலம்பெறாத இப்பாணனின் அவையோர் எப்பயனும் செய்திலர். அதனால் இப்பாணன் அவள் ஊடல் நீங்காமையால் நம்மிடம் தலைவனால் அனுப்பப்பட்டு இங்கு வந்தான்.

புரவியும் பூணிலை முனிகுவ
விரகில மொழியல்யாம் வேட்டத்தில் வழியே''[1]

(நற்றிணை-380)

'வாயிலின் வருஉம் வகை' என்றமையான், தன் ஆற்றாமையும் வாயில்களாக் கொள்ளப்படும் என்பது பெற்றாம்.

''புல்லேன் மகிழ்ந புலத்தலும் இல்லேன்
கல்லா யானைக் கடுந்தேர்ச் செழியன்
படைமாண் பெருங்குளமடைநீர் விட்டெனக்
காலணைந் தெதிரிய கணைக்கொட்டுவாளை
அள்ளலங் கழனி உள்வாயோடிப்
பகடுசேறுதைத்த புள்ளிவெண் புறத்துச்
செஞ்சால் உழவர் கோற்புடை மதரிப்
பைங்காற் செறுவின் அணைமுதற்புரளும்
வாணன் சிறுகுடி அன்னஎன்
கோல்நேர் எல்வளை நெகிழ்த்த நும்மே''[2]

(நற்றிணை-340)

---

1. பொருள்: பாணனே! எம் ஆடை எண்ணெயும் புகையும் படிந்து கண்ணின் மையும் படிந்து அழுக்கேறியுள்ளது. எம் தோளும் முலைத் தீம்பால் பிலிற்றப் புதல்வனைத் தழுவியதால் ஈன்ற அணிமை நாற்றம் நாறும். அதனால் எப்போது நாற்றம் இல்லாத சேரியில் தன் தேரை நிறுத்தும் தலைவனுக்கு யாம் இப்போது தகுதியுடையோம் அல்லேம். நீ யாழ் மீட்டுவதால் எம்மை கவர வல்லனாயினும் அவ்வாறு மீட்டி எம்மைப் பணியாதே. நீ பாடும் வரையிலும் தேரில் பூட்டிய குதிரைகளும் நெடுநேரம் பூட்டியிருப்பதை வெறுக்கும். யாம் விரும்பியது கிட்டாத நிலையில் நீ நின் விரகு இல்லாத மொழிகளைக் கூறாதே. அவரைப் பரத்தையர் சேரிக்கே கொண்டு செல்க.

2. பொருள்: மகிழ்ந! வாணனது சிறுகுடிபோலும் எனது வளையை பரத்தையிற் பிரிவால் நெகிழச் செய்த நின்னைப் புல்லேன், புலத்தலும் செய்யேன். சிறு குடியின் சிறப்பு பின்வருவது: யானையும் தேரும் உடைய செழியனது பெயர்கொண்ட குளத்தில் நீர் மடையை யுடைத்து வெளிச் சென்ற வாளைமீன் கழனியின் வாய்க்கால் வழியோடி உழும் பகட்டின் காற்சேறு ஒருபுறம் படிய உழவர் குறுங்கோலால் அடிப்பதற்கும் தப்பி வரம்பிற் சென்று புரளும்படியானது வாணனது சிறுகுடி. (இதன்மூலம் உள்ளுறை கொள்க. வாளை தலைவனாகக் கொள்க).

இஃது ஆற்றாமை வாயிலாகச் சென்றாற்குக் கூறியது.

''புள்ளிமிழகல்வயின்'' என்ற மருதக்கலியுள், (79)

''பூங்கட் புதல்வனைப் பொய்பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து''[1]

என்று புதல்வன் வாயிலாகக் கூறியது காண்க.

நச்

இது, முறையானே தலைவி கூற்று நிகழும் இடங்கூறு கின்றது.

இதன் பொருள்: அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின் ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும் உரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற் பெருமையில் திரியா அன்பின் கண்ணும். அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்-வேதத்தையுந் தரும நூலையுந் தலைவன் அறிந்த அறிவைத் தலைவி மிக அறியுமா தலின், ஏற்றற் கண்ணும்—அந்தணர் முதலிய மூவருந்தத்தமக் குரிய வேள்வி செய்யுங்கால் தம் மனைவியர் பலருள்ளுந் தமக்கு ஒத்தாளை வேள்விக்கண் உரிமை வகையான் ஏனை மகளிரின் உயர்த்தல் செய்யுமிடத்தும், நிறுத்தற் கண்ணும்-தத்தங் குலத்திற்கேற்க நிறுத்துதலைச் செய்யுமிடத்தும், உரிமை கொடுத்த கிழவோன்பாங்கில் - அவர் குலத்திற்கேற்ற உரிமை களைக் கொடுத்த தலைவனிடத்து, பெருமையில் திரியா அன்பின் கண்ணும்-தத்தங் குலத்திற்கேற்ற பெருமையினின்றும் நீங்காத அன்பு செய்து ஒழுகுதற் கண்ணும், அறியுமாகலின் அன்பு செய்து ஒழுகுமெனக் கூட்டுக*.

எனறது, அந்தணர்க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இருவருந் தலைவியராகிய வழித் தங்குலத்திற் கொண்டவரே வேள்விக்கு உரியர் ஏனையோர் வேள்விக்கு உரியரல்ல ரென்பதூஉம் அவர்க்குத் தங்குலங்கட்கு ஏற்ற வகை யின் உரிமை கொடுப்ப ரென்பதூஉம் அவர்களும் இது கருமமே செய்தானென்று அன்பில் திரியா ரென்பதூஉங் கூறியவாறு.

உதாரணம்

''நின்ற சொல்லி னீடுதோறினிய
ரென்று மென்றோள் பிரிபறியலரே

---

1. பொருள்: பக்கம் 84ல் காண்க.

* இவ்வுரை ஆரியச் சார்பாக வலிந்து எழுதியவுரை.

தாமரைத் தண்டாதூதி மீமிசைச்
சாந்திற்றொடுத்த தீந்தேன்போலப்
புரையமன்ற புரையோர் கேண்மை
நீரின்றமையாவுலகம் போலத்
தம்மின்றமையா நந்நயந்தருளி
நறுநுதல் பசத்தலஞ்சிச்
சிறுமையுறுபவோ செய்பறியலரே''[1]

(நற்றிணை-1)

இதனுள், தாமரைத் தாதையும் ஊதிச் சந்தனத்தாதையும் ஊதி வைத்த தேன்போலப் புரைய என்றதனான் ஏற்றற் கண் தலைவி கூறினாள்: பிரிவறியலரென்றதும் அன்னதோர் குணக் குறையிலரென்றதாம். பிரிவுணர்ந்து புலந்துரைப்பின் நாணழிவாம்.

'' நிலத்தினும் பெரிதே வானினு மூயர்ந்தன்று
நீரினு மாரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேனிழைக்கு நாடனொடு நட்பே''[2]

(குறுந்-3)

இது, நிறுத்தற்கட் கூறியது.

கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்-அறமும் பொருளுஞ் செய்வதனாற் புறத்துறைதலில் தலைவனைத் தலைவி நீங்குங்காலம் பெரிதாகலின் அதற்குச் சுழற்சி மிக்க வேட்கை மிகுதி நிகழ்ந்தவிடத்தும்.

உதாரணம்

''காமந்தாங்குமதி யென்போர் தாமஃ
தறியலர் கொல்லோ வனைமதுகையர்கொல்
யாமெங் காதலர்க் காணேமாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லாகுதுமே''[3] (குறுந்-290)

---

1. பொருள் : பக்கம் 77ல் காண்க.
2. பொருள் : பக்கம் 79ல் காண்க.
3. பொருள் : யாம் எம் காதலரைக் காணேமாயின் கல்லில் மோதப் பெறும் பெருவெள்ளத்துச் சிறுநுரை தேய்ந்தழிவதுபோல மெல்ல மெல்லக் கரைவேம்,

இது தெருட்டுந் தோழிக்குத் தலைவி காமத்து மிகுதிக்கட் கூறியது.

இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்-அங்ஙனம் அலமரல் பெருகிய வழித் தலைவனை எதிர்ப்பட்ட ஞான்று இன்பமுந் தனிப்பட்ட ஞான்று துன்பமும் உளவாகிய இடத்தும்.

உதாரணம்

''வாரன் மென்றினைப் புலவுக்குரன் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழீஇ
வளியெறிவயிரிற் கிளிவிளி பயிற்று
நளியிருஞ் சிலம்பி னன்மலை நாடன்
புணரிற்புணருமா ரெழிலே பிரியின்
மணிமிடை பொன்னின் மாமைசாயவெ
னணிநலஞ் சிதைக்குமார் பசலையதனா
லசுணங் கொல்பவர் கைபோனன்று
மின்பமுந்துன்பமு முடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலவன் மார்பே''[1]

(நற்றிணை-304)

''இன்கணு டைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கணுடைத்நாற்புணர்வு''[2] (குறள்-1152)

கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியினீக்கிய இளிவருநிலையும்-யானைக் கன்று போலும் புதல்வன் பிறத்தலான் உளதாகிய விருப்பத்தை யுடைய நெய்யணிக்கு விரும்பிய தலைவன் நெஞ்சை வருத்தித் தன்னைச் செறிதலினின்று நீக்கிய இளிவந்த நிலைமைக் கண்ணும்.

---

1. பொருள் : தோழீ! கிளிகள் இனத்துடன் மலைச்சாரலில் தினைக் கதிர்களை மாந்தி காற்றால் ஒலிக்கும் ஊது கொம்புகள் போல ஒன்றையொன்று அழைக்கும் நன்மலை நாடன் நம்மைப்புணரின் நம் அழகும் நம்மைச் சேரும். அவன் பிரியின் மணியிடை யழுத்திய பொன் போன்ற என் உடம்பில் உள்ள மாமை நிறம்கெட என் அழகையும் நலத்தையும் அழிக்கும் பசலை. அதனால் அவன் மார்பானது அசுணமாவைப் பிடிக்க முதலில் யாழ் வாசித்தும் பின் பறையை ஒலித்தும் முதலில் இன்பமும் பின் துன்பமும் செய்வோரது கைபோல நமக்கு இன்பமும் துன்பமும் செய்கின்றது.

2. பொருள் : பக்கம் 81ல் காண்க.

தன்னை அவமதித்தானென்றது 'இளி வருநிலை'யென்றார்.

''கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனிமுயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப்பதுவே''[1]

(ஐங்குறு-65)

இது, புதல்வற் பயந்த காலத்துப் பிரிவு பற்றிக் கூறியது.

புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனை-புதல்வனை விளையாட்டை விரும்பின உள்ளத்தோடே புதுவது புணர்ந்த பரத்தையர் தன்மாட்டு மனநெகிழ்ந்த மென்மையின் பொருட்டு அவர்க்கு அருள் செய்யப் பிரிந்து வந்தோனை,புலம்பு நனிகாட்டி-தனது தனிமை மிகவும் அறிவித்து,இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த்து அருக்கி-அவன் மேற் சென்ற நெஞ்சினைச் சொல்லாமல் அவனிடத்தினின்றும் மீட்டு அருகப் பண்ணி எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்-பிறருள் ஒருத்தியைக் காணாளாயினும் கண்டாள் போலத் தன்முன்னர்ப் பெய்து கொண்டு வாயின் மறுத்ததனால் தோற்றிய நயனுடைமைக் கண்ணும்.

எனவே, மறுப்பாள் போல் நயந்தாளாயிற்று. கிழவனை மறுத்தவெனக் கூட்டுக.

உதாரணம்

''கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பி
னிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கிற்
கழைகண்டன்ன தூம்புடைத் திரள்காற்
களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கிற்
கழுநிவந்தன்ன கொழுமுகையிடையிடை
முறுவன் முகத்திற் பன்மலர் தயங்கப்
பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து
வேப்புநனை யன்ன நெடுங்கணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சியயல
தொலித்த பகன்றை யிருஞ்சேற்றள்ளற்
றிதலையின் வரிப்ப வோடி விரைந்துதன்
னீர்மலி மண்ணளைச் செறியுமூர

1. பொருள்: பக்கம் 81 ல் காண்க.

மனைநகு வயலை மாணிவர் கொழுங்கொடி
யரிமலராம்பலொ டார்தழைதைஇ
விழவாடு மகளிரொடு தழுவணிப் பொலிந்து
மலரேருண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்த
துடன்றனள் போலுநின் காதலியெம்போற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின்றுறைய
வென்ன கடத்தளோ மற்றே தன்முகத்
தெழுதெழில் சிதைய வழுதனளேங்கி
வடித்தென வுருத்த தித்திப்பல்லூழ்
கொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுதி மழுகிய வெயிற்ற
ஞூர்முழுது நுவலுநிற் காணிய சென்மே.''[1]

(அகம்-176)

எதிர்பெய்து மறுத்த ஈரமெனவே எதிர்ப்பெய்யாது மறுத்த ஈரமுங் கொள்க.

''கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள்ளன்ன வெண்கான்மாமலர்
பொய்தன் மகளிர் விழவணிக்கூட்டு
மவ்வயனண்ணிய வளங்கேழூரனைப்
புலத்தல் கூடுமோ தோழியல்கற்
பெருங்கதவு பொருத யானைமருப்பி
னிரும்புசெய் தொடியினேர வாகி
மாக்கணனுடைய மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅ லிவையென மயங்கி
யானோ மென்னவு மொல்லார் தாமற்
றிவை பாராட்டிய பருவமுமுளவே
யினியே, புதல்வற்றடுத்த பாலொடு தடைஇத்
திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுதற் றாமஞ்சினரே
யாயிடைக், கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி
மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயிரிஃதோ

1. பொருள்: பக்கம் 82ல் காண்க.

செல்வற் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந்தேனெ யதுகண்
டியாமுங் காதலெ மவற்கெனச் சாஅய்ச்
சிறுபுறங் கவையினனாக வுறுபெயற்
றண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போன் நெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய வறிவினேற்கே''[1]

(அகம்-26)

இதனுள், ஒருத்தியை வரைந்து கூறாது நல்லோரைப் பொது வாகக் கூறியவாறும் வேண்டினமெனப் புலம்பு காட்டிக் கலுழ்ந்ததென ஈரங் கூறியவாறுங் காண்க.

தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற் கண்ணும்-பரத்தையர் மாட்டுத் தங்கிய செவ்வியை மறையாத ஒழுக்கத்தோடேவந்த தலைவனை நீ கூறுகின்ற பணிந்த மொழிகளை எங்கையர்க்கு வணங்கிக் கூறென இரந்து கோடற்கண்ணும்.

உதாரணம்

''அகன்றுறை யணிபெற''

---

1. பொருள்: தோழீ! காதலர், யானைமருப்பின் இரும்புப் பூண்போலவுள்ள முலைக் காம்புகள் தம் மார்பகத்தோடு முயங்குதலைத் தடுக்காமல் விடுக என்று சொல்லி யான் விடுவீராக எனக்கூறவும் கேளாத வராய்ப் புல்லி முலைகளைப் பாராட்டிய காலங்களும் உள. இன்றோ புதல்வனை வேறிடம் பாராதபடித் தடுக்கும் பாலால் சரிந்தமென்முலைகள் அவர் மார்பில் பருக்கும்படி அவரை முயங்க வேண்டினேன்; ஆனால் அவர் தம் மார்பில் பால்படுதற்கு அஞ்சினார். அப்போது அவரது அணைத்தகைகள் நெகிழ்தலைக் கண்டு செவிலியின் கையில் இருந்த புதல்வனைக் காட்டி யாம் இச் செல்வனுக்குப் பொருந்தினேம். நீயிர் பரத்தையர்க்குப் பொருந்தினீர் என்று கூறிப் புதல்வன் பக்கம் சென்றேன். அது கண்டு தலைவனும் யாமும் புதல்வனிடம் அன்புடையேம் என்று கூறிவந்து என் முதுகை அணைத்தனன். அப்போது மழையை ஏற்ற உழுது பதப்பட்ட வயல் மண்போல என் நெஞ்சம் நெகிழ்ந்து கலங்கி அவன்பால் சென்ற அறிவினேனா யினேன். அப்படிப்பட்ட எனக்கு, முள்ளிச் செடியின் குலைகழன்று வீழும் மலர்களை விழவுகொள்ளும் மகளிர் கூட்டுகின்ற அழகிய வளமிக்க ஊரனைப் புலத்தலும் கூடுவதோ?

என்னும் மருதக்கலி (73)யுள்

''நோதக்கா யெனநின்னை நொந்தீவா ரில்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
நெகிழ்ந்தொடி யிளையவரிடை முலைத்தாதுசோர்ந்
திதழ்வனப்பிழந்தநின் கண்ணிவந்துரையாக்கால்''

என்பன கூறி,

''மண்டு நீராரா மலிகடல் போலுநின்
றண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றி மற்றியாமெனிற்
றோலாமோ நின்பொய் மருண்டு.''[1]

எனவும் எங்கையரைத் தேற்றெனக் கூறியவாறு காண்க.

செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்-தலைவன் செல்லானென்பது இடமும் காலமும் பற்றி அறிந்த காலத்து ஊடலுள்ளத்தாற் கூடப்பெறாதாள் செல்கெனக் கூறிவிடுத்து ஆற்றுதற் கண்ணும்.

உதாரணம்

''புள்ளூமிழகல்வயல்''

என்னும் மருதக்கலி (79)யுள்

''பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காயிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கேயவர்வயிற் சென்றியணி சிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து''[2]

''சேற்று நிலை முனைஇய செங்கட்காரா
னூர்மடி கங்குலினோன்றளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டினீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடனிரிய
வந்தூம்புவள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராருமூர
யாரையோ நிற்புலக்கேம்வாருற்
றுறைபிறந்தொளிருந்தாழிருங் கூந்தற்
பிறளுமொருத்தியை யெம்மனைத் தந்து
வதுவையயர்ந்தனை யென்பவஃதியாங்

1. பொருள்: பக்கம் 83ல் காண்க.
2. பொருள்: பக்கம் 84ல் காண்க.

கூறேம் வாழிய ரெந்தை செறுநர்
களிறுடை யருஞ்சமந் ததைய நூறு
மொளிறுவாட் டானைக் கொற்கைச் செழியன்
பிண்ட நெல்லினள்ளூரன்னவெம்
மொண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெரும நிற்றகைக்குநர் யாரோ''[1]

(அகம்-46)

காமக் கிழத்தி தன் மகத்தழீஇ ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்-மனையறத்திற்கு உரியளாக வரைந்து கொண்ட காமக்கிழத்தி, தலைவி புதல்வன் மனைப்புறத்து விளையாடு கின்றவனைத் தழுவிக்கொண்டு தான் ஏமுறுதற்குக் காரண மான விளையாட்டின் முடிவின் கண்ணும்.

அவள் எம்மைப் பாதுகாப்பீரோவென வினாயவழி அவனும் அதற்கு உடன்பட்டான்போலக் கூறுவன உளவா தலின் 'ஏமுறு விளையாட்டு' என்றார். 'இறுதி' என்றார் விளையாட்டு முடியுந்துணையுந்தான் மறைய நின்று பின்னர்க் கூறுதலின்.

உதாரணம்

''நாயுடைமுதுநீர்க் கலித்த தாமரைத்
தாதினல்லியயலிதழ்புரையு
மாசிலங்கை மணிமருளவ்வாய்
நாவொடுநவிலா நகைபடுதீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவிற்றமியோற் கண்டே
கூரெயிற்றரிவை குறுகி யாவருங்
காணுந ரின்மையிற் செத்தனள் பேணிப்

---

1. பொருள்: சேற்றில் நிற்பதை வெறுத்த கரிய எருமை யானது ஊர் தூங்கும் இரவில் கட்டறுத்துக் கொண்டு வேலியை கொம்பால் நீக்கி, நீர்மிக்க வயலில் மீன்கள் ஓட வள்ளைக் கொடியை மயக்கித் தாமரை மலரை உண்ணும்படியான ஊரனே! நின்னை யாம் புலத்தற்கு என்ன உறவினையுடையை? பிறரெல்லாம் மழைத் தாரையின் நீண்டு விளங்கும் கூந்தலுடைய ஒருத்தியை நீ நம் மனையிடத்து அழைத்துவந்து காட்டி அவளை வதுவை செய்தாய் என்பர். யாம் அதைக் கூறமாட் டேம். நீ வாழ்க. கொற்றச் செழியனது அள்ளூர் போலும் எனது ஒண்தொடி தோளினின்றும் நெகிழ்ந்து வீழினும் வீழ்க; பெரும! நீ நினைத்தவிடம் செல்க, நின்னைத் தடுப்பார் யார்?

பொலங்கலஞ் சுமந்த பூண்டாங்கிளமுலை
வருக மாள வென்னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டனணின்றோட் கண்டுநிலை செல்லேன்
மாசில் குறுமகளெவன்பே துற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடன் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோ ணிலைகண்டியானும்
பேணினெனல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவுளன்னோணின்
மகன்றாயாதல் புரைவதாங்கெனவே.''[1]

(அகம்-16)

சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி அறம்புரி உள்ளமொடு தன்வரவு அறியாமைப் புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும் சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி-காமக்கிழத்தியது ஏமுறும் விளையாட்டுப் போலாது தலைவி தன் புதல்வனைத் தழீஇ விளையாட்டையுடைய இல்லிடத்தே தலைவன் தோன்றி, அறம்புரி உள்ளமொடு தன்வரவு அறியாமைப் புறஞ்செய்து-அவ்விளையாட்டு மகிழ்ச்சியாகிய மனையறத்தினைக் காண விரும்பிய நெஞ்சோடே தன் வரவினைத் தலைவி அறியாமல் அவள் பின்னே நிற்றலைச் செய்து, பெயர்த்தல் வேண்டு இடத் தானும்-தலைவியது துனியைப் போக்குதல் வேண்டிய இடத்தும்.

'தன் வரவறியாமை' என்றதற்குத் தன்னைக் கண்டால் தலைவியுழை நின்றார் தமக்குச் செய்யும் ஆசாரங்களையும் அவர் செய்யாமற் கைகவித்துத் தன் வரவு அறியாமை நிற்ப னென்று கொள்க.

உதாரணம்

* ''மையற விளங்கிய மணிமருளவ்வாய்தன்
மெய்பெரு மழலையின் விளங்குபூணனைத்தரப்
பொலம்பிறையுட்டாழ்ந்த புனைவினையுருள்கல

---

1. பொருள்: பக்கம் 85ல் காண்க.

* பொருள்: மழலையால் சொட்டும் நீர் அணிகளை நனைப்ப, பிறைபோலும் வடிவுடைய பூணின் முத்து வடத்தோடு உருண்ட சுட்டி நெற்றியில் அசைய, உடுத்திய துகில் அவிழ்ந்து சதங்கையொலிக்கும் கால் களைத் தடுக்க, பால் முலையை மறந்து முற்றத்திலே

னலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
வுருவெஞ்சா திடைகாட்டு முடைகழலந்துகி
லரிபொலி கிண்கிணியார்ப்போவா தடிதட்பப்
பாலோடலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வறேர் கையினியக்கி நடைபயிற்றா
ஆலமர் செல்வனணிசால் பெருவிறல்
போல வருமென்னுயிர்.''

''பெரும, விருந்தொடு கைதூவாவெம்மையு முள்ளாய்
பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் யாங்கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்தயின் றற்றாப்
பெருந்தகாய் கூறு சில.''

''எல்லிழாய்,
சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந்தாங்கே
வாயோடி யேனாதிப் பாடியமென்றற்றா
நோய்நாந்தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா தடுத்தடுத் தத்தா வென்பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலுமற்றிவன்
வாயுள்ளிற் போகானரோ.

''உள்ளி யுழையே யொருங்கு படைவிடக்
கள்வர் படர்தந்ததுபோல தாமெம்மை
யெள்ளுமார் வந்தாரேயீங்கு.''

''ஏதப்பா டெள்ளிப்புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென்பார் போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
னாணை கடக்கிற்பார் யார்

''அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேல்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண்முச்சி
யுதிர்துகளுக்க நின்னாடை யொலிப்ப
வெதிர்வளிநின்றாய் நீ செல்.

உருளையோடுதல் வல்ல நடைவண்டியைக் கையாலே செலுத்தி நடைகற்று, ஆலின்கீழ் அமரும் இறைவனின் மகன் முருகன்போல வருகின்ற என்உயிர்போன்றவனே! (இது தலைவி தன் புதல்வனை விளித்துக் கூறியது). இதன் பின்னர் உள்ளவற்றின் கருத்துகளைப் பக்கம் 86ல் காண்க.

இனியெல்லா யாம்,
தீதிலேமென்று தெறிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண்மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
மாபோற் படர்தகநாம்''

(கலி-81)

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால் அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்-அங்ஙனம் விளையாடுகின்ற காலத்து மக்கள் தந்தையரை ஒப்பரென்னும் வேதவிதி பற்றி முடிவில்லாத சிறப்பினையுடைய மகனைப் பழித்து வெகுளுதற் கண்ணும்.

மகனுக்கும் இதுபடுமென்று கருதிக் கூறலின் தலைவனைப் பழித்தென்னாது 'மகப்பழித்து' என்றார்.

'மைபடு சென்னி' என்னும் மருதக்கலி (86)யுள்

''வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றி மாட்டொத்தி பெரும மற்றொவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ணெகிழவிடல்''

என அவனைக் கொண்டு விளையாடியவழி அவன் தலைவன் மேல் வீழ்தலின்,

''தந்தை வியன்மார்பிற் பாய்ந்தானறனில்லா
வன்பிலி பெற்ற மகன்''

எனத் தன் திறத்து அன்பிலனென நெருங்கிக் கூறியவாறு காண்க.

கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும் – கொடியோர் நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ-கொடியோரென்றது பாணர் கூத்தர் விறலியர் அந்தணர் முதலியோரை, கொடியோராய்த் தலைவன் புகழைக் கூறுதற்கு விரும்பினோர் பரத்தையர்க்கு வாயிலாய் வந்து கூறிய சொல்லோடே தானும் அவரிடத்தே சேர்ந்து பகுதியின் நீங்கிய கொடுமை–காவற் பாங்கிற் பக்கமும் ஆங்கோர் பக்கமுமாகிய பகுதி காத்தலினின்று நீங்கிய பரத்தை

யரைக் கூடிய கொடுமை, சுடுமென ஒடியாது தகுதிக் கண்ணும்- நெஞ்சைச் சுடுமென்று கூறி அவன் தவற்றைக் கூறுதலைத் தவிராமற் கூறுதற்குத் தக்க தகுதியிடத்தும்.

இன், நீக்கப் பொருட்டு. பகுதி-கூறுபாடு ஆகுபெயர். பகுதிகளைக் காத்தற்குப் பிரிவேனெனக் கூறிப் பிரிந்து பாணர் முதலியோர் புதிதிற் கூட்டிய பரத்தையரிடத்தே ஒழுகிய மெய் வேறுபாட்டோடு வந்தானைக் கண்டு அப்பகுதிகளைப் பரத்தையராகக் கூறுவானாயிற்று. அது 'இணைபட வந்த' என்னும் மருதக்கலி (72)யுள்

* ''கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும் பாணன் காட்டென்றானோ
பேணானென் றுடன்றவருகிர் செய்தவடுவினான்
மேனாணின்றோள் சேர்ந்தார் நகைசேர்ந்தவிதழினை

''நாடிநின் றூதாடித் துறைச் செல்லாளூரவ
ராடைகொண்டொலிக்கு நின்புலைத்தி காட்
டென்றாளோ
கூடியார்புன்லாடப் புணையாய மார்பினி
லூடியா ரெறிதரவொளி விட்டவாக்கினை''

---

* பொருள்: ஊரனே! நம்மை இவன் விரும்பான் என்று ஊடிய பரத்தையர் தம் உகிரால் நினக்கு வடுவுண்டாக்கப் பின்னாளில் அதற்கு மாறாக நின்தோளைச் சேர்ந்த பிற பரத்தையர் தம் பற்களால் உண்டாக்கிய வடுக்களையுடைய நின் உதடுகளை, இன்பம் கருதி நின்னைத் தம்பால் காவல் கொண்ட பரத்தையரை நீ புணருந்தோறும் யான்அழ தன் யாழ்ப்பண்ணால் களிப்படையச் செய்யும் நின்பாணன் எனக்குக் காட்டு என்று கூறினானோ?

கூடின மகளிர் நின்தோளே தெப்பமாகக் கொண்டு புனலாட அது பொறாத பிற பரத்தையர் ஊடி எறிந்த சாதிலிங்கம் உள்ள செப்பினை, ஊரவர் ஆடையொலிப்பவளும் நினக்குச் சேர்க்கப் பரத்தையர்க்குத் தூதாகச் செல்பவளுமாகிய புலைத்தி அச்செப்பைத் தனக்குக் காட்டு என்று கூறினாளோ?

முன்னர்க் கூடிக்களித்த பரத்தையருடைய மாலையின் முயக்கத்தால் மென்மையடைந்த உடம்பின்மேல் பின்னர்க் குறியிடம் பெற்றுத் தழுவும் பரத்தையர் கூந்தலை நீ கோதுதலால் உதிர்ந்த பூந்துகளை, வீணே நின் புகழ்களை எமக்கு வேண்டாராகிய பரத்தையர் மனைகளில் எடுத்துக்கூறும் அறிவுடைய அந்தணன் அவனுக்குக் காட்டுக என்றானோ?

''வெறிது நின்புகழ்களை வேண்டாரி னெடுத்தேத்து
மறிவுடையந் தணனவளைக் காட்டென்றானோ
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்டவுருவன்மேற்
குறிபெற்றார் குரற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை''

என்பவற்றாற் பாணர் முதலியோர் வாயிலாயவாறு காண்க.

* '' ஏந்தெழின் மார்பவெதிரல்ல நின்வாய்ச்சொற்
பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானாமைந்தினை
சாந்தழி வேரை சுவற்றாழ்ந்த கண்ணியை
யாங்குச் சென்றீங்கு வந்தீத்தந்தாய் கேளினி
ஏந்தி, எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்
குதிரை வழங்கி வருவல்''

---

* கருத்து.

தலைவி: எழில்மார்ப! நின்வாய்ச் சொல்மாறுபடாதது. மடிப்பு விரிந்து கரையற்றுக் கசங்கிய ஆடையை யுடையனாய் வலியற்றுக் காணப்படுகிறாய். சந்த னத்தையழிக்கும் வியர்வையுடையை தோளில் வாடிய மாலையை. இப்படிக் காணுமாறு எவள்வீடு சென்று இங்கு வந்தாய்?

தலைவன்: நீலம் போலும் கண்ணுடையவளே! கேள். குதிரையேறி வருவேன். அதனால்தான் இந்நிலை.

தலைவி: குதிரைதான் ஏறி வருவாய்; அதனை அறிந் தேன். கூந்தல் எனும் பிடரியும், கூந்தல் மேல் விரித்த சிகழிகை என்றும் தலையாட்டமும், கட்டுவடமாகிய கழுத்துக் கயிறும், புல்லிகை என்னும் காதணியாகிய கன்னசாமரையும், தெய்வ உத்தி எனும் அணியின் அருகே வடம்போல் தொங்கும் சுட்டி என்னும் சாட்டை யும், உத்தரியம் எனும் கடிவாளமும் மணிகளாற் செய்த காழ்வடமாகிய கழுத்துக் கண்டிகையும், மேகலை எனும் கழுத்துத் தண்டையும் உடையதாய்க் காற்சதங்கையொலிப்பச் செலுத்தி நீ ஏறிய குதிரையை செண்டு வெளியில் (பரந்ததிடல்) அன்றி சாந்து பூசிய மாடத்தில் அழகிய நிலாமுற்றத்தில் ஆதி என்னும் வேக கதியை அதற்குக் கொடுத்து அதனால் இளைத்தாய். அதனால் நீ நல்ல அரச வீரனாவாய் வாழ்க. ஞாயிறு தோன்றும் விடியலில் கைத்துடைப்பத்தால் குப்பையைப் பெருக்கித் தள்ளும் மதுரையில் முற்றம் போன்ற நின் மார்பிற் கீறியது குதிரையோ? அக்குதிரை கூரிய உகிரால் சிறந்த குளம்புடையது. கொடியது; அதில் ஏறும் நீ தப்பின்றி வாழ்க. மூங்கில் உழக்கு நாழிகளால் சேதிகை என்னும் வண்ணம் தோய்த்துக் குத்தின குதிரையுடல் போல நின் உடம்பிற் கவ்வியது.

''அறிந்தேன் குதிரைதான்
பால்பிரியா வைங்கூந்தற் பன்மயிர்க் கொய்சுவன்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை
நீல மணிக்கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காதிற் புல்லிகைச் சாமரை
மத்திகைக் கண்ணுறையாகக் கவின்பெற்ற
வுத்தியொரு காழ்நூலுத்தரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ் பல்பல கண்டிகைத்
தார்மணி பூண்டதமனிய மேகலை
நூபுரப் புட்டிலடியொடமைத்தியாத்த
வார்பொலங் கிண்கிணியார்ப்ப வியற்றிநீ
காதலித் தூர்ந்த நின்காமக் குதிரையை
யாய்சுதை மாடத்தணி நிலாமுற்றத்து
ளாதிக்கொளீஇய வகையினை யாகுவை
வாதுவன் வாழிய நீ''

''சேகா, கதிர்விரிவைகலிற் கைவாரூஉக்கொண்ட
மதுரைப் பெருமுற்றம்போல நின்மெய்க்கட்
குதிரையோ வீறியது.
கூருகிர் மாண்ட குளம்பினதுவன்றே
கோரமே வாழி குதிரை.
வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்திக்
குதிரையுடலணிபோலநின் மெய்க்கட்
குதிரையோ வவ்வியது.
சீத்தை பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே
வியமமே வாழி குதிரை
மிக நன்றினி யறிந்தேனின்று நீயூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணியறத்தினிற் கொண்ட
பருமக் குதிரையோவன்று, பெருமநின்

குதிரையோ? சீ.தனக்குப் பயனின்றி வடுப்படுத்தலாகா இடத்தே வடுப்படுத்தியது குதிரை. அது வியப்பேயாம். அதில் ஏறிய நீ வாழ்வாயாக.

இன்று நீ ஏறிய குதிரை நன்று. அது நீ மணந்து கொண்ட காமக்கிழத்தியாகிய குதிரையன்று. பாணன் தூது செல்லப் பரத்தையரிடம் மாறுபாட்டால் வந்த காற்றுப் போலும் கடியகுதிரை. அதுவே நின் உருவைக் கெடுக்கும். அதில் இனி ஏறாதே. அதன்மேல் அரச வீரனாய் எந்நாளும் ஏறின் இங்கு வாராதே. இனித் தாமாமல் அக் குதிரையேறப்போ (என்று புலந்தாள்).

> னேதில் பெரும்பாணன்றூதாடவாங்கேயோர்
> வாதத்தான் வந்தவளிக் குதிரையாதி
> யுருவழிக்கு மக்குதிரை யூரனியூரிற் பரத்தை
> பரியாக வாதுவனாய் மற்றச் சாத்
> திரி குதிரை யேறியசெல்'' (கலி-96)

இதனுட் 'பாணன் தூதாட வாதத்தான் வந்த குதிரை' என்பதனால் அவன் கூட்டிய புதிய பரத்தையர் என்பதூஉம் அவன் பகுதியினின்று நீங்கியவாறுங் 'குதிரையோ வீறியது' என்பது முதலியவற்றாற் கொடுமை நெஞ்சைச் சுடுகின்ற வாறும் அதனை நீக்கிய பரத்தையரைக் குதிரையாகக் கூறித் தான் அதற்குத் தகநின்றவாறுங் காண்க.

கடவுட்பாட்டு 'ஆங்கோர் பக்க'மும், யானைப் பாட்டுக் காவற் பாங்கின் பக்கமுமாம்.

கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதல் எங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகையின் கண்ணும். கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி. அங்ஙனம் பகுதியினீங்கிப் பரத்தையர் மாட்டு ஒழுகிக் கொடுமை செய்த ஒழுக்கத்தைத் தலைவி பொறுத்தலை வேண்டி,

அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி-தன் அடிமேல் விழ்ந்து வணங்கிய தலைவனை அதனின்மிது துனிமிக்குக் கழறி, காதல் எங்கையர் காணின் நன்றென-நின்மாட்டுக் காதலை யுடைய எங்கையர் காணின் இவை நன்றெனக் கொள்வரெனக் கூறி, மாதர் சான்ற வகையின் கண்ணும்-காதல் அமைந்து மாறிய வேறுபாட்டின் கண்ணும்:

பொறாதாரைக் 'கொள்ளார்' என்பவாகலிற் கோடல் பொறுத்தலாயிற்று. காதலெங்கையர் 'மாதர் சான்ற' என்பன வற்றால் துனிகூறினார். எனவே யாங் கண்டதனாற் பயனின் றென்றார்.

உதாரணம்

> 'நில்லாங்கு நில்' என்னும் பூழ்ப்பாட்டி (கலி-95)னுள்
> ''மெய்யைப் பொய்யென்று மயங்கியகையொன்
> றறிகல்லாய் போறி காணி[1]

---

1. பொருள்: யான்கூறும் மெய்யெல்லாம் பொய்யென்று மயங்கிய நீ உலக வொழுக்கத்தினை ஒன்றும் அறியாய் போல் இருந்தாய் எனத் தலைவன் கூறினன்.

நல்லாய்
பொய்யெல்லா மேற்றித் தவறுதலைப் பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தேனருளினி
அருளுகம் யாம் யாரே மெல்லாதெருள
வளித்து நீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்து நின்பாணனோடாடி யளித்தி
விடலைநீ நீத்தலினோய் பெரிதேய்க்கு
நடலைப் பட்டெல்லா நின்பூழ்''[1]

இதனுள் 'அருளினி' என அடிமேல் வீழ்ந்தவாறும், 'அருளுகம் யாம் யார்' எனக் காதல் அமைந்தவாறும் 'விளித் தளித்தி' என இப்பணிவை நின்பெண்டிர் கொள்வரெனவுங் கூறியவாறுங் காண்க.

''நினக்கே யன்றஃதெமக்கு மாரினிதே
நின்மார்பு நயந்த நன்னுதலரிவை
வேண்டிய குறிப்பினையாகி
யீண்டு நீ யருளா தாண்டுறை தல்லே''[2]

(ஐங்குறு-46)

இதுவும் அது.

தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளிம வழியும்-பரத்தையர் கருதி அணிந்த நன்றாகிய அணி களையுடைய புதல்வனை மாயப் பரத்தைமையைக் குறித்த விடத்தும்.

அவருள் துனியாலே வருந்திய பரத்தையர் தம் வருத்தத் தினை உணர்த்தியும் தலைநின்றொழுகும் பரத்தையர் தஞ்சிறப்பு உணர்த்தியும் அணிவரென்றற்குக் 'கண்ணிய' என்றார். பரத் தையர்சேரி சென்று அணியணிந்ததற்கு வெகுண்டு கூறலிற் பொய்யாகிய பரத்தை என்றார். எனவே தலைவன் பரத்தைமை கருதினாளாயிற்று.

உதாரணம்

* ''உறுவளிதூக்கு முயர்சினைமாவி
னறுவடியாரிற்றவை போலழியக்
கரந்தியாவரக்கவுங் கைந்நில்லா வீங்கிச்
சுரந்த வென்மென் முலைப்பால் பழுதாக நீ

1. பொருள்: பக்கம் 89ல் காண்க.
2. பொருள்: பக்கம் 84ல் காண்க.
* பொருள்: பக்கம் 90ல் காண்க.

நல்வாயிற் போத்தந்த பொழுதினானெல்லா
கடவுட் கடிநகர் தோறுமிவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
யீரமிலாத விவன்றந்தை பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனை கூறு.
நீருள் அடைமறை யாயிதழ்ப்போது போற் கொண்ட
குடைநிழற்றோன்று நின்செம்மலைக் காணூஉ
விவன்மன்ற யானோவ வுள்ளங் கொண்டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில் வரையிறந்து போத்தந்து தாயர்
தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை யென்றிவற்
கொத்தவை யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை கொள்வானுமிஃதொத்தன் சீத்தை
செறுத்தக்கான் மன்ற பெரிது.
சிறுபட்டி ஏதிலார் கையெம்மையெள்ளுபு நீ தொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு''

''அவற்றுள் நறாவிதழ் கண்டன்ன செவ்விரற்கேற்பச்
சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வலென்பது தன்னை
யறீஇய செய்தவினை
அன்னையோ விஃதொன்று
முந்தைய கண்டு மெழுகல்லா தென்முன்வர்
வெந்தபுண் வேலெறிந்தற்றாலிஃதொன்று
தந்தை யிறைத்தொடீஇ மற்றிவன் றன்கைக்கட்
டந்தாரியாரெல்லாஅவிது
இஃதொன்று
என்னொத்துக்காண்க பிறருமிவற் கென்னுந்
தன்னலம் பாடுவி தந்தாளாநின்னை
யிதுதொடு கென்றவர் யார்
அஞ்சாதி நீயுந் தவறிலை நின்கையிதுதந்த
பூவெழி லுண்கணவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்று மெள்ளியிதுவிவன் கைத்தந்தா
டான்யாரோ வென்றுவினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடையேன்''

(கலி-84)

தன்வயிற் சிறப்பினும்-தலைவனில் தான் புதல்வற்குச் சிறந்தானாகி அத்தலைவன் மாட்டும் அவன் காதலித்த பரத்தையர் மாட்டுஞ் செல்லாமற் புதல்வனைத் தன்பாற் சிறை செய்தற் கண்ணும்.

உதாரணம்

''புள்ளிமிழகல்வயல்'' என்னும் மருதக்கலி (79)யுள்
''அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பதாற்
றோய்ந்தாரை யறிகுவேன் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் காய்குவளல்லளோ

''புல்லலெம் புதல்வனைப் புகலகனின் மார்பிற்
பல்காழ் முத்தணியாரம் பற்றினன் பரிவானான்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவளல்லளோ''

''கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையினர் வாங்கினன் பரிவானா
னண்ணியார்க் காட்டுவதிதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவளல்லளோ

எனவாங்கு,

பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி

---

* பொருள்: அணியொடு வந்து எம் புதல்வனைக் கொள்ளாதே. ஏன்எனின் அவன் வாய்நீர் நின்மார்பை நனைக்கும். அதனால் கமழுநின் சந்தனத்தால் நின் பரத்தைமையைக் கருதுமவள் நீ புணர்ந்தவரை அறிவேன் என்று வருந்துவாள் அல்லளோ.

எம் புதல்வனைத் தழுவாதே. அவன் நின்மார்பில் ஆரத்தைப் பறித்துச் சிதைப்பான். அதனால் நின் மார்பின் அணியினாலேயே நின் பரத்தையர் முயக் கத்தை நினைபவளாகிய அவள் புலப்பாள் அல்லளோ.

எம் புதல்வனைக் கண்டு எடுக்காதே. நின் தலையில் உள்ள பூங்கொத்துப் பூக்களைப் பறித்து மாலையை அறுப்பான். அதனால் மணக்கும் கண்ணியினால் பிறர் முயக்கம் உண்டு எனக் கருதும் அவள் பிறர் முயக்கத்தை நின் அறுபட்ட கண்ணி அறிவிக்கிறது என்று சினம் கொள்வாள். அதனால் நீ புதல்வனை விட்டுப் போகாமல் நின்பரத்தையர் குறிக்கோளையும் கடவாமல் இங்கேயே நில்லாதே. நின்றால் அவன் நிவ் அணியைச் சிதைப்பான். அதனால் அவனை விட்டுப் பரத்தையர் சேரிக்கே செல்.

யாங்கே யவர்வயிற் சென்றீ யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து''

இது தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்தது. 'ஞாலம் வறந்தீர' என்னும் மருதக்கலி (82)யுள்

*''அவட்கினிதாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற்றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கானலைக்கொரு
கோறா நினக்கவள் யாராகுமெல்லா
வருந்தியா நோய்கூர நுந்தையையென்றும்
பருந்தெறிந் தற்றாகக் கொள்ளுங் கொண்டாங்கே
தொடியு முகிரும் படையாக நுந்தை
கடியுடை மார்பிற் சிறுகண்ணுமுட்காள்
வடுவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்னபிறவும் பெருமானவள் வயிற்
றுன்னுத லோம்பித் திறவதின் முன்னிநீ
யையமில்லாத வரில்லொழிய வெம்போலக்
கையாறுடைய வரில்லலல்லாற் செல்ல
லமைந்ததினி நின்றொழில்.

இது காதற் பரத்தையர்பாற் புதல்வன் செல்லாமற் சிறைத்தது.

அவன் வயிற் பிரிப்பினும்- தன்னொடு மைந்தரிடை உறவு நீக்கி அவனைத் தலைவனோடு சார்த்துதற் கண்ணும்,

என்றது, எமக்கிவன் யாரென்று அயன்மை கூறுதலாம்.

---

* பொருள்: அப்பரத்தையாகிய தாய்க்கு இனியவனாய் இருந்து பின்னர் நம்மைக் காயும் புதியவள் இல்லில் புக்கான் (நின்மகன்). இது சேடியின் கூற்று. இனித் தலைவி, இவனை அடிக்கக் கோல் கொண்டுவா (எனக் கூறிப் பின்னர்) நினக்கு அவள் என்ன உறவுடையாள்? ஏடா! நான் வருந்தித்துன்புற நின் தந்தையை பருந் தடித்துச் செல்வதுபோல் மடக்கிக் கொண்டாள். மேலும் தன் தொடியும் நகமுமே படையாகக் கொண்டு நின் தந்தை மார்பிலும் பிற இடங்களிலும் அஞ்சாமல் வடுப்படுத்தினாள். அதனால் மகனே! அப்பரத்தை யிடம் செல்லாதே. அழுகையைவிடு. நின் தந்தையைப் பற்றி தன்னிடம் வருவானோ மாட்டானோ என்ற ஐயம் இல்லாமல் தன்னிடமே வருவான் என்ற துணி வுடைய பரத்தையர் வீட்டை வீடுக. எம்போல் செயலற்றுக் கிடக்குமவர் வீடல்லால் வேறு வீட்டிற் செல்லாதே. இனி இதுவாகவே நின் தொழில் அமைந்தது.

உதாரணம்

''மைபடு சென்னி'' என்னும் மருதக்கலி (86)யுள்

''மறைநின்று, தாமன்ற வந்தீத்தனர்
ஆயிழாய் தாவாத வெற்குத் தவறுண்டோ காவாதீங்
கீத்தை யிவனையாங் கோடற்குச் சீத்தையாங்
கன்றியதனைக் கடியவுங் கைந்நீவிக்
குன்றவிறுவரை கோண்மாவிவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தானறனில்லா
வன்பிலி பெற்ற மகன்[1]''

என்புழி 'அறனில்லா வன்பிலி பெற்ற மகன்' எனவும், 'நின் மகன்றாயாதல் புரைவதாங்கெனவே' (அகம்-16) என்புழி 'நின்மகன்' எனவும் பிரித்தவாறு காண்க.

இன்னாத்தொல் சூள் எடுத்தற் கண்ணும்-இன்னாங்குப் பயக்குஞ் சூளுறவினைத் தலைவன் சூளுறுவலெனக் கூறுமிடத்தும்.

தலைவன் 'வந்த குற்றம் வழிகெட' ஒழுகிக் கனவிற் சூளுறவான் வந்த ஏதம் நீக்கி இக்காலத்துக் கடவுளரையும் புதல்வனையுஞ் சூளுறுதலின் 'இன்றை சூள்' என்றார். அது களவுபோலச் சூளுறுதலின் தொல்சூள் என்றார்.

உதாரணம்

'ஒரூஉக் கொடியியனல்லார்'' என்னும் மருதக்கலி (88)யுள்

''வேற்றுமையென் கண்ணோவோராதி தீதின்மை
தேற்றக் கண்டியாய் தெளிக்கு

---

1. பொருள்: முன்னே மறைவாய் வந்திருந்து பின்னர் நாம் அறியும்படி வந்தார் என்று தலைவி கூறினாள். அது கேட்ட தலைவன் தலைவியை நோக்கி, ஆயிழாய்! நினக்கு வருத்தம் செய்ய நினையாத என்னிடம் தவறுண்டோ? யான் எடுத்துக் கொள்ளும்படி இம் மகனைத் தடை செய்யாமல் என்னிடம் கொடுப்பாயாக என்று தலைவன் கேட்ட அளவில் மகன் அவன் பால் தாவிச் சென்றான். அது கண்ட தலைவி, சீ! அறனில்லாத அன்பில்லாத தலைவன் பெற்ற இப்புதல்வன் கோபித்துத் தடுக்கவும் நில்லானாய் மலையடி வரையில் சிங்கம் பாய்ந்தாற்போல இவன் தோளில் பாய்ந்தான். என்று சொல்லி ஊடல் தீர்ந்தாள்.

> இனித் தேற்றேம்யாம்[1]
> தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
> தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
> நீயுறும் பொய்சூளணங் காகின்மற்றினி
> யார்மேல் விளியுமோ கூறு''[2]

எனத் தலைவி எம்மேலே இப்பொய்ச் சூளால் வருங்கேடு வருமென மறுத்தவாறு காண்க.

காமக்கிழத்தியர் நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்-நலம் பாராட்டிய காமக்கிழத்தியர் தலைவி தன்னிற் சிறந்தாராகத் தன்னான் நலம் பாராட்டப்பட்ட இற்பரத்தையர் மேல் தீமையுறுவரென முடித்துக் கூறும் பொருளின் கண்ணும்.

உதாரணம்

> "மடவளம்ம நீயினிக் கொண்டோளே
> தன்னொடு நிகரா வென்னொடு நிகரிப்
> பெருநலந்தருக்குமென்ப விரிமலர்த்
> தாதுண் வண்டினும் பலர்நீ
> யோதி யொண்ணுதல் பசப்பித்தோரே''[3]

(ஐயங்குறு-67)

இதனுள் இப்பொழுது கிடையாதது கிடைத்ததாக வரைந்து கொண்ட பரத்தை தன்னொடு இளமைச் செவ்வி ஒவ்வா என்னையுந் தன்னோடொப்பித்துத் தன் பெரிய நலத்தாலே மாறுபடுமென்பவென அவள் நலத்தைப் பாராட்டியவாறும் நீ பசப்பித்தோர் வண்டு தாது உண்ட மலரினும் பலரெனத் தீமையின் முடித்தவாறுங் காண்க.

---

1. பொருள்: என்னிடத்துண்டாம் மெய்வேறுபாட்டை நீ நினையாதே; அதுவே நினக்குத்தக்கது. என்னிடம் தவறில்லாமையை நான் நினக்குத் தெளிவிக்கக் காண்பாய்; நான் இப்போது தேற்றுவேன்.

2. பொருள்: பக்கம் 92 ல் காண்க.

3. பொருள்: தலைவ! நீ இப்போது கொண்டு நுகரும் காமக்கிழத்தியானவள் தனக்கு ஒப்பாகாத என்னொடு தான் ஒப்பதாகக் கருதித் தன்அழகை வியந்து என்னைப் பழிக்கும் என்பர். முன்னமே தலைவனால் நுகரப்பட்டு நுதல் பசப்பிக்கப்பட்ட மகளிர் வண்டினம் தேன் உண்டு கழித்த மலர்களினும் பலராவர்; இதை அவள் அறியாள்.

''அணிற் பல்லன்ன'' (குறுந்-49)
என்னும் பாட்டுக் கற்பாகலின் இதன் பாற்படும்.

கொடுமையொழுக்கம் தோழிக்கு உரியவை வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமைக் காத்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும், கொடுமை ஒழுக்கம் தோழிக்கு உரியவை-பரத்தையிற் பிரிவும் ஏனைப் பிரிவுகளும் ஆகித் தலைவன் கண் நிகழுங் கொடுமையொழுக்கத்தில் தோழி கூறுதற்கு உரியஎன மேற்கூறுகின்றவற்றைக் கேட்ட வழி, வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமை-எஞ்ஞான்றுங் குற்றமின்றி வருகின்ற பிறப்பு முதலிய சிறப்பிடத்துங் கற்பிடத்துந் திரிவுபடாதபடி, காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் நிலையினும்-தோழி கூற்றினை வெகுளலும் மகிழ்தலும் அவளைப் பிரித்தலும் பின்னும் அவள் கூற்றினைக் கேட்டற்கு விரும்புதலுமாகிய நிலையின் கண்ணும் ஆவயின் வரூஉம் நிலையினும்–அத் தோழியிடத்துத் தலைவனைக் காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலுமாய் வரும் நிலையின் கண்ணும், பல்வேறு நிலையினும்-இக்கூறியவாறன்றிப் பிறவாற்றாய்ப் பலவேறுபட்டுவரும் நிலையின் கண்ணும்.

அவள் வயினென்னாது 'ஆவயின்' என்றார், தோழியும் பொருளென்பது பற்றி.

''இது மற்றெவனோ தோழி துனியிடை
யின்னரென்னு மின்னாக் கிளவி
யிருமருப் பெருமையீன்றணிக் காரா
னுழவன்யாத்த குழவியினகலாது
பாற்பெய் பைம்பயிராரும்மூரன்
றிருமனைப் பல்கடம்பூண்ட
பெருமுது பெண்டிரேமாகிய நமக்கே''[1]

(குறுந்–181)

பொருள்: தோழி! ஈன்ற அணிமையுடைய கரிய எருமை ஆன், உழவர் கட்டிய தன் கன்றைவிட்டு அகலப் போக மனமில்லாமல் பக்கத்தேயுள்ள பயிரை மேயும்படியான ஊரனாகிய தலைவனது வீட்டின்கண் இருந்து பல கடமைகளைச் செய்யும் பெண்டிரேம் ஆயினோம். அப்படிப்பட்ட எமக்கு அத்தலைவரைப் பற்றி ஊடியிருக்கும் புலவிக்காலத்து அவர் இப்படிப் பட்டவர் என்பது போலக் கேட்டற்கு இன்னாச் சொற்களை நீ கூறுதல் என்னை?

இது தோழி இன்னாக் கிளவி கூறியதனை இது பொழுது கூறி பயந்ததென்னெனக் காய்ந்து கூறினாள்.

''பார்பக வீழ்ந்த வேருடை நெடுங்கோட்
டுடும்படைந்தன்ன நெடும்பொரிவிளவி
னாட்டொழி பந்திற் கோட்டுமுக்கிறுபு
கம்பலத்தன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சிவேற்று நாட்டாரிடைக்
சேறு நாமெனச் சொல்லச் சேயிழை
நன்றே புரிந்தோய் நன்று செய்தனையே
செயல்படு மனத்தர் செய்பொருட்
ககல்வராட வரதுவதன் பண்பே''[1]

(நற்றிணை–24)

இது செய்தனையெனத் தலைவி உவந்து கூறியது.

''வண்டுபடத்ததைந்த கொடியிணரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற்றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய் வழங்கலரே''[2]

(குறுந்–21)

---

2. பொருள்: தோழீ! நிலம்பிளக்கத் துளைத்துச் செல்லும் வேரும் கிளைகளும் உடும்பு பதித்து வைத்தாற் போலச் சொரசொரப்புடைய நெடிய விளாமரத்தின் பழங்கள் காம்பு மூக்கு இற்று பச்சை நிறக் கம்பளம் விரித்தாற்போல உள்ள பரந்த பச்சைப் பயிரின் இடையிடையே ஆடிவிட்டுவிட்டுப் போன பந்துகள் போல் வீழ்ந்து கிடக்கும் விளாம்பழங்களையே உணவாகக் கொள்ளும்படியுள்ள வேற்று நாடு செல்வதற்கரிய வழிகளுள்ள சுரத்தில் பொருள் செய்யச் செல்வேம்யாம் எனத் தலைவர் சொல்ல அதற்கு நீ நன்று என விருப்பம் தெரிவித்தாய் மிக நன்று. ஏன் எனின் ஆடவாது பண்பு எனப்படுவது பொருளீட்டும் மனத்தராய் அகல்வது ஆகும். ஆதலினால்.

3. பொருள்: வண்டு மொய்க்கும் பூங்கொத்துகளை இலைகளின் இடையிடையே கொண்டு தலையணிகள் இடையிடையேயுள்ள மகளிர் கூந்தலைப் போலத் தோன்றும் கொன்றை மரங்கள் உள்ள காடானது தான் பூத்து இக் காலம் கார்காலம் எனக் கூறினாலும் யான் நம்ப மாட்டேன். ஏன் எனின் கார்காலத்து வருவேன் என்ற காதலர் வாராமையின் அவர் பொய் கூறார் ஆகலின்.

இது கானங் காரெனக் கூறவும் வாராரென்றவழி அது கூறினும் யானோ தேறேனெனப் பிரிநிலை ஓகாராத்தாற் பிரிந்தது.

''யாங்கறிந்தனர் கொறோழிபாம்பி
னுரி நிமிர்ந்தன்ன வுருப்பவிரமயத்
திரை வேட்டெழுந்த சேவலுள்ளிப்
பொறிமயிரெருத்திற் குறுநடைப்பேடை

''பொரிகாய்க் கள்ளி விரிகாயங் கவட்டுத்
தயங்கவிருந்து புலம்பக்கூஉ
மருஞ்சுர வைப்பிற்கானம்
பிரிந்து சேணுறைதல் வல்லுவோரே''[1]

(குறுந்—154)

இது, வல்லுவோர் என்னும் பெயர் கூறித் தோழி கொடுமை கூறியவழி அவனையே பிரிதல்வன்மை யாங்கறிந் தனரெனத் தலைவி வினவுதலின் அது பின்னுவ் கேட்டற்கு அவாவியதாம்.

இனித் தோழியிடத்துத் தலைவனைக் காய்தல் முதலியன வருமாறு.

''நன்னலந் தொலைய நலமிகச்சாஅ
யின்னுயிர் கழியினு முரையலவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ தோழி
புலவியதெவனோ வன்பிலங்கடையே''[2]

(குறுந்-93)

இது காய்தல்.

''வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மட நடை நாரை
பதைப்பத்ததைந்த நெய்தல் கழிய
வோதமொடு பெயருந் துறைவற்குப்

---

1. பொருள்: தோழீ! பாம்பின் தோல் மேலே சென்றால் ஒத்தவானம் வெப்பம் விளங்கும் அமையத்தில் உணவு விரும்பிப் பிரிந்த சேவலை நினைத்து புள்ளிகளுடைய மயிரினையுடைய கழுத்தையும் குறுநடையையும் உடைய பெண்புறாவானது கள்ளிச் செடியின் கிளையில் இருந்து தன் தனிமையைப் புலப்படுத்திக் கூவும்படியான கடத்தற்கரிய சுரவழியுடைய காட்டிடத்து நம்மைப் பிரிந்து நீண்டகாலம் உறைதற்கு வல்லவராகிய தலைவர் அவ்வாறு உறைதற்குரிய வல்லமையை எங்கு அறிந்தார்?

2. பொருள்: பக்கம் 94 ல் காண்க.

பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே''[1]
(ஐங்குறு-155)

இது பெட்டது.

''நீரார் செறுவின்'' என்னும் மருதக்கலியும் (75) அது. இனிப் பல்வேறு நிலையாவன: தோழி பிரிவுணர்த்திய வழிச் செலவழுங்கக் கூறுவனவற்றின் வேறுபாடுகளும், பிரிந்துழி வழி யருமை பிறர் கூறக் கேட்டுக் கூறுவனவும், தலைவனது செலவுக் குறிப்பு அறிந்து தானே கூறுவனவும், தூதுவிடக் கருதிக் கூறுவனவும், நெஞ்சினையும், பாணனையும் தூது விட்டுக் கூறுவனவும், வழியிடத்துப் புற்களை நொந்து கூறுவன வும், பிரிவிடையாற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லெனக் கூறுவனவும், அவன் வரவு தோழி கூறிய வழி விரும்பிக் கூறுவனவும், கூறிய பருவத்தின் வாராது பின்னர் வந்தவனொடு கூடியிருந்து முன்னர்த் தன்னை வருத்திய குழலை மாலையிற் கேட்டுத் தோழிக்குக் கூறுதலும், தலைவன் தவறிலனெனக் கூறுவனவும், புதல்வனை நீங்கா தொழுகிய தலைவன் நீங்கிய வழிக் கூறுவனவும், காமஞ் சாலாவிளமை யோளைக் களவின் கண் மணந்தமை அறிந்தே னெனக் கூறுவனவும், இவற்றின் வேறுபட வருவன பிறவுமாம்

''அருளுமன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோருரவோராயி
னுரவோருரவோராக
மடவமாக மடந்தை நாமே''[2] (குறுந்-20)

இது செலவழுங்கக் கூறியது.

''வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்றலார்க்கு

---

3. பொருள்: தோழீ! வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன்குஞ்சு எனக் கருதி அதைப் பார்க்கச் சென்ற நாரையானது தன் சிறகால் சிலிர்த்து அசைய அதனால் உதிர்ந்த நெய்தற்பூக்கள் கழியிடத்து நீரலைகளுடன் ஓடும்படியான துறைவனுக்கு யான் களவு ஒழுக்கக் காலத்தில் பஞ்சாய்க் கோரையாற் செய்த பாவையை யீன்றேன். அதனால் பரத்தமை கொண்ட அவரை மகப்பேற்றுக்காக ஏற்றுக் கோடல் வேண்டுவதில்லை.

2. பொருள்: தோழீ அருளும் அன்பும் நீங்கித் தம் துணைவியைப் பிரிந்து பொருள் தேடப் பிரிவோர் அறிவுடையராயின் அறிவுடையோர் அறிவுடையோ ராகவே ஆகுக. பிரிவாற்றாது வருந்தும் நாம் அறியாமையுடையோம்.

மலையுடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்றவாறே''[1]

(குறுந்-39)

''எறும்பியளையிற் குறும்பல் சுனைய
வுலைக்கல்லன்ன பாறையேறிக்
கொலைவிலெயினர் பகழிமாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்றவாறே
யதுமற்றலங் கொள்ளாது
நொதுமல கழறுமிவ் வழுங்கலூரே''[2] (குறுந்-12)

இவை வழியருமை கேட்டவழிக்கூறியன.

''நுண்ணெழின் மாமைச் சுணங்கணியாகந்தங்
கண்ணொடு தொடுத்தென நோக்கியு மமையாரென்
னொண்ணுத னீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவ தெவன்கொலறியே னென்னும்''[3]

(கலி-4)

இது செலவுக் குறிப்பறிந்து தோழிக்குக் கூறியது கொண்டு கூறிற்று.

''பலர்புகழ் சிறப்பினுங்குரிசிலுள்ளிச்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற

---

1. பொருள்: தோழீ! நம்முலையிடைத் துயிலுதலை வெறுத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவர் சென்ற வழி கடுங்காற்று வீசுதலால் வாகை நெற்றுகள் ஒலிக்கும்படியான மலைகளையுடைய அரிய சுரம் என்று கூறுவர். அதற்கே அஞ்சுகிறேன்.

2. பொருள்: தலைவர் சென்ற வழியானது, எறும்புவளை போலும் சுனைகளையுடையதும் கொல்லன் உலைக்கல் பட்டறை போல்வதும் ஆகிய பாறை மேல் ஏறி வேடர் அம்புகளைத் தீட்டும்படியாகவுள்ளது என்று கூறுவர். அவ்வழிக் கொடுமையுணர்ந்து அதுபற்றி வருத்தம் கொள்ளாமல் நொதுமலர் பேசுவதுபோல நொதுமல் சொற்களைச் சொல்லி என்னை இடித்துரைக்கும் இவ் வழுங்கல் ஊர்.

3. பொருள்: நுண்ணிய எழிலையும் மாமை நிறத்தையும் உடைய சுணங்கு பரந்த முலையினைத் தம் கண்ணில் கட்டியதுபோல நெருங்கிப் பார்த்தும் வேட்கை தணியாராய்ப் பின்னும் என் நுதலையும் தடவிக் கொடுப்பர் காதலர். இப்படி அவர் அளவு மிஞ்சிய அன்பு காட்டுதற்கு அவர் எண்ணியது யாது என்பதையான் அறியேன் என்னும் தலைவி.

வின்னாவரும்பட ரெம்வயிற் செய்த
பொய்வலாளர் போலக்
கைவல் பாணவெம்மறவா தீமே''[1] (ஐங்குறு-478)

இது தூதுவிடக் கருதிக் கூறியது.

''சூழ்கம் வம்மோ தோழி பாழ்பட்டுப்
பைதறவெந்த பாலைவெங்காட்
டருஞ்சுர மிறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்ச மீட்டிய பொருளே''[2]
(ஐங்குறு-317)

இது நெஞ்சினைத் தூதுவிட்டுக் கூறியது.

''மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்யரண் சிதைத்த செருமிகுதானையொடு
கதழ்பரி நெடுத்தேரதர் படக்கடைஇச்
சென்றவர்த் தருகுவலென்னு
நனறாலம்ம பாணனதறிவே''[3] (ஐங்குறு-474)

இதுபாணனைத் தூதுவிட்டுக் கூறியது.

''புல்வீழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற்றோன்று நாடன்
றீதிலெனஞ்சத்துக் கிளவி நம்வயின்
நயந்தன்று வாழிதோழி நாமு

---

1. பொருள்: இசையிற் கைவல்வ பாணனே! பலரும் புகழும் சிறப்புடைய குரிசிலாகிய தலைவரை நினைத்து அவர் சென்ற நாட்டிற்குச் செல்ல விரும்பினாயாயின் இனியதல்லாத அரியதுயரை எம்மிடம் செய்து பொய் யில் வல்லவர் மறந்தமைபோல நீ எம்மை மறவாதே.

2. பொருள்: தோழீ! பாழ்பட்டுப் பசுமை நீங்கி வெந்த பாலையாகிய கொடிய காட்டுச் சுரவழியில் நம்மைப் பிரிந்து சென்ற தலைவரிடத்துச் சென்ற நம் நெஞ்சம் மீளாது நீண்டகாலம் அங்கிருத்தற் காரணம் யாதென ஆராய்வோம் வருக.

3. பொருள்: தோழீ! இப்பாணனாகிய வன், பகைவர் கொண்ட அரண்களைச் சிதைத்த போரில் மிக்க சேனை களுடன் தன் பரித்தேரை வழிகெடச் செலுத்திச் சென்ற நம் தலைவரை நம் நுதல் விளக்கமுறும்படி அழைத்து வருவேன் என்று கூறும் அவன் அறிவு மிக நன்று.

நெய்பெய்தீயினெதிர் கொண்டு
தாமணந்தனைய மெனவிடுகந்தூதே''[1]
(குறுந்-106)

இது தூது கண்டு கூறியது.

''ஆம்பற் பூவின் சாம்பலன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றிலுணங்கன் மாந்திமன்றத்
தெருவினுண்டாது குடைவனவாடி
யில்லிறைப் பள்ளிதம் பிள்ளையொடுவதியும்
புன் கண்மாலையும் புலம்பு
மின்று கொறோழியவர் சென்ற நாட்டே''[2]
(குறுந்-46)

இது சென்ற நாட்டு இவை இன்று கொலென்றது.

''வாராராயினும் வரினுமவர் நமக்
கியாராகியரோ தோழி நீர
நீலப்பைம்போ துளரிப்புதல
பீலியொண்பொறிக் கருவிளையாட்டி
நுண்முள் ளீங்கைச் செவ்வரும்பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத்தண்ணென்
றின்னா தெறிவரும் வாடையொ
டென்னாயினள் கொலென்னாதோரே''[3] (குறுந்-110)

---

1. பொருள்: தோழீ! புல்லிய இற்றி மரத்தின் வேரானது அருவி போலத் தோன்றும் மலைநாடன் தீதற்ற நெஞ்சம் உடையான் என்னும் சொல் தூதுவன் மூலம் நமக்கு வந்தது. அச்சொல்லை நாம் தீயானது நெய்யை ஏற்பதுபோல ஏற்று தூதுவனிடமே யாம் முதலில் மணந்த காலம் போன்ற மகிழ்வுடையேம் என்று சொல்லி விடுவோமாக.

2. பொருள்: தோழீ! வீட்டில் உறைகின்ற ஆம்பலின் வாடிய மலர் போலும் சிறகுடைய குருவி முற்றத்தில் காயவைத்திருக்கும் உணங்கலையுண்டு ஊர்மன்றத்து மலர்களின் தாதுக்களில் குளித்துப் பின் வீட்டின் இறப்பில் மெத்தையில் தன் குஞ்சுகளுடன் உறையும் படியான மாலைக்காலமும் தனிமையுணர்வும் அவர் சென்ற நாட்டில் இல்லையோ? உண்டு. ஆதலின் அவர் விரைந்து வருவர் என ஆற்றியிருப்பேன்.

3. பொருள்: தோழீ! சுனைநீரிற் பூத்த நீலப் பூக்களைக் கிளறி, புதரில் பூத்த கருவிளை மலரை ஆட்டி ஈங்கை மலர்கள் உதிரும்படி வீசுகின்ற வாடைக்காற்றால் நம் தலைவி என்ன வருத்தம் ஆனாளோ என நினையாத வராய் தலைவர் நம்மை நினைந்துவாராராயினும் வருவாராயினும் நமக்கு எத்தகைய உறவினராவர்?

இது, பருவங் கண்டழிந்து கூறியது.

''உதுக்காணதுவேயிது வெனமொழிகோ
நேர்சினை யிருந்த விருந்தோட்டுப் புள்ளினந்
தாம்புணர்ந்தமையிற் பிரிந்தோருள்ளா
தீங்குரலகவக் கேட்டுநீங்கிய
வேதிலாள ரிவண்வரிற் போதிற்
பொம்மலோதியும் புனைய
லெம்முந்தொடஅ லென்குவ மன்னே[1]''

(குறுந்-191)

இது காய்ந்து கூறியது.

''முதைப்புனங் கொன்ற வார்கலியுழவர்
விதைக்குறு வட்டிபோதொடு பொதுளப்
பொழுதோ தான்வந்தன்றே மெழுகான்
றாதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயி லிறும்பினார்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந்தயர்மார்
தேர்வரு மென்முன்னுரை வாராதே''[2]

(குறுந்-155)

இது பொழுதொடு தான்வந்தன்றெனப் பொழுதுகண்டு மகிழ்ந்து கூறினாள்.

''அம்மவாழி தோழி சிறியிலை
நெல்லி நீடியகல்காய் கடத்திடைப்
பேதை நெஞ்சம் பின்படச் சென்றோர்

---

1. பொருள்: தோழீ! இதோபார்! மரக்கிளையில் இருந்த பறவைக் கூட்டங்கள் தாம் துணையொடு கூடியிருத்தலின் பிரிந்தோர் உறும்துயரை நினையாவாய் ஒன்றை யொன்றழைத்துக் கூவும் கூப்பீட்டைக் கேட்கும் நம்மை நினையாது நீங்கிய தலைவர் இனிவரின் வந்து கூந்தலைத் தடவி ஒப்பனை செய்யின் செய்யாதீர் என்றும், தொடின் தொடாதீர் என்றும் கூறுவேம்.

2. பொருள்: தோழீ! புனத்தின் மேடுகளை வெட்டிச் சமன் செய்து விதைத்து வந்த ஒலிமிக்க உழவரது விதைப்புட்டிலில் மலர்கள் நிறையும்படிக் கார்காலம் வந்தது. ஆனால் மணியோசை காட்டில் ஒலிக்கச் சுர வழிகளைக் கடந்து தலைவர் தேரானது புதிய விருந்து அயரும்படி இதோ வந்தது என்னும் சொல்தான் இன்னும் வரவில்லை.

கல்லினும் வலியர் மன்ற
பல்லித ழுண்கணழப் பிரிந்தோரே''[1]

(ஐங்குறு-334)

இதுவன்புறை எதிரழிந்து கூறியது.

''அம்மவாழிதோழி யாவதும்
வல்லா கொல்லோ தாமேயவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோ
டியாஅந்துணை புணர்ந்துறைதும்
யாங்குப் பிரிந்துறைதி யென்னுமாறே''[2]

(ஐங்குறு-333)

இது புள்ளை நொந்துக் கூறியது.

''காதலருழையராகப் பெரிதுவந்து
சாறுகொளூரிற் புகல்வேன் மன்ற
வத்த நண்ணிய வங்குடிச்சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலப்பில் போலிப் புல்லென்
றலப்பென் றோழியவரகன்ற ஞான்றே''[3]

(குறுந்-41)

இஃது ஆற்றுவலெனக் கூறியது.

''நீ கண்டனையோ கண்டார்க் கேட்டனையோ
வொன்றுதெளிய நசையின மொழிமோ
வெண்கோட்டியானை சோணைபடியும்

---

1. பொருள்: தோழீ! கேட்பாயாக. சிறிய இலைகளை யுடைய நெல்லி மரங்கள் மிக்குள்ள மலையுருகக் காயும் காட்டிடையே என் பேதை நெஞ்சம் பின்தொடரச் சென்றவர், என் பலவான இதழ் போலும் மையுண்ட கண்கள் அழப் பிரிந்தார் அகலின் கல்மலைக் காட்டினும் வலிய நெஞ்சினர் ஆவார்.

2. பொருள்: தோழீ! கேட்பாயாக. தலைவர் பிரிந்து சென்ற நாட்டுப் பறவைகள் அவரைப்பார்த்து, ''யாங் கள் துணையினைப் பிரியாது உடனுறைதலை யுணர்ந்து வாழ்வேம்; நீ எப்படி நின்துணையைப் பிரிந்து உறை கிறாய்'' என்று கூறாதனவாயின. அதனால் அவை ஒரு சிறிதும் வன்மையுடையனவல்லவோ?

3. பொருள்: தோழீ! காதலர் அருகிருக்கும் போது திருவிழாக் கொள்ளும் ஊர்போல மகிழ்ந்திருப்பேன் உறுதியாக. அவர் பிரிந்தபோதோ பாலை நிலவழியில் உள்ள சிற்றூர்களில் மக்கள் விட்டு நீங்கிய அணில்கள் மட்டும் விளையாடக்கூடிய முற்றத்தையுடைய வீடுகள் போலப் புல்லென்று வருந்தியிருப்பேன்.

பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர்வரவே''[1]

(குறுந்-75)

இது, தலைவன் வரவை விரும்பிக் கூறியது.

''இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலு
மும்மையா மென்பவரோராரர் கா-ணம்மை
யெளியரென நினைத்த வின்குழலாரேடி
தெளியச் சுடப்பட்டவாறு''

(திணை-நூற்-123)

இது, குழல் கேட்டுத் தோழிக்குக் கூறியது.

''பெருங்கடற்றிரையது சிறுவெண் காக்கை
நீத்து நீரிருங்கழி யிரைதேர்ந்துண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்குந் துறைவனொ
டியாத்தேம் யாத்தன்று நட்பே
யவிழ்த்தற் கரித்து முடிந்தமைந் தன்றே''[2]

(குறுந்-313)

இது, தலைவன் தவறிலனென்று கூறியது.

''உடலினே னல்லேன் பொய்யாதுரைமோ
யாரவண் மகிழ்ந தானேதேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வெளவியோளே''[3]

(ஐங்குறு-66)

---

1. பொருள்: பாண! தலைவர் வருகையை நீ பார்த்தாயா? கண்டார் சொல்லக் கேட்டாயா? உண்மையறிய விரும்புகின்றேம். சொல். நீ சொல்லின் யானைபடியும் சோணையாறுள்ள பாடலி என்னும் நகரத்தைப் பெறுவாய். யார் வாய்க் கேட்டாய்?

2. பொருள்: கடற்கரைச் சிறு வெண் காக்கையானது நீந்தும்படியாக மிக்க நீருடைய கழியிடங்களில் இரையை ஆராய்ந்து உண்டு சோலையில் தங்கும்படியான துறைவனோடு யான் என்னை நன்றாகப் பிணைத்துக் கொண்டேன். அப்படி பிணைத்த நட்பானது நன்றாகப் பிணைக்கப்பட்டதேயாம். யாராலும் அவிழ்த்தற்கரிது. உறுதிப்பட்டதாகும் அது.

3. பொருள்: மகிழ்ந! தேருடன் தளர்நடையிட்டு வரும் புதல்வனை நினைத்து நீ வளமனைக்கு வரவும் நின்னைத் தடுத்துத் தன்பால் வெளவியவள் யார்? உன்னைச் சினந்து வினவவில்லை. பொய் கூறாது மெய் கூறுக.

இது, புதல்வனை நீங்கிய வழிக் கூறியது.

''கண்டனெமல்லமோ மகிழ்ந நின்பெண்டே
பலராடு பெருந்துறை மலரொடுவந்த
தண்புனல் வண்டலுய்த்தென
வுண்கண் சிவப்பவழுது நின்றோளே''[1]

(ஐங்குறு-69)

இது காமஞ்சாலா விளமையோளைக் களவின் மணந்தமை அறிந்தேனென்றது.

வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ-வாயில்தன் ஏதுவாகத் தலைவிக்கு வருங்கூற்றுவகையோடு கூட்டி.

வாயில்களாவார் செய்யுளியலுட் (512) கூறும் பாணன் முதலியோர். 'வகை' என்றதனான், ஆற்றாமையும் புதல்வனும் ஆடை கழுவுவாளும் பிறவும் வாயிலாதல் கொள்க.

''கொக்கினுக் கொழிந்த தீம்பழங் கொக்கின்
கூம்பு நிலையன்ன தகைய வாம்பற்
றூங்கு நீர்க்குட்டத்துத் துடுமெனவீழுந்
தண்டுறை யூரன் றண்டாப் பரத்தமை
புலவா யென்றி தோழி புலவேன்
பழனயாமைப் பாசறைப் புறத்துக்
கழனிகாவலர் சூடுந் தொடைக்குந்
தொன்று முதிர்வேளிர் குன்றூரன்னவென்
னன்மனை நணிவிருந்தயரும்
கைதூவின்மையி னெய்தாமாறே''[2] (நற்-280)

இந் நற்றிணை தலைவனொடு புலவாமை நினக்கு இயல்போ

1. பொருள்: மகிழ்ந! பலரும் நீராடும் பெருந்துறையில் மலரொடு வந்த தண்புனலானது தான் இழைத்து ஆடிய வண்டலம் பாவையைச் சிதைக்கவே கண் சிவப்ப அழுது நின்றாள் ஒருத்தி. அவள் நின்னால் விரும்பப்பட்ட பெண்டுதான் எனக் கண்டேன் அல்லவோ. நீமறைப்பது என்னை?

2. பொருள் : தோழீ! கொக்கு வந்து தங்கியதால் காம்பிற்று இனிய மாங்கனியானது, ஆம்பல் தங்கிய நீர்க் குளத்தில் துடும் என வீழும் நீர்த்துறைவனது பரத்தமைக்காகப் புலவாதே என்றாய். யாமை முதுகுபுறம் போலும் பாறையில் நத்தையைச் சுட்டு உடைக்கும் வேளிரது குன்றூர் போலும் எனது நல்ல மனையில் வருவிருந்தினரைப் போற்றும் செயல் ஒழியாமையால் அவனை எதிர்ப்படவில்லை; அதனால் புலத்தலும் இல்லை. இல்லையேல் புலப்பேன்.

வென்ற தோழிக்கு விருந்தாற் கைதூவாமையின் அவனை எதிர்ப்படப் பெற்றிலேனல்லது புலவேனோ என்றவாறு.

''அன்னா யிவனோரிளமாணாக்கன்
றன்னூர் மன்றத் தென்னன்கொல்லோ
விரந்தூணிரம்பா மேனியொடு
விருந்தினூரும் பெருஞ்செம்மலனே''[1] (குறுந்-33)

இது, பாணன் சொல் வன்மைக்குத் தோற்று வாயில் நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது.

''காண்மதி பாணநீ யுரைத்தற்குரியை
துறைகெழுகொண்கன் பிரிந்தென
விறைகேழெல்வளை நீங்கிய நிலையே''

(ஐங்குறு—140)

இது பரத்தையிற் பிரிந்துழி அவன்நின் வார்த்தையே கேட்ப னென்பது தோன்றப் பாணற்குத் தலைவி கூறியது.

''ஆடியல் விழவினழுங்கன்மூதூ
ருடையோர்ப் பன்மையிற் பெருங்கைதூவா
வறனில் புலைத்தியெல்லி தோய்த்த
புகாப்புகர்க் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடாமாலை துயல் வரவோடிப்
பெருங்கயிறு நாலுமிரும்பனம் பிணையற்
பூங்கணாய மூக்கலூங்கா
ளழுதனள் பெயருமஞ்சிலோதி
நல்கூர் பெண்டின் சில்வளைக்குறுமக
ளூசலுறுதொழிற் பூசற்கூட்டா
நயனின் மாக்களொடு குழீஇப்
பயனின் றம்மவிவ் வேந்துடையவையே''[2]

(நற்றிணை-40)

இது பாணனைக் குறித்துக் கூறியது.

''நெய்யுங் குய்யு மாடிமெய்யொடு
மாசு பட்டன்றே கலிங்கமுந்தோளுந்
திதலை மென்முலைத்தீம்பால் பிலிற்றப்
புதல்வற்புல்லிப் புனிறு நாறும்மே
வாலிழைமகளிர் சேரித்தோன்றுந்
தேரோற் கொத்தனெமல்லே மதனாற்

1. பொருள்: பக்கம் 98 ல் காண்க.
2. பொருள்: பக்கம் 99 ல் காண்க.

பொன்புரை நரம்பினின் குரற்சீறியா
ழெழாஅல்வல்லை யாயினுந்தொழாஅல்
புரையோரன்ன புரையுநட்பி
னிளையோர் கூம்புகை மருள்வோராங்கு
கொண்டுசெல் பாணநின் றண்டுறையூரனைப்
பாடுமனைப் பாடல்கூடாது நீடுநிலைப்
புரவியும் பண்ணிலைமுனிகுவ
விரகில மொழியல்யாம் வேட்டதில்வழியே''[1]

(நற்-380)

இது பாணனுக்கு வாயின் மறுத்தது.

''புல்லேன் மகிழ்ந புலத்தலுமிலனே
கல்லாயானைக் கடுந்தேர்ச் செழியன்
படைமாண் பெருங்குள மடைநீர்விட்டெனக்
காலணைந்தெதிரியகனைக் கோட்டுவாளை
யள்ளலங்கழனி யுள்வாயோடிப்
பகடுசேறுதைத்த புள்ளி வெண்புறத்துச்
செஞ்சாலுழவர் கோற்புடைமதரிப்
பைங்காற்செறுவினணை முதற்பிறழும்
வாணன் சிறுகுடியன்னவென்
கோனே ரெல்வளை நெகிழ்த்த நும்மே''[2]

(நற்றிணை-340)

இஃது ஆற்றாமை வாயிலாகச் சென்றுழித்தலைவி கூறியது.

''வெள்ளாங்குருகின் பிள்ளைசெத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
காலையிருந்து மாலைச்சேக்குந்
தண்கடற் சேர்ப்பனொடு வாரான்
றான்வந் தனனெங் காதலோனே''[3]

(ஐங்குறு-157)

இது வாயில் வேண்டி ஒழுகுகின்றான் புதல்வன் வாயிலாக வருமெனக் கேட்டு அஞ்சிய தலைவி அவன் விளையாடித் தனித்து

1. பொருள்: பக்கம் 100 ல் காண்க.

2. பொருள்: பக்கம் 100 ல் காண்க.

3. பொருள்: வெள்ளாங்குருகின் குஞ்சைத் தன் குஞ்சு எனக் கருதிப் பார்க்கச் சென்ற நாரை காலையிலிருந்து மாலைவரை அங்கேயே தங்கும்படியான கடற்சேர்ப்பனொடு வாரானாய் தான் மட்டும் தனியே வந்தான் என் மகன். என்னே இது!

வந்துழிக் கூறியது. 'கூர்முண்முள்ளி' என்னும் (26) அகப் பாட்டு ஆற்றாமை வாயிலாகச் சென்றுழித் தடையின்றிக் கூடிய வாறு.

''மாறாப் புண்போன் மாற்றச் சீற்றங் களைந்தப்பின்னும் புலவி கூர்ந்து தலைவன் கேட்ப முன்னிலைப் புறமொழியாக யான் நோமென்னவும் பொல்லாரென வலிதிற் கூறியவாறு காண்க.

''பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி'' (கலி-79)

எனப் புதல்வனை வாயிலாகக் கொண்டு சென்றவாறு காண்க[1].

''நாடி நின்றூதாடித் துறைச்செல்லாளூரவ
ராடைகொண்டொலிக்கு நின்புலைத்தி
காட்டென்றாளோ
கூடியார் புனலாடப் புணையாயமார்பினி
லூடியாரெறிதர வொளிவிட்டவரக்கினை''[2]
(கலி-72)

இஃது ஆடை கழுவுவாளை வாயிலென்றது.

பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதனாற் கொள்க.

கிழவோள் செப்பல் கிழவது என்ப-இப்பத் தொன்பதுங் கிழவோளுக்கு உரிமையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் என்ற வாறு. முன்னர் நின்ற எழனுருபுகளைத் தொகுத்து இன்னதன் கண்ணும் இன்னதன் கண்ணுந்தலைவி செப்புதலை வாயிலின் வகையோடே கூட்டிக் கிழவோள் செப்பல் வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ எனமாறுக.

1. பக்கம் 84 ல் விளக்கவுரை காண்க.

2. பொருள்: கூடின மகளிர்க்குப் புனலாடத் தெப்பமாகிய நின்மார்பிலே புனலாடப் பெறாத மகளிர் ஊடல் கொண்டு நின்மேல் எறிந்த அரக்குச் செப்பினை, ஊரினர் ஆடைகளைக் கொண்டு ஒலிக்கும் புலைத்தி நினக் குரிய பரத்தையரைச் சேர்க்க நாடி நிலக்குத் தூதா கித் திரிபவள் தனக்குங் 'காட்டுவாயாக' என நின்னைக் கேட்டாளோ?

தலைவி அச்சம்

146. புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து
இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும் (7)

இளம்

என்—எனின், இதுவும் தலைமகட்குரிய கிளவிக்கட்படும் இலக்கணம் நுதலிற்று.

(இ-ள்): களவிற் புணர்ந்து உடன்போகிய தலைமகள் கற்புக் கடன் பூண்டொழுகுங் காலத்து மனைக்கணிருந்து, தான் முன்னர் இடைச் சுரத்தில் தலைவனுடன் கண்ட கருப்பொருண் முதலியவற்றையும் அவற்றின் தொழிலையும்[1] குறித்துக் கிழவன் அன்புறுதற்குத்[2] தக்கவற்றைக் கூறுதலே தலைமகன் இயற்றுந் தொழிற்கு அஞ்சும் அச்சமாகும் என்றவாறு.

எனவே புணர்ந்துடன் போகாத தலைவி அங்ஙனமிருந்து கூறல் தலைவற்கு அவன் செய்வினைக்கண் அச்சமாகாதென்றவாறும்[3].

உதாரணம்

''கானயானை தோல் நயந்துண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவையேறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடைபயிரும்
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே யாம்தமக்கு

---

1. அவற்றின் தொழிலாவது ஆண் தன் பெண்ணிற்கு அன்பாக ஊட்டும் செயல் முதலியன.
2. அன்புறுதலாவது தன்னிடம் அன்பு மிகக் கொள்ளல். அன்புறு தகுநகூறலாவது தன்பால் அன்பு மிகுமாறு வழியில் நிகழும் கருப்பொருள்களின் செயல்களைக் கூறல்.
3. இதன் கருத்து, புணர்ந்துடன் போகாத தலைவி கிழவோன் செய்வினைக்கு அச்சம் கூறாள்; ஏன் எனின் வழியருமை அவட்கு அறியலாகாது ஆதலின் என்பது.

ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லா தகறல் வல்லுவோரே''[1]

(குறுந்—79)

இதனுள் அஞ்சியவாறு காண்க, பிறவும் அன்ன.

நச்

இது, தலைவி கூற்றின்கட்படு வதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: புணர்ந்து உடன்போகிய கிழவோள் மனை இருந்து-களவுக் காலத்துப் புணர்ந்து உடன் போகிய தலைவி கற்புக்காலத்து இல்லின் கண் இருந்து இடைச்சுரத்து இறைச்சியும் அன்புறுதக்க வினையுஞ் சுட்டிக் கிளத்தல் தானே தான் போகிய காலத்துக் காட்டின்கட் கண்ட கருப்பொருள் களையுந் தலைவன் தன்மேல் அன்பு செய்தற்குத் தக்க கருப் பொருளின் தொழில்களையுங் கருதிக் கூறுதல்தானே, கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும்—தலைவன் எடுத்துக் கொண்ட காரியத்திற்கு முடித்தலாற்றான் கொலென்று அஞ்சும் அச்சமாம் என்றவாறு.

எனவே, அருத்தாபத்தியாற் புணர்ந்து உடன் போகாத தலைவி மனைக்கணிருந்து தலைவன் கூறக்கேட்டு அக்கருப் பொருள்கள் தன்மேல் அன்புறுதக்க வினைகளைக் கூறுதல் தலைவன் செய்வினைக்கு அச்சமாகாது வருவரெனத் துணிந்து கூறுதலாமென்றாராயிற்று.

''கானயானை தோனயந்துண்ட
பொரிதாளோமை வளிபொரு நெடுஞ்சினை
யலங்கலுலவையேறி யொய்யெனப்
புலம்புதருகுரல புறவுப்பெடைபயிரு
மத்த நண்ணிய வங்குடிச்சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்

1. பொருள்: தோழீ! நும்பிரிவையாம் பொறேம் என்று யான் கூறிய தவறு காரணமாக நம்மிடம் சொல்லாதே பிரிதற்கு வல்லமையுடைய நம் காதலர் காட்டுயானை தோலுண்ணும் ஓமை மரத்தின் உலர்ந்த கிளையில் ஏறிய பெண் புறாவானது தன் தனிமை தோற்றும் குரலால் ஆண் புறாவை அழைக்கும் படியான சுரவழி பொருந்திய சிறுகுடியுடைய சீறூரிலேயே நம்மை நினையாமல் தங்கி விட்டனரோ? அறியேன்,

கொல்லோ மென்ற தப்பற்குச்
சொல்லா தகறல் வல்லுவோரே''[1] (குறுந்-79)

புலம்தரு குரலவாய்ப் புறவினைப்பெடை அழைக்கும் வருத்தங் கண்டு வினை முடியாமல் வருவரோவென அஞ்சியவாறு காண்க.

''அரிதாயவறனெய்தி'' என்னும் (11) கலிப்பாட்டுத் தலைவன் அன்புறுதக்கன கூறக்கேட்ட தலைவி அவற்றைக் கூறிப் புனைநலம் வாட்டுநர் அல்லரென வரவு கருதிக் கூறிய வாறு காண்க. இதனுள் ஆற்றுவிக்குந்தோழி வருவர் கொல் லென ஐயுற்றுக் கூறலின்மையின் தோழி கூற்றன்மையும் உணர்க.

''புல்லுவிட்டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன'' (கலி 3.13) என்றாற் போல்வன தலைவி கூற்றாய் வருவன உளவாயின் இதன் கண் அடக்குக.

சிவ

விளக்கவுரை

வினைமேற்சென்ற தலைவன் அவ்வினையை முற்ற முடிப் பானோ மாட்டானோ எனத் தலைவி அஞ்சி அதனைத் தோழி யிடம் கூறுவள். அஞ்சுதற்குக் காரணம் அவன் சென்ற வழியின் அருமையேயாம். அவன் சென்ற வழியின் அருமை எப்படி இருக்கும் என்பதைத் தலைவி அறிவாள் களவொழுக்கத்தில் தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட காலத்தில் நடந்து சென்ற வழியின் அருமை அவளுக்குத் தெரியும். அவ்வழியில் புட்களும் விலங்குகளும் அவற்றின் செயல்களும் தலைவன் கண்டு தன்மேல் மிக்க அன்பு சிறத்தற்குக் காரணங்களாயிருந்தன. தன் பிடியை முன்னே குறைந்த நீருண்ணச் செய்து எஞ்சிய சிறிது நீரைப் பின் உண்டகளிறும், ஞாயிற்றின் வெப்பம் தாங்காத வெய்யிலில் வாடிய தன் பிணைமானுக்கு தன் உடம்பு நிழலைத் தந்து ஆற்றிய ஆண்மானும், பெடைகளை அழைக்கும் ஆண் பறவைகளும் பிறவும் கண்ட தலைவன் தன் பால் அன்பு மிகக் காட்டியது அவளுக்கு நினைவில் நின்றது. அதனால் இன்று வினைமேற்சென்ற தலைவன் வழியில் களவுக் காலத்து உடன்போக்கிற் கண்டதுபோலத் தன்பால் அன்புமிகும் படியான காதற்காட்சியினைக் காணநேரின் அது காரணமாக

---

1. பொருள் : பக்கம் 137ல் காண்க.

தன் நினைவாகச் செயலை மறந்து மீள்வரனோ என அஞ்சி னாள். அவ்வச்சத்தினைத் தோழிக்குக் கூறும் கூற்று உண்டு. அவ்வாறு கூறும்போது வழியில் நிகழும் கருப்பொருள்களின் காதற் காட்சியைச் சுட்டியே கூறுவாள். இவ்வாறு அஞ்சுவதே கிழவோன் செய்வினைக்கு அஞ்சுவதாகும். அவ்வச்சத்தைக் கூறுவதே கிழவோன் செய்வினைக்கு அச்சம் கூறுதலாகும்.

இவ்வாறு கூறும் அச்சக் கிளவியானது களவுக் காலத்து உடன்போக்குச் சென்ற தலைவிக்கேயுரியது. உடன்போக்குச் செல்லாத ஆனால் களவொழுக்கம் மேற்கொண்டு பின்னர்க் கற்பொழுக்கம் கொண்ட தலைவிக்கோ களவின்வழி வராது பெற்றோரால் தரப்பெற்று மணந்து கற்பொழுக்கம் கொண்ட தலைவிக்கோ உரியதன்று. ஏன்எனின் அவ்விருவர்க்கும் வழி யருமை அறியவராது ஆதலின்.

147. தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்மனார் புலவர் (8)

இளம்

என்-எனின், இதுவுமது.

இ-ள்: தோழியுள்ளிட்ட வாயில்களைப் போகவிட்ட அக்காலத்துட்[1] முற்கூறிய[2] நிகழும்[3] என்றுரைப்பர் புலவர், என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

நச்

இது தோழி முதலிய வாயில்கட்கு எய்தாத தெய்துவித்தது.

இதன் பொருள்: தோழி உள்ளுறுத்த வாயில் புகுப்பினும்- தலைவனது செலவுக் குறிப்பு அறிந்து அவனைச் செலவழுங்கு வித்திற்குத் தோழியுள்ளிட்ட வாயில்களைத் தலைவி போக

---

1. தோழியுள்ளிட்ட வாயில்களைத் தலைவி தலைவன்பால் செலவழுங்கக் கூறுமாறு போக்கிய அக்காலத்தும்.

2. முற்கூறிய—முன்சூத்திரத்திற் சொல்லப்பட்ட கருப் பொருளும் கருப் பொருள் நிகழ்ச்சியும். கூறிய-கூறப் பட்டன-வினையாலணையும் பெயர்.

3. நிகழும்-கிழவோன் செய்வினைக்கு அச்சம் நிகழும்.

விட்ட அக்காலத்து அவர் மேலனபோலக் கூறுங் கூற்றுக்களும் ஆவயின் நிகழும் என்மனார் புலவர்-தலைவி அஞ்சினாற்போல அவ்வச்சத்தின் கண்ணே நிகழுமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

'அறனின்றி யயறூற்றும்' (கலி-3) என்னும் பாலைக்கலியுள் இறைச்சியும், வினையுமாகிய பூ முதலியன கூறியவாற்றால் தலைவிக்கிரங்கி நீர் செலவழுங்குமெனக் கூறுவாள் யாமிரப்பவு மெம கொள்ளர்யாயினை' எனப் பிற வாயில்களையும் கூட்டி உரைத்தவாறு காண்க.

சிவ

விளக்கம்

மேலைச் சூத்திரத்தில் தலைவி, கிழவோன் செய்வினைக்கு அஞ்சிய அச்சக்கிளவி பற்றிக் கூறப்பட்டது. இச்சூத்திரத்தில் தலைவி அவ் வச்சக்கிளவியைத் தலைவன்பால் செலவழுங்குவிக்கும்படித் தன் தோழி முதலிய வாயில்களைப் போகவிடும் காலத்தும் கூறிப் போகவிடும் என்பது கூறப்பட்டது. இவ்வாறு தலைவி வாயில்களிடம் கூறிப் போகவிட்டதற்குச் செய்யுள் கிடைத்திலது. அதனால் இளம்பூரணர் உதாரணம் வந்தவழிக் காண்க என்றார்.

நச்சினார்க்கினியர், தலைவியானவள் வாயில்களைத் தலைவன்பால் சென்று செலவழுங்குவிக்குமாறு அனுப்புக் காலத்து அவர்கள் சென்று தலைவனிடம் செலவழுங்கக் கூறும்போது அக்கூற்றுத் தலைவியின் கூற்றாக அமையாமல் தம் கூற்றாகவே கொண்டு கூறுவதுபோலவும் கிழவோன் செய்வினைக்கு அச்சக் கிளவி நிகழும் என்று இச் சூத்திரம் கூறுவதாகக் கொண்டார். அதனால் அவர் பாலைக்கலியில் உள்ள அறனின்றி அயல் தூற்றவும் (3) என்னும் பகுதியைக் காட்டினார்.

இச் சூத்திரத்தையும் மேலைச் சூத்திரத்தையும் கொண்டு கிழவோன் செய்வினைக்கு அஞ்சும் அச்சக் கிளவியைத் 1. தலைவி தானே தோழியிடம் கூறுதலும் 2. தன்னாற் செலவழுங்குவிக்குமாறு அனுப்பப்படும் வாயில்களிடம்தான் கூறுதலும் 3. வாயில்கள் தலைவி கூற்றையுட்கொண்டு தாமே கூறுதல் போலத் தலைவனிடம் கூறுதலும் என மூவகையில் அமைவதாகக் கொள்ளலாம்,

தோழி கூற்று

148. பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த
தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணும்
அற்றமழி புரைப்பினும் அற்றம் இல்லாக்
கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்
சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்
அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியும்[1]
சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்
மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்
பேணா வொழுக்கம் நாணிய பொருளினும்
சூள்வயின்[2] திறத்தால் சோர்வுகண் டழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை யில்லாப் பிழைப்பினும் அவ்வழி[3]
உறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய
கிழவோள் பால்நின்று கொடுத்தற் கண்ணும்
உணர்ப்புவயின் வாரா வூடலுற் றோள்வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத்து இரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலத்து எதிர்நின்று சாற்றிய
மரபுடை யெதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி யெல்லாம்
தோழிக் குரிய என்மனார் புலவர் (9)

பாடம் 1. புகற்சியும்
2. சூள் நயத்
3 அவ்வயின்

இளம்

என்-எனின். கற்பின்கண் தோழி கூற்று நிகழும் இடம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பெறற்கரும் சிறப்பு முதலாக மரபுடையெதிரும் உளப்படப் பிறவும் ஈறாக மொழியப் பட்டவையாவும் தோழிக் குரிய என்று கூறுவர் புலவர் என்றவாறு.

பெறற்கரும் பெரும் பொருண் முடிந்த பின்வந்த தெறற் கரு மரபிற் சிறப்பின் கண்ணும் என்பது-பெறுதற்கு அரிய பெரும்பொருளை முடித்த[1] பின்னர்த் தோன்றிய தெறுதற்கரிய மரபு[2] காரணத்தால் தலைவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்தும் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

பெரும் பொருள் ஈண்டு வரைவிற்கேற்றது. தெறுதல்-அழல் நோக்குதல்.

உதாரணம்

''அயிரை பரந்த அந்தண் பழனத்து
ஏந்தெழில் மலர்ந்த தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட்டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்கலானீர்
தொழுதுகாண் பிறையில் தோன்றியான் உமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோயானே''.[3]

(குறுந்-178)

எனவரும்.

---

1. பெறுதற்கரிய பெரும் பொருள் முடிதலாவது, பெறுதற் கரிய மிக்க பரிசப் பொருள் தந்நமையால் வதுவை முடிதலாம்.

2. மரபு என்பது கற்புக் காலத்துத் தலைவனைச் சிறப் பிக்கும் வழக்கம். சிறப்பித்தல் என்பது களவுக் காலத் துப் பிரிவாற்றியிருந்ததைச் சிறப்பித்தலாம்.

3. பொருள்: தலைவ! அயிரை மீன்கள் பரந்த பொய்கை யில் ஆம்பல் மலரைப் பறிப்பவர் நீர் வேட்கை கொண்டதுபோல இக்காலத்து இவள் முலையிடைத் துயின்றும் வேட்கை தீராது நடுங்குதலை ஒழிய வில்லை; தொழுது காணற்குரிய பிறை நினைத்த மாத்திரத்தில் தோன்றாது நாள்கள் பல இடையிட்டுத்

அற்ற மழிவு உரைப்பினும் என்பது—முற்காலத்துற்ற வருத்தத்தின் நீங்கினமை கூறினும் என்றவாறு.

உதாரணம்

''எரிமருள் வேங்கை இருந்ததோகை
இழையணி மடந்தையில் தோன்று நாட
இனிது செய்தனையால் எந்தை வாழியர்
நன்மனை வதுவை அயர இவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந்தோயே''[1]

(ஐங்குறு-294)

எனவரும்.

அற்றம் இல்லாக் கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும் என்பது-குற்றமில்லாத தலைமகனைச் சுட்டிய தெய்வக் கடன் கொடுத்தற் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

''நெஞ்சமொடு மொழிகடுத்தஞ்சு வரநோக்குந்
தாய் வட்டெறுதாக் காக்கவெம் மகனெனச்
சிறந்த தெய்வத்து மறையுறை குன்ற
மறைந்துநின் றிறைஞ்சினம் பலவே
பெற்றனம் யாமே மற்றதன் பயனே''[2]

''வாழி ஆதன் வாழி அவினி
வேந்துபகை தணிக யாண்டுபலநந்துக
எனவோட்டோளே யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்

தோன்றுவதுபோல நினைத்தபோதெல்லாம் பெறுதற்கியலாது பலகாலம் இடையிட்டு இடையிட்டுப் பெறுமாறு அமைந்த களவொழுக்கக் காலத்து மிகவும் வேட்கையைத் தாங்கிப் பொறுத்திருந்தீர்போலும். அதனை நினைந்து யான் இப்போது வருந்துகிறேன்.

1. பொருள்: வேங்கை மரத்திருந்த மயில் இழையணிந்த மடந்தை போலத் தோன்றும் நாடனே! நல்ல மனையிடத்து இவளை மணம் செய்யும் இந்த நாளில் இவள் கூந்தலில் மலர் சூட்டினாய்; இனிய செயலே செய்தாய் எந்தையே நீ நெடிது வாழ்க.

2. பொருள்: நெஞ்சமும் சொல்லும் கொடியவாகத் தாயானவள் தலைவியைச் சினக்க யாம் சூளுரைத்த தலைவனைக் காப்பாயாக என்று தெய்வம் மறைந்துறையும் குன்றத்தில் பிறர் அறியாதபடி மறைந்து அத் தெய்வத்தை வணங்கினேம். அதன் பயனை இன்று நீ வரைந்தெய்தியமையால் பெற்றேம்.

தண்துறை ஊரன் வரைக
எந்தையுங் கொடுக்க என வேட்டேமே''[1]
(ஐங்குறு-6)

''திண்தேர் நள்ளி கானத் தண்டர்
பல்ஆ பயந்த நெய்யில் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
எழுகலத் தேந்தினுஞ் சிறிதென்தோழி
பெருந்தோள் நெகிழ் சூழ்ந்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே[2]
(குறுந்-210)

எனவரும்.

சீருடைப் பெருப்பொருள் வைத்தவழி மறப்பினும் என்பது– சீருடைய பெரும் பொருளாவது இற்கிழமை. அதனைத் தலைமகண் மாட்டு வைத்தவிடத்து அவளை மறந்து ஒழுகினவழியும் என்றவாறு.

அஃதாவது அறத்தினானாதல் பொருளினானாதல் அவனுக்காகிய இசையுங்கூத்தும் முதலியவற்றான் அத்திறம்[3] மறத்தல். அவ்வழியுந் தோழிகூற்று நிகழும்.

உதாரணம்

''பொங்குதிரைபொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்

---

1. பொருள்: தலைவ! என் தாய் (தலைவி) நின்னை எதிர்பட்ட அன்றே நீ வரைந்து கொண்டதாக நினைத்து ஆதனவினி வாழ்க. பகைதணிக; அவன் வாழ்நாள் நீடுக என் மனையற மாண்புகள் விரும்பினாள். யாம் ஊரன் இவளை விரைந்து வரைக; வரைவு வேண்டிவரின் எந்தையரும் கொடுக்க என விரும்பினேம்.

2. பொருள்: தலைவ! நீ என் தோழியின் பெருந்தோளைப் பிரிந்ததனால் இளைத்த துன்பத்தைப் போக்குதற்கு நின் வரவின் புதுமை கண்டு முன்னறிவிப்பாகக் கரைந்து கூவிய காக்கைக்கு யாம்இடும் பலியானது, நள்ளியென்பானின் கானத்தில் வாடும் இடையரின் பசுக்கள் தந்த நெய்யுடன், தொண்டியூர் முழுதும் விளைந்த வெண்ணெல் வெண்சோற்றை ஏழு கலத்தில் ஏந்தி நாளும் இட்டாலும் மிகச் சிறிதாகுமே யன்றி அதன் உதவிக்கு ஈடாகாது.

3. அத்திறம்–தலைவியின் இல்லறவுரிமை.

பல்கால் அலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும்பூசல்
இரைதேர் நாரை யெய்திய விடுக்குந்
துறைகெழு மாந்தை அன்ன இவள்நலம்
பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய
உழையிற் போகா தளிப்பினுஞ்சிறிய
நெகிழ்ந்த கவின்நலங் கொல்லோ மகிழ்ந்தோர்
கட்களி செருக்கத் தன்ன
காமங் கொல்லிவள் கண்பசந்ததுவே''[1]

(நற்றிணை-35)

எனவரும்.

அடங்கா வொழுக்கத்தவன் வயினழிந்தோளை மடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும் என்பது—அடங்காவொழுக்கத்தையுடைய[2] தலைவன்மாட்டு மனன் அழிந்தோளை[3] யடங்கக் காட்டுதற்கு[4] ஏதுவான பொருட் பக்கத்தினும் கூற்று நிகழும் என்றவாறு.

---

1. பொருள்: தலைவ! கடற்கரையிடத்து நாவற்கனி வீழ்ந்ததாக அதைத் தம் இனம் எனக்கருதி வண்டுகள் மொய்க்க அவற்றை நாவற்பழங்கள் என எண்ணி நண்டு வந்து கவ்வ அதனின் மீளமுடியாமல் வண்டுகள் ஒலிக்க இரைதேடி அங்குவந்த நாரை அவற்றை விடுவிக்கும்படியான துறை பொருந்திய மாந்தை என்றும் ஊர் போன்ற தலைவியின் நலம் களவுக்காலத்தும் இப்படித்தான் பொலிவிழந்திருந்தது. நீ களவுக் காலத்தில் இவளை விட்டு நீங்காது அருள் செய்யினும் இவள் கண் பசந்து காட்டியதற்குக் காரணம் சிறிது முயக்கம் நெகிழ்ந்ததால் நலம் குறைந்த காரணமா? அல்லது கட்குடியர்க்குக் கள்மயக்கம் நீங்கின் அக்கள்ளிடத்து விருப்பம் போலக் கூடிச் சிறிது நீங்கிய காலத்து மீளவும் கூட்டத்து எழுந்த வேட்கை காரணமா? இரண்டும் இல்லை. பிரிவே காரணம். அவ்வாறே இன்றும் நின் பிரிவே இவளை வாட்டியது. நீ வந்தவுடன் நீங்கியது. யான் ஆற்றியதாகக் கூறுவது எற்றுக்கு?
2. அடங்கா ஒழுக்கமாவது பரத்தமையொழுக்கம்.
3. அழிதலாவது பரத்தைமையை எண்ணி நெஞ்சு வருந்துதல்.
4. அடங்கக் காட்டுதற்பொருளாவது தலைவன் பரத்தைமையைப் பொறுத்துக் கொண்டு அடக்கமுடையளாய் மனையறம் மேற்கொள்ளுதற்கேற்றவாறு கூறப்படும் செய்திகள்.

உதாரணம்

''இது மற்றெவனோ தோழி துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப் பெருமை யீன்றணிக்காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாற்செய் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே''[1]

(குறுந்-181)

எனவரும்.

பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும் என்பது*-பிழைத்து வந்திருந்த தலைமகனை நெருங்கித் தலையளிக்குமாறு கூறித் தலைமகன் மாட்டாக்கிக் கொடுத்தற் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''பகலில் தோன்றும் பல்கதிர்த்தீயின்
ஆம்பலஞ் செறுவில் தேன்ஊர் அன்ன
இவள்நலம் புலம்பப் பிரிய
அனைநலமுடையளோ மகிழ்ந நின்பெண்டே''[2]

(ஐங்குறு-57)

''கேட்டிசின் வாழியோ மகிழ்ந ஆற்றுற
மையல் நெஞ்சிற் கெவ்வந்தீர
நினக்கு மருந்தாகிய யான்இனி
இவட்கு மருந்தன்மை நோம்என் நெஞ்சே''[3]

(ஐங்குறு-59)

எனவரும்.

---

1 பொருள்: பக்கம் 122ல் காண்க.

* பிழைத்து......கொடுத்தற் கண்ணும்-பரத்தையிற் பிரிதலாகிய பிழையைச் செய்து வந்திருந்த தலைவனையடைந்து தலைவியை அளிக்குமாறு கூறித் தலைமகளை அவனிடத்து உரிமையாக்கிக் கொடுக்குமிடத்தும்.

2. பொருள்: ஞாயிறு போலும் ஒளிக்கதிருடைய வேள்வித் தீயும் ஆம்பல் மலரும் வயலும் உடைய தேனூர் போலும் இவள் அழகு தனிமையடைந்து வருந்த நீ பிரியும்படியான அத்தகைய அழகையும் உடையளாவளோ நின் பெண்டு.

3. பொருள்: மகிழ்ந! கேள். வாழி. களவுக் காலத்து ஏற்பட்ட இடையீடுகளால் நீ ஆற்றாயாய் இருந்த

வணங்கிய மொழியான் வணங்கற் கண்ணும் என்பது தாழ்ந்த இயல்பினையுடைய மொழியினான்[1] வணங்குதற் கண்ணும் என்பது—தாழ்ந்த இயல்பினையுடைய மொழியினான் வணங்குதற் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''ஒண்துறைப் பொய்கை வராஅல் இனம்இரியுந்
தண்துறையூர தகுவதோ-ஒண்தொடியைப்
பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை
ஊராண்மை யாக்கிக் கொளல்!''[2]

(ஐந்திணையெழு-52)

எனவரும்.

புறம்படு விளையாட்டுப்[3] புல்லிய புகர்ச்சியும் என்பது-புறப்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய புகர்ச்சிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. புகர்ச்சி[4]-குற்றம்.

உதாரணம்

''காலைஎழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர் மரீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென

போது யான் நினக்கு மருந்தாய் இருந்தேன். ஆனால் இக் கற்புக் காலத்தில் நின் பிரிவால் வருந்தும் இவளுக்கு யான் மருந்தாக இருக்க வல்லேன் அல்லேன். அதனால் என் நெஞ்சம் நோம். நீயே ஆற்றிப் பிரிக.

1. தாழ்ந்த இயல்பினையுடைய மொழி-பணிந்த மொழி.
2. பொருள்: தெள்ளிய துறையிடத்துப் பொய்கையில் வரால் மீனினம் உகளும் தண்துறை யூர! ஒண் தொடியைப் பாராமல் மனையைவிட்டு நீங்கி அச்சேரிப் பரத்தையரிடம் செல்வதை ஊராண்மை (உதவி செய்யும் ஆண்மை)யாகக் கொள்வது நினக்குத் தக்கதோ? கூறுக (இப்படித் தோழி கூறியது அவன் வணங்கியபோது ஏற்றுக்கொண்ட நிலையில் என்க.)
3. புறம்படு விளையாட்டு-புறத்தே போந்து பரத்தைய ரொடு ஆடிய விளையாட்டு.
4. புகர்-குற்றம், புகர்ச்சி-குற்றப்படுதல்.

மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே[1]
(குறுந்-45)

எனவரும்,

சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும் என்பது-இருவர்க்குஞ் சிறந்த புதல்வனை நினையாமையால் தலைமகன் தனிமையுறுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''நெடுநா ஒண்மணி கடிமனை இரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்
பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெளியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மையாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த
நள்ளென் கங்குற் கள்வன்போல
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே''[2]
(நற்றிணை-40)

எனவரும்.

''நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீன் உணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண அமையுங்கொல் என்றோழி
வண்ணந் தாவென்கந் தொடுத்து''[3]
(ஐந்திணையெழு-14)

---

1. பொருள்: நாட்காலையே எழுந்து சிறிய தேரைச் செலுத்துதற்கேற்பப் பண்ணி பரத்தையரைத் தழுவப் போன ஊரன் (தலைவன்) பெரிதும் விளக்கமுடையன் ஆனான் என்றால் மகப் பயந்த தாயாகிய தலைவி மனம் சுழல்வதானாள். அதாவது அவனை மறாது ஏற்பாளானாள். அதனால் உயர்குடிப் பிறத்தல் என்றும் துன்பந் தருவதேயாகும்.
2. பொருள்: பக்கம் 52ல் காண்க.
3. பொருள்: நுண்ணிய நூலானியன்ற வலையினால் பரதவர் பிடித்துவந்த பலமீன் உணங்கலைப் புட்கள்

எனவும் வரும்.

மாணலந் தாவென வகுத்தற் கண்ணும் என்பது-நீ கொண்ட நலத்தினைத் தந்துபோ எனக் கூறுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

''விட்டென விடுக்குநாள் வருகஅதுநீ
நொந்தனையாயின் தந்தனை சென்மோ
குன்றத்தன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்குந்
தண்கடற் சேர்ப்பநீ உண்டவென் நலனே''[1]

(குறுந்-236)

எனவரும்.

பேணா வொழுக்கம்[2] நாணிய பொருளினும் என்பது-தலைமகளைப் பேணாத ஒழுக்கத்தினால் தலைமகன் நாணிய பொருண்மைக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''யாயாகியளே மாஅயோளே
மடைமாண் செப்பில் தமியவைகிய
பெய்யாப் பூவின் மெய்சாயினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி யோதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக்கரப்பாடும்மே''.[3] (குறுந்-9)

எனவரும்.

கவரும் துறைவனை நம் கண்ணாற் காண இயையுமோ? காண இயையின் அவனை வளைத்து நீ கவர்ந்து சென்ற எம் அழகைத் தருக என்பேம்.

1. பொருள்: கடல்போற் குவிந்த மணல் அடைகரையில் ஓங்கிய புன்னையின் தாழ்ந்த கிளையில் புதிய நாரை வந்து தங்கும்படியான கடற்கரைச் சேர்ப்பனே! இவளைக் கைவிட்டாய் எனச் சொல்லுமாறு நீ நீங்கும் நாள் வரினும் வருக. அந்நாள் வருகையை நீ விரும்பினாயாயின் முன்உண்ட என் நலனை எனக்குத் தந்து செல்வாயாக.
2. பேணா ஒழுக்கம்-தலைவனின் பரத்தமையொழுக்கம்.
3. பொருள்: தலைவ! மாயோள் செப்பில் தனித்து வைக்கப்பட்ட அணியப்படாத பூவைப்போல் வாடினாள்.

சூள்வயிற் றிறத்தாற் சோர்வுகண்டழியினும் என்பது-தலைமகன் சூளுற்ற சூளுறவிற் சோர்வு[1] கண்டு அழிந்து கூறினும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''எம்மணங்கினவே மகிழ்ந முன்றில்
நனைமுது புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொடுற்ற சூளே''[2] (குறுந்-53)

என வரும்.

பெரியோரொழுக்கம் பெரிதெனக் கிளந்து பெறுதகை யில்லாப் பிழைப்பினும் என்பது-பெரியோரொழுக்கம் பெரிதாகு மெனச் சொல்லித் தலைமகளைப் பெறுந்தகைமையில்லாத பிழைப்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு*.

உதாரணம்

''வெள்ளி விழுத்தொடிமென் கரும்புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின் வயின் நுடங்க

நெய்தற் பூக்கள் கழியிடத்து அலைகள் வந்து மிகுந் தோறும் மூழ்கி வெளிப்படுதல் மகளிர் குளத்தில் மூழ்கும்போது அவர் கண்கள் மறைந்து வெளிப்படுவது போலத் தோன்றும்படியான நீர்த்துறைவன் தனக்குச் செய்த கொடுமையை நமக்கு வெட்கப்பட்டு மறைத்துப் பேசா நிற்பள். (இப்படிக் கூறித் தலைவனை அவள் பால் செல்க என்றாள்)

1. சோர்வு-கடைப்பிடியாது விடுதல்.

2. பொருள்: மகிழ்ந! அரும்பு முதிர்ந்த புன்கமரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் வெண்மணற் பரப்பானது வேலன் வெறியாடு களத்தில் நெற்பொரிகள் சிதறினாற் போக இருக்கக்கூடிய இடு மணல் உடைய எம் ஊரின் பெரிய நீர்த்துறையிடத்து எம் நேரிய சந்துடைய மு கையைப் பற்றிச் சூரர மகளிரைக் காட்டிச் செய் சூளுறவானது நீர் அதன்படி நடவாமையின் எம்மை வருத்தியது.

* தலைமகளைப் பெறும் தகைமையில்லாத பரத்தமைச் செயலாகிய பிழைப்பில் பெரியோர் நடத்தை பெரிது எனச் சொல்லுமிடத்தும் எனக் கருத்துக் கொள்க.

மீன்சினை அன்ன வெண்மணற்குவை இக்
காஞ்சி நீழல் தமர் வளம்பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி விறந்த
இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை யுறங்குந் தண்துறை ஊர
விழையா உள்ளம் விழையுமாயினும்
என்றும் கேட்டவை தோட்டியாக மீட்டாங்கு
அறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றகவுடைமை நோக்கி மற்றதன்
பின்னாகும்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோர் ஒழுக்கம் அதனால்
அரிய பெரியோர்த் தெரியுங்காலை
நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண்டுளதோ இவ் உலகத்தானே''[1]

(அகம்-286)

எனவரும்.

அவ்வழி யுறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும் என்பது—மேற்சொல்லிய வாற்றாற் தலைவன் பிழைத்தவழி அவனாலுறுந்தகைமை யில்லாத புலவியின் மூழ்கிய தலைவி பக்கத்தாளாகி நின்று அதனைக் கெடுத்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''மானோக்கி நீயழ நீத்தவன் ஆனாது
நாணிலனாயின் நலிதந்தவன்வயின்
ஊடுவதென்னோவினி''. (கலித்-87)

---

1. பொருள்: காஞ்சி மர நிழலில் ஊர்ச் சிறுமிகள் கரும் பாகிய உலக்கையால் முத்துபோலும் வெண்மணல் குவியலைத் தம்மவர் வளம்பாடிக் குற்றும்போது சிரற் பறவைகள் இறால்களை உண்டு மருதமரக் கிளைகளில் உறங்கும் ஊரனே விரும்பலாகாத அறனல்லனவற்றை உள்ளம் விரும்பினாலும் பெரியோர்வாய்க் கேட்ட நல்லனவாகிய தோட்டியைக் கொண்டு உள்ளமாகிய யானையினை மீட்டு அறம்பொருள் தவறாமல் ஆய்ந்து தன் தகவுக்கு ஏற்றன பார்த்து அதன் பின்னரே நினைத்ததை முடித்தல் செய்தல் வேண்டும். அதுவே பெரியோர் ஒழுகலாறாம். ஆராயுங்கால் நும்போன் றோர் மாட்டும் இத்தகைய பொய்யொடு கலந்த சொற் கள் தோன்றின்மெய் என்பது எங்குளதாகும்?

எனவரும்.

உணர்ப்புவயின் வாரா வூடலுற்றோள்வயி னுணர்த்தல் வேண்டிய கிழவோன்பானின்று தான் வெகுண்டாக்கிய தகுதிக் கண்ணும் என்பது-தலைவன் ஊடல் தீர்க்கவும் அதன் வழி வாராத ஊடலுற்றோள்வயின் அவ்வூடலைத் தீர்த்தல் வேண்டிய தலைவன் பக்கத்தாளாகி நின்று தலைவனை வெகுண்டு[1] நின்றுண்டாக்கிய தகுதிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

> ''உப்பமைந் தற்றால் புலவி அது சிறிது
> மிக்கற்றால் நீளவிடல்''[2] (குறள்–1302)

எனவரும்.

அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எளிமைக் காலத் திரக்கத்தானும் என்பது-தாரியராகக் களவு காலத்துத் தமது பெருமையைக் காட்டிய தாம் எளியராகிய கற்புக் காலத்து. இது இரக்கத்தின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

பெருமை காட்டிய விரக்கம் எனக்கூட்டுக. இதனாற் சொல்லியது வாளாதே இரங்குதலன்றிப் பண்டு இவ்வாறு செய்தனை இப்பொழுதிவ்வாறு செய்யா நின்றனை எனத் தமதுயர்ச்சியுந் தலைமகனது நிலையின்மையுந் தோற்ற இரங்குதலாயிற்று. இதுவும் புலவி மாத்திரமன்றித் தலைவனீங்கி யொழுகும் ஒழுக்கம் மிக்கவழிக் கூறுவதெனக் கொள்க.

உதாரணம்

> ''வேம்பின் பைங்காயென்தோழிதரினே
> தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
> பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
> தைஇத்திங்கள் தண்ணிய தரினும்
> வெய்ய உவர்க்கு மென்றனிர்
> ஐய வற்றால் அன்பின் பாலே''[3] (குறுந்-196)

எனவரும்.

---

1. வெகுண்டு—தலைவியை வெகுண்டுகூறி உண்டாக்கிய தகுதி—தலைவன் மாட்டு அன்புண்டாக்கிய தகுதி.
2. பொருள்: புணர்ச்சி முன்நிகழும் ஊடல் உணவுக்கு அளவாக உப்பு அமைந்ததுபோல் ஆகும். அவ்வுப்பு சிறிது அதிகப் பட்டமைபோல் ஆகும் ஊடல் நீட்டிப்பது.
3. பொருள்: ஐய! வேப்பங்காயை என் தோழி களவுக் காலத்தில் தந்தபோது அதனைத் தேன்பொருந்திய

பாணர் கூத்தர் விறலியரென்றிவர் பேணிச் சொல்லிய குறைவினை யெதிரும் என்பது–பாணராயினுங் கூத்தராயினும் விறலியராயினும் இத்தன்மையர் விரும்பிச் சொல்லிய குறையுறும் வினைக்கெதிராகவுங் கூற்று நிகழும் என்றவாறு,

குறையுறும் வினை குறைவினை யெனஒட்டிற்று. அது சொல்லிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று.

உதாரணம்

''புலைமகன் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல்பாண செல்லினிப் பரியல்
பகல் எஞ்சேரிக் காணின்
அகல் வயலூரன் நாணவும் பெறுமே''[1]

எனவும்,

''அணிநிறக் கெண்டை ஆடிடம் பார்த்து
மணிநிறச் சிறுசிரல் மயங்குநம் பொய்கை
விரைமலி காற்றா விருந்தினம் யாமென
முழவிமிழ் முன்றில் முகம்புணர் சேர்த்தி
எண்ணிக்கூறிய இயல்பினின் வழாஅது
பண்ணுக்கொளப் புகுவ கணித்தோபாண
செவிநிறை உவகையேம் ஆக
இது நாணன்மைக் குரைத்துச் சென்றீமே''

எனவும் வரும்.

நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர் காத்த தன்வயிற் கண்நின்று பெயர்ப்பினும் என்பது-தலைவியை நீத்த கிழவனை அவளுடன் நிகழுமாறு படுத்தல் வேண்டி அவனைப் புறங்காத்த தன்னிடத்துற்ற தலைமகனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

பூங்கட்டி என்று உண்டனிர். இக்காலத்தில் பாரி பறம்பு மலையில் உள்ள குவிர்ந்த சுனைத்தண்ணீரைத் தை மாதத்தில் தந்தாலும் வெப்பமாகவுளது; மேலும் உவர்க்கிறது என்று கூறுகின்றீர். இதுதான் அன்பின் பகுதியோ?

1. பொருள்: பாண! நீ புலைமகன் ஆதலின் நின்வாய் வரும்மொழி பொய்யாம். இங்கு நில்லாதே. செல்க; இனி அவர்பால் பரிந்து பேசாதே. பகலிலே எம் சேரிப்பக்கம் நீவரின் வயலூரன் நாணவும் நேரும்.

உதாரணம்

''மனையுறு கோழிக் குறுங்காற்பேடை
வேலி வெருகினமாலை யுற்றெனப்
புகுமிடன் அறியாது தொகுபுடன் குழீஇப்
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந்தாஅங்
கின்னா திசைக்கும் அம்பலொடு
வாரல். வாழியர் ஐயஎம் தெருவே''[1]

(குறுந்-139)

எனவரும்.

பிரியுங்காலை யெதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்பட என்பது-தலைவன் சேயிடைப் பிரியுங் காலத்து முன்னின்று சொல்லிய மரபுடை மாறுபாடும்[2] என்றவாறு.

எனவே அகத்திணையியலுட் கூறப்பட்டது களவு காலத்தை நோக்கிக் கூறுதலான் அயலிதாகக் கூறப்பெறும் என்பதூஉம் இவ்வோத்தினுட் செலவழுங்குவித்தல் பார்ப்பார்க் குரித்தாகக் கூறுதலானுங் கற்பினுட் பிரிவு மரபு கெடாமற் கூறவேண்டும் என்பதூஉம் கருத்து. மரபினாற் கூறுதலாவது குற்றேவல் முறைமையாற் கூறுதல். பிரிவை அகத்திணை யியலுள் வைத்ததனான், ஆண்டுக்கூறிய கிளவி இருவகைக் கைகோளிற்கும் பெரும்பான்மை யொக்கும் எனக் கொள்க. உடன்போக்கும் ஒக்குமோ எனின் கற்பினுள் உடன்போக்கு உலகியலுட் பெரும்பான்மையென்று கொள்க. இக்கூற்றுத் தலைமகன் மாட்டுந் தலைமகள் மாட்டுமாம்.

உதாரணம்

''அறன்இன்றி அயல்தூற்றும் அம்பலை நாணியும்
வறனீந்தி நீசெல்லும் நீளிடை நினைப்பவும்

---

1. பொருள்: ஐய! வீட்டுப் பெட்டைக் கோழியானது மாலைப்பொழுது வந்ததாகத் தம்மையிரையாக வுண்ணக் காட்டுப்பூனைக் கூட்டம் வேலிப்பக்கம் வர அஞ்சிப் புகலிடம் காணாமல் தன் குஞ்சுகளை யாவும் ஒன்றுசேரக் கூடும் பொருட்டு அழைக்கும் ஒலிபோலக் கேட்பதற்கு இன்னாத பழிச் சொற்களோடு எம்வீட்டுத் தெருப்பக்கம் வாரற்க.

2. மரபுடைமாறுபாடு-மரபால் அதாவது குற்றேவல் முறையால் கூறும் எதிர்மறுத்துக் கூறும் கூற்று. அதாவது செலவழுங்குவித்தல்,

இறைநில்லா வளையோட இதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயொடு புல்லென்று நுதலிவள்
விறல்நலம் விளர்ப்பவும் வினைவேட்டாய் கேளினி''

''உடையிவள் உயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளா யாயினை
கடைஇய ஆற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடுவாடிய அணிமலர் தகைப்பன''.

''வல்லைநீ துறப்பாயேல் வகைவாடும் இவளென
ஒல்கியாம் உரைப்பவும் உணர்ந்தீயா யாயினை
செல்லு நீராற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லு விட்டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன''

''பிணிபுநீவிடல் சூழிற் பிறழ்தரும் இவளெனப்
பணிபுவந் திரப்பவும் பல சூழ்வாயாயினை
துணிபு நீ செலக்கண்ட ஆற்றிடை அம்மரத்து
அணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன;

எனவாங்கு,

''யாநிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை
ஆனாதிவள்போல் அருள்வந்தவை காட்டி
மேல்நின்று மெய்கூறுங் கேளிர்போல் நீசெல்லு,ங்
கானந் தகைப்ப செலவு''*

(கலித்—3)

எனவரும்.

---

* கருத்து: தலைவ! அறனில்லாமல் அயல்மகளிர் தூற்றும் அம்பலுக்கு நாணியும், நீ பிரிந்து செல்லும் நீண்ட வழியின் கொடுமை நினைந்தும் வளையல் கழல, கண்ணீர் மல்க, தாங்கரிய நோயொடு பொலிவற்ற நுதலுடைய இவள் தன் அழகு கெடவும் வினை விரும்பியவனே இப்பொழுது கேள்.

நின்னையுயிராகவுடைய இவள் நீ விட்டுப் பிரியின் உயிர்வாழாள் எனக் கூறி யாம் பிரிவைத் தவிர் என இரப்பவும் எம் சொற்களைக் கொள்ளவில்லை. ஆனால் நீ கடந்து செல்லும் வழியில் உள்ள நீர் அற்ற வறிய சுனையில் இலையொடு வாடிய அழகிய மலர்களே தடுப்பனவாகும்.

விரைவில் நீ இவளைப் பிரிவாயானால் இவள் அழகு வாடும் என்று நினக்கு ஏற்கும் வகையில் யாம் இரப்ப

இனித் தலைமகட்குக் கூறியதற்குச் செய்யுள்.

''அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிறிதாற்றிப்
பின் இருந்து வாழ்வார் பலர்''[1]
(குறள்-1160)

எனவரும்.

பிறவும் வகைபட வந்த கிளவியெல்லாந் தோழிக்குரிய வென்மனார் புலவர் என்பது-மேற் சொல்லப்பட்ட கிளவியன்றிப் பிறவாய்ப்பாட்டாற் பாகுபடவந்த கிளவி யெல்லாந் தோழிக்குரிய என்றுரைப்பர் புலவர் என்றவாறு.

வகைபட வந்த கிளவியாவன-பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறுதலும், பருவங் கண்டு கூறுதலும், வற்புறுத்தலும் நிமித்தங் கண்டு கூறுதலும், வந்தான் எனக் கூறுதலும், இந்நிகரனவும் மேற்சொல்லப்பட்ட இடங்களிற் கூற்று வேறுபாடாகி வருவனவுங் கொள்க. அவற்றிற் களவுக்குங் கற்பிற்கும் பொதுவாகி வருவன அகத்திணையியலுட் கொள்க, கற்பிற்கே உரித்தாகி வருவன ஈண்டுக் கொள்க.

உதாரணம்

''ஆமா சிலைக்கும் அணிவரை ஆரிடை
ஏமாண் சிலையார்க்கினமா இரிந்தோடும்
தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் வரக்கண்டு
வாய்மாண்டபல்லி படும்''[2] (கைந்நிலை 18)

வும் எம் சொற்களைக் கொள்ளவில்லை. ஆனால் நீ' செல்லும்வழியில் உள்ள மரங்கள் வாட அவற்றைத் தழுவிப் படரும் பூங்கொடிகள் தடுப்பனவாகும். இவளைச் சேர்ந்திருந்தலை விடுவதை நீ நினைவாயாயின் இவள் இறந்துபடும் என யாம் பணிந்து இரப்பவும் பிரியவே பலவும் சூழ்வாய். ஆனால் நீ செல்லும் வழியில் மரத்தில் உள்ள வாடிய தளிர்கள் தடுப்பனவாகும். என்று யான் நினக்குச் சொல்லவும் அவற்றை நெஞ்சிற் கொள்ளாய் ஆயினாய். இனி இவளைப் பார்ப்பார்க்கு இரக்கம் வருவது போலவே கண்டார் இரங்கத்தக்கனவாகிய மரம் கொடி தளிர் முதலியனவற்றைக் காட்டி உண்மை கூறும் கேளிரைப் போல நீ செல்லும் செலவைத் தடுப்பன நீ செல்லும் காடுகளாம்.

1. பொருள்: பிரிதற்கரிய பிரிவைத் தாங்கி, அதனால் வரும் துன்பத்தையும் நீக்கிப் பொறுத்திருந்து இவ்வளவு நிகழ்ந்த பின்னும் உயிரோடு வாழ்வார் உலகில் பலர்.

2. பொருள் : காட்டுப் பசுவானது சிலைக்கும் அழகிய மலையின் அரிய வழியில் அம்பு விளங்கும் வில்லுடைய

இது நிமித்தங் கண்டு கூறியது.

> ''வாளியங் குண்கண் வையெயிற்றோயே
> ஞாலங் காவலர் வந்தனர்
> காலை அன்ன மாலை முந்துறுத்தே''[1]

இது தலைவன் வந்தமை கூறியது. பிறவும் அன்ன.

நச்

இது, முறையானே தோழிக்குரிய கூற்றுக் கூறுகின்றது.

இதன் பொருள்: பெறற்கு அரும் பெரும் பொருள் முடிந்த பின் வந்த தெறற்கு அரும் மரபிற் சிறப்பின் கண்ணும்: பெறற்கு அரும்பெரும் பொருள் முடிந்தபின் வந்த-தலைவனுந் தலைவியுந் தோழியும் பெறுதற்கரிதென நினைத்த பெரிய பொருளாகிய வதுவை வேள்விச் சடங்கான் முடிந்த பின்பு தோன்றிய தெறற்கு அரும் மரபிற் சிறப்பின் கண்ணும்-தனது தெறுதற்கரிய மரபு காரணத்தால் தலைவன் தன்னைச் சிறப்பித்துக் கூறுமிடத்தும் தோழிகூற்று நிகழும்.

தலைவியையுந் தலைவனையும் வழிபாடாற்றுதலின் 'தெறற் கருமரபின்' என்றார். தெறுதல்-அழன்று நோக்குதல். சிறப்பு, இவளை நீ ஆற்றுவித்தலின் எம் உயிர் தாங்கினேம் என்றாற் போல்வன. அவை எம்பெருமானே அரிதாற்றியதல்லது யான் ஆற்றுவித்தது உண்டோ வென்றானும் நின் அருளால் இவள் ஆற்றியதல்லது யான் ஆற்றுவித்தது உண்டோவென்றானுங் கூறுவனவாம்.

> ''அயிரை பரந்த வந்தண் பழனத்
> தேந்தெழின் மலரத் தூம்புடைத் திரடா
> ளாம்பல் குறுநர் நீர்வேட்டாங்கிவ
> ளிடைமுலைக் கிடந்து நடுங்கலானீர்
> தொழுது காண் பிறையிற் றோன்றி யாநுமக்

வேட்டுவர்க்கு மான் கூட்டம் ஓடும்படியான மாண் பில்லாத வெம்சுரத்தே சென்ற தலைவர் மீண்டு வருவதைப் பார்த்து வாய்ச் சொல்லால் மாட்சிப்படும் பல்லியாதை ஒலியெழுப்பும்.

1. பொருள்: ஒளி விளங்கும் மையுண்ட கண்ணும் கூரிய எயிறும் உடையவளே! காலைப் பகல் போலும் மாலை நேரத்துக்கு முன்னதாகவே உலக காவலராகிய நம் தலைவர் வந்தார்.

கரியமாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோயானே''[1]

(குறுந்-178)

இதனுண் முலையிடைக்கிடந்தும் பனிக்கின்ற நீர் அரியமாகிய காலத்து எங்ஙனம் ஆற்றினீரென யான் நோவாநின்றேன். இங்ஙனம் அருமை செய்தலால் தேற்றுதற்கு உரியேனாகிய என்னைச் சிறப்பித்துக் கூறல் ஆகாது என்றவாறு காண்க.

''பொங்குதிரை பொருத வார்மணலடைகரைப்
புன்காய் நாவற் புகர்புற விருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்காலலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பினிமிரும் பூச
லிரைதேர் நாரை யெய்திய விடுக்குந்
துறைகெழு மரந்தை யன்ன விவணலம்
பண்டுமிற்றே கண்டிசிற் றெய்ய
வுழையிற் போகா தளிப்பினுஞ்சிறிய
நெகிழ்ந்த கவிழ்நலங் கொள்ளே மகிழ்ந்தோர்
கட்களி செருக்கத் தன்ன
காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே''[2]

(நற்றிணை-35)

இதனுள் தலைவி கனியாகவும், தும்பி தோழியாகவும் அலவன் தன்மேல் தவறிழைக்குந் தமராகவும், தலைவன் இரைதேர் நாரையாகவும் உள்ளுறையுவமங் கொள்வுழித் தலைவி பொருட்டு யாய்க்கு அஞ்சி யொழுகினேன் நீ காத்ததன்றி யான் ஆற்றுவித்தது உளதோவெனத் தலைவன் சிறப்பிற்கு எதிர் தோழி கூறியவாறு காண்க. 'பண்டும் இற்றே' என்றது பண்டையின் மிகவும் வருந்தினாளென்றாள். இவன் கண் நீண்டு பசந்தது. களவின்கண் நீங்காது அளியா நிற்கவுஞ் சிறிது கெட்ட அழகின் மிகுதியோ, கள்ளுண்டார்க்குக் கள் அறாஉங் காலத்துப் பிறந்த வேறுபாடு போலுங் காம வேறுபாடோ, அவ்விரண்டும் அல்லவே, இஃது ஓர் அமளிக் கண் துயிலப் பெற்றும் வேதவிதி பற்றிக் கூட்டம் நிகழாமையாற் பிறந்த மிக்க வேறுபாடன்றோ?

---

1. பொருள் : பக்கம் 142ல் காண்க.
2. பொருள்: பக்கம் 145ல் காண்க,

இதனை இவளே ஆற்றுவதன்றி யான் ஆற்றுவிக்குமா றென்னை என்றாளென்க.

அற்றம் அழிவு உரைப்பினும் - களவுக் காலத்துப்பட்ட வருத்தம் நீங்கினமை கூறினார்.

''எக்கர் ஞாழலிகந்துபடு பெருஞ்சினை
வீயினிது கமழுந்துறைவனை
நீயினிது முயங்குமதி காதலோயே''

(ஐங்குறு-148)

''எரிமருள் வேங்கையிருந்த தோகை
யிழையணி மடந்தையிற்றோன்று நாட
வினிது செய்தனையாலுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந்தோயே''[1]

(ஐங்குறு-264)

அற்றம் இல்லாக் கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும் களவொழுக்கம் புலப்பட ஒழுகுதல் இல்லாத தலைவியைத் தலைவன் வரைந்து கோடல் குறித்துப் பரவிய தெய்வம் அதனை முடித்தலின் அப்பரவுக்கடன் கொடுத்தல் வேண்டு மெனத் தலைவற்குக் கூறும் இடத்தும்.

உதாரணம்

''நெஞ்சொடு மொழிகடுத் தஞ்சுவரநோக்குந்
தாயவட்டெறுவது தீர்க்கவெம் மகனெச்
சிறந்த தெய்வத்து மறையுறை குன்ற
மறைந்து நின்றிறைஞ்சினம் பலவே
பெற்றனம் யாமே மற்றதன் பயனே''[2]

''கிழவோற் சுட்டிய தெய்வக் கடம்' என்று பாடம் ஓதி

''வாழியாதன் வாழியவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
வெனவேட்டோளோ யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை யூரன் வரைக
வெந்தையுங் கொடுக்க வெனவேட்டேமே''.[3]

(ஐங்குறு-6)

1. பொருள்: பக்கம் 143ல் காண்க.
2. பொருள்: பக்கம் 143ல் காண்க.
3. பொருள்: பக்கம் 144ல் காண்க.

என்பது உதாரணங் காட்டுவாரும் உளர். சீருடைப் பெரும பொருள் வைத்தவழி மறப்பினும்-தலைமையுடைய இல்லறத்தைத் தலைவி மாட்டு வைத்த காலத்துத் தலைவன் அறஞ் செயற்கும் பொருள் செயற்கும் இசையுங் கூத்துமாகிய இன்பம் நுகர்தற்குந் தலைவியை மறந்து ஒழுகினும்.

உதாரணம்

''கரும்பினெந்திரங் களிற்றெதிர் பிளிறுந்
தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவ
ணல்லணி நயந்துநீ துறத்தலிற்
பல்லோரறியப் பசந்தன்று நுதலே''[1]

(ஐங்குறு-55)

இதனுள் துறத்தலினெனப் பொதுவாகக் கூறினாள். அற முதலியவற்றைக் கருதுதலின்.

அடங்கா ஒழுக்கத்து அவன் வயின் அழிந்தோளை அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்-புறத்து ஒழுக்கத்தை உடையனாகிய தலைவன் மாட்டு மனம் வேறுபட்ட தலைவியைப் புறத்து ஒழுக்கமின்றி நின்மேல் அவர் அன்புடையரென அவ்வேறுபாடு நீங்க நெருங்கிக் கூறுதலையுடைத்தாகிய பொருளின் கண்ணும்.

உதாரணம்

''செந்நெற் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்
றண்ணக மண்ணளைச் செல்லுமூரற்
கெல்வளை நெகிழச்சாஅ
யல்லலுழப்ப தெவன் கொலன்னாய்''[2]

(ஐங்குறு-27)

இதன் உள்ளுறையாற் பொருளுணர்க.

---

1. பொருள்: கரும்பு ஆலை களிறுபோலப் பிளிற்றும்படியான தேர் உடைய வண்மை மிக்க அரசனது தேனூர் போலும் இவள் நல்ல அழகை நீ விரும்பிக்கூடிய பின் பிரிதலின் பலரும் அறியுமாறு இவள் நுதல் பசந்து காட்டியது.
2. பொருள்: தோழீ! செந்நெல் வயலில் நண்டானது நெற்கதிர்களைக் கவர்ந்து கொண்டு மண்வளையிற் புகும்படியான ஊரன் பொருட்டு ஒளி வளையல் சரிய மெலிந்து துன்பம் உழப்பது ஏன்? நண்டு நெற்கதிர் கொண்டு வளைபுகுதல்போல் தலைவன் தன் செய்வினை முடித்து வருவன் என்பது உள்ளுறை. இதனால் புறத்தொழுக்கம் இல்லை என்பது பெறப்படும்.

பிழைத்து வந்து இருந்த கிழவனை நெருங்கி இழைத்து ஆங்கு ஆக்கிக் கொடுத்தற் கண்ணும்-பரத்தையர் மனைக்கண் தங்கி வந்து அகனகர் புகுதாது புறத்திருந்த தலைவனை மிகக் கழறிச் சில மொழிகளைக்கூறி இதனானே தலைவி மனத்தின் கண் ஊடல் நீங்குந் தன்மை உளதாக்கிக் கூட்டும் இடத்தும்.

உதாரணம்

''நகை நன்றம்மதானேயிறை மிசை
மாரிச்சுதையி னீர்ம்புறத்தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச்சேவல்
வெள்ளிவெண்டோடன்ன கயல்குறித்துக்
கன்னா ருவகைக் கலிமகிழுழவர்
காஞ்சியங் குறுந்தறி குத்தித் தீஞ்சுவை
மென்கழைக் கரும்பின்ன் பலமிடைந்து
பெருஞ்செய் நெல்லின் பாசவல்பொத்தி
வருத்திக் கொண்டவல்வாய்க் கொடுஞ்சிறை
மீதழி கடுநீர் நோக்கிப் பைப்பயப்
பார்வலிருக்கும் பயங்கேழூர
யாமது பேணின்றோ விலமே நீநின்
பண்ணமை நல்யாழ்ப்பாணனொடு விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணதிர்ந்தியம்ப
மகிழ்துணைச் சுற்றமொடு மட்டுமாந்தி
யெம்மனை வாராயாகி முன்னா
ளும்மனைச் சேர்ந்த ஞான்றையம்மனைக்
குறுந்தொடி மடந்தை யுவந்தனனெடுந்தே
ரிழையணி யானைப் பழையன்மாறன்
மாடமலி மறுகிற் கூடலாங்கண்
வெள்ளத்தானையொடு வேறுபுலத்திறுத்த
கிள்ளி வளவனல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபலவெளவி
யேதின் மன்னரூர்கொளக்
கோதைமார்ப னுவகையிற் பெரிதே''[1] (அகம் 346)

1. பொருள்: கள்ளுண்ட உழவர்கள் நெல்வயற் பள்ளங்களில் நீர் நிறையுமாறு காஞ்சி மரத்துண்டுகளை நட்டுக் கருப்பங்கழிகளை இடையிடைக் கட்டி அமைத்த கரையினைக் கடந்து வழியும் நீரில் வரக்கூடிய வெள்ளிய மீன்களைக் கவரவேண்டி வெண்கொக்கானது பார்த்துக் கொண்டிருக்கும்படியான ஊரனே! முன்னாளிலே,

''கேட்டிசின் வாழியோ மகிழ்நவாற்றுற
மைய நெஞ்சிற் கெவ்வந்தீர
நினக்கு மருந்தாகிய யானினி
யிவட்கு மருந்தன்மை நோமெனெஞ்சே''[1]

(ஐங்-59)

வணங்கியன் மொழியான் வணங்கற் கண்ணும்-தாழும் இயல் பினையுடைய சொற்களால் தோழி தாழ்ந்து நிற்கும் நிலைமைக் கண்ணும்.

உதாரணம்

''உண்டுறைப் பொய்கைவராஅலினை மிரியுந்
தண்டுறை யூரதகுவகொ-லொண்டிலையப்
பாராய் மனைத்துறந்தச் சேரிச்செல்வதனை
யூராண்மை யாக்கிக்கொளல்'' (ஐந்-எழு-54)

எனவரும்.

''பகலிற்றோன்றும் பல்கதிர்த்தீயி
னாம்பலஞ் செறுவிற்றேனூரன்ன
விலணலம் புலம்பப்பிரிய
வனைநலமுடையளோ மகிழ்ந நின்பெண்டே''[2]

(ஐங்-57)

இதுவும் அதன்பாற்படும்.

புறம்படு விளையாட்டும் புல்லிய புகற்சியும்-பரத்தை யரிடத்தே உண்டாம் விளையாட்டினைத் தலைவன் பொருந்திய மனமகிழ்ச்சிக் கண்ணும்.

நின்பாணனொடு முரசு முழங்கச் சுற்றத்துடன் கள் ளுண்டு எம் மனைக்கு வாராமல் நின் பரத்தைமனைக் குச் சென்று தங்கியபோது, குறுந்தொடி மடந்தை யாகிய பரத்தை கொண்ட உவகையானது, கிள்ளிவளவ னானவன் கூடலில் பழையன் மாறனைப் போரிற் சாய்த்துக் கொண்ட வெற்றியைக் கண்டு கோதை மார்பன் என்னும் சேரவேந்தன் கொண்ட உவகை யினும் பெரிதாகும். யாங்கள் அதைப் பொருட்படுத்தி யதும் இல்லை. அப்படியிருக்க நீ யாரையும் யான் அறியேன் என்றது மிக்க நகையை உண்டாக்குவதாகும்.

1. பொருள்: மகிழ்ந! கேட்பாயாக. நின் மயங்கிய நெஞ் சத்தின் வருத்தம்கீர ஆற்றுமாறு நினக்கு மருந்தாய் இருந்த யான் இனி இவளை ஆற்றும் மருந்தாய் இல்லா மைக்கு என் நெஞ்சம் வருந்தும்.

2. பொருள்: பக்கம் 146ல் காண்க.

விளையாட்டாவது-யாறுங்குளனுங்காவும் ஆடிப்பதியிகந்து நுகர்தலாம்.

''பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக்
கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி
யாம்பன் மெல்லடை கிழியக்குவளைக்
கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்
தரில்படு வள்ளை யாய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்கவாராது
கயிறடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கய முழக்கும் பூக்கேழூர
வருபுனல் வையை வார்மண லகன்றுறைத்
திருமரு தோங்கிய விரிமலர்க்காவி
னறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை யயர்ந்தனை யென்பவலரே
கொய்சுவற் புரவிக்கொடித்தேர்ச் செழிய
னாலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழுதிதியன்
போர்வல் லியானைப் பொலம்பூணெழினி
நாரரி நறவினெருமையூரன்
றேங்கமழ கலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோவேண் மானியறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்கவொருபகன்
முரைசொடு வெண்குடையகப் படுத்துரைசெலக்
கொன்றுகளம் வேட்டஞான்றை
வென்றிகொள் வீரரார்ப்பினும்பெரிதே''[1]

(அகம் 36)

---

1. பொருள்: வரால் மீனானது, தூண்டிலின் இரும்பில் உள்ள இரையை விழுங்கி அதில் அகப்பட்டு ஆம்பல் இலை கிழியவும் குவளை மலர்சிதையவும் பாய்ந்தெழுந்து வள்ளைக் கொடியை மயக்கி தூண்டில் வேட்டுவன் இழுக்கவும் வாராமல் கயிறு பூட்டியிழுக்கப் படும் கதமிக்க எருதுபோல மதம்மிக்கு நாட்காலையில் குளத்தைக் கலக்கும்படியான ஊரனே! வையைத் துறையில் மலர்க்காவில் குறுந்தொடி மடந்தையாகிய பரத்தையொடு மணம் அயர்த்தனையென்பர். அவ்வல ரானது தலையானங்கானம் என்னும் ஊரில் செழிய னானவன், சேரலன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் எழுவர் பலம் அடங்கக் கொன்று வெற்றி கொண்டகாலத்து வீரர் ஆர்த்த ஆர்ப்பரிப்பினும் பெரி தாகியது.

இதனுள் கொள்வாரார்ப்பினும் பெரிதெனவே நாண் நீங்கிப் புலப்படுத்தலை மகிழ்ந்தவாறு காண்க.

சிறந்த புதல்வனை நேராது புலம்பினும்-யாரினுஞ் சிறந்த புதல்வனை வாயிலாகக் கொண்டு சென்றுழி அவற்குந் தலைவி வாயில் நேராமல் தலைவன் வருந்தினும்.

உதாரணம்

''பொன்னொடு குயின்ற பன்மணித்தாலித்
தன்மார்பு நனைப்பத்தன்றலையுமிஃதோ
மணித்தகைச் சாந்தம் புலர்தொறுநனைப்பக்
காணாயாகலோ கொடிதே கடிமனைச்
சேணிகந்தொதுங்கு மாணிழையரிவை
நீயிவணேராவாயிற்கு நாணுந்
தந்தையொடுவருவோன்போல
மைந்தனொடு புகுந்த மகிழ்நன்மார்பே''

மாண்நலம் தா என வகுத்தற் கண்ணும்-இவள் இழந்த மாட்சிமைப்பட்ட நலத்தைத் தந்து இகப்பினும் இகப்பாயெனத் தலைவனை வேறுபடுத்தற்கண்ணும்.

உதாரணம்

''யாரை யெலுவ யாரே நீயெமக்
கியாரையு மல்லை நொதுமலாளனை
யனைத்தாற் கொண்க வெம்மிடையே நினைப்பில்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க்குட்டுவன்
வேந்தடுமமயத்து முரசதிர்ந்தன்ன
வோங்கற் புணரி பாய்ந்தாடு மகளி
ரவணைந்திடுபல்பூ மரீஇயாங்கு
வாபுலம் புகுதரு பேரிசைமாலைக்
கடல்கெழு மரந்தையன்னவெம்
வேட்டனையல்லையா லலந்தந்து செனமே''[1]

(நற்-395)

எனவரும்.

---

1. பொருள்: எலுவ! யார்நீ! நீ எமக்கு என்ன உறவு? யாதோர் உறவும் இல்லை; நொதுமலன் நீ. அவ்வளவே நம்மிடையேயுள்ள உறவு. குட்டுவனின் போரில் எழும் முரசு போல ஒலியுண்டாக மலைச் சுனையில் பாய்ந்து

''நுண்ஞான் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீனுணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண விழையுங் கொலென்றோழி
வண்ணந்தாவென்கந்தொடுத்து''[1]

(ஐந்—எழு-66)

இதுவும் அதன்பாற்படும்.

பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்—பரத்தை தலைவியைப் பேணாது ஒழுகிய ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின் கண்ணும்—தலைவற்குத் தோழி கூற்று நிகழ்த்தும்.

''பொய்கை நீர்நாய்ப் புலவு நாறிரும் போத்து
வாளை நாளிரை தேருமூர
நாணினென் பெரும யானே பாணன்
மல்லடு மார்பின் வலியுறவருந்தி
யெதிர்தலைக் கொண்ட வாரியப் பொருந
னிறைந்திரன் முழவுத்தோள் கையகத்தொழிந்த
திறள்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையனாணியாங்கு மறையினன்
மெல்லவந்து நல்ல கூறி
மையீரோதி மடவோ யானுநின்
சேரியேனே யயலிலாட்டியே
னுங்கையாகுவெனினக் கெனத்தன்கைத்
தொடுமணிமெல் விரறண் ணெனத்தைவர
நுதலுங் கூந்தலு நீவிப்
பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே''[2]

(அகம்-386)

இதனுள், யான் நினக்குத் தோழியாவேனெனப் பரத்தை நீவிய பேணா ஒழுக்கத்திற்குத் தலைவி நாணியது கண்டுதான் நாணினேனென்று தலைவற்குத் தோழி கூறியவாறு காண்க.

ஆடும் மகளிர் சூடிக்கழித்த பல பூக்களை மருவிப் பசுக்கள் தம் இடம் புகும்படியான மாலைக் காலத்தில் மரந்தையூர் போலும் எம்மை நீ விரும்பி வந்தா யல்லை; அதனால் எம் நலனைத் தந்து செல்லும்.

1. பொருள் : பக்கம் 148-149ல் காண்க.

2. பொருள் : பெரும! நாட்காலையில் நீர்நாய்ப் போத்து வாளையாகிய இரையைத் தேடும் ஊரனே! பகலில் மறைவாக மெல்ல வந்து முகமனுரை கூறி, மடவோய்! யானும் ஊன்சேரியில் உள்ளேன்: அடுத்த வீட்டுக் குரிமையுடையேன்; நினக்குத் தங்கையாவேன். என்று

இன்னுந் தலைவனது பேணா ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின் கண்ணுமெனவுங் கூறுக.

''யாயாகியளே மாஅயோளே
மடைமாண் செப்பிற் றமியவைகிய
பொய்யாப் பூவின் மெய்சாயினளே
பாசடைநிவந்த கணைக்காலெய்த
லினமீனிருங்கழியோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முணாணிக் கரப்பாடும்மே''[1]

(குறுந்-9)

எனவரும். இவை இரண்டும் பொருள்.

சூள்நயத் திறத்தாற் சோர்வு கண்டு அழியினும்-நயத்திறத் தாற் சூள் சோர்வு கண்டு அழியினும், கூடுதல் வேட்கைக் கூறு பாட்டால் தான் சூளுறக் கருதிய சூளுறவினது பொய்ம்மையைக் கருதித் தலைவி வருந்தினும், தோழிக்குத் கூற்று நிகழும்.

உதாரணம்

''பகல்கொள் விளக்கோடிரா நாளறியா
வென்வேற் சோழ ராமூரன்னவிவ
ளலம்பெறு சுடர் நுதறேம்ப
லெவன்பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே''[2]

(ஐங்-56)

இதனுள், இவள் நுதல் தேம்பும்படி நீ தேற்றிய சொல்லெனவே சோர்வு கண்டு அழிந்தாளென்பது உணர்ந்தும் இப்

கூறி, தன் கையின் மோதிரமணிந்த விரலால் தன்னெனப் பொருந்த நெற்றியையுங் கூந்தலையும் தடவிப் பெயர்ந்த நின் பரத்தையைக் கண்டு பாணன் என்பானது கையகத்து ஆரியப் பொருநன் அகப்பட்டு அவனது முழவுத் தோள்கள் வலிமை வேறாகி உடல் மட்டும் கிடந்த நிலையைக் கணையன் என்பான் கண்டு நாணியதுபோல நாணினேன்.

1. பொருள்: பக்கம் 149-150ல் காண்க.

2 பொருள்: பகல்போலும் விளக்கொளியால் இரவு என்பதையறியாத சோழரது ஆமூர்போல் வாளாகிய இவளது அழகு பெறும் ஒளியுடைய நுதல் வாடும்படி யாதலால் நீ தேற்றும் மொழிகள் இவட்கு என்ன பயன் செய்யும்?

பொய்ச்சூள் நினக்கு என்ன பயனைத் தருமெனத் தோழி தலைவனை நோக்கிக் கூறியவாறு காண்க.

"கோடுற நிவந்த" (அகம்-266) என்னும் மணிமிடை பவளத்தைத் தோழி கூற்றாகக் காட்டுவாரும் உளர்.

பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து பெறுதகை இல்லாப் பிழைப்பினும், பெரியோர் பெறுதகை இல்லாக் கிளந்து-நன் மக்கள் பெறுந்தகைமை இல்லறமாயிருக்குமென் றுஞ் சொல்லி, பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து பிழைப்பினும்—நன்மக்கள் ஒழுகும் ஒழுக்கம் பெரிதாயிருக்கு மென்றுஞ் சொல்லித்தான் தலைவனை வழிபாடு தப்பினும்; தோழிக்குக் கூற்று நிகழும்.

பெரியோரையுங் கிளந்தென்பதனையும் இரண்டிடத்துங் கூட்டுக.

உதாரணம்

"வெள்ளி விழுத்தொடி மென்கருப்புலக்கை
வள்ளி நுண்ணிடைவயின் வயினுடங்க
மீன்சினையன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழற்றமர்வளம்பாடி
யூர்க்குறு மகளிர் குறுவழிவிறந்த
வராஅலருந்திய சிறுசிரன் மருதின்
றாழ்சினை யுறங்குந் தண்டுறையூர
விழையாவுள்ளம் விழைவதாயினு
மென்றுங், கேட்டவை தோட்டியாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றகவுடைமை நோக்கி மற்றதன்
பின்னாகும்மே முன்னியது முடித்த
லனைய பெரியோரொழுக்கமதனா
லரிய பெரியோர்த்தெருங் காலை
நும்மோரன்னோர் மாட்டு மின்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண்டுளதோவிவ்வுலகத்தானே"[1]

(அகம்-286)

இதனுள் 'அறன்' என்றது இல்லறத்தை. 'தற்றகவுடைமை நோக்கி' என்றது தன்னால் அவ்வறனும் பொருளுந் தகுதிப்

1. பொருள்: பக்கம் 151ல் காண்க.

பாடுடையவாந் தன்மையைநோக்கி என்றவாறாம். 'முன்னியது' என்றது புறத்தொழுக்கத்தை. 'பெரியோரொழுக்கமனைய' என்றது பெரியோர் ஒழுக்கம் பெரியவென்றவாறு.

இது, முன்னர் நிகழ்ந்த பொய்ச்சூள் பற்றி நும்மனோர் மாட்டும் இன்ன பொய்ச்சூள் பிறக்குமாயின் இவ்வுலகத்து மெய்ச்சூள் இனி இன்றாம். அதனாற் பெரியோரைத் தமது ஒழுக்கத்தைத் தேருங்காலை அரியவாயிருந்தனவெனத் தலைவனை நோக்கித் தோழி கூறலின் அவனை வழிபாடு த்ப்பினாளாயிற்று. உள்ளுறையுவமம் இதற்கு ஏற்குமாறுணர்க.

அவ்வயின் உறுதகை இல்லாப் புலவியுண் மூழ்கி;; கிழவோள் பால் நின்று கெடுத்தற் கண்ணும்–தலைவன் அங்ஙனம் பிறழ்ந்த இடத்து அவன் சென்று சேருந் தகைமை இல்லாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவி பக்கத்தாளாய் நின்று அவள் புலவியைத் தீர்த்தற் கண்ணும்.

உதாரணம்

''மானோக்கி நீயழ நீத்தவனானாது
நாணில னாயினலிதந் தவன்வயி
னூடுதலென்னோ வினி''[1] (கலி-87)

''உப்பமைந்தற்றாற் புலவியது சிறிது
மிக்கற்றா னீளவிடல்''[2] (குறள்-1302)

''காலையெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர் மரீஇய சென்ற
மல்லலூர னெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன்றாயே
தெறுவதம்மவித் திணைப் பிறத்தல்வே''[3]
(குறுந்–45)

---

1. பொருள்: மான்போலும் கண்ணுடைய தலைவியே! நீயழும்படி நின்னைக் கைவிட்ட தலைவன் பரத்தமையில் அமைந்து நாணம் இன்றியிருப்பானாயின் மேலே அவனிடத்து வருத்தம் தந்து ஊடுதலிற் பயன் யாது?
2. பொருள்: பக்கம் 152ல் காண்க.
3. பொருள்: விடியலில் துயிலெழுந்து தேரைச் சரிசெய்து அணிகலன்களையுடைய பரத்தையரை மருவச் சென்ற ஊரன் மிகவும் விளக்கம் உடையவனாயின் அதற்காகச் சிறுவன் தாய் மயங்கும் உயர்ந்த குடியிற்பிறத்தல் துன்புறுத்துவதேயாகும்.

உணர்ப்பு வயின் வாரா ஊடல் உற்றோள்வயின் உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கியத் தகுதிக் கண்ணும். உணர்ப்பு வயின் வாரா ஊடல் உற்றோள் வயின் தலைவன் தெளிவிக்கப்படுந் தன்மைக்கணில்லாத ஊடல் மிகுத்தோளிடத்து.

உணர்ப்புப் 'புணர்ப்புப்' போல் நின்றது.

உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால் நின்று-ஊடல் தீர்த்தலை விரும்பிய தலைவன்வயத்தாளாய் நின்று, தான் வெகுண்டு ஆக்கியத் தகுதிக் கண்ணும்-தான் தலைவியைக் கழறி அவள் சீற்றம் போந்தன்மை உண்டாக்கிய தகுதிக் கண்ணும்.

உதாரணம்

''துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
யரிமலராம்பன் மேய்ந்த நெறிமருப்
பீர்ந்த ணெருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்கு சேற்றள்ளற் றுஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
பரூஉக்கொடிப் பகன்றை சூடிமூதூர்ப்
போர்செறி மள்ளரிற் புகுதருமூரன்
றேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோ
ளூர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ விலனெனவறிதுநீ
புலத்தலோம்புமதி மனைகெழு மடந்தை
யதுபுலந் துறைதல் வல்லியோரே
செய்யோணீங்கச் சிலபதங் கொழித்துத்
தாமட்டுண்டுதமியராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுநராகுத லறிந்து
மறியா ரம்மவஃ துடலுமோரே''[1]

(அகம்-316)

இது, தோழி தலைவியை வெகுண்டு ஆக்கியவாறு காண்க.

---

1. பொருள்: தோழீ! பொய்கை ஆம்பலை மேய்ந்த எருமைப் போத்த ்னது இரவெல்லாம் சேற்றுப் பள்ளத்தில் தூங்கிக் காலையில் தன் காலில் மிதிபட்டு வரால் மீன் அழியப் புறப்பட்டுப் பகன்றைக் கொடியைச் சூடிப் போர்வீரர் போலப்புகும் ஊரனான தலைவன், மகளிர் தேரில் தரவந்த பரத்தையர் கூட்டத்தை விலக்குதல்

அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எண்மைக் காலத்து இரக்கத்தானும்; எண்மைக் காலத்து-தாம் எளியராகிய கற்புக் காலத்திலே, அருமைக் காலத்துப் பெருமை காட்டிய இரக்கத் தானும் - களவுக் காலத்துத் தமது பெருமை உணர்த்திய வருத் தத்தின் கண்ணும்.

உதாரணம்

''வேம்பின் பைங்கா யென்றோழிதரினே
தேம்பூங் கட்டி யென்றனிரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனை தெண்ணீர்
தைஇத் திங்கட்டண்ணிய தரினும்
வெய்யவுவர்க்குமென்றனி
ரையவற்றாலன்பின் பாலே',[1]

(குறுந்–196)

பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்-பாணருங் கூத்தரும் விறலியருமென்று சொல்லுகின்ற இம்மூவரும், பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்-விரும்பிக் கூறிய குறையுறும் வினைக்கு எதிராகவும், கூற்று நிகழும்.

'எதிரும்' என்றது அவர் வாயில் வேண்டியவழித் தோழி அவர்க்கு மறுத்தலும் மறுத்தாள்போல நேர்தலுங் கூறியதாம்.

உதாரணம்

''புலைமக னாதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினப் பரியல்
பகலெஞ்சேரி காணி
வகல்வய லூர னாணவும் பெறுமே''[2].

இது, பாணர்க்கு வாயின் மறுத்தது.

செய்யானாய் உள்ளான் எனத் தலைவர்மீது புலந்து மொழிதல் பொருந்துமோ? பரத்தமையை வெறுத்து வந்து தங்குதலில் வல்லராகிய தலைவர், திருமகள் நீங்குதலால் சில அரிசியைக் கொழித்து தாமே சமைத்து உண்டு தனித்திருந்து புதல்வன் பாலில்லாமல் சுருங்கிய முலையைச் சுவைக்கப் பார்த்து இங்கேயே தங்கினார் ஆதலை அறிந்து வைத்தும் அவர் பரத் தமைக்காக மாறுபடுவோர் அறியாமையுடையரே யாவார்.

1. பொருள்: பக்கம் 152-153ல் காண்க.
2. பொருள்: பக்கம் 153ல் காண்க.

''விளக்கினன்ன சுடர்விடுத்தாமரைக்
களிற்றுச் செவியன்ன பாசடைதயங்க
வண்டுறை மகளிரிரியக் குண்டுநீர்
வாளையுகளுமூரற்கு நாளை
மகட்கொடையெதிர்ந்த மறங்கெழு பெண்டே
தொலைந்த நாவினுலைந்த குறுமொழி
யுடன்பட்டோரேத் தாயரோடழிபுடன்
சொல்லலை கொல்லோ நீயேவல்லைக்
கன்றுபெறு வல்சிப்பாணன் கையதை
வள்ளுயிர்த் தண்ணுமை போல
வுள்யாது மில்லதோர் பொய்ப்படு சொல்லே''[1]

(நற்றிணை-310)

இது, விறலிக்கு வாயின்மறுத்தது. மறுப்பாள் போல் நேர்வ வந்துழிக் காண்க.

நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக் காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்; நீத்தகிழவனை-பரத்தையிற் பிரிந்து தலைவியைக் கைவிட்ட தலைவனை, நிகழுமாறு படீஇ-தானொழுகும் இல்லறத்தே படுத்தல் வேண்டி, காத்த தன்மையில்—புறத்தொழுக்கிற் பயனின்மை கூறிக் காத்த தன்மையினாலே, கண் இன்று பெயர்ப்பினும்—கண்ணோட்டமின்றி நீக்கினும்.

உதாரணம்

''மனையுறை கோழிக்குறுங்காற்பேடை
வேலி வெருகின்மாலையுற்றெனப்
புகுமிடனறியாது தொகுபுடன்குழீஇப்

1. பொருள்: விளக்கொளி போலும் தாமரை மலருடைய கொடியின் களிற்றுச்செவிபோலும் இலைகள் அலையும் படியுள்ள நீர்த்துறையில் ஆடும் மகளிர் ஓடும்படி ஆழமான நீரில் வாளைமீன் துள்ளும்படியான ஊரனுக்கு நாளையும் ஒரு பரத்தையை விருந்தாகச் சேர்க்கும் விறலிப் பெண்ணே! மெய் நீங்கிய நாவால் கூறும் குறுமொழியை ஏற்று உண்மையாராய்ந்த பரத்தையர் தாயரிடம், கன்று உரித்துண்ணும் பாணனது கையில் உள்ள வேற்றிடம் உடைய தண்ணுமை போன்ற உள்ளீடு இல்லாத பொய்ம்மொழிகளைக் கூறவில்லையோ. கூறி அவரையும் யாருடனாவது கூட்டுக. அத்தகைய பொய்ம்மொழிகளை இங்கு வந்து கூறற்க.

பைதற்பிள்ளைக் கிளைபயிர்ந்தாஅங்
கின்னாதிசைக்குமம்பலொடு
வாரல்வாழிய ரையவெந்தெருவே''[1]

(குறுந்-139)

இதனுள் 'அம்பலொடுவாரல்' எனவே, பன்னாள் நீத்தமையுங் கண்ணின்று பெயர்த்தமையுங் கூறிற்று. கோழி போலத் தாயர் மகளிரைத் தழீஇக் கொண்டாரென்றலிற் புறம் போயும் பயமின்றெனக் காத்த தன்மை கூறிற்று.

பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப் படப்பிறவும்; பிரியுங்காலை எதிர் நின்று சாற்றிய-தலைவன் கற்பிடத்துப் பிரியுங்கால் தெய்வத் தன்மையின்றி முன்னின்று வெளிப்படக் கூறிய, மரபுடை எதிரும் உளப்பட பிறவும், முறை யுடைத்தாகிய எதிர்காலமும் இறந்த காலமும் உட்படப் பிற வற்றுக் கண்ணும்.

'எதிரும்' என்ற உம்மை எச்சவும்மை. 'பிற' ஆவன தலைவன் வரவுமலிந்து கூறுவனவும், வந்த பின்னர் முன்பு நிகழ்ந்தன கூறுவனவும் வற்புறுப்பாள் பருவமன்றெனப் படைத்து மொழிவனவும் தூதுகண்டு கூறுவனவும், தூதுவிடு வனவும், சேணிடைப் பிரிந்தோன் இடைநிலத்துத் தாங்காது இரவின் வந்துழிக் கூறுவனவும், நிமித்தங்காட்டி கூறுவனவும் உடன்சேறலை மறுத்துக் கூறுவனவும் பிறவுமாம்.

''பா அலஞ்செவி'' என்னும் பாலைக்கலி (5)யுள்
''பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள் கொண்டிறக்கு மிவளரும்பெறனுயிரே''[2]

இதனுட் 'புரிந்தனை' என இறப்பும் 'இறக்குமென' எதிரும் மரபில் தப்பாமல் வந்தவாறு காண்க.

''வேனிற்றிங்கள் வெஞ்சுரமிறந்து
செலவயர்ந்தனையாலியே நன்று

1. பொருள் பக்கம் 154ல் காண்க.
2. பொருள்: நெடுந்தகாய்! நீ இவளிடம் பொய்யான அருளைச் செய்தாய். இவளைக் காத்தலைக் கைவிட்டு நீ செல்லும் நாள் எந்நாள்? அந்த நாளிலேயே இவளது பெறலரியவுயிர் போய்விடும்.

நின்னயந் துறைவி கடுஞ்சூற் சிறுவன்
முறுவல் காண்டலி னினிதோ
விறுவரை நாடநீ விரைந்து செய்பொருளே''[1]

இஃது எதிரது நோக்கிற்று. (ஐங்-309)

''புறவணி நாடன் காதன்மடமக
ளொண்ணுதல் பசப்பநீசெலிற் றெண்ணீர்ப்
போதவிழ் தாமரையன்னநின்
காதலம் புதல்வ னழுமினிமுலைக்கே''[2]

(ஐங்குறு-424)

இதுவும் அது. இனிப் 'பிற' வருமாறு.

''பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ
நெடுங்காற் கணந்துள் புலம்பு கொடேள்விளி
சுரஞ்செல் கோடியர் கதுமெனவிசைக்கு
நரம்பொடு கொள்ளுமத்தத் தாங்கட்
கடுங்குரற் பம்பைக் கதநாய்வடுகர்
நெடும் பெருங்குன்ற நீந்தி நம்வயின்
வந்தனர் வாழிதோழிகையதை
செம்பொற் கழறொடிநோக்கு மாமகான்
கவவுக்கொளின் குரல் கேட்டொறும்
அவவுக்கொண் மனத்தேமாகிய நமக்கே''[3]

(நற்-212)

---

1. பொருள்: வரைநாடனே! வேனிற்பருவத்து கொடிய சுரத்தைக் கடந்து பொருள் செயவிரும்பினாய். அப் பொருள் நின்னையே விரும்பும் இவளது முதற்சூலிற் பொருந்திப் பிறந்த சிறுவனின் முறுவலைக் காண்ப தினும் சிறந்ததாமோ?
2. பொருள்: தலைவ! காடுகள் செறிந்த நாடனின் அன்பு மகளது அழகிய நுதல் பசக்கும்படி நீ பிரிந்து சென்றால் தாமரை மலர்போற் சிறந்த நின் புதல்வன் பாலுக்கு அழநேரிடும். (தலைவி யிறப்பள் என்பது குறிப்பு)
3. பொருள்: தோழீ! வேட்டுவன் பார்வைப் பறவை வைத்து விரித்த வலைக்கு அஞ்சி நெடியகாலுடைய 'கணந்துள்' என்னும் பறவை தனிமை கொண்டு கூவும் தெளிந்த ஓசை வயிரியரது கதுமென ஒலிக்கும் யாழ்நரம்போசையொடு கலந்து ஒலிக்கக்கூடிய வழி யிடத்து பம்பையும் கதநாயும் உடைய வடுகர் திரியும் குன்றத்தைக் கடந்து, செம்பொன்தொடி கழலுவதை நோக்கி நம்மகன் நம்மையணைத்தபடியே அழுவதைக்

இது, தலைவிக்கு வரவு மலிந்தது.

''நீலத்தன்ன நீர்பொதி கருவின்
அமர்விசும் பதிர முழங்கியாலியின்
நிலந்தண்ணென்று கானங்குழைப்ப
வினந்தே ருழவரின் குரலியம்ப
மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற்
றிரிமருப்பிரலை பைம்பயிருகள
வார்பெயலுதவிய கார்செய் காலை
நூனெறி நுணங்கிய கானவில்புரவி
கல்லெனக் கறங்குமணி யியம்ப வல்லோன்
வாய்ச் செலவணக்கிய தாப்பரிநெடுந்தே
ரீரியா புறவினியங்குவழி மறப்பத்
தீந்தொடைப் பையுணல் யாழ்செவ்வழி பிறப்ப
விந்நிலை வாராராயிற்றந்நிலை
யெவன் கொல்பாண வுணரத்தி சிற்சிறிதெனக்
கடவுட்கற்பின் மடவோள்கூறச்
செய்வினை யழிந்தமைய னெஞ்சிற்
றுனிகொள் பருவரறீரவந்தோ
யினிது செய்தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருங்கார் கமழும் விரிந்தொலிகதுப்பி
னின்னகை யிளையோள் கவவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே''[1]

(அகம்—314)

கேட்குந் தோறும் அவனிடத்து அவாக்கொள்ளும் மனத்தமாகிய நமக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி நம்மிடம் வந்து சேர்ந்தார்.

1. பொருள்: நீலமணி போலச் சூல்கொண்டு ஆகாயம் அதிர முழங்கி, நீரால் நிலம் குளிர்ந்து காடுதழைப்ப, உழவர் ஆர்ப்பரிக்க பிணையினைத் தழுவி இரலைமான் பயிரில் துள்ள மேகம் மிக்க மழையைத் தந்த கார் காலத்தே, பாணனே! புரவியின் மணி ஒலிக்க பாகன் வாவிச் செல்ல அடக்கி விடப்படும் விரையும் நெடிய தேர்ச் சக்கரம் ஈரமான வழியை அறுக்க, யாழ் செவ் வழியிசை தோற்றுவிக்க இந்த நிலையில் அவர் வாரா ராயின் அவர் நிலை என்னாம்? சிறிதே கூறுக என்று கற்புடைய தலைவி கூறச் செய்யும் தொழிலில் மனம் அழிந்த மயக்கம் அவட்குத்திருமாறு தலைவ! வந்தாய். நன்றே செய்தாய். வாழ்க நின் கண்ணி. கூந்தலும் இனிய நகையும் இளமையும் உடையாள் தழுவ நின் மார்பு மன்னுக.

இது, முன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றாமையும் அது கண்டு தான் கலங்கியவாறுந் தலைவற்குக் கூறியது.

''மடவ மன்ற தடவு நிலைக்கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே''.[1]

(குறுந்-66)

இது, பருவம் அன்றெனப் படைத்து மொழிந்தது.

''எனநீ, தெருமரல்வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித்தூதே''.[2]

(கலி-26)

இது, தூது வந்தமை தலைவிக்குக் கூறியது.

''கைவல் சிறியாழ்ப் பாண நுமரே
செய்த பருவம் வந்து நின்றதுவே
யெம்மி னுணரா ராயினுந் தம்வயிற்
பொய்படு கிளவி நாணலும்
எய்யா ராகுத னோகோ யானே''.[3] (ஐங்குறு-472)

இது, குறித்த பருவத்துத் தலைவன் வாராதவழித் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறியது.

---

1. பொருள்: கற்பாறை விளங்கும் வழியிற் சென்ற காதலர் தாம் மீண்டும் வருவதாகக் கூறிய கார்ப் பருவம் வாராத போதே புதியதாக வந்த மேகத்தைக் கண்டு கொன்றை மரமானவை இணைகளைச் சேர்ந்து கொடியாக மலர்களை விரித்தன. அதனால் அவை மிகவும் மடப்பத்தையுடையனவாம்.
2. பொருள்: தோழி! நம் காதலர் போர் பொரும் வலியுடைய யானையாது போரில் சண்டை செய்து அவர்களது போரில் மேம்பட்ட வென்றியுடையராய் வருவர் எனச் சொல்லி வந்தது அவரவாய் மொழித் தூது. அதனால் நீ வருந்தாதே! வாழி.
3. பொருள்: கையால் இயக்குதலில் வல்ல சிறிய யாழுடைய பாணனே! நம்மவர் குறித்துச் சொன்ன பருவம்வந்து விட்டது. அவர் வந்திலர். எம்மை நினைந்து வாராராயினும் தம்மிடத்துப் பொய்படும் சொல் உண்டாதற்கு நாணவும் அறியாதவராகுதலுக் காக யான் மிக வருந்துவேன்.

தூது விட்டது வந்துழிக் காண்க.

''பதுக்கைத் தாய வொதுக்கருங் கவலைச்
சிறுகண் யானை யுறுபகை நினையா
தியாங்கு வந்தனையோ பூந்தார் மார்ப
வருள்புரி நெஞ்ச முய்த்தர
விருள்பொர நின்ற விரவினானே''

(ஐங்குறு-362)

இது, சேணிடைப்பிரிந்து இரவின்வந்துழிக் கூறியது.

''ஆமா சிலைக்கு மணிவரை யாரிடை
யேமாண் சிலையார்க்கினமா விரிந்தோடுந்
தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் வரக்கண்டு
வாய்மாண்ட பல்லி படும்''.[2]

(கைந்நிலை-18)

இது, நிமித்தங் காட்டிக் கூறியது.

இன்னும் அதனானே நமர் பொருள் வேண்டுமென்றார். அதற்கு யான் அஞ்சினேனெனக் களவின் நிகழ்ந்ததனைக் கற்பில் தலைவிக்குக் கூறுதலுங் கொள்க.

''கன்னவி றோளான் கடிநாள் விலக்குதற்
கென்னை பொருணினைந்தா ரேந்திழாய்—பின்னை
ரமரேற்றுக் கொள்ளுமென்றஞ்சினே னஞ்சார்
நமரேற்றுக் கொள்ளாத ஞான்று''.[3]

இன்னுந் தோழி கூற்றாய்ப் பிறவாற்றான் வருவனவெல்லாம் இதனான் அமைக்க.

---

1. பொருள்: பூந்தார் மார்ப! கற்குவியல்களையுடையதாகிய செல்லுதற்கரிய கவர்த்த வழியில் சிறிய கண்ணையுடைய யானையாகிய பகையைக் கருதாமல் எம்மிடத்து அருள்மிக்க மனது செலுத்த இருட்டு மிகத்தாக்கும் இரவில் எவ்வாறு தந்தாய்!

2. பொருள்: பக்கம் 156-157ல் காண்க.

3. பொருள்: தோழீ! கற்போலும் தோளானாகிய தலைவனுடன் நம் திருமண நாளை விலக்குவதற்காக என்ன காரணம் கருதினரோ தெரியவில்லை. அவர் மறுத்த பின்னர் தலைவரை நமர் ஏற்றுக் கொள்ளாத நாளில் தலைவர் அமர் ஏற்று வருவாரோ என அஞ்சினேன்.

''அன்னை வாழி வேண்டன்னை நம்மூர்ப்
பலர்மடி பொழுதினலமிகச் சாஅய்
நள்ளென வந்த வியறேர்ச்
செல்வக் கொண்கன் செல்வனஃதூரே''

(ஐங்குறு-104)

இது, புதல்வற் பெற்றுழித் தலைவன் மனைக்கட் சென்ற செவிலிக்கு அறத்தொடு நின்று வதுவை கூட்டிய தோழி அவன் ஊர் காட்டிக் கூறியது.

வகைபட வந்த கிளவி எல்லாம் தோழிக்கு உரிய என் மனார்புலவர்-தோழி கூற்றாய்த் தலைவி கூற்றினுள் அடங்குவ நன்றித் தோழிக்கே கூறத்தகும் வேறுபாடு உண்டாக வந்த கிளவிகளெல்லாந் தோழிக்கு உரியவென்று கூறுவர் புலவர் என்றவாறு,

இச்சூத்திரத்துக் கண்ஏழனுருபும் அவ்வுருபுதொக்கு நின்று விரிந்தனவுஞ் செயினென்னும் வினையெச்சமும் உரியவென்னுங் குறிப்புவினை கொண்டன. அவற்றை இன்னவிடத்தும் இன்ன விடத்தும் இன்னது செய்யினும் உரியவென்று ஏற்பித்து முடிக்க.

காமக்கிழத்தி கூற்று

149. **புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்**
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்
பல்வேறு புதல்வர்க் கண்டுநனி யுவப்பினும்
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்
காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையின்
***தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்**
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்
இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து

---

1. பொருள்: அன்னையே! கேள்! வாழி. நம்மூரில் யாரும் துயிலும் பொழுதாகிய நள்ளிருள் பரந்த நடு யாமத்தில் தன்நலம் மெலிந்து வந்த தேருடைய செல்வமுடைய தலைவனுக்குப் புதல்வனின் ஊர் அஃதாகும்.

* பாடம்: தாய் போற் றழீஇக் கழறியம் மனைவியை என்பது நச். பாடம்.

பின்னை[1] வந்த வாயிற் கண்ணும்
மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர்
மிகையெனக்[2] குறித்த கொள்கைக் கண்ணும்
எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர்மேன. (10)

பிற்கால இலக்கண நூல்கள்

நம்பியகப் 105, இல.வி. 473.

குடிபிறந் தோரை வடுப்படுத் துரைத்தலும்
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலுள்
அனையவட் கழறலும் மனைவிக் கமைந்த
ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க் குரிய.

இளம்

என்-எனின் காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடம் உணர்த்திற்று.

(இ-ள்) புல்லுதன் மயக்கும் புலவி முதலாகச் சொல்லப் பட்ட இடத்தினும் அந்நிகரான பிறவிடத்தினும் குறிக்கப்பட்ட கூற்றுக் காமக்கிழத்தியர் மேலன என்றவாறு.

கூற்றென்பது அதிகாரத்தான் வந்தது.

காமக்கிழத்தியராவார் பின் முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர். ஒத்த கிழத்தியரும் இழிந்த கிழத்தியரும் வரையப்பட்டாரும் என.[3] ஒத்த கிழத்தியர்[2] முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல். இழிந்தாராவார்—அந்தணர்க்கு அரச குலத்தினும் வணிக குலத்தினும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசருக்கு ஏனை யிரண்டு குலத்தினுங் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண் குலத்திற் கொடுக்கப் பட்டாரும், வரையப்பட்டார்—செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்துகோடல்.

---

1. பின்னர்
2. மிகைபடக்
3. ஒத்த கிழத்தியர்-குலத்தால் ஒத்த கிழத்தியர்.
இழிந்த கிழத்தியர்—குலத்தால் தலைவன் குலத்தினும் இழிந்த கிழத்தியர். வரையப்பட்டார்-கணிகையருள் மணந்து கொள்ளப்பட்டவர்.

அவர் கன்னியில் வரையப்பட்டாரும் அதன்பின்பு வரையப் பட்டாரும் என இருவகையர்-அவ்விருவரும் உரிமை பூண்டமை யாற் காமக்கிழத்தியர்பாற் பட்டனர். பரத்தையராவார் யாரெனின் அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகு மிளமை யுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார். இவருள்ளும்[1] ஒருவரைப்பற்றி மறுதலைப் பெண் டிரைச் சார்த்திக் கூறுவனவும்[2] காமக்கிழத்தியர் கூற்றின் பாற்படும். இவற்றின் வேறுபாடு அவரவர் கூற்றானறிக. இச்சூத்திரத்திற் காமக்கிழத்தியென ஓதாது 'கிழத்தியர்' என ஓதுதலானும் பலவகையார் என்பது கொள்க.

புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணும் என்பது—புல்லுதலைக் கலக்கும் புலவி மாட்டுங் காமக்கிழத்தியர் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது முதிராத புலவி மாத்திரமாகிய புணர்ச்சியை யுடன்பட்ட நெஞ்சத்தளாதல்.[3]

உதாரணம்

* "பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழியிடன் மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறுவாக
முதுமொழி நீராப் புலனாவ் உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ்புனலூர
ஊரன் உரனல்லன் நமக்கென்ன உடன்வாளா
தோளூர் தொக்கிருந்த நின்பெண்டிரின் நேராகிக்
களையாநின் குறுவர்தெங் கதவஞ் சேர்ந்தசைத்தகை
வளையினவாய் விடன்மாலை மகளிரை நோவேமோ

1. இவருள்ளும்—காமக்கிழத்தியர் மூவர் பரத்தையர் ஆகியோருள்ளும்.
2. சார்த்திக் கூறுவன-தலைவனொடு சார்த்தி ஊட லிற் கூறுவன.
3. மிகாத புலவியுண்டு என்ற அளவில் உள்ள நெஞ்சத்தளா தலும் புணர்ச்சியை உடன்பட்ட நெஞ்சத்தளாலுதம்.

* பொருள்: உலக முழுதாளும் அரசர்க்கு அறிவுரை கூறும் அமைச்சர்போல நூலாசிரியர்களால் குற்றமான சொற்களைப் போக்கிய தம் காதுகளாகிய வயலில் ஆன்றோர் அறவுரை நீராக நாவாகிய ஏரால் உழுது புலவர் தம் செய்யுள்களாகிய உணவைக் கூட்டாக வுண்ணும்படியான புனலூரனே!

கேளலன் நமக்கவன் குறுகன்மினென மற்றெம்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்.

''ஊடியார் நலந்தேம்ப ஒடியெறிந்த வர்வயின்
மால்தீர்க்கும் அவன்மார்பென் றெழுந்தசொல்
நோவேமோ
முகைவாய்ந்த முலைபாயக் குழைந்து நின்றார்எள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்''

''சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் வினாயினன்
தேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ
ஒலிகொண்ட சும்மையான் மணமனை குறித்தெம்மில்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்''

என வாங்கு:

''நனவினான் வேறாகுவேளா முயக்கம்
மனைவரிற் பெற்று வந்து மற்றெந்தோள்வாட

நமக்கு உறவல்லன் அவனை முயங்காதீர் என எம் தோளொடு மாறுபட்டு ஆனால் முயங்க நினைந்து, வாடும் நெஞ்சம் உடையே மாகியயாங்கள்.

ஊரன் நமக்குப் பற்றுக்கோடல்லன் என்று, பேசாமல் ஒரூரிடத்துத் திரளும் நின் பரத்தையருள், நீ சொன்ன குறியிடம் வந்து நின்னைக் காணாமல் எம் வீட்டுக் கதவைத் தட்டி அதனால் கைவளையல் உடையும் பரத்தையரை அவர்க்கு நேராக இருந்து வருந்துவோமோ? அதனாற் பயன் என்?

பரத்தையர் முலை தோய்ந்ததால் வாடிய நின் மார் பின் மாலை எம்மை யிகழ அதனால் செப்பில் வாடிய மாலைபோல் உள்ளயாம், ஊடிய இற் பரத்தையரை இடையன் ஒடித்து எறிந்த மரம்போல் ஆக்கிப் பிற பரத்தையர் மயக்கம் தீர்க்கும் அவன் மார்பு என்னும் சொல்லை நோவேமோ? என்ன உரிமையுளது.

நீ புதுமணம் செய்யும் வீடாக எம் வீட்டைப் புகுந்து பொலிக பொலிக என்ற நின் புலைப் பாணனைக் கண்டயாம், தேரோடு திரிந்து சேரிகள்தோறும் நீ புகுந்தவீடு எது என்னும் அப்பாணனைப் பழிப்பேமோ? என்ன உரிமையுளது.

ஐய! நீ வீட்டிற்குவரின் நின்னைப் புணர்ந்து மகிழ்ந்து பிரியின் எம் தோள்வாட, இப்படியானார் இவர் என உணர்ந்தவர் கூறவும் நின்னைப் பெற ஏக்கற்றுப் பெற்றுக் கூடும்போது எமக்கு நின் மார்பு நனவில் கூடி வாழும் நின் எண்ணம் வேறாதலின் நின் முயக்க மானது கனவில் பெற்ற செல்வம் போலாகும்.

இனையரென உணர்ந்தாரென்றேக் கற்றாங்குக்
கனவினா னெய்திய செல்வத் தனையதே
ஐய எமக்கு நின்மார்பு''

இது மூவகையார்க்கும் பொது[1]'' (கலித்-68)

இல்லோர் செய்வினை[2] யிகழ்ச்சிக் கண்ணும் என்பது-மனையகத்தோர் செய்த வினையை யிகழ்ந்து கூறுதற் கண்ணும் என்றவாறு.

பன்மையால்[3] தலைமகனை யிகழ்தலுந் தலைமகளை யிகழ்தலுங் கொள்க.

உதாரணம்

''கழனிமா அத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மிற் பெருமொழி கூறித்தம்மிற்
கையுங் காலும் தூக்கத் தூக்கும்
ஆடியிற் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே'''

(குறுந்-8)

என்றும்

''நன்மரங் குழீஇய நனைமுதிர்சாடிப்
பன்னாள் அரித்த கோஒய் உடைப்பின்
மயங்கு மழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்
பழம்பல் நெல்லின் வேளூர்வாயில்
நறுவிரை தெளிந்த நாறிணர்மாலைப்
பொறிவரி இனவண்டூதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்

---

1. மூவகையார்-காமக் கிழத்தியர் மூவகையார்.
2. இல்லோர் - இல்வாழ்க்கையினராகிய தலைவனும் தலைவியும். செய்வினை—ஊடல் கூடல் முதலியன.
3. பன்மையான்-இல்லோன் என்றோ இல்லோள் என்றோ கூறாது 'இல்லோர்' என்று பன்மையாற் கூறியதனால்
4. பொருள்: வயல் வரம்பில் உள்ள மாமரத்தின் முதிர்ந்து விழும் பழத்தைப் பழனத்தில் உள்ள வாளை மீன் கவ்வும் படியான ஊரனாகவன் எம் வீட்டில் எம்மைப் பெருமைப்படுத்தும் மொழிகளைக் கூறித் தம் வீட்டில் முன் நிற்பார் கையும் காலும் தூக்கத் தானும் தூக்கும் கண்ணாடியிற் றோன்றும் பாவைபோலத் தன் புதல்வனுக்குத் தாயாகிய அவள் விருப்பப்படியே அவள் விரும்பியவற்றைச் செய்து ஒழுகுவானாயினான்.

புனையிருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்
அனையேன் ஆயின் அணங்குக என்என
மனையோள் தேற்று மகிழ்நன் ஆயின்
யார்கொல் வாழிதோழி நெருநல்
தார்பூண் களிற்றில் தலைப்புணை தழீஇ
வதுவை யீரணிப்பொலிந்த நம்மொடு
புதுவை வந்த காவிரிக்
கோடுதோய் மலர்நிறை யாடியோரே''[1]

(அகம்—166)

என்றும் வரும். இவை தலைவனை இகழ்ந்தன.

''அளியர் தாமே மகிழ்நன் பெண்டிர்
தாமவற் பிணித்தல் தேற்றார் காமழச்
செய்தார் அகலம் வவ்வினர் இவரென
எம்பழி அறையுநர் போலத்
தம்பழி தூற்றும் பெரும்பேதையரே''[2]

''எரிஅகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரிஅகைந்தன்ன பொங்குபல சிறுமீன்
வெறிகொள் பாசடையுளீஇயர்பைப்பயப்
பறைதபு முதுசிரல் அசைபு வந்திருக்குந்
துறைகேழ் ஊரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப நாமது

1. பொருள்: கள்மிக்க சாடியில் முகக்குங் கோய் என்னும் கலம் பொத்துதலால் கள்ளானது மழைத் துளிபோலத் தெருவில் துளிக்கும்படியான பலவகை நெற்களை யுடைய வேளூர்வாயிலிடத்து, பூமாலையில் வண்டு மொய்க்காது கழியும்படியான பலிபெறும் தெய்வ மானது நான் நீ ஐயுறும் பரத்தையுடன் புனலாடினே னாயின் என்னை வருத்துவதாக என்று தன் மனைவி யைத் தலைவன் தேற்றுவானாயின், நேற்று திருமண அணியுடன் பொலிந்த நம்மோடு காவிரிப் புது வெள் ளத்தில் களிறுபோலும் தெப்பத்தைத் தழுவி நீராடி யோர் யார் தாம்? அத்தலைவன் அல்லனோ?—இது உழையோர் கேட்கப் பரத்தை கூறியது.

2. பொருள்: மகிழ்நனின் பெண்டிர் இரங்கத்தக்காராவர். அவனை நம்பால் வராமற் பிணிக்கத் தெளியாராய் நாம் அழும்படிச் செய்தாராகிய தலைவன் மார்பை இப்பரத்தையர் வவ்வினர் என்று எம்மைப் பழிதூற்று வார் போலத் தம்பழியையே தூற்றும் பெரிய அறியா மையுடையர்.

செய்யா மாயின் உய்யாமையின்
செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவண்
உலமந்து வருகஞ் சென்மோதோழி
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
வெளிறில கற்பின் மண்டமர் அடுதொறும்
களிறுபெறு வல்சிப் பாணன் எறியுந்
தண்ணுமைக் கண்ணின் அலைஇயர் தன்வயிறே''[1]

(அகம்—106)

இவ்வை பரத்தை கூற்று.

பல்வேறு புதல்வர்க் கண்டு நனியுவப்பினும் என்பது-பல வகைப் புதல்வரைக் கண்டு மிகவும் உவந்து கூறிய வழியுமென்ற வாறு.

உதாரணம்

''நயந்தலை மாறுவார் மாறுக மாறாக்
கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப்
பயந்த எங்கண்ணார யாங்காண நல்கித்
திகழொளி முத்தங் கரும்பாகத்தைஇப்
பவழம் புனைந்த பருதிசுமப்பக்
கவழம் அறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற் பைபயவாங்கி
அரிபுனை புட்டிலினாங் கனீர்த்தீங்கே
வருக எம் பாகமகன்''.

---

1. பொருள்: தோழீ! வயது முதிர்ந்த சிச்சிலிப் பறவை யானது, தாமரை பூத்த வயலில் நெற்பொரியைத் தூவினாற்போல் பிறழும் சிறு மீன்களை உண்ணத் தாமரை இலையில் மெல்ல மெல்ல அசைந்து வந்து தங்கும் படியான நீர்த்துறையுடைய ஊரனாகிய தலைவனது மனைவியானவள், அவனை நம்மொடு சார்த்திப் புலந்து பேசும் என்பர். நாம் அவ்வாறு புலந்து பேசும்படியாக அவனொடு ஒன்றும் செய்யவில்லை யென்றாலும் அவள் கூறும் பழியினின்றும் மீளேம் ஆதலின், கொற்றச் செழியன் போரில் பகையை அடுந்தோறும் களிற்றை உணவாகப் பெறும் பாணனானவன் அடிக்கும் தண்ணுமையின் கண்ணிடம் அதிர்வதுபோல அவள் வயிறு அலையும்படி நாம் நம் வளையல் ஒலிக்கக் கைகளை வீசியவாறு சிறிது பொழுது அவன் இருக்குமிடமாக உலாவி வருவோம். வருவாயாக,

''கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச்சாஅய்ச்செல்லுந்
தளர் நடைகாண்டல் இனிது மற்றின்னாதே
உளமென்னா நுந்தை மாட்டெவ்வம் உழப்பார்
வளைநெகிழ் பியாங் காணுங்கால்''

''ஐய, திங்கட்குழவி வருகவென யான்நின்னை
அம்புலி காட்டல் இனிது மற்றின்னாதே
நல்காது நுந்தை புறமாறப் பட்டவர்
அல்குல்வரி யாங்காணுங் கால்''

''ஐய எம், காதில் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்
போதில்வறுங் கூந்தற் கொள்வதை நின்னையான்
ஏதிலார் கண்சாய நுந்தைவியன் மார்பில்
தாதுதேர் வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் காண்கும்'' (கலித்-80)

எனவரும்.

---

1. பொருள்: மகனே! நின் அன்பை வெறுப்பார் வெறுக்க. அவர்க்கு மாறாக நின் தலையில் மின்னும் முக்காழ் அணியை நின்னைப் பெற்றயாம் காணக்காட்டி முத்துகளை ஓரத்தில் பதித்துப் பவழத்தாலான தட்டில் உள்ள கவளத்தை உண்ணுதலறியாத நின் (மர) யானையைக் கயிற்றாற் கட்டி மெல்ல மெல்லக் காலிற் பூட்டிய செச்சையொலிப்ப வளைத்து வளைத்து இழுத்து என் பக்கமாக வருவாயாக.

மணியார்ப்பச் சாய்ந்துவரும் நின்தளர்நடைகாண்டற் கினியது; ஆனால் யாம் உள்ளேம் என்பதை நினையாத நின் தந்தையிடம் மயங்கத் துன்புறுவார் வளையல் நெகிழ்வதையாம் காணும் காட்சி இன்னாதாகும்.

மகனே! அழகிய நோக்கினையாய் அத்தத்தா என்னும் நின் மழலைச் சொல் கேட்க இனிதாகும். நின் தந்தையிடம் சாய்ந்து சாய்ந்து துன்புறுவார் நோய் காணும் காட்சி இன்னாதாகும்.

மகனே! நினக்கு நிலவே வருக என்று அம்புலி காட்டுவது இனிது. ஆனால் நின்தந்தை புறமாறப்பட்ட பரத்தையரது அங்குற் பசப்புவரி காணும் காட்சி இன்னாது.

மகனே! எங்காதணியை வாங்கிச் சென்றுவருந்தோறும் நின்னை எம் கூந்தலில் (தலையில்) வைத்துக் கொள்வது; நின் தந்தையின் மார்பு மாலையைப் பறித்து ஆடுதற்காக. அதனால் நின் தந்தை கண்டு பரத்தையர் பால் அன்பு குறைவான்.

மறையின் வந்த மனையோள்[1] செய்வினை பொறியின்று பெருகிய பருவரற் கண்ணும் என்பது-களவின் வருகின்ற மனையோள் செய்வினை பொறையின்றிப் பெருகிய துன்பத்தின் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

"வாளை வாளிற் பிறழநாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்குங்
கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த
வயல்வெள் ஆம்பல் உருவநெறித்தழை
ஐதக லல்குல் அணிபெறத்தைஇ
விழவிற் செலீஇயர் வேண்டுமன்னோ
யாணர் ஊரன் காணுநன் ஆயின்
வரையாமையோ அரிதே வரையின்
வரைபோல் யானை வாய்மொழி முடியன்
வரைவேய் புரையும் நற்றோள்
அளிய தோழி தொலையுந பலவே"[2]

(நற்றிணை-390)

இது, பரத்தையராகி வந்த காமக் கிழத்தியர் கூற்று.

காதற் சோர்விற் கடப்பாட்டாண்மையிற் றாய் போற் கழறித்தழீஇய மனைவியை காய்வின்றவன்வயிற் பொருத்தற்

---

1. மறையின் வந்த மனையோள்–களவொழுக்கம் ஒழுகிப் பின் மணந்து வந்து இல்லறம் நிகழ்த்தும் தலைவி. அவள் செய்வினையாவது தலைவனை வயப்படுத்தி மணந்தது.

2. பொருள்: தோழீ! கைவண்மையுடைய கிள்ளிவளவனது வாளை மீன் வாள்போற் பிறழவும் அதை உண்ணாமல் நீர் நாய் தினமும் உறங்கும்படியான வெண்ணி என்னும் ஊரில் சூழ்ந்த வயலில் உள்ள ஆம்பல் தழையை இடையில் அழகுற அணிந்து இவ்வூர் விழாக் களத்தில் நான் சென்றிருக்க வேண்டும். அது கழிந்தது. இப்போது இங்குள்ள இப்புதியவளை யாணர் ஊரன் காணின் தன்னவளாகக் கொள்ளாது விடுதல் இல்லை. அப்படி அவன் கொள்ளின் முடிப்பன் என்பானது மலையில் உள்ள மூங்கில் போலும் பலமகளிர் தோள்கள் அழகு தொலையும், அவை இரங்கத்தக்கன. (அதனால் இப்போதே சென்று அவனை அவள்பால் செல்லாமல் தடுத்துக் கொள்வேன் எனக் கூறினாள். விழாக்காலத்தில் செல்லாமையால் தலைவி தலைவனை மணந்தாள் என்பது பரத்தை எண்ணம்.)

கண்ணும் என்பது-காதற் சோர்வினானும் ஒப்புரவுடைமை யானுந் தாய்போற் கழறிப் பொருத்தப்பட்ட மனைவியைக் காய்தலின்றித் தலைமகன் மாட்டுப் பொருத்தற் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

இதுவும் அவள் கூற்று. காதற் சோர்வு என்பது தன்மாட்டுக் காதல் சோர்தல். இது தலைமகன் மாட்டுத் துனியுளவழி நிகழும் நிகழ்ச்சி.

உதாரணம்

''வயல்வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்றமிச்சில்
ஒய்விடு நடைப்பகடாரும் ஊரன்
தொடர்பு நீ வெஃகினை யாயின் என்சொற்
கொள்ளல் மாதோ முள்ளெயிற்றோயே
நீயே பெருநலத் தகையே அவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகனென்னாரே.''[1]

(நற்றிணை 290)

இது காமக்கிழத்தியாகிய தலைமகட்குமுன் வரையப்பட்ட பரத்தை கூற்று.[2]

இன்னகைப் புதல்வனைத் தழீஇ யிழையணிந்து பின்னை வந்த வாயிற் கண்ணும் என்பது—இனிய நகையையுடைய புதல்வனைத் தழீஇ இழையணிந்து பின்னை வந்த வாயிலின்

---

1. பொருள்: வயலில் உழவர் நெற்சூட்டுடன் அரிந்து கொணர்ந்த ஆம்பலை ஈன்ற அணிமையுடைய பசு தின்று மிஞ்சியதை உழவரின் உழுதொழில் விட்டு ஓய்வெடுக்கும் பகடுகள் தின்னும்படியான ஊருக்குடைய தலைவனின் தொடர்பை (நீண்டநாள் முயக்கத்தை) நீ விரும்புவாயாயின் ஏ தலைவியே! என் சொல்லை ஏற்றுக்கொள். நீ பெரிய அழகும் குணமும் உடையை அவனோ நடுஇரவில் பொய்கையிற் சென்று புதுமலர் உண்ணும் வண்டு போல்வான். ஆண்மகன் அல்லன் என்னும் இவ்வூர். (ஆதலின் புலவாதே அவனை ஏற்றுக் கொள்க).

2. இத்தொடர் தவறு. காமக் கிழத்தி கூற்றே கூற வேண்டுவது. இதன் விளக்கம் பற்றித் தாய் போற்கழறி (32) என்னும் சூத்திர உரைகளின் முடிவில் சிவ, விளக்கம் காண்க.

கண்ணும் என்றவாறு. பின்னை என்றதனால் ஏனைய வாயில் களை மறுத்த வழியென்று கொள்க.

*''புள் இமிழ் அகல்வயல் ஒலிசெந்நெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளிதழ் உறநீடி வயங்கிய ஒருகதிர்
அவை புகழரங்கின் மேலாடுவாள் அணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகமே போல்தோன்றுந்
தகைபெறு கழனியந் தண்துறை யூரகேள்''.

''அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பதால்
தோய்ந்தாரை அறிகுவல் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ''.

''புல்லல் எம்புதல்வனைப் புகலகல் நின்மார்பின்
பல்காழ் முத்தணியாரம் பற்றினன் பரிவானான்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பின்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவள் அல்லளோ''

''கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி நின் சென்னி
வண்டிமிர் வகையினர் வாங்கினன் பரிவானால்
நண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ;

என வாங்கு,

''பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே யவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து'' (கலித்-79)

எனவரும்.

மனையோள் ஒத்தலின் தன்னோரன்னோர் மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும் என்பது—தான் மனையாளை ஒத்தலாற் தன் போல்வார் தலைவற்கு மிகையெனக் குறித்த கோளின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

---

* பொருள்: பக்கம் 118ல் காண்க.

உதாரணம்

''அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை ஊரன் பெண்டினை யாயின்
பலவாகுகநின் நெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட்டியானை நெடுந்தேர் அஞ்சிக்
கொன்முனை இரவூர் போலச்
சிலவாகுகநீ துஞ்சுநாளே''[1]

எனவரும்.

எண்ணிய பண்ணை யென்றிவற்றோடு என்பது-எண்ணப் பட்ட விளையாட்டு என்று சொல்லப்பட்ட இவற்றோடென்ற வாறு.

விளையாட்டாவது ஆறுங் குளனுங் காவும் ஆடுதல்.

உதாரணம்

''கூந்தல் ஆம்பல் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃதயர்கம் சேறுந்தானஃ
தஞ்சுவதுடையளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு நுகர்கதன், கொழுநன்மார்பே''[2]

(குறுந்-80)

பிறவும் என்பதனால் தலைமகட்குரித்தாகச் சொல்லப்பட்ட வற்றுள் ஒப்பன கொள்ளப்படும். அவற்றுட் சில வருமாறு.

---

1. பொருள்: பிரப்பம் பழத்தை பொய்கைக் கெண்டை மீன் கதுவுகின்ற தண்துறையூரனது பெண்ணானால் ஏடீ! நின் நெஞ்சத்திற்கண் துன்பம் பலவாகுக. மேகம் போலும் வண்கையும் யானையையும் உடைய அஞ்சி என்பான் கொல்லும் பாசறையுள்ள இரவூர் தூங்கும் நாள் சிலவுளதாதல் போல நீ தூங்கும் நாள்கள் சிலவே யாகுக.

2. பொருள்: கூந்தல் போலும் நெறிப்பையுடைய ஆம்பலந்தழையை உடுத்தி மிக்க வெள்ளம் வந்த நீர்த் துறையில் ஆடுதற்கு விரும்பி யாம் தலைவனுடன் செல்வேம். தலைவியானவள் அதற்கு அஞ்சுவதுடைய ளானால் தான்தன் கணவன் மார்பை எம்முடன் கலவாதபடி எழினியின் போர் முனையில் அகப்படுக்கப் பட்ட பசுக் கூட்டங்களைக் காப்பதுபோலக் காத்துக் கொள்வாளாக.

''ஞாலம் வறந்தீர'' என்னும் மருதக்கலியுள்,

''அடக்சமில், போழ்தின்கண் தந்தைகாமுற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்கான்''

எனவும்,

''வழிமுறைத் தாயுழைப்புக்கான்''

எனவும்,

''தலைக்கொண்டு நம்மொடு காயமற்றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கான்'' (கலித்-82)

எனவும்

கூறுநலிற் புதல்வனை யீன்றாள் மூன்றாங் காமக்கிழத்தி[1] யாயினவாறும் இவன்மாட்டுத் தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப்பரத்தை யுள்ளிக் கூற்று நிகழ்ந்தவாறுங் கண்டுகொள்க. பிறவும் அன்ன. தோழி கூற்றும் இவட்கும் ஒக்கும்.

நச்

இது, காமக்கிழத்தியர் கூற்றெல்லாந் தொகுத்துக் கூறுகின்றது. காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமை பூண்டு இல்லற நிகழ்த்தும் பரத்தையர். அவர் பலராதலிற் பன்மையாற் கூறினார். அவர் தலைவனது இளமைப் பருவத்திற்கூடி முதிர்ந்தோரும் அவன் தலைநின்று ஒழுகப்படும் இளமைப் பருவத்தோரும் இடைநிலைப் பருவத்தோரும் காமஞ்சாலா இளமையோருமெனப் பல பகுதியராம். இவரைக் 'கண்ணிய காமக்கிழத்திய' ரெனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர் கூத்தும் பாட்டும் உடையராகிவருஞ் சேரிப்பரத்தையருங் குலத்தின்கண் இழிந்தோரும் அடியரும் வினைவல பாங்கினரும் பிறருமாம். இனிக் காமக்கிழத்தியரைப் பார்ப்பார்க்குப் பார்ப்பனியை யொழிந்த மூவரும், ஏனையோர்க்குத் தங்குலத்தல்லாதோரும் வரைந்து கொள்ளும் பரத்தையருமென்று பொருளுரைப்பாரும் உளர். அவர் அறியார் என்னை? சிறப்புடைத் தலைவியரொடு பரத்தையரையுங் கூட்டிக் காமக்கிழத்தியரென்று ஆசிரியர் சூத்திரஞ் செய்யின் மயங்கக்கூறலென்னும் குற்றம் தங்குமாதலின் அன்றியுஞ் சான்றோர் பலருங் காமக்கிழத்தியரைப் பரத்தையராகத் தோற்றுவாய் செய்து கூறுமாறும் உணர்க.

---

1. தொடக்கத்துத் தாய்-தலைவி, வழிமுறைத்தாய்-முதற் காமக்கிழத்தி. புத்தேள்-புதிய இரண்டாம் காமக்கிழத்தி. புதல்வனின் தாய் மூன்றாம் காமக்கிழத்தியாவாள்.

இதன் பொருள்:- புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணும்[1] தலைவன் தனது முயக்கத்தைத் தலைவியிடத்துந் தம்மிடத்தும் இடைவிட்டு மயக்குதலால் தலைவிக்கண் தோன்றிய புலவியிடத்தும்: காமக்கிழத்தியர் புலந்து கூறுப.

உதாரணம்

''மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்டுறை யூரனெஞ் சேரிவந்தென
விண்டுங்கள்ளி னகுதை களிற்றொடு
நன்கலனீயு நாண்மகிழிருக்கை
யலைபுகு பொருநர் பறையினானாது
கழறுபவென்பவவன் பெண்டிரந்திற்
கச்சினன், கழலினன் றேந்தார் மார்பினன்
வகையமை பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காணிரோவென
வாதிமந்தி பேதுற்றினையச்
சிறை பறைந்துரைஇச் செங்குணக்கொழுகு
மந்தண் காவிரிபோலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின்யானே''.[2]

(அகம்-76)

இதனுள் எஞ்சேரி வந்தெனக் கழறுபவென்ப அவன் பெண்டிரென முன்னை ஞான்று புல்லுதன் மயக்குதலால் தலைவி புலந்தவாறும் அது கண்டு காமக்கிழத்தி கொண்டுகை வலிப்பலெனப் பெருமிதம் உரைத்தவாறுங் காண்க.

---

1. இளம்பூரணர் உரையினும் இவ்வுரை சிறக்கும்.
2. பொருள் தோழீ! முழவொலியொடு காண்பார்க்கு மகிழ்ச்சி மிக யான் கூத்தாட அதுகாண அவன் வந்த அவ்வளவிற்கே அவன் மனைவியானவள், கள்ளின் களிப்புடைய அஃதை என்பானின் பரிசிலர்க்குக் களிறும் கலனும் ஈயும்நாள் ஓலக்கத்தில் புகும் பொருநர் அறையும் பறையொலியினும் அடங்காமல் அவனை என்னொடு சேர்த்துக் கழறியுரைப்பாள் என்று கூறுவர். கச்சினனும் கழலினனும் தார்மார்பினனும் ஆகிய பொருநனை (ஆட்டனத்தியை) இவ்வழிக் கண்டீரோ என அவன் காதலி ஆதிமந்தியானவள் பித்துற்று வருந்துமாறு நேர் கிழக்கே ஓடும் காவேரி ஈர்த்துக் கொண்டு ஒழுகினாற்போல யானும் அவன் கணவனை சூள்கொண்டு கைப்பற்றிக் கோடலை எண்ணி விட்டேன்.

இது, பெருமிதங் கூறலின் இளமைப் பருவத்தாள் கூற்றாயிற்று.

"ஒண்டொடியாயத் துள்ளுநீ நயந்து
கொண்டனை யென்பவோர் குறுமகள்" (அகம் 96)

எனக் காமஞ் சாலா இளமையோளைக் கூறிற்று.

இரட்டுற மொழிதலென்பதனாற் பரத்தையரிடத்துப் புலப்பட ஒழுகாது அவர் புல்லுதலை மறைத்தொழுகுதலாற் காமக்கிழத்தியர்க்கும் பிறக்கும் புலவிக் கண்ணும் அவர்க்குக் கூற்று நிகழு மெனவும் பொருள் கூறுக.

உதாரணம்

"கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா"
என்னும் மருதக்கலி (90)யுட் காண்க.

இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்—இல்விடத்திருந்த தலைவனுந் தலைவியும் அடியும் உணர்த்தியுஞ் செய்த தொழிலைக் கேட்டு இகழும் இகழ்ச்சிக் கண்ணும்.

உதாரணம்

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழனவாளை கதூஉமூர
னெம்மிற் பெருமொழி கூறித்தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூங்கு
மாடிப் பாவைபோல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே"[1]
(குறுந்-8)

"நன்மரங் குழீஇய நனைமுதிர் சாடிப்
பன்னாளரித்த கோயுடை யுடைப்பின்
மயங்கு மழைத்துவலையின் மறுகுடன் பனிக்கும்
பழம்பனெல்லின் வேளூர் வாயி
னறுவிரை தெளித்த நாறிணர்மாலை
பொறிவரியினவண்டூதல கழியு
முயர்பலி பெறூஉ முருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பி னீவெய்யோள்வயி
னனையேனாயினணங்குக வென்னென
மனையோட்டேற்று மகிழ்நனாயின்

1. பொருள்: பக்கம் 181-ல் காண்க.

யார்கொல் வாழி தோழி நெருநை
தார்பூண் களிற்றிற் றலைப்புணைதழீஇ
புதுவது வந்த காவிரித்
தோடுதோய் மலிர்நிறையாடியோரே''[1]

(அகம்-166)

எனவரு மிவையும் இளையோர் கூற்று. பிறவும் அன்ன.

பல்வேறு புதல்வர்க் கண்டு நனி உவப்பினும்-வெவ்வே றாகிய புதல்வரைத் தாங்கண்டு மிக மகிழ்ச்சி செய்யினும் 'வேறு பல் புதல்வர்' என்றார் முறையாற் கொண்ட மனைவியர் பலரும் உவராதலின்.

'ஞாலம் வறந்தீர' என்னும் மருதக்கலி (82)யுள்,

''அடக்கமில் போழ்தின்கண் தந்தைகாமுற்ற
தொடக்கததுத்தாயுழைப் புக்காற் கவளு
மருப்புப் பூண்கையுறை யாக வணிந்து
பெருமான கைமுகங் காட்டென்பாள் கண்ணீர்
சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன''[2]

இது முதிர்ந்தாள் உண்ணயந்து கூறியது.

''மற்றும், வழிமுறைத் தாயுழைப் புக்காற்கவளு
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து
முயங்கினள் முத்தின ணோக்கி நினைந்தே
நினக்கியாம் யாரே மாகுதுமென்று
வனப்புறக் கொள்வன நாடிய ணிந்தனள்''[3]

(கலி-82)

---

1. பொருள்: பக்கம் 182 ல் காண்க.

2-4. பொருள்: தந்தையானவன் அறநெறிக்கு அடங்கி யொழுகுதல் இல்லாத இளமைக் காலத்தே தான் காமுற்றுக் கொண்ட முதல் காமக்கிழத்தியிடம் புகுந்த புதல்வனுக்கு, அவள், தந்தத்தாலாகிய பூண்களைக் கையுறையாக அணிந்து, பெருமானே! நின்ஒளி முகத்தை முத்தமிட எனக்குக் காட்டு என்று சொல்லிச் சிந்திய கண்ணீர்த் துளிகள் மாலையினின்றும் முத்துகள் உதிர்வனபோல் இருந்தன. (–இதில் உள்ள கூற்று தொடக்கத்துத் தாய் என்றதனால் முதிர்ந்ததாயின் கூற்று எனக் கொள்க.)

அடுத்து வழிமுறைத்தாயிடம் புதல்வன் புகுந்தான். அவள் தன் காமநோயைத் தாங்கி மகன் எதிரே வந்து

இதனுள்,நோய் தாங்கினளென இளமைப் பருவத்து மகிழ்ச்சியும் முதிர்ந்த பருவத்து மறவியுந் தோன்றக் கூறாமையினானும் வழிமுறைத்தாயென்றமையானும் இஃது இடைநிலைப் பருவத்தாள் கூற்று.

> ''அவட்கினிதாகி விடுத்தனன் போகித்
> தலைக்கொண்டு நம்மொடு காயுமற்றீதோர்
> புலத்தகைப் புத்தேளில்புக்கான்''[1] (கலி-82)

என்ற வழிப்'புத்தேள்' என்றதுவும் தலைநின்றொழுகும் இளையோளைக் கூறியது.

> ''தந்தை யிறைத்தொடீஇ மற்றிவன்றன் கைக்கட்
> டந்தாரியாரெல்லாஅ விது;
> விஃதொன்று''[1] (கலி-84)

என்றாற் போல அவள் கொடுப்பக் கொள்வனவுங் கொள்க.[2]

மறையின்வந்த மனையோள் செய்வினைப் பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும். மறையின் வந்த-தலைவற்கு வேறோர் தலைவியொடு களவொழுக்கம் நிகழ்தலின் அவன் செய்திகளின் வேறுபாட்டால் தமக்குப் புலப்பட வந்த, மனையோள் செய்வினை-மனையோளாதற்குரியவள் தமர் பணித்தலில் தைந்நீராடலும் ஆறாடலும் முதலிய செய்தொழில்களைச் செய்யுமிடத்து, பொறை இன்று பெருகிய பருவரற் கண்ணும்—இவள் தோற்றப் பொலிவால் தலைவன் கடிதின் வரைவனெனக் கருதிப் பொறுத்தலின்றி மிக்க வருத்தத்தின் கண்ணும்.

2-4 முயங்கினாள்; முத்தமிட்டாள்; நோக்கினாள் தலைவன் தன்னைக் கைவிட்ட தன்மையை நினைந்து நினக்கு யாம் என்ன உறவுடையேம்! என்றுகூறி அழகுற நல்லணிகளை யணிந்தனள். மேலும் பெருமானே! மகளிர் கண்கள் பசக்கும்படி நோய் செய்யும் நின் தந்தையின் பரத்தமையைக் கொள்ளாதே என்றாள். அவளுக்கு இனிதாக இருந்து பின்னர் நம்மொடுஒப்பாளாகத் தன்னை நினைத்துக் கொண்டு நம்மைக் காய்ந்து புலக்கும் தகைமையுடைய புதியவள் இல்லிற் புக்கான் புதல்வன்.

1. பொருள்: ஏடி! இவன் தந்தையின் முன்னங்கையகத்துத் தொடிஎனும் அணியை இப் புதல்வன் கையகத்துத் தந்தார் யார்? என்ன இஃதோர் புதுமை?

2. அவள் கொடுப்பக் கொள்வன-பரத்தை கொடுப்பக் கொள்ளும் பொருள்களும் உண்டு எனக் கொள்க.

உதாரணம்

''வாளை வாளிற் பிறழ நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயிலேற்குங்
கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த
வயல்வெள் ளாம்பலுருவ நெறித்தழை
யைதக லல்குலணிபெறத் தைஇ
விழவிற் செலீஇய வேண்டுமன்னோ
யாணரூரன் காணுநனாயின்
வரையாமையோ வரிதேவரையின்
வரைபோல் யானை வாய்மொழி முடியன்
வரைவேய் புரையு நற்றோ
ளளிய தோழி தொலையுநபலவே''

(நற்றிணை–390)

இதனுள், விழவிற் செல்கின்ற தலைவியைக் கண்டு காமக்கிழத்தி இவள் தோற்றப் பொலிவோடு புறம்போதரக் காணின் வரைவ னெனவும் அதனான் இல்லுறை மகளிர் பலருந்தோள் நெகிழ்ப வெனவும் பொறாது கூறியவாறு காண்க.

காதற் சோர்விற் கடப்பாட்டு ஆண்மையில் தாய்போல் தழீஇக் கழறி அம்மனைவியைக் காய்வு இன்று அவன் வயிற் பொருத்தற் கண்ணும். காதற் சோர்வில்-தானுங் காய்தற்குரிய காமக்கிழத்தி தலைவன் தன்மேற் காதலை மறத்தலானும் கடப் பாட்டாண்மையிற் சோர்வில்-அவற்கு இல்லொடு பழகிய தொல்வரற் கிழமையாகிய ஒப்புரவின்மையாலும் தாய்போல் தழீஇக் கழறி-தலைவியைச் செவிலிபோல் உடன்படுத்திக் கொண்டு தலைவனைக் கழறி, அம்மனைவியைக் காய்வின்று அவன்வயிற் பொருத்தற் கண்ணும்-அத்தலைவியைக் காய்தலின் றாக்கித் தலைவனிடத்தே கூட்டுமிடத்தும்.

இது, துனி நிகழ்ந்துழித் தலைவனது தலைவளரிளமைக்கு ஒரு துணையாகி முதிர்ந்த காமக்கிழத்தி இங்ஙனங் கூட்டு மென்றார்.

உதாரணம்

''வயல்வெள்ளாம்பல் சூடுதெரிபுதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சி
லோய்நடை முதுபகடாருமூரன்
றொடர்புநீ வெஃகினை யாயினெனவென்சொற்
கொள்ளன் மாதோ முள்ளெயிற்றோயே

நீயே பெருநலத்தையே யவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாளெய்தித்
தண்கமழ் புதுமலரூதும்
வண்டெனமொழிப மகனென்னாரே''[1]

(நற்றிணை-290)

இதனுள், நீ இளமைச் செவ்வியெல்லாம் நுகர்ந்து புதல்வற் பயந்த பின்னர் உழுதுவிடு பகடு எச்சிலை அயின்றாற்போலப் பிறர் அவனை நுகர்ந்தமை நினக்கு இழுக்கன்றெனவும் அவனோடு கூட்டம் நெடுங்காலம் நிகழ்த்த வேண்டும் நீ-அவள் அவனோடு கட்டில்வரை எய்தியிருக்கின்றாளென்று ஊரார் கூறுகின்ற சொல்லை என்னைப்போல வேறுபட்டுக் கொள்ளாதே, கொள்வது நின் இளமைக்கும் எழிற்கும் ஏலாதெனவும் அவனை வண்டென்பதன்றி மகனென்னாராதலின் அவன் கடப்பாட்டாண்மை அதுவென்றுங் கூறினாள்.

இனி 'என் சொற், கொள்ளன் மாதோ' (நற்-290)

என்பதற்கு என் வார்த்தையைக் கேட்டல் நினக்கு விருப்பமோ விருப்பமாகில் யான் கூறுகின்றதனைக் கொள்க.

''ஈண்டுபெருந் தெய்வத்தியாண்டுபல கழிந்தெனப்
பார்த்துறைப் புணரி யலைத்தலிற்புடைகொண்டு
மூத்துவினை போகிய மூரிவாயம்பி
னல்லெருது நடைவளம் வாய்த்தெனவுழவர்
புல்லுடைக்காவிற்றொழில் விட்டாங்கு
நறுவிரை நன்புகைக் கொண்டார்ச்சிறுவீ
ஞாழலொடு கெழீஇய புன்னையங் கொழுநிழன்
முழவு முதற் பிணிக்குந் துறைவனன்றும்
விழுமிதிற் கொண்ட கேண்மை நொவிதிற்
றவறு நற்கறியா யாயினெம்போன்
நெகிழ்தோட் கலுழ்ந்த கண்ணர்
மலர்தீய்ந்தனையர் நின்னயந்தோரே''[2]

(நற்றிணை-315)

---

1. பொருள்: பக்கம் 186 ல் காண்க.
2. பொருள்: தெய்வம் என்னும்படியான யாண்டுகள் பல கழிந்த காரணத்தால் பாறையிற் கடல்நீர் அலைத்தலால் அலைப்புண்டு முதிர்ந்து இனித்தொழிற்கு உதவுதல் நீங்கி உடைந்த வாயுடைய தோணியை, உழவர்

இதனுள் மூத்துவினைபோகிய அம்பிபோலப் பருவஞ் சென்ற பிணிக்கப்பட்ட எம்மைப்போலாது இவள் இப்பருவத்தே இளையளாதற்பாலளோ மலர்ந்த செவ்வியான் முறைவீயாய்க் கழியாது இடையே எரிந்து கரிவுற்ற பூவினைப் போலவெனத் தலைவனுக்குக் காமக்கிழத்தி கூறியவாறு காண்க.

இன்நகைப் புதல்வனைத்தழீஇ இழைஅணிந்து பின்னர் வந்த வாயிற் கண்ணும். இன்நகைப் புதல்வனைத்தழீஇ இழை அணிந்து - கண்டோர்க்கெல்லாம் இன்பத்தைப் பயக்கும் புதல்வனை எடுத்துப் பொலங் கலத்தாற் புனைந்து கொண்டு பின்னர் வந்த வாயிற் கண்ணும்-பலவாயில்களையும் மறுத்த பின்னர் வாயிலாகக் கொண்டு புகுந்த வாயிலின் கண்ணும்;

உதாரணம்

''என்குறித்தனன்கொல் பாண நின்கேளே
வன்புலு.ற வாயிலாகத் தந்த
பகைவரு நகூஉம் புதல்வனை
நகுவது கண்டு நகூஉ மோரே''.[1]

இதனுள், வன்புறை வாயிலாகிய புதல்வனைக் கண்டு நகுவாரைத் தனக்கு நகுவாரைப் போல நகா நின்றாளெனக் காமக்கிழத்தி கூறி வாயில் நேர்ந்தவாறு காண்க. 'பகைவரும் நகூஉம்' எனவே தான் புலக்கத்தகுந் தலைவியர் புதல்வனென் றாளாயிற்று.

மனையோள் ஒத்தலில் தன்னோர் அன்னோர் மிகைபடக் குறித்த கொள்கைக்கண்ணும்; மனையோள் ஒத்தலில்–தானும் உரிமை பூண்டமை பற்றி மனையோளொடு தானும் ஒத்தாளாகக் கருதுதலின், தன்னோர் அன்னோர் மிகைப்படக் குறித்த கொள்கைக் கண்ணும்-தன்னை ஒக்கும் ஏனை மகளிரின்

உழுதற்குரிய நடைவளம் நீங்கியது என்று எருதினை சோலையில் விட்டது போலப் புன்னைமர அடியில் கட்டி வைக்கும்படியான துறையையுடைய தலைவனே! சிறப் பாகக் கொண்ட நட்பினைச் சிறிதும் தவறுவராதபடி அறியாயாயின், நின்னால் விரும்பப்பட்ட மனைவியர் எம்மைப் போலவே நெகிழ்ந்ததோளராய் அழுத கண்ணராய் மலர் தீய்ந்தாற்போல்வாராவார்.

1. பொருள்: பாணனே! நின் கேளாகிய தலைவன் என்ன குறித்துள்ளான்? பகைவரும் விரும்பும் தன் தலைவியின் புதல்வனைக் கண்டு எம்மைச் சார்ந்தவர் நகா நிற்க– அதனைத் தனக்கு ஏற்றதாகக் கொண்டு தான் மகிழ் கின்றான்.

தன்னை விசேட முண்டாகக் குறித்துக் கொண்ட கோட்பாட்டின் கண்ணும்.

உதாரணம்

*"புழற்காற் சேம்பின் கொழுமடலகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடும் வதிந்த
வுண்ணாப் பிணவி னுயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய்
வாளையொடுழப்பத்துறை கலுழ்ந்தமையிற்
றெண்கட் டேறன் மாந்திய மகளிர்
நுண்செயலங் குடமிரீஇப்பண்பின்
மகிழ்நன் பரத்தை பாடிய விழிணர்க்
காஞ்சி நீழற் குரவையயருந்
தீம்பெரும் பொய்கைத்துறை கேழூரன்
றேர்தர வந்த நேரிழை மகளி
ரேசுப வென்ப வென்னலனே யதுவே
பாகனெடி துயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற்றியானை தல்கன் மாறே
தாமும் பிறரு முளர்போற் சேறன்
முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின்
யானவண்வாரா மாறேவரினே

பொருள்: சேம்பின் இலையுடைய நீர்ப்பரப்பில் தன் குட்டியுடன் வசிக்கும் பெண் நாய் உண்ணாமையால் அதற்கு இரை தேடிக்கொணர எழுந்த ஆண் நாயானது வாளைமீனொடு பொருதலால், நீர்ப் பொய்கை கலங்கிவிட அதனை விட்டுக் கள்ளுண்டு காஞ்சிமர நிழலிற் சென்று தம் கணவன்மாரின் பரத்தமை யொழுக்கம் பற்றிப் பாடும் படியான பொய்கை யூரானவன், தன்தேரில் ஏற்றி வந்த பரத்தையர் என் நலனைப் பற்றி ஏசுவர் என்று கூறுவர் பிறர். அவர் அவ்வாறு பேசும் பேச்சோடு அவர் அடங்காமல் இருப்பது எதுபோல் என்றால் யானை கொல்லாமை யால் பாகன் உயிரோடு இருப்பது போலாகும் அப் பரத்தையரும் பிறரும் சிறப்புடையார் போல இறுமாந்து செல்லுதற்குக் காரணம் அவர்கள் கொண்ட முழவு ஒலிக்கும் துணங்கைக் கூத்தாடும் இடத்துக்கு யான் செல்லாமையே யாகும். இனியான் சென்றால் ஞாயிறு போம் பக்கமாகவே திரியும் நெருஞ்சிப் பூப் போல என் பக்கமாகவே அவனைத் திரியுமாறு செய் வேனாயின் சோழரது வல்லத்துப் புறங்காட்டிப் போரில் உடைந்தோடிய ஆரியப் படைபோல என் கைவளையல்கள் உடைவனவாக.

வானிடைச் சுடரொடு திரிதரு நெருஞ்சி போல
என்னொடு திரியேனாயின் வென்வேல்
மாரியம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
யாரியர் படையி னுடைகவென்
னேரிறை முன்கை வீங்கிய வளையே''.

(அகம்-336)

இதனுள் ''யானவண் வாராமாறே'' எனத்தான் மனையோளைப் போல் இல்லுறைதல் கூறி யாண்டுச் செல்லிற் சுடரொடு திரியும் நெருஞ்சி போல என மகளிரை யான் செல்வுழிச் சொல்லுஞ் சேடியர் போலத் திரியும்படி பண்ணிக் கொள்வலெனக் கூறியவாறு காண்க.

எண்ணிய பண்ணை-தலைவற்குத் தகுமென்று ஆய்ந்த யாறுங் [குளனும் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்வனபோல் வனவற்றுக்கண் தாமும் விளையாடுதற் கண்ணும்.

உதாரணம்

''கூந்தலாம்பன் முழுநெறியடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃதயர்கஞ்சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய னாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல் வேலெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே''[1]

(குறுந்-80)

இதனுள் ''யாமஃதயர்கஞ்சேறும்'' என விளையாட்டுக் கூறினான்.

என்றிவற்றொடு பிறவும்-இக்கூறியவற்றின் கண்ணும் புதல்வற்கண்டு தனியுவப்பினும் கூற்று நிகழுமென்று கூறப்பட்ட இவ்வெட்டோடே பிற கூற்றுக்களும், கண்ணிய காமக்கிழத்தியார் மேன-இக்கருதப்பட்ட காமக்கிழத்தியரிடத்தன என்றவாறு.

கூற்றென்பது அதிகாரத்தான் வருவிக்க. ஒடுவென்றது உருபு. கண்ணுதல்—ஒருமனைத் தெருவின்கண் உரிமை பூண்டு இல்லறம் நிகழ்த்துவரென்று சிறப்புக் கருதுதல். பிறவும் என்றதனால் தலைவனை என்னவந்தாவெனத் தொடுத்துக் கூறுவனவும்,

1. பொருள்: பக்கம் 188 ல் காண்க,

நின்பரத்தமையெல்லாம் நின்றலைவிக்கு உரைப்பலெனக் கூறுவனவும், சேரிப் பரத்தையரொடு புலந்துரைப்பனவும், தலைவி கூற்றொடொத்து வருவனவும் பிறவாறு வருவனவுங் கொள்க.

''தொடுத்தென மகிழ்ந செல்லல் கொடித்தேர்ப்
பொலம்பூணன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழியாங்க
ணஞ்ச லென்ற வாஅய்எயின
னிகலடு கற்பின் மிஞிலியொடுதாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லிய தமையாது
தெறலருங் கடவுண் முன்னர்த் தேற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்
தார்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்
மார்புதரு கல்லாய் பிறனாயினையே
யினியான் விடுக்குவெ னல்லெனமந்தி
பனிவார் கண்ணள் பலபுலந்துறையக்
கடுந்திறலத்தி யாடணிநசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்குநின்
மனையோள் வௌவலு மஞ்சுவல் சினைஇ
யாரியாலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சியன்ன வென்னலந்தந்து சென்மே''.[1]

(அகம் 396

---

1. பொருள்: தலைவனே! நன்னன் என்பான் புன்னாட்டைச் சினந்து எழுந்த போரில் பாழி என்னும் இடத்தில் நன்னன் பகைவனாகிய ஆஅய் எயினன் தன் மக்களைப் பார்த்து அஞ்சல் என்று கூறி அவர்களைக்காக்கத் தன் சொல் தவறாதபடி அங்கு வந்த மிஞிலி என்னும் நன்னனின் நட்பாளனோடு பொருது உயிர் துறந்தான். நீயோ முன்னர்க் கடவுள் முன்னர் என்கைப் பற்றிக் கூறிய சூளுறவு நீங்கி என் ஆர்வம் மிகவும் நின் மார்பை எனக்குத் தாராமல் பிறன் ஆயினாய். இனி உன்னை விடமாட்டேன். செல்லாதே. ஆதிமந்தி பலவாகப் புலந்து தங்க அவள் காதலனாகிய ஆட்டன் அத்தியைக் காவிரி கொண்டொளித்தது போல நின் மனைவி நின்னைக் கொண்டு செல்லினும் செல்வள். அதற்கு அஞ்சுவேன். அதனால் ஆரிய வீரர் அறைத் தாக்கி வடமலையில் வில்லைப் பொறித்து ஆரிய வேந்தரைப் பிடித்து வந்த சேரனது வஞ்சியூர் போலும் என் வனப்புமிக்க அழகை என்னிடம் தந்து செல்வாயாக,

இது காமக்கிழத்தி என்னலந்தாவென்றது.

''உள்ளுதொறு நகுவதோழி வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூரலகன்ன
குண்டுநீ ராம்பற் றண்டுறையூரன்
றேங்கம ழைம்பால் பற்றி யெம்வயின்
வான்கோ எல்வளை வெளவிய பூசற்
சினவிய முகத்தஞ் சினவாது சென்றுநின்
மனையோட் குரைப்ப லென்றலின் முனையூர்ப்
பல்லா நெடுநெறி வில்லினொய்யுந்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்புரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்ணினதிரு
நன்னரான னடுங்களுர்நிலையே''.[1]

(நற்றிணை—100)

இது மனையோட்கு உரைப்பலென்றலின் நடுங்கினா னென்றது.

'கண்டேனின் மாயம்' என்னும் மருதக்கலி (90)யுள்
''ஆராக்கவலி னொருத்திவந் தல்கற்றன்
சீரார் நெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவமிதித்த தமையுமோ
வாயிழையார்க்கு மொலிகேளா வவ்வெதிர்
தாழாதெழுந்துநீ சென்றதமையுமோ
மாருள் சினைஇ யவளாங்கே நின்மார்பி
னாறிணர்ப் பைந்தார் பறிந்ததமையுமோ
தேறிநீதியேனலே னென்று மற்றவள்
சீறடிதோஉாவிறுத்த தமையுமோ''[2]

---

1. பொருள்: தோழீ! மாரிக்காலக் கொக்கின் அலகு போலும் ஆம்பல் உள்ள தண்துறை யூரனானவன், என் கூந்தலைப் பற்றி யீர்த்து வைத்து வளையலைக் கழற்றிய போது உண்டான பூசலால் சினந்த முகத்தோடு அவனைப் பார்த்து 'நான் இதனை நின் மனைவிக்குச் சொல்வேன்' என்றதனால், தேர்வண் மலையனது அவை முன்வர்க் கூத்தர் இயக்கும் முழவின் கண்ணிடம் அதிர்வது போல் நடுங்கிய நல்லதையே ஆள்பவனாகிய அவனது நடுங்கு நிலையை நினையுந் தோறும் சிரிப்பேன்.

2. பொருள்: தலைவ! ஒருத்தி அடங்காத முயக்கத்தால் தளர்ந்து வந்து நின் கதவைத் தட்டியது சரியோ?

எனச் சேரிப் பரத்தையராற் புலந்து தலைவனோடு கூறியவாறு காண்க. இன்னும் இதனானே,

'நீளிரும் பொய்கை யிரைவேட்டெழுந்த
வாளை வெண்போத்துணீஇய நாரைதன்
னடியறி வுறுதலஞ்சிப்பைப்பயக்
கடியிலம் புகூஉங் கள்வனைபோலச்
சாஅ யொதுங்குந்துறைகேழூரனோ
டொல்கா தாக வினிநாணுண்டோ
வருகதிலம்ம வெஞ்சேரிசேர
வரிவே யுண்கணவன் பெண்டிர் காணத்
தாருந்தானையும் பற்றியாரியர்
பிடிபயிர்ந்து தரூஉம் பெருங்களிறுபோலத்
தோள்கந்தாகக் கூந்தலிற் பிணித்தவன்
மார்புகடி கொள்ளே னாயினார்வுற்
றிரந்தோர்க்கீயா திட்டியோன் பொருள்போற்
பரந்து வெளிப்படாதாகி
வருந்துகதில்லயா யோம்பிய நலனே''[1]

(அகம்-276)

அவள் கத்தும் ஒலி கேட்டு நீ எழுந்து சென்றது சரியோ? அவள் நின் மார்புப் பசியமாலையை அறுத்தது சரியோ? நீ 'நான் தீயவனல்லன் தெளிவாயாக' என்று சொல்லி அவள் சிற்றடியைத் தாழ்ந்து தங்கியது சரியோ? இப்போது சொல் யாம் நின்னைக் கோபியேமோ?

1. பொருள்: பொய்கையில் இரையை வேட்டெழுந்த வாளை மீனை உண்ண வேண்டி நாரையானது தன் அடியின் ஒலியைக் கேட்டு வாளை தப்பி விடுமோ என அஞ்சி மெல்ல மெல்லக் காவலுள்ள வீட்டிற்புகும் கள்வனைப்போல ஒதுங்கிச் செல்லும்படியான நீர்த் துறையுடைய ஊரனோடு நமக்குப்பழி உண்டாயினும் உண்டாக. இனி நாணத்தை நான் கொள்ளல் உண்டோ? எம் சேரியிடத்து அவன் வருக. அவன் மனைவியர் காணுமாறு அவன் மாலையையும் ஆடையையும்பற்றி, ஆரியரின் பெண்யானை பயிற்றியப் பழக்கத்தால் ஆண் யானையைப் பிணித்தாற்போல அவள் மார்பை என் தோள் கந்தாகக் கூந்தலாற்கட்டி என் பாற் கொள்ளவில்லையென்றால் இரந்தோர்க்கு ஈயாது திரட்டி வைத்தவன் பொருள் பயனின்றி மறைவிற் கிடப்பதுபோல என்தாய் காத்து வளர்த்த என் அழகு வெளிப்படாது அழிவதாக.

இதனுட் பரந்து வெளிப்படாதாகி வருந்துக என்னலம் என்றமையிற் சேரிப் பரத்தையைப் புலந்து கூறுதன் முதலியன வுங்கொள்க. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன் கண் அடக்குக.

அகம்புகல்மரபின் வாயில் கூற்று

150. கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் கிழமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய (11)

இளம்.

என்—எனின், அகம்புகல் மரபினவாய வாயில்கள் கூற்று நிகழுமாறு உணர்த்திற்று.

(இ—ள்) கற்பு முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவுமாகிக் கிழவோள் மாட்டுளதாகிய தன்மைகளை முகம்புகு தன்மை யானே[1] தலைமகற்கு உரைத்தல் அகம்புகு மரபின்[2] வாயில்கட் குரிய என்றவாறு.

செய்யுளியலுள் ''வாயிலுசாவே தம்முளுரிய'' (சூ-191) என்பதனால், தலைமகற்குரைத்தலேயன்றித் தம்முள் தாம் கூறுதலும் உரியரென்று கொள்க.

''மதவலியானை மறலிய பாசறை
இடிஉமிழ் முரசம் பொருகளத்தியம்ப
வென்று கொடி எடுத்தனன் வேந்தனுங் கன்றொடு
கறவை புல்லினம் புறவு தொறுகளக்
குழல்வாய் வைத்தனர் கோவலர் வல்விரைந்
திளையர் ஏகுவனர் பரப்ப விரியுளைக்
கடுநடைப்புரவி வழிவாய்ஓட
வலவன் வள்புவலி உருப்பப்புலவர்

---

1. முகம்புகு தன்மை—தலைவன் எதிர் சென்று முகம் நோக்கிப் புகலும் தன்மை.
2. அகம்புகு மரபு—வீட்டினுட் சென்று தலைவன் தலைவி யருடன் அடிக்கடிப் பேச்சு நிகழ்த்தும் வழக்கம்,

புகழ்குறி கொண்ட பொலந்தார் கலத்துத்
தண்கமழ் சாந்தம் நுண்டுகள் அணிய
வென்றிகொள் உவகையொடு புகுதல் வேண்டின்
யாண்டுறைவதுகொல் தானே மாண்ட
போதுறழ் கொண்ட உண்கண்
தீதிலாட்டி திருநுதற் பசப்பே''[1] (அகம் 354)

எனவும்,

''கண்டிசின் பாண பண்புடைத்தம்ம
மாலைவிரிந்த பசுவெண்ணிலவிற்
குறுங்காற் கட்டில் நறும்பூச்சேக்கை
பள்ளியானையின் உயிர்த்தனன் நசையிற்
புதல்வற் புல்லினன் விறலவன்
புதல்வன் தாய்அவன் புறங் கவவினளே''[2]
(குறுந்—359)

எனவும்,

''யாயா கியளே மாஅயோளே
மடைமாண் செப்பின் தமிய வைகிய
பெய்யாப்பூவின் மெய் சாயினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்

---

1. பொருள்: தலைவ! யானைகள் போர் வேட்டு மாறுபடும் பாசறையில் முரசம் முழங்க வேந்தனும் வெற்றி கொண்டு கொடியுயர்த்தினான்; ஆநிரைகள் கன்றுகளுடன் முல்லை நிலங்களில் துள்ளிவரக் கோவலரும் தம் குழலை வாய்வைத்தனர். நீ நின் ஏவலர் ஏவல் கேட்டு விரைந்து நடக்க, புரவியானது வழியே விரைய வலவன் கடிவாளத்தை வலிந்து பிடித்துச் செல்லப் புலவர் பாடுதலையே குறிக்கோளாகக் கொண்டு புண்பட்ட மார்பில் சந்தனம் புலர வெற்றிகொண்டமையால் வந்த உவகையோடு நின் மனையில் புகவிரும்பிச் செல்வாயாயின், தீதற்றவளாகிய நின் மனைவியின் நுதற் பசப்பானது இனி எங்குச் சென்று தங்குவதாகும்.

2. பொருள்: பாண! இதைக் கேள். விறலவன் (தலைவன்) மாலைப் பொழுதில் பசிய வெண்ணிலவில் குறிய கால்களையுடைய கட்டிலில் உள்ள நல்ல பூம் படுக்கையிடம் சென்று ஆற்றாமையால் யானை உயிர்ப்பதுபோல் உயிர்த்து விருப்புடன் அங்கு படுத்திருந்த புதல்வனைத் தழுவினான். புதல்வன் தாயானவள் அவனை புறத்தைத் தழுவினாள். இது அவளது கற்பு மாண்பைக் காட்டுதலுடையதாகும்.

இனமீன் இருங்கழிஓதமல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந்துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும்மே''[1]

(குறுந்-9)

எனவும்,

''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅதுடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந்தட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே''[2]

(குறுந்-167)

எனவும்,

''கானக் கோழிக் கவர்குரற் சேவல்
நுண்பொறி எருத்தின் தண்சிதருறைப்பத்
தேநீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூரோளோ மடந்தை வேனூர்
வேந்துவிடு தொழிலொடு வரினுஞ்
சேர்ந்துவரல் அறியா செம்மல்தேரே''[3]

(குறுந்-242)

எனவும்,

---

1. பொருள்: பக்கம் 166ல் காண்க.

2. பொருள்: முதிர்ந்த தயிரைப் பிசைந்த மெல்லிய விரலைத் துடைத்த ஆடையை மாற்றாது உடுத்தித் தன் குவளைபோலும் மையுண்ட கண்களில் தாளிப்பின் புகைபொருந்தத் தானே துழாவிச் சமைத்த இனிய புளிக்குழம்பைக் கணவன் மிக இனிது என்று சொல்லி உண்ணுதலால் தலைவியின் முகம் நுண்ணிதாக மகிழ்ச்சி கொண்டது. (இதைத்தோழியோ அன்றி வேறு வாயிலோ தன்னுட் கூறியதாகக் கொள்க).

3. பொருள்: இது செவிலி நற்றாய்க்குக் கூறியது. தோழி! தன்பெடையைக் கூவும் காட்டுக் கோழிச் சேவலின் பிடரியில் புதல்நீர் துளிக்கும்படியாக உள்ள மலர் மணம்மிக்க முல்லை நிலத்துச் சீறூரில் மகிழ்வுடன் உள்ளாள் நம் மடந்தை. அவள் தலைவன் தேரும் மன்னன் ஏவலால் வேற்றூர் சென்றுவர் தேரினும் வினைமுடித்து அங்கேயே தங்காமல் உடன் மீண்டு வந்து விடும்,

"பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகையேந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றருநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிஇமெலிந் தொழியப் பந்தரோடி
ஏவல் மறுக்குஞ்சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமதுகையளே"[1]

(நற்றிணை-110)

எனவும்,

"பாணர் முல்லை பாடச் சுடர்இழை
வாணுதல் அரிவை முல்லை மலைய
இனிதிருந்தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே"[2]

(ஐங்குறு-408)

எனவும் வரும். இவையெல்லாம் வாயில்கள் தம்முட் கூறின. தலைவற்குக் கூறின வந்தவழிக் காண்க.

---

1. பொருள்: செவிலி நற்றாய்க்குக் கூறியது. தேன்கலந்த சுவையான இனிய பாலைப் பொற்கலத்துக் கொண்டு ஒரு கையில் ஏந்தி இதனையுண்க என்று சொல்லிப் புடைப்பு அமையச் சுற்றிய ஒரு கோலால் அடிப்பது போல் ஓச்ச, உண் என்னும் ஏவலை மறுத்து முத்துப் பரல் உள்ள காற்சிலம்பு ஒலிப்பச் செவிலியர் பிடிக்கவும் தப்பி அவர் மெலியுமாறு பந்தர்ப் பக்கம் ஓடி உணவை மறுக்கும் சிறிய விளையாட்டுப் பிள்ளையாக இருந்தவள், இன்று தன் கணவன் குடி வறுமை எய்தத் தன் தந்தை தந்த உணவையும் மறுத்து ஒழுகும் நீர் வற்ற ஆங்காங்கே அறல் காணப்படுதல் போல நாள் விட்டு நாள் விட்டு உண்ணும் ஆற்றலைப் பெற்றாள். இத்தகைய அறிவும் ஒழுக்கமும் எங்கு உணர்ந்தாள்.
2. பொருள்: பாணர் முல்லைப் பண்பாடவும் தலைவி முல்லைப் பூச்சூடவும் தலைவன் வெறுப்பு நீங்கிய கொள்கையொடு தன் புதல்வனொடு சேர்ந்து வீற்றிருந்தான்.

நச்.

இது விருந்து முதலிய வாயில்கள் போலாது அகநகர்க் கட்புகுதற்குரிய வாயில்கள் கூற்று உணர்த்துகின்றது.

இதன்பொருள்:- கற்பும்-கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கமும், காமமும்-அன்பும் நற்பால் ஒழுக்கமும் - எவ்வாற்றானுந் தங்குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமும், மெல் இயற்பொறையும்-வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் ஆனைபோலாது ஒருதலையாக மெல்லென்ற நெஞ்சினராய்ப் பொறுக்கும் பொறையும், நிறையும்-மறை புலப்படாமை நிறுக்கும் நெஞ்சுடைமையும், வல்லிதின் விருந்து புறந்தருதலும்-வறுமையுஞ் செல்வமுங் குறியாது வல்லவாற்றான் விருந்ினரைப் பாதுகாத்து அவர் மனமகிழ்வித்தலும், சுற்றம் ஓம்பலும்-கொண்டோன்புரக்கும் நண்புடை மாந்தருஞ், சுற்றத்தாருங் குஞ்சர முதலிய காலேசங்களும் புல படைமாக்களும் உள்ளிட்ட சுற்றங்களைப் பாதுகாத்து அவை உண்டபின் உண்டலும், அன்னபிறவுங் கிழவோள் மாண்புகள்-அவை போல்வன பிறவுமாகிய தலைவியுடைய மாட்சிமைகளை முகம்புகன் முறைமையிற் கிழவோற்கு உரைத்தல்-அவன் முகம் புகும் முறைமை காரணத்தால் தலைவற்குக் கூறுதல், அகம்புகன் மரபின் வாயில்கட்கு உரிய—அகநகர்க்கட் புகுந்து பழகி அறிதன் முறைமையினையுடைய வாயில்களுக்குரிய என்றவாறு.

அன்ன பிறவாவன:- அடிசிற்றொழிலும் குடிநீர்மைக் கேற்ற வகையான் தலைமகள் ஒழிந்த தலைமகளிரையும் மனமகிழ்வுறுத்தலும் காமக்கிழத்தியர் நண்பு செய்து நன்கு மதிக்கப்படுதலும் போல்வன. புகலுதல்-மகிழ்தல், செவிலி கூறாமை கொள்க. அவட்கு முகம்புகன் முறைமையின்மையின்.

உதாரணம்

''கடல் பாடவிந்து தோணிநீங்கி
நெடுநீரிருங் கழிக்கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினு
மாணிழை நெடுந்தேர் பாணிநிற்பப்
பகலு நம்வயி னகலானாகிப்
பயின்று வருமன்னே பனிநீர்ச் சேர்ப்ப
னினியே மணப்பருங் காமந்தணப்ப நீங்கி
வாராதோர் நமக்கியாஅ ரென்னாது

மல்லன்மூதூர் மறையினை சென்று
சொல்லி னெவனோபாண வெல்லி
மனைசேர் பெண்ணை மடல்வாயன்றி
றுணையொன்று பிரியினுந்துஞ்சாகாணெனக்
கண்ணிறை நீர்கொண்டுகரக்கு
மொண்ணுதலரிவை யானென் செய்கோவெனவே''[1]

(அகம்-50)

இதனுட் காமமிகுதியாற் கண்தாமே அழுவும், கற்பிற் காக்கு மெனத் தலைவி பொறையும் நிறையுந் தோழி பாணற்குக் கூறினாள். அவன் தலைவற்கு இவ்வாறே கூறுவனெனக் கருதி. 'இனி' என்றதனாற் கற்பும் பெற்றார்.

தலைவற்குக் கூறுவன வந்துழிக் காண்க. 'வாயிலுசாவே தம்முளுமுரிய' (512) என்பதனால் தலைவற்கு உரையாமல் தம்முட்டாமே உசாவுவனவும் ஈண்டே கொள்க.

''அணிநிற வெருமையாடிய வள்ளன்
மணிநிற நெய்தலாம்பலொடுகலிக்குங்
கழனியூரன் மகளிவள்
பழனவூரன் பாயலின் றுணையே''[2] (ஐங்குறு-96)

இது கற்புக் கூறியது.

---

1. பொருள்: பாணனே! தோணிகள் கடலிற் செல்லாமல் கரையில் இருத்தலால் சுறாமீன்கள் அவற்றிற்பாயும் படியாகப் பரதவர் நடமாடும் நிலையில் இருந்தாலும் அலர் தூற்றும் பெண்டிர் தம்மைப் பற்றி அலர் தூற்றி னாலும் தலைவன் தம் தேர் காலம் தாழ்த்து நிற்கும் படியாகப் பகலிலும் நம்மை நீங்காமல் வந்துபோவான். இது களவுக் காலத்து நிகழ்ச்சி. இக்கற்புக் காலத்தில் தனக்கு வேட்கை நீங்குதலால் சென்ற விடத்தினின்றும் மீண்டு வாராதவர் நமக்கு என்ன உறவுடையர் என எண்ணாமல் மனையில் உள்ள பனைமரத்து அன்றில் ஒன்று பிரியினும் மற்றொன்று துஞ்சாது எனத் தன் நெஞ்சுக்குக் கூறிக்கண்களில் நீர் நிறைந்தனள் தலைவி. அதற்கு யான் (தோழி) என் செய்யவல்லேன்? இதை நீ மூதூரிடத்து மறைவாய்ச் சென்று தலைவனுக்குக் கூறின் என்ன குறைவரும் உனக்கு?-தோழி பாணனி டம் கூறியது.

2. பொருள்: அழகிய நிறமுடைய எருமையுழுத சேற்றில் நெய்தலானது ஆம்பலொடு தழைக்கும் கழனியூரனுக்கு மகளாகிய இவள் பழனவூரனுக்குப் பாயலில் அமைந்த நல்ல துணையாவாள்.

''முளிதயிர் பிசைந்த'' (குறுந்-167) என்பது அடிசிற் றொழிலின்கண் மகிழ்ச்சி வாயில்கள் தம்முட் கூறியது.[1]

''கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ
பழமை பயனோக்கிக் கொல்லோ-கிழமை
குடிநாய்கர் தாம்பல பெற்றாட்கேளா
வடிநாயேன் பெற்றவருள்''

(திணை-நூற்-134)

பல வாயில்களை மறுத்த தலைவி தனக்கு வாயில் நேர்ந்தமை தோழிக்கு விறலி கூறியது.

சிவ

இச் சூத்திரம் தலைவியின் குண நலங்களைத் தலைவனுக்குக் கூறற்குரியார் யார் என்பது உணர்த்துகின்றது.

இ-ள். தலைவியின் கற்புக்குணமும் வேட்கையும் முதலாய வற்றைத் தலைவன் எதிர்சென்று அவன் முகம் நோக்கிக் கூறுத லானது தலைவன் தலைவியர் உறையும் மனைக்கண் அடிக்கடி சென்று பயிலும்வாயில்களுக்கு உரியதாகும் என்பர் முன்னோர்.

வாயில்களாவார் தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, ஏவலர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகியோர்.

இவருள் செவிலி தலைவன் முன்நின்று பேசற்குரியளல்லள் ஆதலின் அகம்புகல் மரபினளாயினும் பொருந்தாள். விருந் தினர் முன்னர் வாராதவராய் இனியும் வாராதவராய் வரும் புதியவராதலின் அகம் புகல் மரபினராகார். அறிவர் மெய்ப் பொருள் காண்பதில் விழைவுடையராதலின் அடிக்கடி அகம்புகல் மரபினர் ஆகார். கண்டோர் என்பார் இடைவழியிற் கண்டவர் ஆதலின் அவரும் அகம்புகல் மரபினராகார். மற்றைய வாயில் களே அகம்புகல் மரபுடையவராவர்.

---

1. வாயில்கள் தம்முட் கூறியதாகக் கொள்வர் இவர். செவிலி நற்றாய்க்குக் கூறியதாகவும் கொள்வர்.

செவிலி கூற்று

151. கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள
நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய வாகும் என்ப. (12)

பி. இ. நூ.

நம்பியகப் 104, இல. வி. 472.

முன்வரு நீதியும் முயங்கியல் முறையும்
பின்வரு பெற்றியும் பிறவும் எல்லாம்
தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கும்
உற்ற அறிவர்க்கும் உரிய என்ப

இனம்

என்—எனின், செவிலிக்குரிய கூற்று வருமாறுணர்த்திற்று.

(இ-ள்) இறந்த காலத்தினும் நிகழ்காலத்தினும் எதிர் காலத்தினும் தன் குலத்திலுள்ளார் வழிகொள்ளுமாறு நல்லவை கூறுதலும் அல்லவை கடிதலுஞ் செவிலிக்கு உரித்து என்றவாறு.

இறந்த கால முதலியவற்றாற் கூறுதலாவது முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றார் இவ்வாறு செய்து தீமை பெற்றார் எனவும் இப்பொழுது இன்னோர் இவ்வாறு செய்து பயன்பெறாநின்றாரெனவும், இவ்வாறு செய்தார் பின்பு நன்மை தீமை பெறுவர் எனவுங் கூறுதல்.

அவை, அறனும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும். அவை யாவன, தலைமகன் மாட்டும் உலகத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறுதல்.[1]

அவை, மனையாளைப் பற்றி வருதலிற் காமதந்திரத்துட் பாரியாதிகார[2]மெனக் கூறப்பட்டன. அறம் பற்றி வருதல்

---

1. தலைமகன் மாட்டும் உலகத்தார் மாட்டும் அறனும் பொருளும் இன்பமும் பற்றி ஒழுகுந்திறம் கூறுதல் என இப் பகுதிக்குப் பொருள் காண்க.
2. பார்யாதிகாரம்-பார்யை-மனைவி-மனைவியைப்பற்றிய அதிகாரம்.

திருவள்ளுவப் பயன் முதலிய சான்றோர் செய்யுட்களுள் அறட் பகுதியிற் கூறப்பட்டன.

உதாரணம்

''தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

(குறள்-56)

எனவும்,

''தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை (குறள்-55)

எனவும்,

''மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''[1]

(குறள்-51)

எனவும்,

''கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்-உட்கி
இடனறிந்தூடி, இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்''[2]

(நாலடி-384)

இதனுள், 'கட்கினியாள்' என்றதனான் கோலஞ் செய்தல் வேண்டுமெனக் கூறியவாறாம்.

எனவும்,

''அடிசிற் கினியாளை அன்புடையாளைப்
படுசொற் பழிநாணுவாளை-அடிவருடிப்

---

1. பொருள்: மனையறத்துக்கு வேண்டிய குணங்களுடையளாய் தன்னைக்கொண்ட கணவனின் வருவாய் வளத்துக்கேற்ற செலவு செய்வாள் யாவள் அவள் வாழ்க்கைத் துணையாவாள்.

2. பொருள்: கண்ணுக்குக் காட்சிக்கு இனியவளாய் காதலன் விருப்பப்படித் தன்னைப் புனைந்து கொள்வாளாய் கற்புச் சிறப்பாற் கண்டார் அஞ்சும் படியுள்ளாளாய், தன் சிறப்புக்கண்டு ஊர் மகளிர் நாணும் சிறப்புடையாளாய், கணவன் உயர்வுக்கு அஞ்சி இடமறிந்து அவனொடு ஊடி இன்பம் மிக அது நீங்கும் மடமொழியுடைய பெண்ணே பெண் ஆவாள்.

பின்துஞ்சி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்துஞ்சுங் கண்கள் எனக்கு''

எனவும்வரும். இவை நல்லவை யுரைத்தல்.

''எறியென்றெதிர் நிற்பாள் கூற்றம், சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி-அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை''[1]

(நாலடி-363)

எனவும்,

''தலைமகனில் தீர்ந்தொழுகல்-தான் பிறர்இல் சேறல்
நிலைமையில் தீப்பெண்டி ரில்சார்தல்-கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்
கோற்றொடியார் கோள்அழியும் ஆறு''

(அறநெறிச்-94)

எனவும் வரும். இந்நிகரன அல்லவை கடிதலாம்.

பிறவும் அன்ன

நச்

இது செவிலிக்குரியவாகுமென்ப. இது செவிலிகூற்று உணர்த்துகின்றது.

இதன்பொருள்:- கழிவினும், வரவினும், நிகழ்வினும் வழி கொள-மூன்று காலத்துத் தத்தங் குலத்திற்கு ஏற்கும்படியாக, நல்லவை உரைத்தலும்-முற்கூறிய கற்பு முதலிய நல்லவற்றைக் கற்பித்தலும் அல்லவை கடிதலும்-காமநுகர்ந்த இன்பமாகிய கற்பிற்குத் தீயவற்றைக் கடிதலும் செவிலிக்கு உரிய ஆகும் என்ப-செவிலித்தாய்க்கு உரியவாகுமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

---

1. பொருள்: கணவனைச் சினமூட்டி 'அடி' என்று எதிர் நிற்பவள் அவனுக்குக் கூற்றம். காலைப்போதில் சமையலறை சென்று சமைத்து உண்பியாதவள் கணவனுக்குநோய். சமைத்ததைப் பரிமாறாதவள் வீட்டில் வாழும்பேய். இம்மூவரும் கணவனைக் கொல்லும் படைபோல்வாராவர்.

உதாரணம்

''காட்சினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளூட்குடையாளூராணியல்பினா-ளூட்கி
யிடனறிந்தூடியினிதினுணரு
மடமொழி மாதராள் பெண்''[1]

(நாலடி-384)

கட்கினியாள், இதுகாமம். வகைபுனைவாள், இது கற்பு. உட்குடையாள், இஃது ஒழுக்கம். ஊராண்மை, இது சுற்றம் ஓம்பல், ஊடியுணர்தல், அல்லவை கடிதல்.

''நாலாறு மாறாய் நனி சிறிதாயெப்புறனு
மேலாறு மேலுரை சோரினு-மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழ மாண்கற்பி
னில்லாளமர்ந்ததேயில்''[2]

(நாலடி-383)

என்னும் வெண்பா விருந்துபுறந்தருதல் கூறியதுமாம்.

இனி 'ஆகும்' என்றதனானே செவிலி நற்றாய்க்கு உவந்துரைப்பனவுங் கொள்க.

''கானங் கோழிக் கவர் குரற்சேவ
லொண்பொறி யெருத்திற்றண் சிதருறைப்பப்
புதலிவர் வாரும் பூநாறுபுறவிற்
சீறூரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செல்லினுஞ்
சேந்து வரலறியாது செம்மறேரே''[3]

(குறுந்-242)

''மறியிடைப்படுத்த மான்பிணை போலப்
புதல்வனடு வணனாக நன்று
மினிது மன்றவவர் கிடைக்கை முனிவின்றி
நீனிற வியலகங் கவைஇய
வீனுமும்பரும் பெறலருங் குரைத்தே''[4]

(ஐங்குறு-401)

---

1. பொருள்: பக்கம் 210ல் காண்க.
2. பொருள்: பக்கம் 46ல் காண்க.
3. பொருள்: பக்கம் 204ல் காண்க.
4. பொருள்: மான் கன்று இடையில் கிடக்க மானும் பிணையும் இருப்பதுபோலப் புதல்வன் இடையிருக்கத்

''வாணுதலரிவை மகன் முலையூட்டத்
தானவள் சிறுபுறங் கவையினனன்று
நறும்பூந்தண்புற வணிந்த
குறும்பல் பொறைய நாடுகிழவோனே''[1]

(ஐங்குறு-404)

இவை உவந்து கூறியன.

''பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகையேந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோ
லுண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பொலிப்பத் தத்துற
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தரோடி
யேவன் மறுக்குஞ் சிறுவிளையாட்டி
யறிவு மொழுக்கமும் யாண்டுணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக்
கொடுத்த தாதை கொழுஞ்சோறுள்ளா
ளொழுகு நீர்நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணுஞ் சிறுமதுகையளே''[2]

(நற்-110)

இது. மனையறங் கண்டு மருண்டு உவந்து கூறியது.

''அடிசிற் கினியாளையன் புடையாளைப்
படுசொற் பழிநாணுவாளை-யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தா
லென்றூங்குங் கண்களெனக்கு''[3]

தலைவனும் தலைவியும் இருக்கும் இடக்கை மிக இனிய தாம். நீலநிற அகன்ற இடமுடைய வானம் போர்த்த இவ்வுலகமும் வானுலகமும் பெறுதற்கரிய இன்பம் அது ஆதலான்.

1. பொருள்: நல்ல பூங்காடுகள் சூழ்ந்த பல குன்றுகளை யுடைய நாட்டுக்கு உரிமையுடைய தலைவன் தன் ஒளி மிக்க நுதலுடைய அரிவையாகிய தன் மனைவி புதல்வ னுக்குப் பாலூட்டத் தான் அவளின் முதுகுபுறமே மிகத் தழுவினான்.

2. பொருள்: பக்கம் 205ல் காண்க.

3. பொருள்: பக்கம் 211ல் காண்க.

என்னும் பாட்டுச் செவிலி கூற்றன்றாயினுந் தலைவன் மனையறங்கண்டு கூறியதன் பாற்படுமெனக் கொள்க.

அறிவர் கூற்று

152. சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய.

பி. இ. நூ.

நம்பியகம் 104, இல. வி. 472.. **(13)**

முன்வரு நீதியும்......அறிவர்க்கும் உரிய

இளம்

என்னுதலிற்றோவெனின் அறிவர் கூற்று நிகழ்த்துமா றுணர்த்திற்று.

இ-ள்: மேற் செவிலிக்குரித்தாகச் சொல்லப்பட்ட கிளவி அறிவர்க்கும்[1] உரிய என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டன

நச்

இஃது, அறிவரது கூற்றுக் கூறுகின்றது.

இதன் பொருள்: முற்கூறிய நல்லவையுணர்த்தலும் அல்லவை கடிதலுமாகிய கிளவி செவிலிக்கேயன்றி அறிவர்க்கு முரிய என்றவாறு.

என்றது, அறியாத தலைவியிடத்துச் சென்று அறிந்தார் முன்னுள்ளோர் அறம் பொருளின்பங்களாற்கூறிய புறப்புறச் செய்யுட்களைக் கூறிக் காட்டுவரென்பதாம்.

உதாரணம்

''தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை'' (குறள்–55)
''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' (குறள்–56)

1. அறிவர் என்பார் தம் அறிவால் மக்கள் அறிவைத் தீநின் நீக்கி நன்றின்பால் உய்ப்பவர்.

இதன்பொருள்:— கிழவனுங் கிழத்தியும் அவர் வரை நிற்ற லின்–தலைவனுந் தலைவியும் அவ்வறிவரது ஏவலைச் செய்து நிற்பராதலின் இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும். அவரைக் கழறி ஓரெல்லையிலே நிறுத்தலும் அவ்வறிவரது தொழிலாகும் என்றவாறு.

அஃது, உணர்ப்புவயின் வாராது ஊடிய தலைவி மாட்டு ஊடினானையும் உணர்ப்புவயின் வாராது ஊடினாளையுங் கழறுப.

''உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயேயிஃதோ
வோரான் வல்சிச் சீறில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
வினிவிழவாயிற் றென்னுமிவ்வூரே''[1]

(குறுந்-295)

இது தலைவனைக் கழறியது.

''மனைமாட்சியில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினுமில்''

(குறள்–52)

இது, தலைவியைக் கழறியது.

தலைவன் ஊடல்

154. உணர்ப்புவரை யிறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய. (15)

பி. இ. நூ.

இறையனார் அகப்பொருள் 45

உணர்ப்புவயின் வாரா வூடல் தோன்றின்
புலத்தல் தானே கிழவற்கும் வரையார்.

தமிழ்நெறி விளக்கம் 25.

கிழவன் புலத்தலும்..... ஆயிடைப் பிரிவே.

1. பொருள்: பக்கம் 216 ல் காண்க,

ஓரான் வல்சிச்சீறில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும் இவ்வூரே''[1]

(குறுந்-295)

இது தலைமகற்குக் கூறியது.

''துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்
பீர்ந்தண் எருமைச் சுவல் படுமுது போத்துத்
தூங்குசேற்றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடிமூதூர்ப்
போர்ச்செறி மள்ளரிற் புகுதரும் ஊரன்
தேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோள்
ஊர்கோள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ இலனென வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அதுபுலந் துறைதல் வல்லியோரே
செய்யோ ளீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட்டுண்டு தமியராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுநர் ஆதலறிந்தும்
அறியார் அம்மவஃதுடலுமோரே''[2]

(அகம்-316)

இது தலைவிக்குரைத்தது.

நச்

இஃது அறிவர்க்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறு கின்றது.

---

1. பொருள்: தலைவ! தழையுடையுடுத்தும் மலர் தொடுத்துச் சூடியும் பொன் அணிகள் பூண்டும் மலரைக் கூந்தலில் செருகியும் பொலிவு பெற்ற பரத்தையர் கூட்டமொடு விழாக் கொண்டு வருகின்றாய். ஆனால் இவ்வூரார், 'இதோ பார்' என்று ஒருவர்க்கொருவர், 'இத்தலைவன் வாழ்க்கை ஒரு பசுவின் வளத்தால் உண்ணும் வறிய வாழ்க்கை; அது இப்பேரழகுக் குறு மகள் வாழ்க்கைத் துணையாக வந்தமையால் இப் பொழுது அவன் விழவயரும் சிறப்புடையதாயிற்று' என்று கூறுவர். இவ்வாறு கூறுவதன் மூலம் அறிவர் தலைமகனைத் தலைவியை நீங்காது ஒழுகுக என தெறிப்படுத்தினார் எனக் கொள்க.
2. பொருள்: பக்கம் 169-170 ல் காண்க.

இதன்பொருள்:- கிழவனுங் கிழத்தியும் அவர் வன்றிநிற்ற லின்-தலைவனுந் தலைவியும் அவ்வறிவரது ஏவலைச் செய்து நிற்பராதலின் இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும். அவரைக் கழறி ஒரெல்லைவயிலே நிறுத்தலும் அவ்வறிவரது தொழிலாகும் என்றவாறு.

அஃது, உணர்ப்புவயின் வாராது ஊடிய தலைவி மாட்டு ஊடினானையும் உணர்ப்புவயின் வாராது ஊடினானையுங் கழறுப.

''உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயேயிஃதோ
வோரான் வல்சிச் சீறில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
வினிவிழவாயிற் றென்னுமிவ்வூரே''[1]

(குறுந்-295)

இது தலைவனைக் கழறியது.

''மனைமாட்சியில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினுமில்''

(குறள்-52)

இது, தலைவியைக் கழறியது.

தலைவன் ஊடல்

154. உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய. (15)

ஒ. இ. நூ.

இறையனார் அகப்பொருள் 45

உணர்ப்புவயின் வாரா வூடல் தோன்றின்
புலத்தல் தானே கிழவற்கும் வரையார்.

தமிழ்நெறி விளக்கம் 25.

கிழவன் புலத்தலும்.... ஊடலும் பிறவே.

1. பொருள்: பக்கம் 216 ல் காண்க.

இளம்

என்-எனின் தலைமகன் புலக்குமிடம் கூறுதல் நுதலிற்று. (இ-ள்) புலவி அண்மைக் காலத்தது, ஊடல் அதனின்மிக்கது. பொருள் சூத்திரத்தான் விளங்கும்''[1]

உதாரணம்

''எவ்வி இழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்தலாரே நினக்கே''[2] (குறுந்-19)

எனவரும்.

நச்

இது, தலைவற்குப் புலவியும் ஊடலும் நிகழுமிடங் கூறுகின்றது.

இதன் பொருள்: உணர்ப்புவரை இறப்பினும்-கற்பிடத்துத் தலைவி ஊடியவழி அவன் தேற்றத் தேறுமெல்லை இகந்தனளாயினும் செய்குறி பிழைப்பினும்-களவின்கட் டலைவி செய்த குறியைத் தானே தப்பினும், புலத்தலும் ஊடலுங் கிழவோற்கு உரிய-உள்ளஞ் சிறிது வேறுபடுதலும் அவ்வேறுபாடு மிக்கு நீடுநின்று தேற்றியக்கால் அது நீங்குதலுந் தலைவற்குரிய என்றவாறு.

எனவே, கற்பிற்கும், களவிற்கும் புலத்தலும் ஊடலுமுரிய என்றார். புலவியும் ஊடலுங் கற்பிற்கே பெரும்பான்மை நிகழ்தலிற் கற்பிற்கு அவை உரியவெல்கின்றார். அவை களவிற்குஞ் சிறுபான்மை உரிமை பற்றிச் சேரக் கூறினார், சூத்திர சுருக்கம் நோக்கி.

---

1. பொருள்: நச்சினார்க்கினியர் எழுதியவாறே கொள்க. அண்மைக் காலத்தது-தோன்றிய சிறிதுகால அளவில் நின்று தீர்வது. ஊடல் தோன்றிய காலத்திலிருந்து நெடுநேரம் இருந்து உணர்த்தத் தீர்வது.

2. பொருள்: நெஞ்சமே! எவ்வி என்னும் வள்ளலை யிழந்தமையால் வறியரான பாணரது தலை அவனால் தரப்படும் தாமரைப் பூவை அணியப் பெறாமல் புல்லென்ற நிலையடைந்தது போல நீயும் புல்லென்று வருந்துக. என்னெனின் மனைத்தோட்டத்து மரத்தில் படரும் முல்லை இரவில் மணப்பது போலும் மணம் மிக்க கூந்தல் உடைய இவள் நமக்கு என்ன உறவுடையவள்? உறவு இல்லை யாதலின்.

"எவ்வியிழந்த வறுமை யாழ்ப்பாணர்"
(குறுந்-19)

இது கற்பிற் புலந்தது.

"தீதிலேமென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தரவில்லாயின்"
(கலி—81)

என்பது ஊடல். பிறவிடத்தும் ஊடுதலறிந்து கொள்க.

"கலந்தநோய் கைம்மிகக் கண்படாவென்வயிற்
புலந்தாயு நீயாகிற் பொய்யானே வெல்குவை"
(கலி-46)

என்பது குறிபிழைத்துழிப் புலந்தது.

"குணகடற்றிரையது பறைதபுநாரை" (குறுந்-128)

என்பதனுள், நாரை தெய்வங் காக்கும் அயிரை இரையை வேட்டாற்போல் நமக்கு அரியளாயினாள் நீ வேட்டாயென்பதனாற் குறிபிழைத்துழி ஊடினமை கூறிற்று. பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்து கொள்க.

தோழி கூற்று

**155. புலத்தலும் ஊடலும் ஆகிய விடத்தும்
சொலத்தகு கிளவி தோழிக்குரிய. (16)**

இளம்

இது தோழிக்குரிய மரபுணர்த்திற்று*

"அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லாவிடல்"[1]
(குறள்—1303)

இது கற்பு.

---

* இச் சூத்திரப் பொருள்: புலவியும் ஊடலும் தலைவன் தலைவியரிடத்துமிக்குத் தோன்றிய போது ஆற்றுவித்தற்குக் கூறும் சொற்கள் தோழிக்கு உரியவாம்.

1. பொருள்: தம்மிடம் புலவி கொண்டவரை அது நீக்கிப் புல்லாது விடுதலானது, முன்னமேயே துன்பமுற்றவரை மேலும் துன்பமான நோயைச் செய்வது போலாகும்.

''கலந்தநோய் கைம்மிகக் கண்படா என்வயின்
புலந்தாயு நீயாயின் பொய்யானே வெல்குவை
இலங்குதாழ் அருவியோ டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறும்
இலங்கேர் எல்வளை இவளுடைய நோயே''[1]

(கலித்-46)

இது களவு.

நச்

இது, முன்னர்த் தலைவன் புலக்குமென்றார், அவ்விடத்துந் தோழியே கூற்று நிகழ்த்துதற்கு உரியளென்கிறது.

இதன் பொருள் : புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும் தலைவன் தலைவியையுந் தோழியையும் அச்சுறுத்தற்குச் செய்கையாகச் செய்து கொண்டு[2] புலத்தலும் அது நீட்டித்து ஊடலும் உடன் நிகழ்த்திய வழியும், சொலத்தகு கிளவி தோழிக்கு உரிய-சொல்லத்தகும் பணிமொழி தோழிக்கு உரிய என்றவாறு.

எனவே, தலைவி குறிப்பறிந்து தோழி கூறுதலன்றித் தலைவி தானே கூறப்பெறாளென்றவாறு. எனவே பாடாண் திணைக் கைக்கிளையாயின் தலைவி கூறவும் பெறுமென்று கொள்க. உம்மை சிறப்பும்மை.

உதாரணம்

''தாயுயிர் வேண்டிக் கூருகிரலவன்
அரிதின்று பரிக்கு மூரயாவதும்
அன்பு மூதலுறுத்த காதல்

---

1. பொருள் : தலைவ! நின்னொடு கலந்ததனால் வந்த காமநோய் இவட்கு மிகுதிப்பட அதுகண்டு கண் துயிலாத என்னை நீ வெறுத்தாய் என்றால் அது கிடக்க; எதிர்நின்று கூறுவதையே எதிரொலிக்கும் நின்மலை போல நீ கூறுவதையே கூறுகின்ற இந்த ஒளி வளையலையுடையாள் கொண்ட நோயைப் பொய் கூறியாயினும் வென்று போக்குவாயாக. நீ உரைத்ததே இவட்கு உரையாகும்.

2. செய்கையாகச் செய்து கொண்டு—செயற்கையாக வருவித்துக் கொண்டு.

இன்றெவன் பெற்றனை பைந்தொடி இறத்தே''[1]

''அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லாவிடல்''[2] (குறள்-1303)

இவை கற்பில் தலைவி குறிப்பினுள் தோழி கூற்று வந்தன.

''புலந்தாயு நீயாகிற் பொய்யானே வெல்குவை''
(கலி-46)

என்று கலவில் தோழி கூறினாள். தலைவி குறிப்பினால்

''கனைபெய னடுநாள்யான் கண்மாறக் குறிபெறாஅன்
புனையிழாயென்பழி நினக்குரைக்குந் தானென்ப
துனிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளிற்றன்
னளிநசைஇ யார்வுற்ற வன்பினேன் யானாக''[3]
(கலி-46)

எனத்தோழி சொல்லெடுப்பதற்குத் தலைவி சிறுபான்மை கூறுத லும் ஈண்டு 'உரிய' என்றதனாற் கொள்க.

''யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூடயானுணர்த்தத் தானுணரான்-றேனூறுங்
கொய்தார் வழுதிக் குளிர்சாந்தணியகல
மெய்தா திராக் கழிந்தவாறு''[4]
(முத்தொள்ளாயிரம்-104)

---

1. பொருள்: தன்னையீனும் தாயின் உயிரைப் போற்றாத கூரிய உகிருடைய நண்டினை நரிதின்று ஓடும் ஊரனே! அன்பை முதலாகக் கொண்டு வந்த காதலை இப்பசுமைத் தொடியுடைய தலைவி மாட்டுப் பெற்றது என்?

2. பொருள் பக்கம் 219ல் காண்க.

3. பொருள்: தோழி! மழைத்துளி பெறும் வேட்கையால் வானத்துமிசையிருந்து பாடும் வானம்பாடிபோல யான் அவரது இருவகைக் குறியிடத்தும் பெறும் அவர் அருளை விரும்பி நிறைந்த அன்புடையேன் யானாக இருக்க அவர் மழை பெய்த நடு இரவில் யான் இடம் மாறிப்போக அதனால் இரவுக் குறிவாய்க்காமல் என் மீது கொண்ட பழியை நினக்கு அவர் உரைப்பர்.

4. பொருள்: தோழியே! தேனூறும் கொய்யப்பட்ட மலர் மாலையுடைய பாண்டியனது அழகிய மார்பை யான் கூடாமலே இராப் பொழுது கழிந்தது எவ்வா றென்றால் முதலில் யான் ஒரு காரணத்தை மேலிட்டு ஊடல் கொள்ள அதை அவர் உணர்த்த நான் தெளியா

இதனுள், யானுணர்த்தத் தானுணரானெனப் பாடாண்திணைக் கைக்கிளையுட்டலைவி கூறியது காண்க.

தோழி கூடிந்துரை

156. பரத்தை மறுத்தல் வேண்டியும் கிழவி
மடத்தகு கிழமை யுடைமை யானும்
அன்பிலை கொடியை யென்றலும் உரியள். (17)

இளம்

இதுவும் தோழிக்கு உரியதோர் இயல்பு உணர்த்திற்று. இது, சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.[1]

உதாரணம்

''மகிழ்செய தேமொழித் தொய்யில்சூழ் இளமுலை
முகிழ்செய முள்கிய தொடர்பவள் உண்கண்
அவிழ்பனி உறைப்பவும் நல்காது விடுவாய்
இமிழ்திரைக் கொண்க கொடியை காண்நீ
இலங்கேர் எல்வளை ஏர்தழை தைஇ
நலஞ்செய நல்கிய தொடர்பவள் சாஅய்ப்
புலந்தழப் புல்லாது விடுவாய்
இலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காண்நீ''[2]

(கலித்-125)

எனவரும்.

தவளாயினேன். அதுகண்டு அவர் என்பால் ஊடல் கொள்ள யான் அவரைத் தெளிவித்தும் தாம் உணரார் ஆயினார். இப்படியே மாறிமாறி ஊடலும் தெளித்தலும் ஆகப் பொழுது கழிந்தது.

1. சூத்திரப் பொருள்: தலைவனின் பரத்தமை யொழுக்கத்தை மறுப்பதற்காகவும், தலைவி அவ்வொழுக்கத்தை மறுக்க அறியாத மடமைப்பட்ட அறிவுக்குரியளாய் இருக்கும் காரணத்துக்காகவும் தோழியானவள் தானே தலைவனிடம் 'நீ எம் தலைவியிடம் அன்புடையையல்லை; இவட்குக் கொடுமையே செய்கின்றாய்' என்று கூறுதற்கும் உரியள் என்றவாறு.

2. பொருள்: தலைவ! மகிழ் செய்யும் தேன்மொழியுடையாளின் இளமுலை தோன்றும் பருவத்தே அவளுடன் கூடிய கூட்டத் தொடர்பை அவளின் கண்கள் நீர் உறைத்துக் காட்டவும் அதற்சாகக் கலங்காமல் விட்டுச்

நச்

இது சொல்லத்தகுங் கிளவியேயன்றிச் சொல்லத்தகாக் கிளவியுந்தோழி கூறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

இதன்பொருள்: பரத்தைமை மறுத்தல் வேண்டியும்—தலைவன் படிற்றுள்ளத்தாற் புறத்து ஒழுகும் ஒழுக்கத்தைப் போக்குதல் விரும்பியும் கிழத்தி மடத்தகுகிழமை உடைமையானும் தலைவி அவன் பரத்தைமை அறிந்தேயும் அவன் கூறிய வற்றை மெய்யெனக்கொண்டு சீற்றங் கொள்ளாது ஒழுகும் மடனென்னுங் குணத்திற்கு ஏற்றன அறிந்தொழுகும் உரிமை யுடையளாகிய எண்மையானும் அன்பிலை கொடியை என்ற லும் உரியள்-தலைவனை அன்பிலையென்றலுங் கொடியை யென்றலு முரியள் தோழி என்றவாறு.

கொடுமை கடையாயினார் குணம். களவினுள் தன் வயினு ரிமையும் அவன் வயிற்பரத்தைமையுங் கோடலின் இதற்குப் பரத்தைமை மறுத்தல் கொள்க.

உதாரணம்

''கண்ட வரில்லென வுலகத்துணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பினுமறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
வண்பரி நவின்றவயமான் செல்வ
நன்கதை யறியினு நயனில்லா நாட்டத்தா
லன்பிலை யெனவந்து கழறுவலையகேள்
மகிழ்செய்தே மொழித் தொய்யில் சூழிளமுலை
முகிழ் செயமுள்கிய தொடர்பவளுண்க
ணவிழ் பனியுறைப் பவுநல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியைகாணீ !
இலங்கேரெல்வளையேர் தழைதைஇ
நலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்

செல்வாயாயினை. நீ மிகக் கொடியை. சேர்ப்பனே! விளங்கும் அழகிய ஒளிமிக்க வளையலையணிந்த இவள் தழையுடையுடுத்தும் இளம் பருவத்தே அழகு மேல்மேல் வளரும்படி நீ புணர்ந்த புணர்ச்சியினை அவள் உடல் வாடி நின்னை வெறுத்து அழாநிற்கக் கண்டும் கைவிடு கின்றாய். நீ கொடியை.

புலந்தழப் புல்லாது விடுவா
யிலங்கு நீர்ச்சேர்ப்ப கொடியை காணீ
இன்மணிச் சிலம்பிற் சின்மொழியைம்பால்
மின்னொடு கெழீஇய தடவர வல்குல்
நுண்வரி வாடவாராது விடுவாய்
தண்ணந் துறைவ தகாஅய் காண்நீ
எனவாங், கனையவளென் றளிமதி பெருமநின்னின்
றிறைவரை நில்லா வளையளிவட்கினிப்
பிறையேர் சுடர்நுதற் பசலை
மறையச்செல்லுநீ மணந்தனைவிடினே''[1]

(கலி-125)

என்னும் நெய்தற் கலி கைகோள் இரண்டிற்கும் கொள்க.

---

1. பொருள்: செல்வ (தலைவ!) உலகத்தில் அறிவிலாதார் தாம் செய்யும் தீவினைகளைக் கண்டவர் இல்லை என்று எண்ணிச் செய்யும் தீவினைகளுள் தம் நெஞ்சறிந்த வினைகளை மறைப்பினும் அவர்தம் நெஞ்சமே சான்றாகும்; வேறு சான்றில்லையாதலின் நின்னை யான் கழறியுரைக்க வேண்டுவதில்லை. ஆயினும் அன்பில்லாதவன், கொடியன் என்று கழறுவேன்; கேள்.

தேமொழியின் இளமுலைகள் தோன்றா முன்பருவத்தில் அவளைக் கூடிய கூட்டத்தை அவளின் கண்கள் பனிவார்ந்து துளிக்கவும் கைவிடுவாய் நீ. அதனால் நீ கொடியை.

ஒளிவளையணிந்தவள் தழையுடையுடுத்திய பருவத்தில் அவளுடன் கூடிய தொடர்பை அவள் உடம்பு மெலிந்து தனித்து அழவும் கைவிடுவாய் ஆனாய்; நீ கொடியை.

சிலம்பும் சில மொழியும் உடைய தலைவியைக் கூந்தலைப் பின்னிவிடும் பருவத்தில் வந்து கூடிய உறவு நீட்டித்து வரவும் அவள் அல்குலில் நுண்ணிய வரி வாடுமாறு கைவிடுவாய்; நீ கொடியை.

தலைவ! அத்தகைய வருத்தம் உடையவள் அவள் என்று எண்ணி அவட்கு அருள் செய்க. நீயில்லையாயின் முன்கை வளையல் நில்லாது விழும்படியாகும். அவளது நுதலில் பசலை மறையும் நீ அவளை மணம் செய்து கொள்ளின். அறிக.

தலைவியின் வேற்றுமைச் சொல்

157. அவன் குறிப்பு அறிதல் வேண்டியும் கிழவி
அகமலி யூடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே. (18)

இளம்

இது தலைவிக்குரியதோர் மரபுணர்த்திற்று.

இ-ள்: தலைவன் குறிப்பறிதல் வேண்டியும் தலைவி தனது அகமலிந்த ஊடல் நீக்குமிடத்தினும் வேற்றுமைக் கிளவி[1] தோற்றவும் பெறும் என்றவாறு.

''யாரிவன் என்கூந்தல் கொள்வான்'' (கலி-83)

எனவும்,

''யாரையோ எம்மில் புகுதருவாய்'' (கலி-98)

எனவும் கூறியவாறு காண்க.

நச்

இது, தலைவிக்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது இதன் பொருள்: அவன் குறிப்பு அறிதல் வேண்டியும்-தோழி அன்பிலை கொடியையெனக் கேட்ட தலைவன் முனிந்த உள்ளத்தனாங் கொல்லோவென ஐயுற்று அவனது குறிப்பை அறிதல் வேண்டியும், அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும் தனது நெஞ்சில் நிறைந்து நின்ற ஊடல் கையிகந்து துனியாகிய வழி இஃது அவற்கு எவனாங் கொல்லென அஞ்சிய வழியும், கிழவி வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறும்-தலைவி தலைவனோடு அயன்மையுடைய சொல்லைத் தோற்றுவிக்கவும் பெறும் என்றவாறு.

உதாரணம்

''நன்னலந் தொலைய நலமிகச்சாஅ
யின்னுயிர் கழியினுமுரைய லவர்நமக்

1. வேற்றுமைக் கிளவி-தன்னிடத்துக் கொண்டிருந்த அன்பு வேறுபட்டார் என்பதைக் குறிக்கும் சொல். தனக்கு உறவினனன்றி வேறுபட்டவன் என்பதைக் குறிக்கும் சொல் எனவும் கொள்ளலாம்.

கன்னையு மத்தனு மல்லரோதோழி
புல்லிய தெவனோவன்பிலங் கடையே''[1]

(குறுந்-93)

இதனுள் அவரை அன்பிலை கொடியையென்னாதி அன்பில் வழி நின் புலவி அவரை என் செய்யும். அவர் நமக்கு இன்றியமை யாத எமரல்லரோவென இருவகையானும் அயன்மை கூறிய வாறு காண்க.

தலைவனின் பணிந்த மொழி

158. காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான. (19)

இளம்

இது, தலைமகற் குரியதோர் மரபுணர்த்திற்று.
இது சூத்திரத்தாற் பொருள் விளங்கும்[2].

உதாரணம்

''ஒருஉ, கொடியியல் நல்லார் குரல் நாற்றத்துற்ற''

என்னும் மருதக் கலியுள்,

''பெரியார்க் கடியரோ ஆற்றாதவர்''

எனத் தலைவி கூறியவழி,

''கடியாதமக் கியார்சொலத் தக்கார் மாற்று''[3]

(கலி-88)

எனவரும்.

---

1. பொருள்: பக்கம் 94ல் காண்க.
2. பொருள்: தலைவனைப் பணிந்த மொழியால் வழி படுதல் உரிமை எக்காலத்தும் தலைவிக்கு இயல்பு ஆகலான் காமம் கையிகந்த காலத்துப் பணிந்தமொழி யாற் கூறுதல் ஆராயும் காலத்துத் தலைமகனுக்கே யுரியதாகும். பணிந்தமொழி—தன்னைத் தாழ்த்திக் கொண்டு கூறும் சொல்.
3. பொருள்: பிரிய வல்ல பெரியோர்க்குப் பிரிவாற்றா தவர் அடியரோ? அன்றே என்றாள் தலைவி. அதற்குத் தலைவன் கடியவர் தமக்குப் பதில் சொல்லத் தக்கவர் யாரிருப்பார் என்றான்.

நச்

இது தலைவி வேற்றுமைக் கிளவி தோற்றிய பின்னர்த் தலைவற்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்:- காமக் கடப்பினுட் பணிந்த கிளவி-அங்ஙனந் தலைவி கண்ணுந் தோழி கண்ணும் வேறுபாடு கண்டுழித் தனக்குக் காமங்கையிகந்துழித் தாழ்ந்து கூறுங்கூற்று, காணுங் காலை கிழவோற்கு உரித்தே-ஆராயுங் காலத்துத் தலைவற்கு உரித்து; வழிபடு கிழமை அவட்கு இயலான-அவனை எஞ்ஞான்றும் வழிபட்டொழுகுதல் தலைவிக்கு இல்லறத்தோடுபட்ட இயல்பாகலான் என்றவாறு.

உதாரணம்

> ''ஆயிழாய், நின்கண் பெறினல்லாலின்னுயிர் வாழ்கல்லா
> வென்கணெவனோ தவறு'' (கலி-88)
>
> ''கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று''
> (கலி–88)
>
> ''நின்னாணை கடக்கிற்பாரியார்''.

என்றாற்போல்வன கொள்க. (கலி-81)

'காணுங்காலை' என்றதனால் தலைவன் தலைவிபெதிர் புலப்பது, தன்றவறு சிறிதாகிய இடத்தெனவும் இங்ஙனம் பணிவது தன்றவறு பெரிதாகிய இடத்தெனவுங் கொள்க.

சிவ

தலைவனை வழிபட்டுப் பணிந்தமொழி கூறுதல் என்பது தலைவிக்கு எப்போதும் இயல்பு ஆதலின் காமக் கடப்பினுள் பணிந்தமொழி கூறுவள் என்பது சிறப்பின்று. ஆதலின் தலைவன் கூறுதலே சிறப்புடைத்து என்பது இச்சூத்திரக் கருத்து.

தலைவியின் அன்புபொதி கிளவி

159. அருண்முந் துறுத்த அன்புபொதி[1] கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே. (20)

---

1. அன்புபொதி கிளவி-அன்பானது வெளிப்படையாகத் தோன்றாதபடி உள்ளே பொதிந்திருப்பச் சொல்லும் சொல்.

இளம்

இது தலைமகட் குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) பொருள்பட மொழிதலாவது பொய்யாக் கூறாது மெய்யே கூறல்.

உதாரணம் வந்தவழிக் காண்க.

நச்

இது, தலைவன் பணிந்து மொழிந்தாங்குத் தலைவியும் பணிந்து கூறுமென்கின்றது.

இதன் பொருள்: அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி-பிறர் அவலங் கண்டு அவலிக்கும் அருள் முன்தோற்றுவித்து அவ்வருள் பிறத்தற்கு ஏதுவாகி எஞ்ஞான்றும் அகத்து நிகழும் அன்பினைக் கரந்து சொல்லுங்கிளவி, பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே-பணிந்தமொழி தோற்றாது வேறோர் பொருள் பயப்பக் கூறுதல் தலைவிக்கும் உரித்து என்றவாறு.

வேறு பொருளாவது தலைவன் கூறியாங்குத் தானும் பணிந்து கூறுவாள். பணியாதே தன்னெஞ்சு தன்னையுங் கைகடந்து அவன் ஏவலைச் செய்ததென்றாற் போலக் கூறுதலுமாம்.

இது 'தன்வயிற் கரத்தலு மவன் வயின்வேட்டலும்' எனப் பொருளியனுள் (205) வழுவமைத்தற்கு இலக்கணம்.

'இணையிரண்டு' என்னும் மருதக்கலி (77)யுள்,

> ''மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல்
> வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல் வேண்டேன்மன்
> னோய் சேர்ந்த திறம்பண்ணு நின்பாணனெம்மனை
> நீசேர்ந்த வில்வினாய் வாராமற்பெறு கற்பின்''[1]

எனக் கூறிய தலைவ,

1. பொருள்: தலைவ! நின்பாணன் நோதிறப் பண்ணை இசைத்து எம்மனைக்கண் வந்து நீ சென்று சேர்ந்த பரத்தையர் மனை யாது என எம்மை வினாவி வாரானாயை யான் பெறுவேனானால் நீலமணியை யிகழ்ந்து பேசும் கூந்தல் மலரில் வண்டுகள் மொய்க்கும்படியாக அழகைப் பெறுவதை யான்வேண்டேன். அதனாற் பயனென்? பாணன் அவ்வாறு வினவாதிரானே

''கடைஇய நின்மார்பு தோயல மென்னு
மிடையுநிலை றயு மெளிதோநிற் காணிற்
கடவு புகைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ
டுடன்வாழ் பகையுடையார்க்கு''[1]

என்புழி, நிற்காணிற் கடவுபு கைத்தங்கா நெஞ்செனவே அவன் ஆற்றாமை கண்டருளி நெஞ்சு ஏவல் செய்ததென வேறொர் பொருள் பயப்பக் கூறித் தன் அன்பினைக் கரந்தவாறு காண்க.

'கூர்முண்முள்ளி' (அகம்-26) என்பதனுட் 'சிறுபுறங்கவை யினன்' என அவன் வருந்தியது ஏதுவாகத்தான் 'மண்போன் றெகிழ்ந்தேன்' என அருண் முந்துறுத்தவாறும், 'இவை பாராட்டிய பருவமும் உள' என அன்பு பொதிந்து கூறிய வாறும், 'ஆண்டும் பணிந்த மொழி வெளிப்படாமல் நெஞ்சறை போகிய அறிவினேற்கு' எனத் தன் அறிவினை வேறாக்கி அதன் மேலிட்டுக் கூறியவாறுங் காண்க.

அலர்

160. களவும் கற்பும் அலர்வரை வின்றே. (21)

இளம்.

என்-எனின், அலர் ஆமாறு உணர்த்திற்று.

இ-ள் களவினுங் கற்பினும் அலராகுமென்று கூறுதல் வரைவின்று என்றவாறு,

'தொகுத்துக் கூறல்' என்பதனாற் களவும் ஈண்டு ஓதப் பட்டது.

உதாரணம்

''கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னுந்
திங்களைப் பாம்பு கொண்டற்று''[2]

(குறள்-1146)

---

1 பொருள்: நின்னைக் காணின் என்னை நின்னிடத்தே செலுத்தினாலும் என்னிடம் தங்காது நின்னிடம் சேர்ந்து வருந்தும் நெஞ்சம் என்னும் உட்பகையுடை யார்க்கு (எனக்கு) என்னைத் தன்பால் சேரும்படிச் செலுத்திய நின்மார்பை இனித்தோயேம் என்று எண் ணும் குணமும் எளிதாக அமையுமோ? அமையாது அன்றோ-இவ்வாறுகூறி ஊடல் தீர்ந்தாள் தலைவி என்க.

2. பொருள்; அவரைப் பார்த்தது ஒருநாளில்தான்; ஆனால்

இது களவு.

''வேதின வெரிநின் ஓதிமுதுபோத்
தாறுசெல்மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்
சுரனே சென்றனர் காதலர் உரனழிந்
தீங்கியான் அழுங்கிய எவ்வம்
யாங்கறிந்தன்றிவ் அழுங்கலூரே''[1]

(குறுந்-140)

இது கற்பு.

நச்

இதுவுந் தலைவிக்குந் தோழிக்கும் உரிய கூற்றுக் கூறுகின்றது.

இதன் பொருள்: களவின் கண்ணுங் கற்பின் கண்ணும் அலரெழுகின்றதென்று கூறுதல் தலைவிக்குந் தோழிக்கும் நீக்கு நிலைமையின்று என்றவாறு.

'வரைவின்று' எனப் பொதுப்படக் கூறினமையான் இருவரையுங் கொண்டாம். தலைவன் ஆங்குக் கூறுவனாயிற் களவிற் கூட்டமின்மையுங் கற்பிற் பிரிவின்மையும் பிறக்கும். ஒப்பக்கூறல் (666) என்னும் உத்தி பற்றிக் களவும் உடனோதினார் சூத்திரஞ் சுருங்குதற்கு. 'களவலராயினும்' (145) எனவும், 'அம்பலு மலரும்' (139) எனவும் களவிற் கூறியவை அலராய் நிகழ்ந்தவழி வேறு சில பொருண்மை பற்றிக் கூறுதற்கு வந்தன. அவை அலர் கூறப்பெறுப என்றற்கு வந்தனவன்றென உணர்க.

உதாரணம்

''கண்டது மன்னுமொரு நாளலர்மன்னுந்
திங்களைப் பாம்பு கொண்டற்று''[2]

(குறள்-1146)

இது களவு.

அதனால் வந்த அவச் சொல் திங்களைப் பாம்பு கொண்ட அலர் போலப் பலராலும் அறியப்பட்டது.

1. பொருள்: ஈர்வாள் போலும் முகுபுறம் உடைய ஆண் ஒந்தியானது வழிப்போம் மக்களுக்கு நல்ல நிமித்தமாக அமையும் சுரவழியே காதலர் சென்றனர். அதனால் என் வலியழிந்து இங்கு யான் கொண்ட துயரத்தை இவ்வூரார் எவ்வாறு அறிந்தனரோ?
2. பொருள் பக்கம் 229-30ல் காண்க.

''வேதினவெரிநி னோதி முதுபோத்
தாறு சென்மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்
சுரனே சென்றனர் காதலருரனழிந்
தீங்கியான்றாங்கிய வெவ்வம்
யாங்கறிந்தன்றிவ் வழுங்கலூரே''[1]

(குறுந்-140)

இது கற்பு.

''கரும்பினெந்திரங் களிற்றெதிர் பிளிறுந்
தேர்வண்கோர்மான்றேனூரன்ன விவ
ணல்லணி நயந்துநீ துறத்தலிற்
பல்லோரறியப் பசந்தன்று நுதலே''[2]

(ஐங்குறு—55)

இது தோழி அலர் கூறியது.

161. அலரில் தோன்றும் காமத்து மிகுதி.[3] (22)

இளம்

உதாரணம்

''ஊரவர் கெளவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந்நோய்'' [4] (குறள்-1147)

எனவரும்.

நச்

இஃது, அலர் கூறியதனாற் பயன் இஃது என்கின்றது.
இதன்பொருள்:- அலரில் தோன்றுங் காமத்து மிகுதி இரு

---

1. பொருள் பக்கம் 230 ல் காண்க.
2. பொருள்: கரும்பாலையானது யானையின் பிளிறலோடு எதிர்த்துப் பேரொலியெழுப்பும்படியான தேர்வண்கோமானது தேனூர் போலும் இவளது நல்ல அழகினை விரும்பிப் பின் துறத்தலினால் இவள் நுதல் பலரும் அறியும்படியாகப் பசந்தது.
3. காமத்துச் சிறப்பே பாடம்.
4. பொருள்: யான் கொண்ட காம நோயாகிய பயிரானது ஊரவர் சொல்லும் அலரே எருவாகவும் அது கேட்டு அன்னை வெகுண்டுரைக்கும் சொல்லே நீராகவும் அமைய வளரா நிற்கும்.

வகைக் கைகோளினும் பிறந்த அலரால் தலைவற்குந் தலைவிக்குங் காமத்திடத்து மிகுதி தோன்றும் என்றவாறு.

என்றது, களவு அலராகிய வழி இடையீட்டிற்கு அஞ்சிய அச்சத்தான் இருவர்க்குங் காமஞ் சிறத்தலுங் கற்பினுட் பரத்தைமையான் அலர் தோன்றிய வழிக் காமஞ் சிறத்தலும் அவள் வருந்துமென்று தலைவற்குக் காமஞ் சிறந்தலுந் தலைவன் பிரிவின்கட் டலைவிக்குக் காமஞ் சிறத்தலும் பிறவுமாம்.

உதாரணம்

''ஊரவர் கௌவையெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந்நோய்''[1] (குறள்-1147)

''நெய்யாலெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பேமெனல்''[2] (குறள்-1148)

என்றாற்போல்வன கொள்க.

162. கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே. (23)

இளம்

இதுவும் அது.

(இ-ள்) கிழவோன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டும் என்றவாறு.

ஆங்கு—அசை

''அகலநீ துறத்தலின் அழுதோவா உண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால்
நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
தமர்பாடுந் துணங்கையுள் அரவம்வந் தெடுப்புமே''[3]
(கலித்-70)

எனவரும்.

---

1. பொருள்: பக்கம் 231 ல் காண்க.
2. பொருள்: அலரால் காமத்தை அவிப்பேம் என்பது நெய்யால் நெருப்பை அவிப்பேம் என்பதுபோலும்.
3. பொருள்: தலைவ! நீ எம்மைப்பிரிய அதனால் உறக்கத்தை மறந்த எம் கண்கள், எம் மெய்யானது புதல்வனைத் தீண்டலால் மூடுதலும் (உறங்குதலும்) கூடும்; ஆனால் அதனை, நீ பரத்தையர்க்கு என்று அமைந்த

விளையாட்டாற் காமமிக்கு உறங்காமை கண்டு கொள்க.

நச்

இதுவுங் காமச்சிறப்பே கூறுகின்றது.

இதன் பொருள்:- கிழவோன் விளையாட்டு-தலைவன் பரத்தையர் சேரியுள் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டும் அவருடன் யாறு முதலியன ஆடியும் இன்பம் நுகரும் விளையாட்டின் கண்ணும், ஆங்கும் அற்று-அப்பரத்தையரிடத்தும் அலரால் தோன்றுங் காமச் சிறப்பு என்றவாறு.

'ஆங்கும்' என்ற உம்மையான் ஈங்கும் அற்றெனக் கொள்க. தம்மொடு தலைவன் ஆடியது பலரறியாதவழி யென்றுமாம். பலரறிந்தவழி அவனது பிரிவு தமக்கு இழிவெனப்படுதலின் அவர் காமச் சிறப்புடையராம். தலைவன் அவரொடு விளையாடிய அலர் கேட்குந்தோறுந் தலைவிக்குப் புலத்தலும் ஊடலும் பிறந்து காமச் சிறப்பெய்தும். ஆங்கும் ஈங்குமெனவே அவ்விருவரிடத்துந் தலைவன் அவை நிகழ்த்தினானாகலின் அவற்குங் காமச் சிறப்பு ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று. இது காமக்கிழத்தியரல்லாத பரத்தையரொடு விளையாடிய பகுதியாகலின் வேறு கூறினார். காமக்கிழத்தியர் ஊடலும் விளையாடலுந் தலைவி ஊடலும் விளையாடலும் 'யாறுங் குளனும்' (191) என்புழிக் கூறுப. அஃது அலரெனப்படாமையின் விளையாட்டுக் கண்ணென விரித்த உருபு வினைசெய்யிடத்து வந்தது.

உதாரணம்

''எஃகுடையெழினலத் தொருத்தியொடு நெருநை
வைகுபுனலயர்ந்தனை யென்பவதுவே
பொய்புறம் பொதிந்தயாங் கரப்பவுங் கையிகந்
தலரா கின்றாற்றானே''[1] (அகம்-116)

''தோடுதோய் மலிர்நிறையாடியோரே'' (அகம்-166)

எனத்தலைவியும் பரத்தையும் பிறர் அலர் கூறியவழிக் காமஞ்

இல்லத்தில் அப்பரத்தையர் ஆடும் துணங்கைக் கூத்தின் ஆரவாரம் தடுத்துவிடும். இதுவே குறை. (துணங்கையாட்ட ஒலி தலைவனை நினைப்பித்து அதனால் உறங்காமை வந்தது.)

1. பொருள்: அழகிய ஒருத்தியுடன் நேற்றுப் புனலாடினாய் என்று கூறுவர்! அச்சொல் பொய் என்று புறம்பே மறைந்து ஒளிக்கவும் எம்மையும் கடந்து அலராகின்றது"

சிறந்து புலந்தவாறு காண்க. ஆண்டுப் பணிந்து கூறுங்காலும் விளையாடுங்காலுந் தலைவன் காமச் சிறப்புக் காண்க.

வாயில்கட்கில்லாதது

163. மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமையைத்
தம்முள வாதல் வாயில்கட் கில்லை. (24)

இளம்

என்-எனின் வாயில்கட் குரியதோர் மரபுணர்த்திற்று.

(இ-ள்) மனைவி மாட்டுக் கிழவோன் கொடுமையைத் தாங்காஅர் கூறல் வாயில்கட்கில்லை யென்றவாறு.

நச்

இது வாயில்கட்கு உரிய இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்:– மனைவி தாட்டலை—தலைவி எத்திறத் தானும் புலந்துழி அவளிடத்து கிழவோன் கொடுமை-தலைவன் கொடுந்தொழில்களை, தம் உள ஆதல்—தம் உரைக்கண் உள வாக்கி உரைத்தல், வாயில்கட்கு இல்லை—தோழி முதலிய வாயில்களுக்கில்லை என்றவாறு.

தாட்டலையென மாறுக, அது பாதத்திடத் தென்னுந் தகுதிச் சொல், அது வாயில்கள் கூற்றாய் வந்தது. உதாரணம் வந்துழிக் காண்க.

வாயில்கட்குள்ள தொன்று

164. மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி யுள்வழி யுண்டே. (25)

இளம்

என்-எனின், இதுவுமது.

(இ-ள்) மனைவி முன்னர்ச் செயலற்றுக் கூறுஞ் சொல் மனைவிக்கு உறுதியுள்வழி வாயில்கட்கு உண்டு என்றவாறு.

உதாரணம்

''இனியவர், வரினும் நோய் மருந்தல்லாய் வாரா
தவணர் ஆகுக காதலர் இவண்நம்
காமம் படர்பட வருத்திய
நோய்மலி வருத்தங் காணன்மா ரவரே''[1]

எனவரும்.

நச்.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது, இன்னுழியாயிற் பெறுமென்றலின்.

இதன்பொருள்: மனைவி முன்னர்க் கையறு கிளவி—தலைவி முன்னர்த் தலைவன் காமக் கடப்பினாற் பணியுந்துணையன்றி நம்மைக் கையிகந்தானெனக் கையற்றுக் கூறுங்கூற்று, மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே-புலந்துவருந் தலைவிக்கு மருந்தாய் அவன் கூடுவதோர் ஆற்றல் உறுதி பயக்குமாயின் அவ்வாயில்கட்கு உளதாம் என்றவாறு.

உதாரணம்

''அறியாமையினன்னை யஞ்சிக்
குழையன்கோதையன் குறும்பைந் தொடியன்
விழவயர் துணங்கை தழூஉகஞ் செல்ல
நெடுநிமிர்தெருவிற் கைபுகு கொடுமிடை
நொதுமலாளன் கதுமெனத் தாக்கலிற்
கேட்போருளர்கொ லில்லைகொல் போற்றென
யாண்டைய பசலை யென்றன னதனெதிர்
நாணிலை யெலுவ வென்று வந்திசினே
செருநரும் விழையுஞ் செம்மலோனென
நறுநுதலரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற்காணாது துணிந்தே''[2]
(நற்றிணை—50)

---

1. பொருள்: இனிமேல் காதலர் வந்தாலும் நோய்க்கு மருந்தாய் அல்லாமல் ஆம். அதனால் அவர் இங்கு வாராமல் தாம் சென்ற அவ்விடத்தாரர்கவே ஆகுக. நம் காமம் நாம் துன்பப்பட வருத்திய நோய்போல் மலிந்த வருத்தத்தை அவர் காணாராகுக-இதை யாரோ ஓர் வாயில் கூறியதாகக் கொள்க.
2. பொருள்: அன்னாய்! நறுநுதல்! தலைவன் குழைய னாய்க் கோதையுடையனாய்ப் பைந்தொடியணிந்து

இதனுள், என்னறியாமையாலே அன்னாய் நின்னையஞ்சியாங்— கள்வன் துணங்கையாடுங் களவைக் கையகப்படுப்பேமாகச் செல்லா நிற்க, அவன் குழை முதலியவற்றை உடையனாய்த் தெருவு முடிந்த இடத்தே எதிர்ப்பட்டானாக அவ்வருளாமையின் யாண்டையது என்கட் பசலை யென்றானாக, அவனெதிரே என் சிறுமை பெரிதாகலான் ஆராயாதே துணிந்து நாணிலை எலுவ. வந்தேனெனத் தோழி மெய்யானும் பொய்யானும் புனைந்துரைத்தவாறு காண்க. ஏனைய வாயில்கள் கூற்று வந்துழிக் காண்க.

இங்ஙனந் தலைவன் சிறைப்புறமாகக் கூறுவன 'அன்பு தலைப் பிரிந்த கிளவி தோன்றின' (179) என்புழிக் கூறுதும்.

முன்னிலைப் புறமொழி

165. முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர். (26)

இளம்

இதுவுமது.

இ-ள் : முன்னிலைப் புறமொழியாகக் கூறுஞ் சொல் எல்லா வாயில்கட்கும் உரிய. பின்னிலை முயலுங்கால் தோன்றும் என்றவாறு.*

முன்னிலைப் புறமொழியாவது முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப் பிறனைக் கூறுமாறு போலக் கூறுதல்.

சென்று பிறரொடு விழாவயரும்போது அவனைக் கையகப்படுத்தக் கருதி யான் செல்ல நமக்கு அயலா னாகிய அவன் நெடுவழி முடிவுபெறும் இடத்து எதிர் வந்துமோத உடனே அவனை நின்னைக் கேட்பார் இலரோ என்று யான்கூற அதைக் கேளாதான்போல என்னிடத்துப் பசலை அழகியது என்றான். அதற்கு யான் எதிர்மொழி கொடுக்க எண்ணி பகைவரும் விரும்பும் தலைமையுடையன் அவன் எனக் கருதாமல் அவனை வணங்காமல் எலுவ! நீ நாணம் உடையை யல்லை எனக் கூறி வந்தேன்.

முன்னிலைப் புறமொழி கூறல் என்பது ஒரு குறை வேண்டிப் பின்னின்று குழையும் காலத்து எல்லா வாயில் களுக்கும் தோன்றும் என்பது.

''உண்கடன் வழிமொழிந் திரங்குங்கால் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்
பண்டுமிவ்வுலகத் தியற்கை''[1]
(கலி-22)

என்றவழி அவ்வுரை தலைமகனை நோக்கியவாறு காண்க.

நச்

இது வாயில்கட்கு உரியதோர் பகுதி கூறுகின்றது.

இதன் பொருள் : முன்னிலைப் புறமொழி—முன்னிலையாய் நிற்கின்ற தலைவனை நோக்கிப் பிறரைக் கூறுமாறு போலக் கூறுதல் எல்லா வாயிற்கும்—பன்னிரண்டு வாயில்களுக்கும் பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்—குறை வேண்டி முயலுங்கால் தோன்றுமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

உதாரணம்

''உண்கடன் வழிமொழிந்திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும் வேறாகுதல்
பண்டுமிவ்வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவதன்றே புலனுடை மாந்திர்''[2]
தாயுயிர் பெய்த பாவைபோல
நலனுடையார் மொழிக் கட்டாவார் தாந்தந்நலந்
தாதுதேர் பறவை யினருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவதெவனோநின் பொருள் வேட்கை''[3]
(கலி-22)

எனத் தலைவனை நோக்கி முன்னிலைப் புறமொழியாகக் கூறிற்று.

---

1. பொருள்: உண்ணுதற்கு வேண்டிக் கடன் பெறும் போது கடன் கொடுப்பார் வழியொழுகுவதாகச் சொல்லி இரக்கும்போது காணப்படும் முகப் பொலிவும், அக்கடனைத் திருப்பிக் கொடுக்க நேரும் போது காணப்படும் முகமும் வேறு வேறாக இருத்தல் முற்காலத்திருந்து வரும் உலக இயற்கையாகும் — இது தோழி கூறியது இக்கூற்று தலைவனை நோக்கியதாகும்.
2. பொருள் : இதே பக்கத்தில் காண்க.
3. பொருள் : நற்குணம் உடையார் தாம் சொன்ன சொல்லில் நிலையாய் நிற்பர்; எதுபோல் எனின் ஓவியம் எழுதுவோர் திறம்படச் சேர்த்த உயிர்த்தன்மை அவ்

கூத்தர் கிளவி

166. தொல்லவை யுரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்
பல்லாற் றானும் ஊடலில் தகைத்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்[1]
அணிநிலை யுரைத்தலும் கூத்தர் மேன * (27)

பி. இ. நூ.

நம்பியகம் 97, இல. வி. 465.

செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலும்
கலனணி புரைத்தலும் காமநுகர் புணர்த்தலும்
புலவிமுதிர் காலைப் புலங்கொள ஏதுவின்
தேற்றலும் செய்ம்மை செப்பலும் பாசறை
மேல்சென் றுணர்த்தலும் மீண்டுவர வுரைத்தலும்
கூற்றரு மரபின் கூத்தற் குரிய.

இளம்

என்-எனின், கூத்தர்க்குரிய திறங்கூறுதல் நுதலிற்று.

இ-ள். தொல்லவை யுரைத்தலாவது-முன்புள்ளார் இவ்வாறு செய்வரெனக் கூறுதல்.

நுகர்ச்சி யேத்தலாவது-நுகர்ச்சியிவ்வாறு இனியதொன்றெனப் புகழ்தல்.

வோவியம் அழியுமளவும் அழியாதிருப்பது போல. நீயும் தாது தேடியுண்ணும் பறவை போல தலைவியின் நலனுண்டு அதனைத் திருப்பித் தருதலிருக்க அது விட்டுப் பொருள் தேடுதலில் நின் வேட்கை சென்றது என்றால் ஏதிலாராகிய யான் கூறுவது என்ன இருக்கிறது? இதில் தாயுயிர். . தாவார் என்பது முன்னிலைப் புறமொழி.

1. துணிவு காட்டலும்-பாடம்.

இச் சூத்திரம் தலைவன் தலைவி இருவரிடத்தும் கூத்தர்க்குரிய கிளவிகள் கூறுவதாக இளம்பூரணர் கொள்ள, நச்சினார்க்கினியர் உறுதி காட்டல்வரை தலைவியைப் பற்றியன என்றும் பின்னர் உள்ளன தலைவனைப் பற்றியன என்றும் கொண்டார். ஆசிரியர் இன்னாரைப் பற்றியன என வரைந்து கூறாமையின் இளம்பூரணர் கருத்தே ஏற்புடையதாம் என்பர் வெள்ளைவாரணனார்.

பல்லாற்றானும் ஊடலிற்றணிதலும் என்பது—பலநெறி யாதும் ஊடலினின்றுந் தலைமகளை மீட்டல், அஃதாவது இவ்வாறு செய்தல் குற்றமென்றானும் அன்புடையார் செய்யா ரென்றானும் மனைக்கிழத்தியர் செயலன்று என்றானும் இவ் வாறு கூறுதல்.

உறுதி[1] காட்டலாவது-இவ்வூடல் தணிந்ததனாற் பயனிது வெனவும் நன்மை பயக்கும் எனவும் கூறுதல்.

அறிவு மெய்ந்நிறுத்தலாவது-தலைமகள் மெய்யின் கண் மிக்க துணிவினாற்[2] கெட்டவறிவை இது நக்கதன்றெ அறிவு கொளுத்துதல்.

ஏதுவினுரைத்தலும்[3] என்பது—இவ்வாறு செய்யின் இவ்வாறு குற்றம் பயக்கும் என ஏதுவினாற் கூறுதல். அதுபிறள் ஒருத்தி கெட்டபடி கூறுதல்.

துணியக் காட்டலாவது-அவள் துணியுமாறு காரணங் காட்டுதல்.

அணிநிலை யுரைத்தலாவது—இவ்வாறு உளதாகிய அழகை யைப் புலரவிடுகின்றதனாற் பயன் என்னையெனக் கூறுதல்.

இவையெல்லாங் கூத்தர் மேலன என்றவாறு. அவர் எல்லா நெறியினானும் புனைந்துரைக்க வல்லராதலான் அவர் மேலன என உரைத்தார். இவற்றிற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு

---

1. உறுதி-பயன், நன்மை.

2. மிக்க துணிவினால்-ஊடுதற்கு மிக்க துணிவால். மிக்க துனியினால் என்றிருத்தல் வேண்டும் என்பர் வெள்ளை வாரணனார். துனி—ஊடல்.

3. ஏதுவின் உணர்த்தலாவது உதாரணம் காட்டியுரைத்தல், உதாரணம் ஒன்றையே காரணமாகக் காட்டியுரைத்தல், இளம்பூரணரின் இவ்வுரையைத் துணிவு காட்டலுக்கும் துணிவு காட்டலுக்குக் கூறிய உரையை ஏதுவின் உரைத்தலுக்கும் கூறுவர் நச்சினார்க்கினியர். ஏது, துணிவு என்னும் இரண்டும் காரணம் என்னும் பொரு ளில் இருவரும் ஆண்டாலும் துணிவு என்பது நிகழ்ச்சி யின் முடிவில் கொள்வது ஆதலின் நச்சினார்க்கினியர் துணிவு என்பதற்கு உதாரணம் எனக் கொண்டதே பொருந்தும். அவர் உரை பார்க்க.

கொள்க. இந்நூல் வழக்குஞ் செய்யுளும் பற்றி நிகழ்தலின், இப்பொருண் மேல்வரும் வழக்குரை[1] உதாரணமாம்.

நச்

இது கூத்தர்க்குரிய கிளவி கூறுகின்றது.

இதன் பொருள்: தொல்லவை உரைத்தலும்–முன்பே மிக்கார் இருவர் இன்பம் நுகர்ந்தவாறு இதுவெனக் கூறலும் நுகர்ச்சி ஏற்றலும்–நுமது நுகர்ச்சி அவரினுஞ் சிறந்ததெனக் கூறலும். பல்: ஆற்றானும் ஊடலில் தணித்தலும்-இல்லறக் கிழமைக்கு இயல்பன்றென்றாயினும் இஃது அன்பின்மையா மென்றாயினுங் கூறித் தலைவியை ஊடலினின்று மீட்டலும் உறுதி காட்டலும்–இல்வாழ்க்கை நிகழ்த்தி இன்பநுகர்தலே நினைக்கும் பொருளென்றலும்.

இனிக் கூறுவன தலைவற்குரிய; அறிவு மெய் நிறுத்தலும்—புறத்தொழுக்கம் மிக்க தலைவற்கு நீ கற்றறிந்த அறிவு இனி மெய்யாக வேண்டுமென்று அவனை மெய்யறிவின்கண்ணே நிறுத்தலும், ஏதுவின் உணர்த்தலும்-இக் கழி காமத்தான் இழிவு தலைவருமென்றதற்குக் காரணங் கூறலும், துணிவு காட்டலும்-அதற்கேற்பக் கழி காமத்தாற் கெட்டாரை எடுத்துக்காட்டலும் அணி நிலை உரைத்தலும்–முலையினுந் தோளினும் முகத்தினும் எழுதுங்காற் புணர்ச்சி தோறும் அழித்தெழுதுமாறு இதுவெனக் கூறலும், கூத்தர்மேன இவ்வெட்டுங் கூத்தரிடத்தன என்றவாறு.

கூத்தர்—நாடக சாலையர். தொன்றுபட்ட நன்றுந்தீதுங் கற்றறிந்தவற்றை அவைக்கெல்லாம் அறியக் காட்டுதற்கு உரிய ராகலிற் கூத்தர் இவையுங் கூறுபவென்றார். இலக்கியம் இக் காலத் திறந்தன.

> ''பொருட்பொருளார் புன்னலந் தோயாரருட்பொரு
> ளாயு மறிவினவர்''

(குறள்—914)

இஃது, அறிவு மெய்ந்நிறுத்தது.

---

1. வழக்குரையும் என உம்மை கொடுத்துக் கூறுக என்பர் வெள்ளைவாரணனார். உம்மை செய்யுளேயன்றி என் பதைக் குறிக்கும்.

கூத்தர் பாணர்

167. நிலம்பெயர்ந் துரைத்தல் அவள்நிலை உரைத்தல்[1]
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை யுரிய. (28)

பி. இ. நூ.

நம்பியகம் 55

.. ..அவன் வயின்
செல்ல விரும்பலும் சென்றவற் குணர்த்தலும்
...........பாணற் குரிய.

இல. வி. 463

நம்பியகச் சூத்திரமே

இளம்

இது, மேற்கூறப்பட்ட கூத்தர்க்குஞ் சொல்லாத[2] பாணர்க்கும் உரிய கிளவி உணர்த்திற்று.

(இ-ள்) நிலம் பெயர்ந்துரைத்தல் என்பது-தலைவன் பிரிந்த விடத்துச் சென்று கூறுதல்.

அவள் நிலையுரைத்தல் என்பது—அவள்[3] நின்ற நிலையைத் தலைவற்குக் கூறுதல்.

''அருந்தவ மாற்றியானுகர்ச்சி போல்'' என்னும் பாலைக் கலியுள்,

''தணியாநோய் உழந்தானாத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி-பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே''[4]
(கலித்-30)

---

1. வரைநிலை யுரைத்தல்-நச். பாடம்.
2. சொல்லாத-இன்னின்ன கிளவிகள் உரிய என முன்னர் வரையறுத்துச் சொல்லப் பெறாத.
3. அவள்-தலைவி.
4. பொருள்: தணியாத காமநோயால் உழந்து அமையாத தகுதியுடையளாகிய தலைவி நின் கழலடியைப் பணிந்து

எனப் பாசறைக் கண் தலைவற்குத் தலைவி வருத்தங் கூறியவாறு காண்க.

நச்

இஃது அதிகாரப்பட்ட கூத்தரோடு பாணர்க்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: நிலம் பெயர்ந்து உறைதல் வரைநிலை உரைத்தல்-தலைவன் சேட்புலத்துப் பிரிந்துறைதலைத் தலைவிக்காக வரைந்து மீளும் நிலைமை கூறுதல், கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய—கூத்தர்க்கும் பாணர்க்கும் யாப்பமைந்தன உரிய என்றவாறு.

யாப்பமைதலாவது: தோழியைப் போலச் செலவழுங்குவித்தல் முதலியன பெறாராகலின் யாழெழீஇக் கடவுள் வாழ்த்தி அவளது ஆற்றாமை தோற்றும் வகையான் எண்வகைக் குறிப்பும்பட நன்னயப்படுத்துத் தலைவற்குக் காட்டல் போல்வன.

உதாரணம்

''அரக்கத்தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மறாஅய்ப் பலவுட
னீயன்மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந்தன்ன குன்றங்கவைஇய
வங்காட்டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப்பிரலை புல்லருந்துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை மருங்கினறும் பூவயரப்
பதவு மேயலருந்து மதவுநடை நல்லான்
வீங்குமாண் செருத்த றீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு
மாலையுமுள்ளா ராயிற்காலை
யாங்கா குவங்கொல் பாணவென்ற
மனையோள் சொல்லெதிர் சொல்லல் செல்லேன்
செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண் மெய்நிறுத்
தவர்திறஞ் செல்வேன் கண்டனென்யானே

சேராத பகைவர் போலப் பெரிதும் வருந்தினாள். அவள் அழகு பெற நீ நின் தேரை அவள்பால் செலுத்து வாயாக.—பாணன் கூற்று.

விடுவிசைப் புரவி வீங்குபரிமுடுகக்
கல்பொரு திரங்கும் பல்வாய் நேமிக்
கார்மழை முழக்கிசை கடுக்கும்
முனைநல் லூரன் புனைநெடுந்தேரே''[1]

(அகம்-14)

இதனுள், தலைவி இரக்கந்தோன்றக் கடவுள் வாழ்த்திப் பிரிந்தோர் மீள நினையா நின்றேனாக அவர் மீட்சி கண்டே னெனப் பாணன் கூறியவாறு காண்க.

கூத்தர் கூற்று வந்துழிக் காண்க.

இளையோர் கூற்று

**168. ஆற்றது பண்பும் கருமத்து வினையும்
ஏவல் முடிபும் வினாவும் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்
தோற்றம் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப. (29)**

பி. இ. நா.

நம்பியகம் 94, இல.வி. 466.

மடந்தை வாயில் வேண்டலும் வாயில்
உடன்படுத் தலுமவள் ஊடல் தீர்த்தலும்
கொற்றவற் காத்தலும் குற்றேவல் செய்தலும்

---

1. பொருள்: பாணனே? உருக்கி வார்த்தால் ஒத்த செந்நிலப் பெரிய வழியிலே காயாவின் வாடிய மலர்கள் பரந்து தம்பலப் பூச்சிகள் ஊரஇருக்கும் காட்சியானது பவளமொடு நீலமணிகள் கலந்திருப்பதுபோல வுள்ள குன்றத்தில் பெண் மானைத் தழுவி ஆண் இரலைமான் அறுகம்புல்லருந்தித்துள்ள, கோவலர் பசுக்களை மேய விட்டு நறிய மலர்களைக் கொண்டு மகிழ, ஆநிரைகள் பால்பிலிற்றும்படிக் கன்றுகளைக் கூவிக் கொண்டு தொழுவங்களிற் புகும்படியான மாலைக்காலத்தில் அவர் வராராயின் அக்காலத்தில் யாம் என் செய்வேம் என்று சொல்லும் மனையோள் சொல்லுக்கு எதிர்சொல் சொல்லாதவனாய், யாழ்ல் செவ்வழிப் பண் இசைத்துக் கடவுள் வாழ்த்தி அத்தலைவன்பால் செல்லத் தொடங் கினேன்; குதிரை விரைய தேர்ச்சக்கரம் பாறையிற் பொருது மேகம் என ஒலிக்கும்படியான பகைப்புலத் திருந்து நல்ல ஊருடையளாகிய தலைவனின் தேரை எதிரே கண்டேன்யான்.

சென்றுமுன் வரவு செப்பலும் பாசறை
ஒன்றிநின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலும் இளையோர் தொழில்என மொழிப.

இளம்

இஃது, இளையோர்க்குரிய கிளவியாமாறுணர்த்திற்று. சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

உதாரணம்

''விருந்தும் பெறுகுநள் போலுந்திருந்திழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி அரிவை
தளிரியற் கிள்ளை இனிதின் எடுத்த
வளராப் பிள்ளைத் தூவிஅன்ன
வார்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவிற்
பறைக்கண் அன்ன நிறைச்சுனைதோறும்
துளிபடு மொக்குள் துள்ளுவன சாலத்
தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவனமாய
வளிசினை உதிர்த்தலின் வெறிகொள்புதாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப அறற்கண் வரித்த
வண்டுண் நறுவீ துமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியுள்
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லு நெடுந்தகைதேரே
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே''[1]

(அகம்—324)

எனவரும். பிறவுமன்ன.

---

1. பொருள்: கிளி வளர்த்த கிளிப்பிள்ளையின் சிறகு போல மழை பெய்து வளர்த்த பசிய பயிர் வளர்ந்த காட்டிடத்து சுனைகளில் மழை பெய்தலால் எழும் மொக்குள் தோன்றி மறைதல் போலச் சேற்றிலே காற்று கிளைகளை உதிர்க்கவீழும் மலர்கள் பொருதலால் எழும் மொக்குள் தோன்றி மறையும்படியாக வீழ்ந்து நீர் அறலில் அழகு செய்யும் வண்டு உண்ணும் மலர்ப்பரப்பைக் கிழித்துக்கொண்டு தலைவனின் தேர்ச்சக்கரம் செல்லும்வழியே பாம்பு ஒன்றன் பின் ஒன்று ஊர்வதுபோல நீர் செல்லும்படியாக நெடுந்தகையின் தேரானது முல்லை கமழும் மாலைக் காலத்தில் நகரைப் புகுதல் தெரிந்து செல்லுகின்றது. அதனால் இனி மடமொழி அரிவையாகிய மனையோள் விருந்தும் பெறுவாள் போலும்.—இளையோர் கூற்று.

நச்

இஃது, உழைக்குறுந்தொழிற்கும் காப்பிற்கும் (171) உரிய ராகிய இளையோர்க்குரிய இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்:— ஆற்றது பண்பும்-தலைவன் தலைவியுடனாயினுந் தானேயாயினும் போக்கு ஒருப்பட்டுழி வழிவிடற் பாலராகிய இளையோர் தண்ணிது வெய்து சேய்த்து அணித்தென்று ஆற்றது நிலைமை கூறுதலும், கருமத்து விளைவும்—ஒன்றாகச் சென்று வந்து செய்பொருண் முடிக்குமாறு அறிந்து கூறுதலும், ஏவல் முடிவும் - இன்னுழி இன்னது செய்க என்று ஏவியக்கால் அதனை முடித்து வந்தமை கூறலும், வினாவும்—தலைவன் ஏவலைத் தாங்கேட்டலும், செப்பும்—தலைவன் வினாவாத வழியும் தலைவிக்காகவாயினுஞ் செப்பத் தகுவன தலைவற்கு அறிவு கூறுதலும், ஆற்றிடைக் கண்ட பொருளும்-செல்சுரத்துக் கண்ட நிமித்தம் முதலிய பொருள்களைத் தலைவற்குந் தலைவிக்கும் உறுதி பயக்குமாறு கூறலும், இறைச்சியும்-ஆண்டு மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவன வற்றை அவ்விருவர்க்குமாயினுந் தலைவற்கேயாயினுங் காட்டியும் ஊறுசெய்யுங் கோண்மாக்களை அகற்றியுங் கூறுவனவும், தோற்றஞ்சான்ற அன்னவை பிறவும்—அங்ஙனம் அவற்குத் தோற்றுவித்தற்கமைந்த அவைபோல்வன பிற கூற்றுக்களும் இளையோர்க்கு உரிய கிளவி என்ப. இளையோர்க்கு உரிய கூற்றென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

தலைவியது செய்தி அறிந்துவந்து கூறுவனவும் பிற பொருளுணர்ந்து வந்துரைப்பனவும் ஒற்றர்கண் அடங்கும். ஏவன் முடிவிற்கும் இஃதொக்கும். 'சான்ற' வென்றதனான் ஆற்றது பண்பு கூறுங்கால் இதுபொழுது இவ்வழிச்சேறல் அமையாதென விலக்கலுங் கருமங் கூறுங்காற் சந்து செய்தல் அமையுமெனக் கூறுதலும் போல்வன அமையாவாம். அவர் அவை கூறப் பெறாராகலின். பிறவாவன;—தலைவன் வருவனெனத் தலைவி மாட்டுத் தூதாய் வருதலும் அறிந்து சென்ற தலைவற்குத் தலைவி நிலை கூறுதலும் மீளுங்கால் விருந்து பெறுகுவள் கொல்லெனத் தலைவி நிலையுரைத்தலும் போல்வன. இலக்கியம் வந்துழிக் காண்க.

''விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென்பணைத்தோண் மடமொழியரிவை
தளிரியற் கிள்ளை யினிதினினெடுத்த
வளராப் பிள்ளைத் தூவியன்ன

வுளர்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவிற்
பறைக்கண் ணன்ன நிறைச்சுனைதோறுந்
துளிபடுமொக்குளெள்ளுவன சாலத்
தெளிபொரு பொகுட்டிற் றோன்றுவனமாய
வளிசினை யுதிர்த்தலின் வெறிகொள்புதாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப வறற்கண் வரித்த
வண்டுணறுவீ துமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியு
ணிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புகறந்தே''[1]

(அகம்—324)

அவைகள் தங்களுக்கு வளராப் பிள்ளை யென்றலுமாம்.

இது பெறுவளென்றது.

ஆற்றது பண்பும், ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சி யும் உடன்போக்கினுங் கற்பினுங் கூறுவனவாதலின் இச்சூத் திரங் கைகோள் இரண்டற்கும் பொதுவிதி.

169. உழைக்குறுந் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்
நடக்கை யெல்லாம் அவர்கட் படுமே. (30)

பி. இ. நா.

நம்பியகம் 94, இல. வி. 466.

மடந்தையை ....
சென்றவற் காத்தலும் குற்றேவல் செய்தலும்
.................இளையோர் தொழில் என மொழிப.

இளம்.

இதுவும் இளையோர்குரிய திறன் உணர்த்திற்று.

(இ-ள்) இடத்தினின்று குற்றேவல் செய்தலும் மெய் காத்த லும் பிறவும் உயர்ந்தோர்க் குளதாகிய நடையெல்லாம் இளை யோர் கட்படும் என்றவாறு. உதாரணம் வந்தவழிக் காண்க.

---

1. பொருள்: பக்கம் 244ல் காண்க,

நச்.

இது முற்கூறியவற்றிற்கு உரியார் இங்ஙனஞ் சிறந்தாரென மேலதற்கோர் புறனடை.

இதன்பொருள்:—உழைக்குறுந் தொழிலும்காப்பும் உயர்ந்தோர்க்கு நடக்கை எல்லாம்-அவரிடத்து நின்று கூறிய தொழில் செய்தலும் போற்றீடு முதலிய பாதுகாவலும் பிறவும் உயர்ந்தோர்க்குச் செய்யுந் தொழிற்பகுதியெல்லாம், அவர்கட்படும்-முற்கூறிய இளையோரிடத்து உண்டாம் என்றவாறு,

என இவ்விரண்டற்குமுரியர் அல்லாத புறத்திணையார் முற்கூறியவை கூறப்பெறாரென்பது பொருளாயிற்று.

தலைவன் செயல்

170. பின்முறை யாகிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்த துணைய கிழவோன் ஆங்கண்
கலங்கலும் உரியன் என்மனார் புலவர். (31)

இளம்.

இது, தலைமகற் குரியதோர் மரபுணர்த்திற்று.

உதாரணம்

''இம்மை உலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்
மாண்தேர் மாமணிகறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பமொடு தளர்பு தளர்போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவஎன் றிழிந்தனன் தாங்காது

மணிபுரைசெவ்வாய் மார்பகம் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி அகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழலின் தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு
தானே புகுதந்தோனே யானது
படுத்தனென் ஆகுதல் நாணி இடித்திவன்
கலக்கினன் போலுமிக் கொடிய னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகித் தலைக்கொண்
டிமிழ்கண் முழவின் இன்சீ ரவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவுந்தவிரான்
கழங்காடாயத் தன்றுநம் அருளிய
பழங்கண்ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே''[1]
(அகம்-66)

எனவரும்.

நச்.

இது மேல் அதிகாரப்பட்ட வாயில் பரத்தையிற் பிரிவொடும் பட்டதாகலின் அது கூறி இனித் தலைவன் பரத்தமை நீங்கு மிடங் கூறுகின்றது.

---

1. பொருள்: தோழீ! தார்மாபனாகிய தலைவன் நேற்று ஒருத்தியோடு மணம் புணரவேண்டித் தன்னையணி கலன்களால் புனைந்தவனாய் இத்தெரு வழியே தேரிற் செல்வோனானான். அத்தேர் மணியோசை கேட்டுக் காணும் ஆசையோடு தளர் நடையிட்டு வந்த புதல்வனைப் பார்த்து, வலவனே தேரை நிறுத்து எனச் சொல்லி இழிந்து புதல்வனது செவ்வாய் தன் மார்பிற் புதையத் தழுவிப் பின்னர், 'பெரும! வீட்டிற்குள் செல்' என விடுக்க அவன் செல்லானாய் அழ, என்னைத் தடுத்த குபேரன் போலும் என அன்புச் சொல் கூறி மகனொடுதான் வீட்டிற் புகுந்தான்; உடனே நான் தான் அவ்வாறு புதல்வனைத் தடுக்கச் செய்தேன் என்று தலைவன் கொள்வானோ என நாணி உடனே இவரை (தலைவனை)த் தடுத்தான் போலும் இக் கொடியவன் என்று கூறி அடிக்கும் கோல் கொண்டு நெருங்க, உடனே மகனைத் தன்பால் அணைத்துக் கொண்டு பரத்தை மனையில் முழங்கும் முழவின் ஒலி வருக வருக எனத் தலைவனை அழைப்பது போல வந்து ஒலிக்கவும் நம் மனையை விட்டு நீங்கானாய் மனை யிலேயே தங்கி விட்டானல்லனோ? அதனால் புதல்வர்ப் பெற்றோர் இம்மையுலகத்துப் புகழோடிருந்து மறுமை யுலக இன்பமும் பெறுவர் என்று பலரும் உரைத்த பழ மொழி உண்மையாதலை யான் வாய்த்தேன்.

இதன் பொருள்:- பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவை-மூவகை வருணத்தாரும் முன்னர்த் தத்தம் வருணத் தெய்திய வதுவை மனைவியர்க்குப் பின்னர் முறையாற் செய்து கொள்ளப்பட்ட பெரிய பொருளாகிய வதுவை மனைவியரை, தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்- பழைதாகிய முறைமையினையுடைய மனைவி விளக்கு முதலிய மங்கலங் களைக்கொண்டு எதிரேற்றுக் கோடற் சிறப்பினும், இன் இழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்-இனிய பூண்களை யணிந்து தொன்முறை மனைவி புதல்வனைக் கோலங்காட்டிய செல்வாள் போலப் பின்முறை வதுவையரிடத்து வாயிலாகக் கொண்டு செல்லினும், கிழவோன் இறந்தது நினைஇ-தலைவன் இங்ஙனஞ் செய்கையுடைய இருவகைத் தலைவியரையுங் கைவிட்டுப் பரத்தமை செய்து ஒழுகியவற்றை நினைந்து, ஆங்கட் கலங்கலும் உரியன் என்மனார் புலவர்-அப்பரத்தையர் கண் நிகழ்கின்ற காதல் நிலை குலைந்து மீளுதலும் உரியன் எனக்கூறுவர் புலவர் என்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான் மீளாமையும் உரித்தாயிற்று. என்னை, இளமைப் பருவங் கழியாத காலத்து அக்காதன் மீளாதாகலின் ''பெரும் பொருள்'' என்றார். வேதநூல் அந் தணர்க்குப் பின்முறை வதுவை மூன்றும் அரசர்க்கிரண்டும் வணிகர்க் கொன்றும் நிகழ்த்தல் வேண்டுமெனக் கூறிற் றென்பது உணர்த்துதற்கு.

இனி மகப்பேறு காரணத்தாற் செய்யும் வதுவையென்று மாம். 'ஆக்கிய' என்றதனானே வேளாளர்க்கும் பின் முறை வதுவை கொள்கை. தொன்மனைவி யென்னாது, 'முறை' என்றதனானே அவரும் பெருஞ்சிறப்புச் செய்து ஒரு கோத்திரத் தாய் ஒன்றுபட்டொழுகுவரென்பது கூறினார்.

இங்ஙனந் தொன்முறையார் பின்முறையாரை மகிழ்ச்சி செய்தமை கண்டு இத்தன்மையாரை இறந்தொழுகித் தவறு செய்தேமேயென்றும் பின் முறையார் அவர் புதல்வரைக் கண்டு மகிழ்ச்சி செய்து வாயில் நேர்ந்த குணம் பற்றி இவரை இறந் தொழுகித் தவறு செய்தேமேயென்றும் பரத்தைமை நீங்குவ னென்றார். 'புகினும்' எனவே பிறர்மனைப் புதல்வரென்பது பெற்றாம். தொன்முறை மனைவி எதிர்ப்பட்டதற்கு இலக்கியம் வந்துழிக் காண்க.

இனி பரத்தைமையிற் பிரிவொழிந்து மனைக்கண் இருந்த தற்கு

உதாரணம்

''மா தருண்கண் மகன் விளையாடக்
காதலிற்றழீஇயினி திருந்தனனே
தாதார் பிரச முரலும்
போதார் புறவினாடுகிழ வோனே''[1]

(ஐங்குறு-406)

இன்னும் இவ்வாறு வருவன பிறவும் உய்த்துணர்ந்து கொள்க.

தலைவி செயல்

**171. தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலையான. (32)**

இளம்

இது, தலைமகட்குரியதோர் கிளவி யுணர்த்திற்று.

(இ-ள்) காமக்கிழத்தி மாட்டுத் தாய்போற் கழறித் தழீஇக் கோடல் மனைக்கிழத்திக்கும் உரித்து கவவால் வருத்தமுற்ற காலத்தென்றவாறு. அஃதாவது புலவாவழி என்றவாறு.*

இவ்வாறு கூறுவது தலைமகன் முதிர்ந்தவழி[2] என்று கொள்க. உம்மை இறந்தது தழீஇயிற்று.[3]

---

1. பொருள்: தேன் உண்ணும் வண்டுகள் ஒலிக்கும் மலர்கள் நிறைந்த காட்டுநிலத்துக்குரிய தலைவன், அன்பிற்குரிய மையுண்ட கண்ணுடைய தன் புதல்வன் தன்எதிர் விளையாட்டில் மகிழத்தான் காதலுடன் தலைவியைத் தழீஇ இனிது இருந்தான.

* தலைவன் முயங்குங் காலத்துத் தன் தவறு எண்ணி வருத்தம் உற அப்போது தலைவி புலவி கொள்ளாதிருந் தால், தலைவனைக் காமக்கிழத்தியர் போலத் தலைவி யும் தாய்போற் கழறித் தழீஇக் கோடல் உரித்து என்பது இதன் கருத்து.

2. தலைமகன் முதிர்ந்தவழி என்பது தலைவன் தவறு நினைந்து வருத்தம்மிக்க விடத்து என்பதையுணர்த்தும். வெள்ளை வாரணனார் 'தலைமகள் முதிர்ந்த வழி' எனக்கொண்டு மனைக்கிழத்தியர் காமக் கிழத்தியரினும் வயதில் முதிர்ந்தவரானவழி என்பர்.

3. புல்லுதல் மயக்கும் (கற்-10) என்னும் சூத்திரத்துக் காமக்கிழத்தியர்க்குக் கூறப்பட்ட 'காத்த சோர்விற்

உதாரணம்

''வயல் வெள்ளாம்பல் சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில்
ஒய்விடு நடைப்பகடாரும் ஊரன்
தொடர்புநீ வெஃகினை யாயின் என்சொற்
கொள்ளல் மாதோ முள்ளெயிற்றோயே
நீயே பெருநலத் தகையே அவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாளெய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகனென்னாரே''[1]

(நற்றிணை-290)

என்பது கொள்க. 'கவவொடு மயங்கிய காலை' என்பதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க.

நச்.

இது, தலைவி புலவி தடைக் கொள்ளுங் காலம் உணர்த்துகின்றது.

இதன்பொருள்:- தாய்போற்கழறித் தழீஇக் கோடல்- பரத்தையிற் பிரிவு நீங்கிய தலைவன் தன்னினும் உயர்ந்த குணத்தினளெனக் கொள்ளுமாற்றான் 'மேனின்று மெய்கூறுங் கேளிராகிய' (கலி-3) தாயரைப் போலக் கழறி அவன் மனக் கவலையை மாற்றிப் பண்டுபோல மனங்கோடல் ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப-ஆராய்ந்த மனையற நிகழ்த்துங் கிழத்திக்கும் உரித்தென்று கூறுப. கவவொடு மயங்கிய காலையான்-அவன் முயக்கத்தால் மயங்கிய காலத்து என்றவாறு.

என்றது, தலைவன் தவற்றிற்கு உடம்பட்டுக் கலங்கினமை தண்ட தலைவி அதற்கு ஆற்றாது தன்மனத்துப் புலவியெல்லாம் மாற்றி இதற்கொண்டும் இனையையாகலெனத் தழீஇக் கொண்டமை கூறிற்று. தலைவன் தன் குணத்தினும் இவள் குணமிகுதி கண்டு மகிழவே தலைவி தன்னைப் புகழ்ந்த குறிப்பு உடையளென்பதூஉங் கொள்க.

கடப்பாட்டாண்மையிற் தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக் காய்வின் றவன்வயிற் பொறுத்தல்'' என்பதைத் தழுவலின் இறந்தது தழீஇயதாயிற்று.

1. பொருள்: பக்கம் 186ல் காண்க.

சிவ.

இது தலைவியின் குணச்சிறப்பு ஒன்று கூறுகின்றது.

(இ-ள்) ஆராயும் அறிவுடன் மனையறம் நிகழ்த்தும் மனைக்கிழத்தியாகிய தலைவிக்கும் தன்னை ஒருகால் தாய் போல் தழீஇக் கொண்ட காமக்கிழத்தியைத் தானும் தலைவனைக் கழறித் தழுவிக்கொள்ளுதல் உரியதாகும் என்பர். எப்போதெனின் காமக்கிழத்தியானவள் தலைவனை முயங்கல் வேண்டும் எனும் எண்ணத்தால் கலக்கமுற்றபோது என்க.

தலைவனை முயங்கப் பெறாமையால் காமக்கிழத்தி வருந்துவதைக் கண்டு, மனைக்கிழத்தியானவள், தான் அவளினும் வயதில் முதிர்ந்தவளாதலினாலும் புதல்வனையீன்றவளாதலினாலும் ஒரு தாய்க்குரிய அன்பு இரக்கக் குணங்களால் தலைவனை இடித்துரைப்பாள் போல் கூறி அவள்பால் இரக்கங் கொண்டு அவளை ஏற்றுக் கோடல் உண்டு என்பதாம்.

கிழத்திக்கும் என்ற உம்மை இறந்தது தழீஇயது. 'புல்லுதல் மயக்கும்' (10) என்னும் சூத்திரத்து காமக்கிழத்தியின் கூற்று நிகழ் இடம் கூறியபோது

''காதற் சோர்வின் கடப்பாட் டாண்மையின்
தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்
காய்வின் றவள்வயிற் பொருத்தற் கண்ணும்''

எனக் கூறியதைத் தழுவியது.

இதற்கு உதாரணம் ''வயல் வெள்ளாம்பல் .... மகன் என்னாரே'' (நற் 260) என்பது. அப்பாடலில் ''ஊரன் தொடர்பு நீ வெஃகினையாயின்'' என வருவது காமக்கிழத்தி தலைவன் பரத்தையிற் பிரிந்து நெடுங்காலம் தன்னிடம் வாராமையைக் குறித்ததாகும். 'அவ்வனே புதுமலர் ஊதும் வண்டென மொழிப மகன் என்னார்' என்றது தலைவனை இடித்துரைத்ததாகும்.

இளம்பூரணர் அவ்வுதாரணப் பாடலின் கீழ் ''கவவொடு மயங்கிய காலை என்பதற்குச்செய்யுள் வந்த வழிக் காண்க'' என எழுதியது பொருந்தாது. 'ஊரன் தொடர்பு நீவெஃகினை யாயின்' என்பது 'கவவொடு மயங்கியது' ஆகும்.

மனைக்கிழத்தியானவள் காமக்கிழத்தியைத் தாய்போல் தழீஇக் கொண்டமைக்குக் காட்டிய 'வயல் வெள்ளாம்பல்' என்னும் நற்றிணைப் பாடலையே காமக்கிழத்தியானவள் மனைக்கிழத்தியைத் தாய்போல் தழீஇக் கோடலுக்கும் உதா

ரணமாகக் காட்டினார் இளம்பூரணர். பாடல் பொதுப்பட இருத்தலின் இடத்துக்கேற்ப இரண்டற்கும் கொள்ளலாம். ஆனால் காமக்கிழத்தி பற்றிக் கூறிய இடத்தில் இப்பாடல் காட்டப்பட்டுக் கீழே "இது காமக்கிழத்தியாகிய தலைமகட்கு முன் வரையப்பட்ட பரத்தை கூற்று." என்பது காணப்படுவது பொருத்தமற்றது. காமக்கிழத்தி கூற்றுக்கூறுமிடத்துப் பரத்தை கூற்று என்பது பொருந்தாது.

இனி நச்சினார்க்கினியர் 'தாய்போற் கழறி'' என்னும் இச் சூத்திரத்து வேறு பொருள் கொள்வர்.

> "தலைவன் தன்னொடு கூடிய கவவுக் காலத்தில் முன்னர்ப் பரத்தமை கொண்டதற்கு வருந்தியபோது, மகனைக் கழறும் தாய்போல இனி இவ்வாறு நடவாதே; இவ்வாறு நடக்க என இடித்துரைத்து அவனைத் தழுவிக் கொள்ளல் தலைவிக்கும் உரியது."

என்பது அவர் உரை. தாய்போல் தழுவிக் கோடல் என்பது தலைவி தலைவனைத் தழுவிக் கொள்ளுதல் என்பதைக் குறிப்ப தாக நச்சினார்க்கினியர் கொண்டார். 'கிழத்திக்கும்' என்பதில் உள்ள உம்மை எதைத் தழுவியது என்று அவர் கூறவில்லை. உதாரணமும் காட்டவில்லை. நற்றிணைப் பாடல் அவர்க்கு ஏற்புடைத்தில்லைபோலும்.

இச்சூத்திரம் தலைவி புலவி கடைக் கொள்ளும் காலம் உணர்த்துகின்றது என்பர் அவர். புலவி கடைக் கொள்ளுதல் பல்வகைக் காலங்களில் நிகழும் ஆதலினாலும் அவற்றுள் ஒன்று தலைவன் தன்னிடம் கூடித் தன் பரத்தமைக்கு வருந்துதல் ஆதலினாலும் இளம்பூரணர் கூறிய 'தலைமகட்குரியதோர் கிளவி கூறுகின்றது' என்பதையே இச்சூத்திரம் நுதலுவதாகக் கொள்ளலாம். அக்கிளவி தலைவியின் குணச் சிறப்பைக் குறிப்ப தாம். அச்சிறப்பு தலைவனைப் புலவாது தழீஇக் கோடல்.

172. அவன்சோர்பு காத்தல் கடன்எனப் படுதலின்
மகன்தாய் உயர்பும் தன்உயர் பாகும்
செல்வன் பணிமொழி யியல்பாகலான. (33)

இளம்

இதுவும் தலைமகட்குரிய கிளவி யுணர்த்திற்று. மேலதற் கோர் புறனடை.

(இ-ள்) தலைமகனது சோர்வு காத்தல் தலைமகட்குக் கடனாகலால் தன் மகனுக்குத் தாயாகிய காமக் கிழத்தியுயர் புந் தன்னுயர்பாகும். இருவருந் தலைமகன் பணித்த மொழி கோடல் இயல்பாகலான் என்றவாறு.

சோர்வாவது ஒழுக்கத்திற் சோர்வு, அது பரத்தையிற் பிரிவு, அதனை மறையாது காமக்கிழத்தி ஆற்றில் தலைமகற்குக் குறைபாடு வரும் என்பதனால் அவனையுயர்த்தி யவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகாமையேற்றுக் கோடல் வேண்டுமெனக் கூறுதலுந் தனக்கு இழிவு ஆகாது உயர்ச்சியாம் என்றவாறு. இதுமேலதற்குக்[1] காரணங் கூறிற்று.

நச்

இதுவுந் தலைவி குணச் சிறப்புக் கூறுகின்றது.

இதன்பொருள்:—அவன் சோர்பு காத்தல் கடன் எனப்படு தலின் தான் நிகழ்த்துகின்ற இல்லறத்தால் தலைவற்கு இழுக்கம் பிறவாமற் பாதுகாத்தல் தலைவிக்குக் கடப்பாடென்று கூறப் படுதலால், மகன் தாய் உயர்பும் தன் உயர்பு ஆகும். மகன் தாயாகிய மாற்றாளைத் தன்னின் இழிந்தாளாகக் கருதாது தன்னோடு ஒப்ப உயர்ந்தாளாகக் கொண்டொழுகுதல் தனது உயர்ச்சியாம். செல்வன் பணிமொழி இயல்பு ஆகலான-தலைவன் இவ்வாறொழுகுகவென்று தமக்குப் பணித்த மொழி நூலிலக் கணத்தான் ஆன மொழியாகலான் என்றவாறு.

ஈண்டு 'மகன்றாய்' என்றது பின்முறையாக்கிய வதுவை யாளை. இன்னும் அவன் சோர்பு காத்தல் தனக்குக் கட னென்று கூறப்படுதலாலே முன்முறையாக்கிய வதுவையாளைத் தம்மின் உயர்ந்தாளென்றும் வழிபாடாற்றுதலும் பின்முறை வதுவையாளுக்கு உயர்பாஞ்செல்வன் பணித்த மொழியா லென்றவாறு, ஈண்டு 'மகன்றாய்' என்றது உயர்ந்தாளை. 'உய்த்துக் கொண்டுணர்தல், (666) என்னுமுத்தியால் இவை யிரண்டும் பொருள். 'செல்வன்' என்றார் பன்மங்கலையும் தன்னாணை வழியிலே இருத்துந் திருவுடைமைபற்றி. இவை வந்த செய்யுட்கள் உய்த்துணர்க.

சிவ

இச்சூத்திரம் காமக்கிழத்தியைத் தாய் போல் தழீஇக் கோடற்குக் காரணமும் அதனால் வரும் சிறப்பும் உணர்த்துதல் நுதலிற்று.

---

1. தாய்போற்கழறித் தழீஇக் கோடற்கு.

(இ-ள்): தலைவனுக்கு உளதாகும் ஒழுக்கக் குறைகளைப் பிறர் அறியாமல் காத்துப் போற்றுதல் தலைவி கடப்பாடு ஆதலினாலும் அவன் தனக்குப் பணித்த மொழிப்படி நடத்தல் இயல்பு ஆதலினாலும் என் மகனுக்கு நீயும் தாய் எனக் காமக் கிழத்தியை உயர்த்துதலும் தன் உயர்குணச் சிறப்பாகும் என்றவாறு.

முன்னைய சூத்திரம் காமக்கிழத்தியைத் தலைவி தாய் போல் தழுவிக் கோடலைக் கூறியதாதலின் இச்சூத்திரம் அதன் காரணம் கூறுதல் நுதலிற்று என இளம்பூரணர் கூறுவது பொருந்துவதேயாம்.

மகன் தாய் உயர்பு தன்உயர்பு என்பனவற்றுக்கு நச்சினார்க் கினியர், நீயும் இம்மகனுக்குத் தாயாவாய் என இளையாளை நோக்கிக் கூறும் உயர்பு மூத்தாளாகிய தலைவியின் உயர்பாகும் என முதல் மனைவியின் செயலாகவும், மகனுக்குத் தாயாகிய மூத்தாளை உயர்த்திப் போற்றுவது இளையாளாகிய தன் உயர் பாகும் என இளைய மனைவியின் செயலாகவும் இருவகையில் உரை கூறி இரண்டும் ஏற்கும் என்பர். மணந்து கொள்ளப்பட்ட இருவரும் ஒருவரையொருவர் உயர்த்துதலினும் மணந்தமனைவி மணவாக் காமக்கிழத்தியை நீயும் மகன் தாய் என உயர்த்து தல் சிறப்பாதலின் நச்சினார்க்கினியர் சிறப்புடையதாகாது பொருந்துவதாயினும்.

வெள்ளைவாரணனார்,

''தலைவனது வாழ்க்கையிற் சோர்வு பிறவாமற் காத்தல் வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியின் கடமையென்று நூல் களிற் கூறப்படுவதால் தாய் போன்று தலைவனை இடித்துரைக் கும் உயர்வினை மகனை பெற்ற தலைவி பெற்றிருந்தாலும் தலைவனது உயர்ச்சியாகவே கருதப்பெறும். எல்லாச் செல் வங்களுக்கும் உரிமையுடையவனாகிய தலைவன் தன்பால் அன் புடையார்கண் பணிந்த மொழியினனாக ஒழுகுதல் அவனுக் குரிய இயல்பாகலான்'' என்று உரை கூறுவர். தலைவன் யாவரிடத்தும் பணிந்த மொழியினன் ஆதலின் தலைவியின் இடித்துரை முறையானது என எண்ணி அதை ஏற்றுப் பணிந்தவ னாதலால் அவனுக்கு உயர்பையே தரும் என்ற கருத்தில் உரை கூறினார் போலும். வெறுக்கும் மனநிலையை இயல்பாகவுடை யவர் உயர்த்துதலே உயர்குணத்தின்பாற்படும் ஆதலின் காமக் கிழத்தியைத் தலைவி உயர்த்துதலே உயர்பாகும் என்னும் உரையே சிறப்புடையதாம்.

தலைவன் பாசறைப் பிரிவு

173. எண்ணரும் பாசறைப் பெண்ணொடும்* புணரார். (34)

பி.இ.நூ.

ந.அக 86, இல. வி. 453.

வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்கும்
குலமுடை மாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப.

இளம்

இது, தலைமகட்குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்) நினைத்தற்கரிய[1] பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்றவாறு.

நினைத்தற் கருமை—மாற்றாரை வெல்லுங் கருத்து மேற் கோடலிற் றலைமகளிரை நினைக்கலாகாதாயிற்று. 'பாசறை' என விசேடித்தவதனால்[2] ஏனைப் பிரிவுக்குமாமென்று கொள்க.

நச்

இஃது எய்தியது விலக்கிற்று. 'முந்நீர் வழக்கம்' (34) என்பதனாற் பகைதணி வினைக்குங் காவற்குங் கடும்பொடு[3] சேறலாமென்று எய்தியதனை விலக்கலின்.

இதன் பொருள்:—எண் அரும்பாசறை-போர் செய்து வெல்லு மாற்றை எண்ணும் அரிய பாசறையிடத்து, பெண்ணொடு புணரார்—தலைவியரொடு தலைவனைக் கூட்டிப் புலனெறி வழக்கஞ் செய்யார் என்றவாறு

இரவும் பகலும் போர்த்தொழின் மாறாமை தோன்ற 'அரும் பாசறை' என்றார்.

---

* பெண்ணொடு என்பதும் பாடம்.

1. நினைத்தற்கரிய—மனைவியரை நினைத்தற்கியலாத

2. எண்ணரும் பாசறை எனப் பாசறையை விசேடித்த வதனால்

3. கடும்பு—சுற்றம்.

''நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே''[1]

(நெடுநல்-186-8)

எனவும்,

''ஒருகை பள்ளியொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து''[2]

(முல்லை-75-6)

எனவும் வருவனவற்றான் அரிதாக உஞற்றியவாறு காண்க[3].

இனிக் காவற்பிரிவுக்கு[4] முறை செய்து காப்பாற்றுதலை எண்ணுமெனப் பொருளுரைக்க

சிவ.

இச் சூத்திரம் மகளிரொடு பாசறைப் பிரிவு இல்லை என்கின்றது.

இ-ள். எண்ணுதற்கரிய பாசறையிடத்து மகளிரொடு செல்ல மாட்டார் என்றவாறு.

இளம்பூரணர் எண்ணரும் பாசறை என்பதற்கு, ''மாற்றாரை வெல்லுதல் கருத்து மேற்கோடலிற் றலைமகளிரை நினைத்தற் கரிதாய பாசறை'' எனப் பொருள் கூறுவர்.

மகளிரை நினைத்தற்கரிய பாசறை என்பதனாலேயே மகளிரொடு சேறல் இல்லை என்பது பெறப்படுமாதலின் மீளவும்

---

1. பொருள்: ''நள் என்னும் ஒலியுடைய நடு இரவிலும் துயில் கொள்ளானாய்த் தனக்குரிய காவல் துணைவர் சிலருடன் சுற்றிவரும் வேந்தனுடைய பல வேந்தரொடு பகை கொண்டு போர்புரிதற்குரிய பாசறையில் செய்யும் தொழில்''. இதில் பாசறையில் வேந்தன் போரையே எண்ணும் நிலை கூறப்பட்டது.
2. பொருள்: ''ஒருகை படுக்கையைப் பற்றியிருக்க ஒரு கையை தன் தலையில் உச்சக்கடகடம் சேரப்படுத்து வெற்றி குறித்து நீண்ட நேரம் நினைந்து''—இதிலும் பாசறையில் வெற்றி குறித்து எண்ணுதல் கூறப்பட்டது.
3. அரிதாக உஞற்றியவாறு-அரிதாக எண்ணிச் செயலாற்றியவாறு.
4. காவற்பிரிவு—நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவு.

பெண்ணொடு புணரார் என்னல் வேண்டுவதன்று ஆதலின் அவ்வுரை பொருந்தாது.

இனி நச்சினார்க்கினியர், 'பெண்ணொடு புணரார்' என்பதற்குத் ''தலைவியரோடு தலைமகனைக் கூட்டிப் புலனெறி வழக்கம் செய்யார்'' எனப் பொருள் கூறியதும் சிறவாது. ஏன்எனின் புலனெறி (செய்யுள்) வழக்கம் செய்யார் என்பதனால் உலகியலில் மகளிரொடு பாசறைச் செல்வர் என்பது பெறப்படும் ஆதலின்.

புறனடை

174. புறத்தோர் ஆங்கண் புணர்வதாகும்[1]. (35)

இளம்.

இது, மேலதற்குப் புறனடை.

இ-ள் : மேற்சொல்லப்பட்ட பாசறைக்கட் புறப்பெண்டிர் புணர்ச்சி பொருந்துவது என்றவாறு.

பொருந்துவது என்றதனாற் கூட்டமென்று கொள்க. அவராவார் தாதியருங் கணிகையரும்.

நச்.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது.

இ-ள் : புறத்தோர் ஆங்கண் - அடியோரும் வினைவலபாங்கினோருமாகிய அகப்புறத் தலைவருடைய பாசறையிடத்தாயில்; புரைவது என்ப - அவரைப் பெண்ணொடு புணர்த்துப் புலனெறி வழக்கஞ் செய்தல் பொருந்துவது என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

இப்பாசறைப் பிரிவை வரையறுப்பவே ஏனைப் பிரிவுகளுக்குப் புணர்த்தலும் புணராமையும் புறத்தோர்க்கு வரைவின்றாயிற்று.

---

1. புரைவதென்ப-நச். பாடம்.
   புறத்தோர் அகனைந்திணைக்குப் புறம்பானோர் என்பர் நச்.

சில.

இச்சூத்திரம் பாசறைக்கண் அழைத்துச் செல்லப்படும் மகளிராவார் யார் என்பது கூறுகின்றது.

இ-ள் : அகவொழுக்கத்துக்குரியரல்லாதோர் பாசறைக் கண் அழைத்துச் செல்லப்படுதல் பொருந்துவதாகும்.

இது பெரும்பாலும் அரசரை நோக்கிக் கூறியதாம். சிறு பான்மை வீரரை நோக்கிக் கூறியதாகவும் கொள்க. புறத்தோராவார் அரசர்க்குப் போரில் விருப்பமும் ஊக்கமும் ஊட்டும் விறலியர், கூத்தியர் முதலிய தொழிலினர். அரசர் போர்மேற் செல்லும்போது அவர்களும் உடன்சென்று ஊக்குவிப்பர். வீரருள்ளும் மறக்குடி வீரராயின் தம் வீரத்தை ஊக்குவிக்கும் விறலியர் துடிமகளிர், கிணை மகளிர் போல்வாரை உடன் அழைத்துச் செல்வர். அவர்கள் புண்பட்ட வீரர்களைப் புண்ணை ஆற்றுதலும் செய்வர்.

> "புறத்திணைப் பணிகளுக்குரிய பெண்டிராயின்
> பாசறையில் தங்கியிருத்தல் பொருந்துவதாகும்
> என்பர் ஆசிரியர் என்றவாறு"

என வெள்ளைவாரணனார் எழுதியவுரையும் இக்கருத்துடையதேயாம்.

புறப்பெண்டிர்ப் புணர்ச்சி அதாவது தாதியரொடும் கணிகையரொடும் புணரும் புணர்ச்சி பாசறைக்கண் பொருந்தும் என இளம்பூரணர் கூறுவது அத்துணைச் சிறப்புடையதன்று. உலகியலில் இப்புணர்ச்சி நிகழ்வதுண்டு என்பதை அவர் மனங் கொண்டு கூறியதாகும் அது.

அகப்புறத் தலைவராகிய அடியோரும் வினைவலரும் ஆகியவர்பற்றிய புலனெறி வழக்காயின் மகளிரொடு பாசறைக் கண் புணர்வதாகச் செய்யுள் செய்யலாம் என நச்சினார்க்கினியர் கூறியதும் ஏற்புடையதன்று. புலனெறி வழக்கொன்று மட்டுமே நோக்கியதன்று இச் சூத்திரம். பாசறையில் பெண் புணர்வு சிறந்த வீரர்க்கு ஆகாது என்பதைக் குறித்தனவே இச் சூத்திரமும் மேலைச் சூத்திரமும் ஆதலின்

பார்ப்பார் கூற்று

175. காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய. (36)

பி. இ. நூ.

நம்பியகம் 190, இல. வி. 468.

இளமையும் யாக்கையும் வளமையும் எனவும்
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலும்
செலவழுங்கு வித்தலும் செலவுடன் படுத்தலும்
பிறவும் எல்லாம் மறையோற் குரிய.

இளம்.

இது, பார்ப்பார்க்குரிய கிளவியுணர்த்திற்று.

(இ—ள்): காமநிலை யுரைத்தலாவது- நீ பிரியின் இவள் காம மிகும் என்று கூறுதல்.

''அறனின்றி அயல்தூற்றும் அம்பலை'' (கலித்- 3)

என்பதனுள்

''உடையிவ ளுயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன''[1]

எனவரும்.

தேர்நிலை யுரைத்தலாவது-ஆராய்ச்சி நிலையாற் கூறுதல். அது வருமாறு.

---

1. பொருள்: நின்னையே உயிராகவுடைய இவள் நீ பிரியின் உயிர் வாழாள் என்று பலவாறாக இடைநின்று யாம் இரந்து கேட்பவும் எம்சொற்களைக் கொண்டிலை. ஆனால் நீ தேர் கடவிச் செல்லும் வழியில் நீர்அற்ற வறிய சுனையில் இலைகளுடன் வாடிய அழகிய மலர் களே நின்னைத் தடுப்பனவாகும். (நீரற்று வாடிய மலர்கள்போல் நாமின்றி அவள் வாடும் என்னும் கருத்தை அக்காட்சி தரும் என்பது கருத்து.)

"வேனி லுழந்த வறிதுயங்கோய்களிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅம்
கானங் கடத்திர் எனக்கேட்பின் யானென்
றுசாவுகோ ஐயசிறிது"

"நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந்தியாழநின்
கைபுனை வல்வில் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப்பதுபோல்
மையில் வாள்முகம் பசப்பூரும்மே"

"நீயே, வினைமாண் காழகம் வீங்கக்கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே
இவட்கே சுனைமாணீலங் காரெதிர் பவைபோல்
இனைநோக் குண்கண்நீர் நில்லாவே"

"நீயே, புலம்பின் உள்ளமொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீவுதியே
இவட்கே, அலங்கிதழ்க் கோடல்வீயுகுபவைபோல்
இலங்கேசுரெல்வளை இறையூரும்மே"

என நின்

"சென்னவை யரவத்து மினையவள் நீநீப்பின்
தன்னலங் கடைகொளப்படுதலின் மற்றிவள்
இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே"[1]

(கலித்–7)

---

1. பொருள்: தலைவ! வேனிற்காலத்தால் உடல் சிறிதாகி வருந்தி ஒய்ந்த களிறு, மழையற்ற இடங்களில் ஊராத பேய்த்தேரை நீர் என்று அவாவும்படியான காட்டிடத்துச் செல்வீர் என யான் கூறக் கேட்பாளாயின் அவளுக்கு நிகழ்வதொன்றை யான் நின்னிடத்து உசாவுவேன்.

நீ, பொருள் ஈட்டும் வினையின்மேற் செல்ல விரும்பி நின்கையிடத்துள்ள வில்லின் நாணைத் தடவுகின்றாய்; இவளுக்கோ எனின், ஒளி செய்யும் மதியிடத்து மேகம் பரவுதல் போல முகத்தில் பசப்பு ஊரா நிற்கும்.

நீ, தொழிற்பாடு அமைந்த ஆடையை இறுகக் கட்டி அம்புகளை ஆராய்கின்றாய்; இவளுக்கோ எனின், நீலமலர் நீர்த்துளியை ஏற்பது போல்க் கண்கள் நீர் சொரிதலை நில்லாவாயின.

நீ, பிரிவதால் தனிமை என்பதில்லாத உள்ளமொடு பொருளீட்டச் செல்வதற்காகத் தேர்ச் சக்கரத்தின்

கிழவோன் குறிப்பினை யெடுத்துக் கூறலும் என்பது—தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறலும் என்றவாறு,

ஆவொடுபட்ட நிமித்தங் கூறலும் என்பது-ஆவொடுபட்ட நிமித்தங் கூறுதலும் என்றவாறு. 'பட்டநிமித்தம்' என்றதனால் எல்லா நிமித்தமுங் கொள்க.

செலவுறு கிளவி என்பது—செலவுற்ற சொல்லும் என்றவாறு. அஃதாவது தலைமகன் போயினான் என்று கூறுதல். இவற்றிற்கு இலக்கியம் வந்தவழிக் காண்க.

செலவழுங்கு கிளவி என்பது-செலவழுங்கல் வேண்டுமெனக் கூறுதல்.

உதாரணம்

*''நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுடி கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்
உறலூறு கமழ்கடாஅத் தொல்கிய எழில்வேழம்

வாயைத் துடைக்கின்றாய்; இவளுக்கோ எனின், விளங்கும் கோடற்பூக்கள் காம்பிற்று. வீழ்பவை போல வளையல்கள் முன்கைகளினின்று வீழ்வன வாயின.

இப்படியாக நீ பொருள் வயிற்பிரிகின்றாய் என்னும் சொல்லளவிலே தன் அழகு இறந்துபடும் காலத்தைப் பெறப்படுதலின் நீ விரும்பிய தேசம் சென்று ஈட்டும் பொருள் இவள் உயிரைத் தருமோ.

கருத்து; இரக்கமற்ற அமைச்சன் அருளின்றி ஒரு தீவினையைக்கூற கொடுமையையே நினைத்த அரசன் அது கேட்டுச் செயல்படும் கொடுங்கோல் போல ஞாயிறு காய, தளர்ந்த வேழம் கலப்பையுழுவது போலத் தன் மருப்பை நிலத்தூன்றிச் சோரும்படியான மலைவெந்த போக்குவரவு அற்ற கொடிய பாலை வழியில் கடந்து செல்லத் துணிந்த நுமக்கு ஒன்று சொல்வேன்.

கேட்பார்க்குப் பயன்தருவதாய் விரல் கவர்ந்து ஒலிக்கும் யாழ் நரம்பின் இடைநரம்பு இறுமானால் ஓசை நிலையில்லாத யாழ்போல நிலையற்ற பொருளை விரும்புவரோ அறிந்தோர்?

தம்மைத் தேடிக் கொண்டவரை கொண்ட காலத்து மகிழ்வுடன் இருக்கச் செய்தது போலின்றித் தாம் கெடுங்காலத்துப் பிறர் எல்லாம் எள்ளும்படிப் போம் பொருளினும் நிலையில்லாத செல்வத்தை விரும்பு வரோ அறிந்தோர்?

வறனுழு நாஞ்சில் போல் மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலைவெம்பிய போக்கறு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின் மற்றைஇய.,

''வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோல்
ஏழுந்தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்
யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ

''மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற்போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறும்
திருவினு நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ

''புரைதவப் பயனோக்கார் தம்மாக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதில் கண்ணோடா துயிர்வெளவும்
அரைசினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ

எனவாங்கு

நச்சல் கூடாது பெரும இச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந்தோம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறழ் வியன்மார்ப அதுமனும் பொருளே''

(கலித்—8)

எனவரும்.

இவை பார்ப்பார்க்குரிய வென்றவாறு. 'ஒருபாற் கிளவி யேனைப் பாற் கண்ணும்' (பொருளியல்-27) வரும் என்பதனால் தோழி மாட்டும் பாங்கன் மாட்டும் கொள்க.

தமக்குவரும் ஆக்கத்தைப் பராமல் தம்மரசர் ஆக்கத்துக்கே முயலும் அமைச்சரை, அளவின்றிக் கோபிக்கும் போது, இரக்கம் காட்டாது அவர் உயிரையும் வவ்வும் அரசைக் காட்டிலும் நிலையில்லாத பொருளை விரும்புவரோ அறிவுடையார்?

தலைவ! நீ பொருளை நச்சுதல் கூடாது. நீ பிரிந்து செல்லுதலைத்தவிர்த்தலை யான் விரும்புவேன். அரசன் காக்க, வருவிருந்தினரைப் பேணித் தன் வீட்டில் மனைவி விரும்பக் கூடியுறையின் அதுவே நிலைத்த பொருளாகும்.

நச்.

இது, பார்ப்பார்க்குரிய கிளவி கூறுகின்றது.

இதன் பொருள்:- காமநிலை உரைத்தலும்-தலைவனது காம மிகுதி கண்டு இதன் நிலை இற்றென்று இழித்துக் கூறுவனவும், தேர்நிலை உரைத்தலும்-அங்ஙனங்கூறி அவன் தேருமாறு ஏதுவும் எடுத்துக்காட்டுங் கூறலும், கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்—தலைவன் தாழ்ந்தொழுகியவற்றை அவன் குறிப்பான் அறிந்து வெளிப்படுத்தி அவற்கே கூறுதலும், ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்-வேள்விக் கபிலை பாற் பயங்குன்றுதலானுங் குன்றாது கலநிறையப் பொழிதலானும் உளதாய நிமித்தம் பற்றித் தலைவற்கு வரும் நன்மை தீமை கூறுதலும், செலவுறு கிளவியும் - அவன் பிரியுங்கால் நன்னிமித்தம் பற்றிச் செலவு நன்றென்று கூறுதலும், செலவு அழுங்கு கிளவியும்-தீயநிமித்தம் பற்றிச் செலவைத் தவிர்த்துக் கூறுதலும், அன்ன பிறவும்-அவை போல்வன பிறவும், பார்ப் பார்க்கு உரிய-அந்தணர்க்கு உரிய என்றவாறு.

'தேர்நிலை' என்றதனால் தேர்ந்து பின்னுங் கலங்கினுங் கலங்காமல் தெளிவுநிலை காட்டலுங் கொள்க. 'அன்ன பிறவும்' என்றதனான்-அறிவர் இடித்துக் கூறியாங்குத் தாமும் இடித்துக் கூறுவனவும் வாயிலாகச் சென்று கூறுவனவும் தூது சென்று கூறுவனவுங் கொள்க. மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் (666) என்பதனாற் களவியலிற் கூறாதனவும் ஈண்டே கூறினார். அஃது இப்பேரறிவு உடையையாயின் இனையையாதற்பாலை யல்லை யெனக் காமநிலை யுரைத்தலும், கற்பினுள்

''இல்லிருந்து மகிழ்வோற் கில்லையாற் புகழெ ன''

(சிற்றெட்டகம்)

தலைவன் நினையுமாற்றாற் காமநிலை யுரைத்தலும் அடங் கிற்று. ஏனையவற்றிற்கும் இருவகைக் கைகோளிற்கும் ஏற்பன கொணர்ந்து ஒட்டுக. 'பார்ப்பான் பாங்கன்' (501) என உடன் கூறினமையிற் பாங்கற்கு ஏற்பனவுங் கொள்க. இவையெல்லாந் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாருஞ் செய்த பாடலுட் பயின்ற போலும். இக்காலத்தில் இலக்கியமின்று. பாங்கன் கூறுவன ''நோய் மருங்கறிநருள்'' அடக்கிக் கொண்டு எடுத்து மொழியப்படுதலன்றிக் கூற்று அவண் இன்மை உணர்க. அது,

"வேட்டோர் திறத்து விரும்பிய நின்பாகனும்
நீட்டித்தாயென்று கடாங்கடுந்திண்டேர்
பூட்டுவிடாஅ நிறுத்து"[1]

(கலி–66)

எனவும் வரும்.

இன்னும் சான்றோர் கூறிய செய்யுட்களில் இதுபோல வருவன பிறனைத்தும் உய்த்துணர்ந்து கொள்க.

சிவ

காமநிலையுரைத்தலாவது தலைவனிடம் நீ பிரியின் இவள் காமம் மிகும் என்று கூறுதல் என இளம் பூரணரும் தலைவனது காம மிகுதிகண்டு அதன் இழிநிலையைக் கூறுதல் என நச்சி னார்க்கினியரும் பொருள் உரைப்பர். காமத்தின் இழிநிலை கூறுவது அதனிற் செல்லாமல் அறச் செயலில் ஈடுபடுத்தற்குக் கூறுவதாம். அது அந்தணர் அல்லது முனிவரது செயலாமே யன்றிப் பாங்கனாகும் பார்ப்பானுக்குரிய தாகாது.

இச்சூத்திரம் பார்ப்பான் தலைவனுக்குக் கூறும் கூற்றுகளைக் கூறுவதாக நச்சினார்க்கினியர் கொண்டார். இளம்பூரணர் காமநிலையுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலும் செலவழுங்குவித்தலும் ஆகியன தலைவன்பாற்கூறும் கூற்று களாகவும், கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும் செலவுறு கிளவியும் ஆகியன தலைவிபாற் கூறும் கூற்றுகளாகவும், ஆவொடுபட்ட நிமித்தம் கூறல் இருவர்பாலும் கூறும் கூற்றாக வும் கொண்டார். வெள்ளைவாரணனார் காமநிலையுரைத் தலும் ஆவொடுபட்ட நிமித்தம் கூறலும் ஆகியன இருவர் பாலும் கூறும் கூற்றுகள் எனவும், தேர் நிலையுரைத்தலும் கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும் செலவுறு கிளவியும் ஆகியன தலைவிபால் கூறும் கூற்றுகள் எனவும் செலவழுங் குவித்தல் தலைவன்பால் கூறும் கூற்று எனவும் கொண்டார்.

தேர்நிலையுரைத்தல் என்பதற்கு இளம்பூரணர், தலைவ னிடம் தலைவியின் காம மிகுதியைக் கூறினும் ஆராய்ச்சி நிலை யால் ஏதுக்கள் காட்டிக் கூறுதல் என்றுகூற, நச்சினார்க்கினியர்

---

1. பொருள்: நீ விரும்பிய பரத்தையரிடத்தே நீ செல்லு தலைத் தானும் விரும்பிய நின் பாகனானவன், நீ இம்மனையிலேயே காலம் தாழ்த்தினாய் என்று கருதி பூட்டுவிடாத தேரை விரைவில் செலுத்தும். அதற்கு முன்னே நீ சென்று அப்பரத்தையர் கோபத்தை நிறுத்துவாயாக.

காமஇழிநிலையை ஏதுக்காட்டிக்கூறுதல் என்றுகூற வெள்ளை வாரணனார் தலைவன் ஊர்ந்துவரும் தேரின் நிலையைக் கூறுதல் என்றார். தலைவனின் செலவு பற்றிக் கூறுவதுபோல வரவு பற்றியும் கூறுதல் உண்டு என்பது சிறக்கும் ஆதலின் வெள்ளை வாரணனார் கூறியது சாலப் பொருந்தும்.

வாயில்களின் கூற்று

176. எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப. (37)

இளம்

இது, வாயில்கட் குள்ளதோர் மரபு உணர்த்திற்று.

இ-ள் : வாயில்கள் எல்லாம் இருவர் மாட்டும் பொருந்திய மகிழ்ச்சிப் பொருண்மையுடைய என்றவாறு,

இருவராவார் தலைவனுந் தலைவியும், எனவே வெகுட்சிப் பொருண்மை கூறப் பெறார் என்றவாறு,

நச்

இது, வாயில்களின் இலக்கணங் கூறுகின்றது.

இ-ள் : எல்லாவாயிலும் - பார்ப்பான் முதலிய வாயில்களெல்லாம். இருவர் தேஎத்தும் புல்லிய-தலைவன் கண்ணுந் தலைவி கண்ணும் பொருந்திய, மகிழ்ச்சிப் பொருள என்ப- மனமகிழ்ச்சிப் பொருளினை நிகழ்த்துதலைத் தமக்குப் பொருளாகவுடையர் என்றவாறு,

எனவே, மகிழ்ச்சி கூறப்பெறாராயிற்று. 'புல்லிய' என்றதனானே விருந்தும் புதல்வரும் ஆற்றாமையும் வாயிலாகுப என்று கொள்க. வாயில்கள் 'தோழி தாயே' (193) என்பதனுட் கூறுப. உதாரணம் வந்துழிக் காண்க.

சிவ

இச்சூத்திரம் வாயில்களின் கூற்றுக்கு உரிய குறிக்கோள் கூறுகின்றது.

எல்லா வாயில்களும் தலைவன் தலைவியரிடையே பொருந்திய இன்பத்தையே அடிப்படைப் பொருளாகக் கொண்டு நிற்கும் என்பர்.

அதாவது இருவரிடையும் இன்பம் சிறக்கவேண்டும் என்னும் கருத்தையே அடிப்படையாகக் கொண்டு வாயில்கள் கூற்று நிகழ்த்துவர் என்பதாம்.

வாயில்களின் மகிழ்ச்சிப் பொருளாவது இன்பத்தைக் குறிக் கோளாகக் கொண்ட பொருள். பாங்கன் கழறல், தோழியின் சேட்படை மறுத்துரை, இயற்பழித்தல் முதலிய யாவும் மகிழ்ச்சிப் பொருளனவேயாகும். அடுத்த சூத்திரத்து வரும் அன்புதலைப் பிரிந்த கூற்றும் மகிழ்ச்சிப் பொருளையே கொண்டதாகும். அன்பு தலைப் பிரிந்த கிளவி என வருவதற்கு அன்பு தலைப் பிரிவது போல காணப்படும் கிளவி என்றே கொள்ளல் வேண்டும். எனவே வாயில்கள் கூற்று மகிழ்ச்சி யையே குறிக்கோளாகக் கொள்ளும் எனக் கொள்க.

''மொழியெதிர் மொழிதல் பாங்கற் குரித்தே''

(41)

என்னும் சூத்திரத்துப் பாங்கன் தலைவனின் மொழிக்கு எதிர் மொழி கூறுமிடத்தும் மகிழ்ச்சிப் பொருளே குறிக்கோளாகும் என்க.

புறனடை

177. அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்
சிறைப்புறங் குறித்தன்று என்மனார் புலவர். (38)

இளம்.

இது மேலதற்கோர் புறனடை.

இ-ள்: வாயில்கண் மகிழ்ச்சிப் பொருண்மை கூறுதலின்றி அன்பு நீங்கிய கிளவி கூறினாராயின் தலைவன் சிறைப்புறத் தானாகப் பெறுவர் எனச் சொல்லுவர் என்றவாறு.

இதுவும் ஓர் இலக்கணம் கூறியவாறு.

நச்.

இது, மகிழ்ச்சிப் பொருளன்றி வாயில்கள் இவ்வாறுங் கூறப் பெறுவரென்றலின் எய்திய திகந்துபடாமற் காத்தது.

இ-ள் : அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றில் — அன்பு இருவரிடத்தும் நீங்கிய கடுஞ்சொல் அவ்வாயில் களிடத்துத் தோன்றுமாகில், சிறைப்புறங் குறித்தன்று என்மனார் புலவர். ஒருவர்க்கொருவர் சிறைப்புறத்தாராகக் கூறல் வேண்டுமென்று கூறுவற் புலவர் என்றவாறு.

'தோன்றின்' என்பது படைத்துக் கொண்டு கூறுவரென்ப தாமாகலின் 'குறித்தன்று' என்பது 'போயின்று' என்பது போல றகரம் ஊர்ந்த குற்றியலுகரம். 'அறியாமையின்' என்னும் (50) நற்றிணைப் பாட்டும் உதாரணமாம். அது சிறைப்புற மாகவுங் கொள்ளக்கிடந்தமையின்.

சிவ.

இச்சூத்திரம் தலைவியின் தற்புகழ்ச்சிக்கு இடம் கூறுகின்றது.

இ-ள்: தலைவிக்குத் தலைவன் முன்னர்த் தன்னைப் புகழ்ந்து கூறும் கூற்று எவ்விடத்து நிலையிலும் இல்லை; ஆனால் முன்னே கூறப்பட்ட தலைவன் பரத்தையிற்பிரிந்து வந்தவழி அவன் தன்னை இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டிடத்து மட்டும் தற்புகழ் கிளவி கிழத்திக்கு உண்டு என்றவாறு.

நச்சினார்க்கினியர், முற்பட்கிளந்த இரண்டு என்பன தாய் போல் கழறித் தழீஇக் கோடல் என்பதும் அவன் சோர்பு காத்தற்கு மகன்தாய் உயர்பு தன் உயர்பாகும் என்பதும் ஆகியன என்றார். தாய்போற் "கழறித் தழீஇக் கோடல்" என்பதற்கு அவர் கூறிய

> ''பரத்தையிற் பிரிவு நீங்கிய தலைவன் தன்னினும்
> உயர்ந்த குணத்தினள் எனக் கொள்ளுமாற்றான்
> மேல்நின்று மெய்கூறும் கேளிராகிய தாயரைப்
> போலக் கழறி அவன் மனக் கவலையை மாற்றிப்
> பண்டுபோல் மனங் கோடல்''

எனும் உரைக்கு ஏற்பத் தலைவி தற்புகழ் கிளவி பொருந்துவ தாகும். ஆனால் அவன் சோர்பு காத்தல் கடன் எனப்படுதலின் ''மகன்தாய் உயர்பும் தன் உயர்பாகும்'' என்பதற்கு அவர் கூறிய

> ''தான் நிகழ்த்துகின்ற இல்லறத்தால் தலைவற்கு
> இழுக்கம் பிறவாமற் பாதுகாத்தல் தலைவிக்குக்

கூடப்பா டென்று கூறப்படுதலால் மகன் தாயாகிய மாற்றாளைத் தன்னின் இழிந்தாளாகக் கருதாது தன்னோடு ஒப்ப உயர்ந்தாளாகக் கொண் டொழுகுதல் தனது உயர்ச்சியாம்.''

என்னும் உரைக்கு அது பொருந்தாது. என் எனின், மாற்றாளை உயர்த்துவதன் மூலம் தன்னை உயர்த்திக் கொண்டாள் என்ப தல்லது தலைவன் முன்னர் அவனினும் தன்னை உயர்த்திக் கொண்டாள் என்பது இல்லையாதலின். அன்றியும் 'மகன்தாய் உயர்பும் தன் உயர்பாகும்' என்பதற்குத் தலைவனின் பின்முறை வதுவையினளாகிய மாற்றாள் மகனுக்குத் தாயாகிய தலைவியை உயர்த்தலும் தன்னை உயர்த்தியதாகும் எனவும் பொருள் கொள்ளலாம் என அவர் கூறியிருத்தலின் அக்கூற்றைத் தலைவி யின் தற்புகழ் கிளவிக்கு ஏற்றல் இயலாதாதலினாலும் அவர் உரை பொருந்தாது என்க.

தலைவியின் தற்புகழ்ச்சி

178. தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக்கு இல்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே. (39)

இனம்.

இது தலைவிக்குரியதோர் மரபுணர்த்திற்று.

இ-ள் : தலைவன் முன்னர்த் தன்னைப் புகழுங் கூற்று எவ் வழியானுங் கிழத்திக்கு இல்லை. முற்படக்கூறிய இரண்டிடமும் அல்லாத வழி யென்றவாறு.

அவையாவன தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலுந் தெளித்தலும் என அகத்திணையியலுட்[1] கூறிய இரண்டும். அவ்வழிப் புகழ்தலாவது.

''ஒரூஉ நீ எம்கூந்தல் கொள்ளல் யாம்நின்னை
வெரூஉதுங் காணுங்கடை''[2] (கலித்-87.

---

1. அகத்திணையியல் 33
2. பொருள் : தலைவ! நின்னைக் காணும்போது யாம் அஞ்சுவேம்; ஆதலின் நீங்குக; எம் கூந்தலைத் தொடா தீர். எம் (எனத் தன்னையுயர்த்தினாள்.)

என்றவழித் தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம். நின்னை வெருவாதார் பிறர் என்னும் உள்ளக் கருத்தினால்.

''நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார் மேல் விளையுமோ கூறு''[1] (கலித்-88)

என்ற வழியும் பெண்டிர் பல உளராயினும் அவர் எல்லார் மாட்டுஞ் செல்லாது தன்மேல் வருமெனக் குறித்தாராதலின், தன்னைப் புகழ்ந்தாளாம்.

பிறவுமன்ன.

நச்.

இது, தலைவி யிலக்கணங் கூறுகின்றது.

இ—ள் : தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்—தன்னைப் புகழ்ந்துரைத்தலைக் கிழவன் முன்னர்ச் சொல்லுதல், எத்திறத் தானுங் கிழத்திக்கு இல்லை—நனிமிகு சீற்றத் துனியினும் தலைவிக்கு இல்லை. முற்பட வகுத்த இரண்டலங் கடையே - முன்பு கூறுபடுத்தோதிய 'தாய்போற் கழறித்தழீஇக் கோடலும்' (173) அவன் சோர்பு காத்தற்கு 'மகன்றாயுயர்பு' தன்னுயர் பாதலும்' (174) அல்லாதவிடத்து என்றவாறு.

கிழத்திக் கில்லையென முடிக்க. அவ்விரண்டிடத்துந் தனது குணச் சிறப்பைக் குறிபோல் தலைவன் முன்னே புகழ்வாள் போல ஒழுகினாளென்றுணர்க.

இனி 'முற்பட வகுத்த இரண்டு' என்பதற்கு இரத்தலுந் தெளித்தலும் (41) என அகத்திணை யியலுட் கூறியனவென்று மாம். தலைவன் முன்னர் இல்லையெனவே அவன் முன்னரல்லா தவிடத்துப் புகழ்தல் பெற்றாம். அவை காமக்கிழத்தியரும் அவர்க்குப் பாங்காயினாருங் கேட்பப் புகழ்தலாம்.

உதாரணம்

''பேணுதகு சிறப்பிற் பெண்ணியல்பாயினும்
என்னோடு புரையுநள் அல்லள்
தன்னொடு புரையுநர்த் தானறிகுநளே''[2]

எனப் பதிற்றுப்பத்தில் வந்தது.

---

1. பொருள் : நீ செய்யும் பொய்ச் சூளுறவு வருத்தம் செய்வதானால் அது நின்பெண்டிர் பலருள்ளும் யார் மேல் நிகழும்; கூறுக. என் மேல் தானே நிகழும்.
2. பொருள் : தனக்கு ஒப்பாவாரைத் தானறியும் அவள்

தலைவன் தற்புகழ்ச்சி

**179. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப. (40)**

இளம்.

இது, தலைவற்குரியதோர் மரபுணர்த்திற்று.

இ—ள் : தலைவி முன்னர்த் தலைவன் றன்னைப் புகழுங் கூற்று, வினைவயிற் பிரியும் வழியுரிய என்றவாறு.

''இல்லென இரந்தோர்க் கொன்றீயாமை இழிவு''
(கலித்—2)

என்றும்

''இல்லிருந்து மகிவோர்க் கில்லையால் புகழ்''
என்று கூறுதல். இவ்வாறு கூறலே 'யான் செய்யேன்'[1] எனத் தன்னைப் புகழ்ந்தவாறாம்.

நச்.

இது,தலைவன் தன்னைப் புகழ்ந்துரைக்கும் இடம் இன்னுழி என்கின்றது.

இ-ள் : கிழவி முன்னர்க் கிழவோன் தற்புகழ் கிளவி—தலைவி முன்னர்த் தலைவன் தன்னைப் புகழ்ந்து கூறுங் கூற்று, வினைவயின் உரிய என்ப-காரியங்களை நிகழ்த்துங் காரணத்திடத்து உரியவென்று கூறுவார் ஆசிரியர் என்றவாறு.

அக்காரணமாவன: கல்வியும், கொடையும், பொருள் செயலும் முற்றகப்பட்டோனை முற்று விடுத்தலுமாகிய காரியங்களை நிகழ்த்துவலெனக் கூறுவன. இவ்வாள்வினைச் சிறப்பை யான் எய்துவலெனத் தன்னைப் புகழவே அது பற்றித் தலைவி பிரிவாற்றுதல் பயனாயிற்று.

''இல்லென விரந்தோர்க் கொன்றீயாமையிளிவென''
(கலி-2)

விரும்பத்தக்க சிறப்பினையுடைய பெண் இயல்பினள் என்றாலும் என்னொடு ஒப்பாவாள் அல்லள்.

1. ஈயாமையைச் செய்யேன், இல்லிருந்து வீணே மகிழ்தலைச் செய்யேன்.

என்ற வழி, யான் இளிவரவு எய்தேனென்றலிற் புகழுக்குரியேன் யானேயெனக் கூறியவாறு காண்க. ஏனையவும் வந்துழிக் காண்க.

சிவ.

இச் சூத்திரம் தலைவன் தன்னைப் புகழும் இடம் உணர்த்துகின்றது.

இ-ள் : தலைவன் தலைவி முன்னர்த் தன்னைப் புகழும் கூற்று அவன் அவளைப் பிரியும் வினையை அவளிடம் கூறும் போதாகும் என்றவாறாம்.

தலைவன் தன்னைப் புகழ்தல் வேண்டுவதில்லை. தலைவன் புகழ்க்குச் சோர்வு காத்தல் தலைவியின் கடன் என்பதைத் திருவள்ளுவரும் ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்னும் குறட்பாவில் குறித்துள்ளமையால் தலைவி தலைவனின் உயர்புகழ் அறிந்தவளேயாதலின் அவள் முன்னர் அவன் தற்புகழ்தல் தேவையற்றதாம். ஆனால் அவன் பிரியும்போது அப்பிரிவுக்கு ஆற்றாத நிலையில் அவன் அவளைத் தேற்று முகத்தான் தன்னைப் புகழ்தல் தகும் என்பதாம்.

எதிர்மொழி

180. மொழியெதிர் மொழிதல் பாங்கற் குரித்தே. (41)

பி. இ. நூ.

நம்பியகம் 100, இல. வி. 468.

இளமையும் யாக்கையும் வளமையும் ஏனவும்
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலும்
செலவழுங்கு வித்தலும் செலவுடன் படுத்தலும்
பிறவும் எல்லாம் மறையோற் குரிய.

இளம்.

இது பாங்கற்குரியதோர் மரபுணர்த்திற்று.

இது களவிற்கும் கற்பிற்கும் பொது. ஒப்பக்கூறல்[1] என்னும் உத்தி வகையாற் கூறப்பட்டது.

---

1. ஒப்பக்கூறல்-ஒரு பொருளுக்கு இலக்கணம் கூறும்போது அதனையொத்த பிறிதொரு பொருளுக்கும் ஒக்குமாறு ஓரிடத்தில் கூறுதல்.

இ-ள்; தலைவன் கூறியவழி எதிர் கூறுதல் பாங்கற்கு உரித்து என்றவாறு. எதிர்கூறுதலாவது மாறுபடக் கூறுதல் அவை களவு காலத்துக் கழறலுங் கற்புக் காலத்துப் பரத்தையிற் பிரிவிற்கு உடம்படாது கூறலும் இவை போல்வனவும்.

உதாரணம்

''காமங் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணித்தலும் இன்றே யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே''[1]

என்றும். (குறுந்–136)

''பொருள் பொருளார்ப் புன்னலந் தோயார் அருள் பொருள்
ஆயும் அறிவி னவர்''[2]

(குறள்–314)

என்றும் வரும்.

நச்

இது, மேற் பார்ப்பார்க்குரியன பாங்கற்குமாமென எய்து வித்ததனை ஒருமருங்கு மறுக்கின்றது.

இதன் பொருள்: மொழியெதிர் மொழிதல்–பார்ப்பானைப் போலக் காமநிலையுரைத்தல் போல்வன கூறுங்கால் தலைவன் கூறிய மொழிக்கு எதிர் கூறுதல், பாங்கற்கு உரித்து - பாங்க னுக்கு உரித்து என்றவாறு.

இது களவிற்கும் பொது! அது பாங்கற் கூட்டத்துக் காண்க. கற்பிற் புறத்தொழுக்கத்துத் தலைவன் புகலாமற் கூறுவன

---

1. பொருள்: உலகர் தீயதுகண்டு அஞ்சுமாறு போலக் காமம் காமம் எனக் கூறுவர். காமமானது பேயும் இல்லை; நோயும் இல்லை. கூரியதாகி பெருகுவதும் சுருங்குவதும் இல்லை. குளவி என்னும் இரை தின்ற போது யானைக்கு மதம் வெளிப்படுவதுபோலக் காமமும் ஒருகாலத்தில் வெளிப்படும்பாங்கும் உடையது. இது அறியும் ஆற்றலுடையாரைப் பெறின் புலப்படும்.
2. பொருள்: அருளாகிய சிறப்புப் பொருளை ஆராயும் பெரியோர் பொருளையே பொருளாகக் கருதும் வரைவின் மகளிரின் புல்லிய அழகைப் புணரார்.

வந்துழிக் காண்க. 'உரித்து' என்றதனால் தலைவன் இடுக்கண் கண்டுழி எற்றினான் ஆயிற்றென அவன் மொழிக்கு முன்னே வினாதலுங் கொள்க.

181. குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும். (42)

இளம்.

இதுவுமது.

இ-ள்: மேற் குறித்ததற்கு எதிர் கூறுதல் அருகித் தோன்றும் என்றவாறு, அது வந்தவழிக் காண்க.

நச்.

இதுவும் பாங்கற்குரியதோரிலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: குறித்து எதிர் மொழிதல்–தலைவன் குறிப்பினை அவன் கூறாமல்தான் குறித்துணர்ந்ததற்கு எதிர்மொழி கொடுத்தல். அஃகித் தோன்றும்–சுருங்கித் தோன்றும் என்றவாறு.

அவன் குறிப்பறிந்து கூறல் சிறுவரவிற்றெனவே 'காமநிலையுரைத்தல்' (177) என்னுஞ் சூத்திரத்தின்கட் கூறிய 'ஆவொடு பட்ட நிமித்தம்' ஆயின் பார்ப்பான் கூறக்கேட்டுத்தான் கூறவும் பெறுமெனவும் ஏனையவுங் கிழவன் கூறாமல் தானே கூறவும் பெறுமெனவுங் கூறியவாறாயிற்று.

சிவ.

இச் சூத்திரம் பாங்கன் தலைவனிடம் கூற்று நிகழ்த்தும் போது கொள்ளும் குணம் கூறுகின்றது.

இ-ள்: தலைவன் கூற்றுக்கு எதிராக நீ இப்படித்தான் நடத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டுக் கூறுதல் சிறுபான்மையாய்த் தோன்றும் என்றவாறு.

எதிர் குறித்து மொழிதல் என மாறுக. குறித்து மொழிதலாவது ஆணைபோல் மொழிதல்.

அஃகித் தோன்றும் என்பதற்கேற்ப உதாரணமும் இன்றாயிற்று.

தலைவன் வன்புறை

**182. துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை. (43)**

பி. இ. நூ.

நம்பியகம் 88

இளம்.

இது தலைவற் குரியதோர் மரபு உணர்த்திற்று.

இ-ள்: துன்புறு பொழுதினும் எல்லாப் பிரிவினும் தலைவன் தலைவியை வற்புறுத்தியல்லது சேறல் இல்லையென்றவாறு

துன்புறு பொழுதாவது களவுக்காலம். களவினும் கற்பினும் பொது என்றவாறு.

நச்.

இது, முன்னர்க் கிழவி முன்னர் (181) என்பதனாற் குறிப்பினான் ஆற்றுவித்துப் பிரிதல் அதிகாரப்பட்டதனை ஈண்டு விளங்கக் கூறி வற்புறுத்துமென்கின்றது.

இதன் பொருள்: துன்பு உறுபொழுதினும் உணர்த்தாது பிரிந்து தலைவி துன்பம் மிக்க பொழுதினும் உம்மையான் உணர்த்திப் பிரிந்து துன்பம் மிகாதபொழுதினும், எல்லாம் சுற்றமுந்தோழியும் ஆயமுந் தலைமகள் குணமாகிய அச்சமும் நாணமும் மடனுமாகியவற்றையெல்லாம், கிழவன் வன்புறுத்து அல்லது சேறல் இல்லை-தலைவன் வலியுறுத்து அல்லது பிரியான் என்றவாறு.

எனவே இவற்றை முன்னர் நிலைபெறுத்திப் பின்னர்ப் பிரியுமாயிற்று. செல்லாது பிரியுங்கால், போழ்திடைப்படாமன் முயங்கியு மதன்றலைத் தாழ்கதுப் பணிந்து முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீ நீரைக் கள்ளினு மகிழ் செய்யுமெனவுரைத்தும் (கலி-4) இவை முதலிய தலையளி செய்து, தெருட்டிப்பிரிய அவை பற்றுக்கோடாக ஆற்றுதலின் அவள் குணங்கள் வற்புறுத்துவன ஆயின.

இனி உலகத்தார் பிரிதலும் ஆற்றியிருத்தலுமுடையரென உலகியலாற் கூறலும் பிரிவுணர்த்திற்றேயாம். இனிப் பிரிவினை விளங்கக் கூறி ஆற்றியிருவென்றலும் அவற்றை வற்புறுத்தலாம்

''யாந்தமக் கொல்லோ மென்ற தப்பற்குச்
சொல்லா தகறல் வல்லு வோரே''[1] (குறுந்-79)

இது சொல்லாது பிரிதல்.

''அரிதாயவறனெய்தி'' (கலி-11). இது சொல்லிப் பிரிதல்.

சிவ

இச்சூத்திரம் தலைவன் தலைவியை வன்புறையாற் பிரியுங் காலம் உணர்த்துகின்றது.

(இ—ள்); தலைவி களவிலும் கற்பினும் துன்புறும் காலங்கள் எல்லாவற்றிலும் தலைவன் அவள் ஆற்றுமாறு வற்புறுத்தி யல்லது பிரிதல் இல்லை என்றவாறு.

துன்புறுபொழுதின் எல்லாமும் என உம்மையை மாற்றி யுரைக்க.

'துன்புறு பொழுதினும்' என்பது களவுப் பிரிவைக் குறிப்ப தாகவும் 'எல்லாம்' என்பது கற்புப் பிரிவுகளைக் குறிப்பதாக வும் இளம்பூரணர் கொண்டார். அதனினும் யான் கூறியவாறு கொள்வதே சிறக்கும்.

நச்சினார்க்கினியர், 'துன்புறு பொழுதினும்' என்பதற்கு,

''உணர்த்தாது பிரிந்து தலைவி துன்பம் மிக்க பொழுதினும், உம்மையான் உணர்த்திப் பிரிந்து துன்பம் மிகாத பொழுதினும்''

எனவுரைத்தது சிறவாது. உணர்த்தாது பிரியுங்கால் தலைவியு டன் முயங்கும்போது முன்னையினும் அதிகம்தலையளிசெய்தமை யைத் தெருட்டியதாக (வற்புறுத்தியதாக)க் கொள்வர் அவர். அக்காலம் துன்புறுபொழுதாக ஆகாது. முன்னையினும் செய்த தலையளி அவன் பிரிந்த பின்னர் நினைந்து துன்புறக் காரண மாகுமேயன்றி வனபுறையாகாது. எல்லாம் என்பதற்கு அவர், சுற்றமும் தோழியும் ஆயமும் தலைவியின் குணங்களாகிய நாண் மடம் அச்சமும் எனக் கொண்டு அவற்றை வலியுறுத்திப் பிரிவான் எனக் கூறியதும் சிறவாது; வற்புறுத்தலுக்கு அவை யெல்லாம் காரணமாக அமைதலால் என்க.

---

1. பொருள்: யாம் தமது பிரிவிற்கு இசையோம் என்ற தவறுக்காக நம்மிடம்சொல்லாமலே பிரியவல்லவர்க்கு.

செலவழுங்கல்

183. செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும். (44)

பி. இ. நூ.

நம்பியகம் 88

தலைவி தன்னையும் தன்மனம் தன்னையும்
அலமரல் ஒழித்தற்கு அழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லான் அல்லன்.

இல. வி. 456

நம்பியகச் சூத்திரமே.

இளம்

இதுவுமது.

இ-ள் : தலைவன் போகக் கருதித் தவிர்தல் போகாமை[1] யன்று, தலைவியை வற்புறுத்துதலைக் குறித்துத் தவிர்ந்த தவிர்ச்சியாம் என்றவாறு.

எனவே வினைமேற் செல்லுங் காலத்துத் தலைவி பொறாள் எனப் போகாமை இல்லை, வற்புறுத்திப்போம் என்ற வாறாம்.

நச்

இது செலவழுங்கலும் பாலையாமென்கின்றது:

இதன் பொருள்:- செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே—தலைவன் கருதிய போக்கினை இடையிலே தவிர்ந் திருத்தல் பிரிந்துபோதல் ஆற்றாமைக்கன்று, வன்புறை குறித் தல் தவிர்ச்சி ஆகும். தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்குத் தவிர்ந்த தவிர்ச்சியாகும் என்றவாறு.

"மணியுரு விழந்த வணியிழை தோற்றங்
கண்டே கடிந்தனஞ் செலவே யொண்டொடி
யுழையே மாகவு மினைவோள்
பிழையலண் மாதோ பிரிதுநா மெனினே"[2]
(அகம்—5)

---

1. போகாமையன்று—போகாமைக்கு அன்று.
2. பொருள்: அணியிழையுடையளாகிய தலைவியின் மணி போலும் நிறமுடைய உடம்பின் பொலிவிழப்பைக்

''களங்காய்க் கண்ணி நார்முடிச்சேர
லிழந்த நாடெந்தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலெடுயானே''[1]
(அகம்-199)

இவை வன்புறை குறித்துச் செலவழுங்குதலிற் பாலையாயிற்று.

வினைவயின் தலைவன் மரபு

**184. கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும். (45)**

இளம்.

இ-ள்: உரையாமை யாவது[2] உருவு வெளிப்பாடு. அதனை வினை நிகழுமிடத்து உரைக்கப் பெறார். தலைமக்கள் தமது வினை முடிந்த காலத்து விளங்கித் தோன்றுமென்றவாறு,

எனவே, வினையிடத்துள் நினைப்பாராயினும் அமையும். உரைக்கப் பெறார் என்பதூஉம், வென்றிக் காலத்துக் குற்றமறத் தோன்றும் என்பதூஉம் கொள்ளப்படும்.

உதாரணம்

''தங்கிய ஒள்ளொளிவோலையதாய்த் தடமா மதின்மேல்
பொங்கிய வேந்தர் எரிமுகந்தோன்றின்றுபோது
கண்மேற்
பைங்கயல் பாய்புனற் பாழிப் பற்றாரைப் பணித்த
தென்னன்
செங்கயலோடு சிலையுங் கிடந்த திருமுகமே''[3]
(பாண்டிக் கோவை)

எனவரும்.

கண்டே பிரிந்து செல்லுதலைத் தவிர்ந்தேன். ஏன் எனின் இப்போது பக்கத்தில் இருக்கும்போதே வருந்துகிறாள்; நாம் பிரிவோம் எனின் உயிர்வாழாள்.

1. களங்காய் கண்ணி நார் முடிச்சேரன் என்பான் தான் இழந்த நாட்டை மீளப் பிடித்தாற்போல பெரும் பொருளைப் பெறுவதாயிருந்தாலும் நெஞ்சே நின்னோடு வாரேன்.

2. உரையாமையாவது-உரையாமைக்குரிய பொருளாவது. அது உருவெளிப்பாடு. அது கிழவி நிலை எனப்பட்டது.

3. பொருள்: மலர்கள்மீது கயல்பாயும் நீருடைய பாழி என்னும் ஊரில் பகைவரைப் பணிவித்த பாண்டியனது

நச்.

இஃது, அகத்திணையியலுட் 'பாசறைப் புலம்பலும்' (41) என்றார், ஆண்டைப் புலம்பல் இன்னுழியாகாது இன்னுழியா மென வரையறை கூறுகின்றது.

இதன் பொருள்: கிழவி நிலையே வினையிடத்து உரையார்–தலைவியது தன்மையை வினைசெய்யா நிற்றலாகிய விடத்து நினைந்து கூறினானாகச் செய்யுள் செய்யப் பெறார். வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்–வெற்றி நிகழுமிடத்தும் தான் குறித்த பருவம் வந்துழியும் தூதுகண்டுழியும் வருத்தம் விளங்கிக் கூற்றுத் தோன்றிற்றாகச் செய்யுள் செய்ப என்றவாறு.

'உரையார்' எனவே நினைத்தலுள தென்பதூஉம் அது போர்த்திறம் புரியும் உள்ளத்தாற் கதுமென மாயுமென்பதூஉங் கொள்க. வினையிடம்–வினைசெய்யிடம், காலத்துமென்னும் எச்சவும்மை தொக்குநின்றது. அன்றி அங்ஙனம் பாடங் கூறலும் ஒன்று.

உதாரணம்

* ''வேளாப் பார்ப்பான் வாளரந்து மித்த
வளைகளைந் தொழிந்த கழுந்தி னன்ன

கயலும் வில்லும் கிடந்த (கண்ணும் புருவமும் உள்ள) தலைவியின் முகமானது, பெரிய மதில் மீது சினந்து வந்த பகைவேந்தர்கள் ஒளியே ஒலையாக (விறகாக) அமைந்து எரிந்துள்ள இப்போர் முகத்தில் எனக்கெதிரே தோன்றும்.

* பொருள்: நன்னுதலரிவையானவள், வேள்வி செய்யாத ஊர்ப் பார்ப்பான் அரிய அரத்தால் அறுத்து வளையல்கள் ஆக்கி ஒழித்த சங்கின் முனைபோன்ற பகன்றையின் அரும்புகள் மழைத்துளியால் மலரும்படியான தைத் திங்களின் கடைநாளில் ஞாயிறும் மறையும் படியான பனி வாடையுள்ள வைகறைப் பொழுதில், மேகமானது விசும்பு தோலுரிப்பதுபோல் ஆகாயத்தில் தென்புலமாகச் செல்லும்படியான இரவுக் காலத்துத் தனியளாய் அவ்விரா வெள்ளத்தை நீந்தி தன்னூரில் உள்ளாள். நாமோ எனின் பகைமதிற்கதவம் குத்தி மழுங்கிய கோட்டினையுடைய யானையின் மணியோசையும், கழியொடெட்டிய தோலாகிய கேடகத்து அம்புகள் தைப்ப எழும் ஓசையும் முரசவொலியோடு முழங்கும் யாமத்தில் உறையினின்றும் கழித்து மீளச் செயாத வாளுடைய வலியதோலுடைய இரவில் தூக்கம் மறந்த சேனைகளுடன் வலிய சினமிக்க வேந்தனின் பாசறையிடத்தேம்.

தளைபிணி யவிழாச் சுரிமுகிழ்ப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலருந்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குன் மாமழை சேண்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமிய ணீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் யாமே
கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
நுதிமுக மழுங்கிய மொண்ணை வெண்கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா வெண்மணி
கழிப்பிணிக் கறைத்தோற் பொழிகணை யுதைப்பத்
தழங்குரன் முரசமொடு மயங்கும் யாமத்துக்
கழிந்துறை செறியாவாளுடை யெறுழ்ந் த்தோ
ணிரவித்துயின் மடிந்ததானை
யுரவுச் சினவேந்தன் பாசறையேமே''

(அகம்—24)

இதனுட் கணையுதைப்ப முரசொடு மயங்கும் யாமத்துத் துயின் மடிந்து வாளுறை செறியாத் தானையையுடைய வேந்தனெனவே வென்றிக் காலங் கூறியவாறும் கிழவி நிலை உரைத்தவாறுங் காண்க.

பருவங் கண்டும் தூதுகண்டும் கூறியவை 'பாசறைப் புலம்பலும்' (41) என்புழிக் காட்டினாம்.

பூப்புக் காலத்துப் பரத்தையர்ப் பிரிவு

185. பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான. (46)

பி.இ.நூ.

இறை. கள. 43

பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தா றன்றே.

இறை. கள. 43 உரையில்

பூப்பு முதல் முந்நாள் புணரார் புணரின்

யாப்புறு மரபின் ஐயரும் அமரரும்
யாத்த கரணம் அழியும் என்ப.

நம்பியகம் 91

பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் ஈராறு நாளும்
கருவயிற் றுறூஉம் காலம் ஆதலின்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

இல: வி. 499

நம்பியகச் சூத்திரமே.

இளம்

இதுவுமது.

இ-ள்: பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் விட்டு அகன்றுறைவாரல்லர் என்று சொல்லுவர் பரத்தையிற் பிரிந்த காலத்து என்றவாறு.

பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்றுநாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு. இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றுங் காலம் என்க.

நச்

இது, பரத்தையிற் பிரிவின்கண் தலைவற்குந் தலைவிக்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: பரத்தையிற் பிரிந்த காலையான-பரத்தையிற் பிரிந்த காலத்தின்கணுண்டான, பூப்பின்நீத்து - இருதுக் காலத்தின்கட் சொற்கேட்கும் அணுமைக்கண் நீங்கியிருந்து புறப்பாடு ஈராறு நாளும் அகன்று உறையார் என்மனார் புலவர். அவ்விருதுக் காலத்தின் புறக்கூறாகிய பன்னிரண்டு நாளும் இருவரும் பிரிந்துறையாரென்று கூறுவர் புலவர் என்றவாறு.

என்றது, பூப்புத் தோன்றிய மூன்று நாளுங் கூட்டமின்றி அணுகவிருந்து அதன் பின்னர்ப் பன்னிரண்டு நாளுங் கூடியுறைப என்றதாம்.

தலைவியுந் தலைவனுந் தனித்தும் இருத்தலிற் பிரிந்துறையார் எனப் பன்மையாற் கூறினார்.[1]

---

1. தலைவன் தலைவியைப் பிரிதலின் தலைவி தனித்தும் பிரிந்த தலைவனும் தனித்தும் உறைதலின் அதாவது

இனிப் பூப்பின் முன்னாறுநாளும், பின்னாறு நாளுமென்றும் பூப்புத் தோன்றிய நாள் முதலாகப் பன்னிரண்டு நாளுமென்றும் நீத்தல் தலைவன் மேல் ஏற்றியும் அகறலைத் தலைவி மேல்ஏற்றியும் உரைப் பாருமுளர்.[1] பரத்தையிற் பிரிந்த காலத்துண்டான பூப்பெனவே, தலைவி சேடியர் செய்ய கோலங் கொண்டு பரத்தையர் மனைக்கட் சென்று தலைவற்குப் பூப்புணர்த்துதா லுங் கொள்க. இது,

''அரத்த முடீஇ யணிபழுப்புப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூட்டிப்-பரத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும்.''

(திணை-நூற்-144)

தோழி செவ்வணியணிந்து விட்டமை தலைவன் பாங்காயினார் கூறியது.

இக் காலத்தின் கண் வேறுபாடாக வருவனவெல்லாம் ஈண்டு அடக்கிக் கொள்க.

பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளுங் கருத்தங்கில் அது வயிற்றில் அழிதலும், மூன்றாநாள் தங்கில் அது சில் வாழ்க்கைத்தாகலும் பற்றி முந்நாளுங் கூட்டமின்றென்றார். கூட்டமின்றியும் நீங்காதிருத்தலிற் பரத்தையிற் பிரிந்தானெனத் தலைவி நெஞ்சத்துக் கொண்ட வருத்தம் அகலும். அகல வாய்க்குங்கரு மாட்சிமைப்படுமாயிற்று. இது மகப்பேற்றுக் காலத்திற்குரிய நிலைமை கூறிற்று. இதனாற் பரத்தையிற் பிரியுநாள் ஒருதிங்களிற் பதினைந்தென்றாராயிற்று. உதாரணம் வந்துழிக் காண்க. 'குக்கூ' (குறுந்-157) என்பதனைக் காட்டுவாருமுளர்.

சிவ.

இச் சூத்திரம் தலைவன் தலைவியைப் பிரிந்துறையா நாள் இன்னதென வரையறுக்கின்றது.

இ-ள் பூப்பு வெளிப்பட்ட நாள் முதலாகப் பன்னிரண்டு நாள்களிலும் தலைவன் தலைவியை அணுக இருந்தும் நீங்கியோ

இருவர்க்கும் பிரிவு இருத்தலின் உறையான் என ஒருமையிற் கூறாது உறையார் எனப் பன்மையிற் கூறினார்.

1. உரைப்பார் யார் என்பது தெரியவில்லை.

அணுக இராது தொலைவில் பிரிந்தோ உறைதல் இல்லை. இவ்வரையறை எப்போது எனின் பரத்தையிற் பிரிந்த காலத்து என்க.

எனவே அணிமையிலோ தொலைவிலோ பரத்தையிற் பிரிந்த தலைவன் தலைவியின் பூப்பு உணர்த்தப்படின் பரத்தையின் நீங்கித் தலைவியிடம் உடன் உறைதல் வேண்டும் என்பது கூறியவாறு.

நச்சினார்க்கினியர், பூப்பின் நீத்துப் புறப்பாடு ஈராறு நாளும் அகன்று உறையார் எனக் கூட்டியது தேவையற்றது.

ஓதற் பிரிவுக்காலம்

186. வேண்டிய கல்வி யாண்டுமூன்று இறவாது. (47)

பி. இ. நூ.

நம்பியகம் 89.

ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே.

இல. வி. 457.

நம்பியகச் சூத்திரமே.

இளம்.

இதுவும்மது.

இ-ள்: விரும்பப்பட்ட கல்விக்கட் பிரியும் காலம் மூன்றி யாண்டின் மிகாது என்றவாறு. எனவே ஓரியாண்டாயினும் ஈரியாண்டாயினும் ஆம் என்பது கொள்ளப்படும்.

நச்.

இஃது 'ஓதலுந்தூதும்' (26) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய ஓதற் பிரிவிற்குக் காலவரையறையின்றென்பதூஉம் அவ்வோத்து இதுவென்பதூஉம் உணர்த்துகின்றது.

*இதன் பொருள்: கல்வி வேண்டியாண்டு இறவாது- துறவறத்தினைக் கூறும் வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது, மூன்று இறவாது-அக்கல்வியெல்லாம் மூன்று பதத்தைக் கடவாது என்றவாறு.

---

* நச்சினார்க்கினியரின் இவ்வுரை வலிந்த உரையாகும் கற்பியலில் இல்லறவொழுக்கம் பற்றியன கூறல்வேண்டு

'இறவாது' என்பதை இரண்டிடத்துங் கூட்டுக. மூன்று பதமாவன: அதுவென்றும் நீயென்றும் ஆனாயென்றுங்கூறும் பதங்களாம். அவை பரமுஞ்சீவனும் அவ்விரண்டும் ஒன்றாதலு மாதலின் இம்மூன்று பதத்தின் கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளை உணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்து கொள்க. இது மூன்று வருணத்தார்க்குங் கூறினார். ஏனைய வேளாளரும் ஆகமங்களானும் அப் பொருளைக் கூறிய தமிழானும் உணர்தல் 'உயர்ந்தோர்குரிய' (31) என்பதனான் உணர்க. இஃது இல்லறம் நிகழ்த்தினார் துறவறம் நிகழ்த்துங் கருத்தினராக வேண்டுதலின் காலவரையறை கூறாராயினர். முன்னர்க் காட்டிய 'அரம் போழல்வளை' (அகம்-125) என்னும் பாட்டினுட்

''பானாட் கங்குலின் முனிய வலைத்தி
கடவுளர் சான்ற செய்வினை மருங்கிற்
சென்றோர் வலவரி னோடுவை''

என்றது, இராப்பொழுது அகலாது நீட்டித்ததற்கு ஆற்றா ளாய்க் கூறினாளென்று உணர்க.

துணைவயிற் பிரிவுக்காலம்

187. வேந்துறு தொழிலே யாண்டினது அகமே. (48)

பி. இ. நூ.

இறை. கள. 41

பிரிவின் நீட்டம் நிலம்பெயர்ந் துறைவோர்க்கு
உரிய தன்றே யாண்டுவரை யிறத்தல்.

இல.வி. 458

தூதிற் பிரிவும் துணைவயிற் பிரிவும்
பொருள்வயிற் பிரிவும் ஓர்யாண் டுடைய.

வதேயன்றி துறவறத்துக்குரிய கல்விப் பிரிவு கூறுதல் பொருந்தாது. தத், த்வம், அசி (தத்துவமசி) எனும் மூன்று பதங்களின் பொருளுணர்ந்தவன் அது கொண்டு வீடுபேற்றுக்கு முயல்வன் ஆதலின் இல்லறவொழுக்கத் திற்பிரியும் பிரிவுபற்றிக் கூறுமிடத்து அத்துறவு பற்றிக் கூறுதல் ஏற்புடையதாகாது—சிவ.

இளம்.

இதுவும் அது.

இ—ள்: வேந்துறு தொழிலாவது பகைதணி வினை. வேந்தற்குற்றவழி தூது காவல்[1] என அவ்வழிப் பிரிவிற்கும் ஆண்டினது அகமே காலம் என்றவாறு.

எனவே அறுதிங்கள் முத்திங்கள் எல்லாம் கொள்ளப்படும்.

நச்

இது, வரையறையுடைமையிற் பகைவயிற் பிரிவிற்கு வரை யறை கூறுகின்றது.

இதன் பொருள்: வேந்து உறுதொழிலே-இருபெரு வேந் தருறும் பிரிவும், அவருள் ஒருவற்காக மற்றொரு வேந்தனுறும் பிரிவும், யாண்டினது அகமே-ஓர்யாண்டினுட்பட்டதாம் என்ற வாறு.

'வேந்துறு தொழில்' என்பதனை இரட்டுறமொழிதல் என்பதனான், வேந்தனுக்கு மண்டிலமாக்களுந்தண்டத் தலைவரு முதலியோர் உறும் பிரிவும் 'யாண்டினதகம்' எனவும் பொருளு ரைக்க. 'தொழில்' என்றது அதிகாரத்தாற் பிரிந்து மீளும் எல்லையை. அது 'நடுவுநிலைத்திணையே நண்பகல் வேனிலொடு' (9) என்பதனாற் பிரிவிற்கோதிய இருவகைக் காலத்துள்ளும் முதற்கணின்ற சித்திரை தொடங்கித் தையீறாகக் கிடந்த பத்துத் திங்களுமாம். இனிப்பத் தென்னாது, யாண்டென்றதனாற் 'பின்பனிதானும்' (10) என்பதனாற் கொண்ட சிறப்பில்லாத பின்பனிக்குரிய மாசி தொடங்கித் தையீறாக யாண்டு முழுவ- தூஉங் கொள்ளக்கிடந்த தேனும் அதுவும் பன்னிரு திங்களுங் கழிந்ததன்மையின் யாண்டினதகம் ஆமாறுணர்க. இதற்கு இழிந்த எல்லை வரைவின்மையிற் கூறாராயினர். அது,

> ''இன்றே சென்று வருவது நாளைக்
> குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக''[2]
> (குறுந்-184)

எனச் சான்றோர் கூறலின்.

---

1 தூது காவல் இவ்விரண்டும் 'ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும்' என அடுத்துவரும் சூத்திரத்தில் அடங்கு மாதலின் இங்குக் கூறப்பட வேண்டுவதில்லை.

2. பொருள்: வலவ! இன்றே சென்று நாளையே நாம் வருவதாகும். அதனால் மலையிலிருந்து இழியும் அருவி போல வெள்ளிய தேரானது விரைந்து செல்க.

''நிலநாவிற்றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலநாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்காற்
சுடர்நுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை''[1]

(கலி-35)

இது, பின்பனியிற் பிரிந்து இளவேனிலுள் வருதல் குறித்த லின் இருதிங்கள் இடையிட்டது.[2]

''கருவிக் காரிடி யிரீஇய
பருவமன்றவர் வருது மென்றதுவே''[3]

(அகம்-139)

இது, கார் குறித்து வருவலென்றலின் அறுதிங்கள் இடை யிட்டது.

'வேளாப் பார்ப்பான்' (அகம்-24) என்பது 'தைஇ நின்ற தண்பெயற் கடைநாட்...பனியிருங் கங்குல்' என்றலின் யாண் டென்பதூஉம், அது கழிந்த தன்மையின் அஃது அகமெனவும் பட்டதென்பதூஉம் தலைவன் வருதுமென்று காலங் குறித்ததற் கொத்த வழக்கென்றுணர்க. காவற் பிரிவும் வேந்துறு தொழி லெனவே அடங்கிற்று.[4] தான் கொண்ட நாட்டிற்குப் பின்னும் பகையுளதாங்கொலென்று உட்கொண்டு காத்தலின்.

---

1. பொருள்: விளங்கிழாய்! பிரிந்தவர் வருமளவும் ஆற்றி யிருப்போமோ இறந்துபடுவோமோ எனப் பலவாறாக நாடும் நெஞ்சம் வருந்த அவரைப் பிரிந்து செல்ல விடுத்தபோது அவர்மீண்டு வருவதாகக் குறித்த காலம், உலகத்தார் நாவிற் புகழ்ந்து பேசப்படும் மதுரையில் உள்ள மக்கள், புலவர் நாவிற் பிறக்கும் புதிய பாடல் களை நுகரும்படியான இளவேனிற் காலமன்றோ?

2. பாலைக்குப் பின்பனிக்காலம் உரியது. ஆதலின் இவ் வாறு கூறினார். அடுத்த கார்ப்பருவம்பற்றியதையும் இவ்வாறே கொள்க.

3. பொருள்: தலைவன் மீண்டு வருவேம் என்று குறித்துக் கூறிய மின்னல் தொகுதியுடைய இடியுடன் இருத்தப் பட்ட கார்ப்பருவம் அன்று இப்பருவம்.

4. காவற் பிரிவை வேந்துறு தொழிலில் அடக்குதலினும் 'ஏனைப் பிரிவு' என அடுத்துவரும் சூத்திரத்தில் கொள்வது நன்று.

பிற பிரிவுக்காலம்

188. ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும். (49)

பி.இ.நா.

முன் சூத்திரத் துள்ளனவே.

இளம்.

இதுவுமது.

இ-ள் : ஒழிந்த பொருள்வயிற் பிரிவிற்கும் காலம் யாண்டி னது அகம் என்றவாறு.

நச்.

இஃது எஞ்சிய பிரிவிற்கு வரையறை கூறுகின்றது.

இதன் பொருள்: ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்- கழிந்து நின்ற தூதிற்கும் பொருளிற்கும் பிரிந்து மீளும் எல்லை யும் யாண்டினதகம் என்றவாறு.

உதாரணம்

''மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்
பாடுலந் தன்றே பறைக்குர லெழிலி
புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை
நெடுங்குலைப் பிடவமொ டொருங்கு பிணியவிழக்
காடே கம்மென்றன்றே யாறே
கோடுடைந்தன்ன கோடற் பைம்பயிர்ப்
பதவின் பாவை முனைஇ மதவுநடை
யண்ணனல் லேறுமா பிணை தழீஇத்
தண்ணறல் பருகித் தாழ்ந்து பட்டன்றே
யனையகொல்வாழி தோழிமனைய
தாழ்வி னொச்சி சூழ்வன மலரும்
மௌவன் மாச்சினை காட்டி
யவ்வள வென்றோ ராண்டுச் செய்பொருளே''[1]

(அகம்-23)

---

1. பொருள்: தோழீ! பறை போலும் ஒலிமிக்க மேகம் நிலம் குளிரும்படி மழை பெய்து ஒலியடங்கியது. புதர் மேல் படர்ந்த செம்முல்லைக் கொடியினது சிதல் முள் போலும் அரும்புகள் பிடவ அரும்புகளோடு முறுக் கவிழ்ந்து மலரக் காடானது கம் என மணம்கமழ்ந்தது.

இது, பொருட் பிரிவின்கட் கார் குறித்து ஆறு திங்கள் இடையிட்டது.

'நெஞ்சு நடுக்குற' என்னும் பாலைக்கலி (24)யுள்

''நடுநின்று, செய்பொருண் முற்றுமளவென்றார்'' என்ற லின் எத்துணையும் அணித்தாக மீள்வலென்றதாம். இவற் றிற்குப் பேரெல்லை வந்த செய்யுள் வந்துழிக் காண்க.

நீராடல் நுகர்ச்சி

**189. யாறுங் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப. (50)**

பி.இ.நூ.

நம்பியகம் 90

......கடும்புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியும் குளனும்
ஆடிவிளை யாடலும் கூடும் கிழத்திக்கு.

இல. வி. 462

நம்பியகச் சூத்திரமே.

இளம்.

இது தலைவற்குங் கிழத்திக்கு முரியதோர் மரபு உணர்த் திற்று.

இ-ள்: யாறுங் குளனும் காவும் ஆடி என்பது-விளையாட்டு என்று கொள்க.

உதாரணம்

''அருந்தவ மாற்றியஃ றுகர்ச்சிபோ லணிகொள'' என்னும் பாலைக்கலியுள்,

---

கோடற் பயிரோடு அறுகம்புற் கிழங்கையும் உண்டு வெறுத்த ஆண்மான்கள் தம் பெண் மான்களைத் தழுவி தண்ணீர் பருகி ஓரிடத்துத் தங்கி விட்டன. தலைவன் தான் பொருள் செயப் பிரியுங் காலத்தில் நம்மனை யிடத்து முல்லை படர்ந்த நொச்சிக்கிளைகளைச் சுட்டிக் காட்டி யான் சென்று பொருளீட்டி மீளும் காலம் இந்நொச்சி மலரும் கால அளவினதேயாம் என்று கூறினார். அக்காலம் இதுவோ; அன்றி வேறோ.

"துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னே;'
(கலித்-30)

என்று தலைவன் பதியிகந்து நுகர்ந்தமை தலைவி கூறியவாறு காண்க.

நச்.

இது, தலைவற்குங், காமக்கிழத்தியர்க்குந் தலைவியர்க்கும் உரியதோர் மரபு கூறுகின்றது.

(இ-ள்): யாறும் குளனும் காவும் ஆடி-காவிரியுந் தண்பொருனையும் ஆன்பொருனையும் வையையும் பேலும் யாற்றிலும் இரு காமத்திணையேரி போலும் (பட்டினப்-39) குளங்களிலும், திரும்மருதந் துறைக்காவே போலுங் (கலி-25) காக்களினும் விளையாடி, பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப- உறை பதியைக் கடந்துபோய் நுகர்ச்சி யெய்துதலுந் தலைவற்குங் காமக்கிழத்தியர்க்குந் தலைவியர்க்கும் உரிய என்றவாறு.

ஏற்புழிக் கோடலால் தலைவியர்க்குச் சிறுபான்மை யென்றுணர்க.

"கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்வு நெரிதந்த
சிறையழி புதுப்புனலாடுக
மெம்மொடுங் கொண்மோ வெந்தோள்
புரை புணையே"[1]
(ஐங்குறு-78)

இது, காமக் கிழத்தி நின்மனைவியோடன்றி எம்மொடு புணை கொள்ளின் யாமாடுதுமென்று புனலாட்டிற்கு இயைந்தான் போல மறுத்தது.

"வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழைத்
திதலை யல்குற்றுயல்வருங் கூந்தற்

1. பொருள்: தலைவ! நின்மனைவியொடு ஆடுவதை விட்டு எம்மொடு எம்தோளையே புணையாகக் கொண்டு ஆடவருவாயாயின், ஒளியுடைய இலைபோலும் வேலுடைய கடிய குதிரையுடைய கிள்ளியின் பகைவர் மதிலையழிக்கச் செல்லும் யானையைப்போல விரைந்து வன்மையுடன் கரையை யழிக்கும்படி வரும் புதுப் புனலில் யாம் நீராடுவோம்.

குவளை யுண்கணேஎர் மெல்லியன்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணையாயின ளெமக்கே''[1]

(ஐங்-72)

இது, தலைவி புலவி நீங்கித் தன்னொடு புனலாடல் வேண்டிய தலைவன், முன் புனலாடியதனை அவள் கேட்பத் தோழிக் குரைத்தது.

''வண்ணவொண்டழை'' (ஐங்குறு-73)

''விசும்பிழி தோகை'' (ஐங்குறு—74) இவையும் அது.

''புனவளர் பூங்கொடி'', என்னும் மருதக்கலி (92)யுள்

''அன்ன வகையால் யான்கண்ட கனவுதான்
நன்வாயாக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன் மினீடிப்
பிரிந்தீர் புணர்தம்மினென்பனபோல
வரும்பவிழ் பூஞ்சினை தோறுமிருங்குயி
லானாதகவும் பொழுதினான் மேவர
நான் மாடக்கூடன் மகளிருமைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந்தாடுமா
ரானாவிருப்போடணியயர்பகாமற்கு
வேனில் விருந்தெதிர்க் கொண்டு''[2]

என்னுஞ் சுரிதகத்துக் காவிற் புணர்ந்திருந்தாட நீயுங் கருதெனத் தலைவன் தலைவிக்குக் கூறியவாறு காண்க.

---

1. பொருள்; தழையுடையுடுத்த அல்குலும், கூந்தலும், உண் கண்ணும் அழகும் மெல்லியலும் உடைய தலைவி களவுக் காலத்தில் மலர்களைச் சுமந்து புதுநீர் வந்த தாக எமக்குப் புனலாடுதற்குப் பொருந்திய புணையாக ஆயினாள்.

2. பொருள்: நன்னுதல! ''பல மாண்புண்டாகப் புணர்ந் தோரே பிரியாதீர். புணர்ச்சி நீட்டித்துப் பிரிந்தோரே இனிக்கூடுமின்'' என்று கூறுவனபோலக் கருங்குயில் கள் பூங்கொம்புகளில் இருந்து தம் பெடைகளை அழைக்கும் இளவேனிற் பொழுதின்கண் காமனுக்கு விருந்திடுதல்வர எதிர்கொண்டு கூடல் மகளிரும் கணவரும் சோலையில் கூடியிருந்து விளையாடும் பொருட்டு அணி அணிவர். ஆதலின் பிரிதலும் புணர் தலும் ஆகிய பகுதியால் யான் கண்ட கனவு நல்ல உண்மையாம்படி மனதாலே நினைப்பாயாக.

சிறந்தது பயிற்றல்

190. காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே. (51)

பி.இ.நூ.

நம்பியகம், இல. வி. 112

மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து
மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழி
தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்ப.

இளம்.

இது தலைவற்கும் தலைவிக்கும் உரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்) சிறந்தது பயிற்றலாவது-அறத்தின் மேல் மன நிகழ்ச்சி.

*சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

நச்.

இது முன்னர் இல்லற நிகழ்த்திய தலைவனுந், தலைவியும் பின்னர்த் துறவற நிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது.

(இ-ள்): கிழவனும் கிழத்தியும்-தலைவனுந் தலைவியும் சுற்றமொடு துவன்றி – அறம்புரி மக்களொடு உரிமைச் சுற்றத்தோடே கூடிநின்று இல்லறஞ் செய்தலை விரும்பிய மக்களோடே, சான்ற காமங்[1] கடைக்கோட் காலை-தமக்கு முன்னரமைந்த காமத்தினையுந் தீதாக உட்கொண்ட காலத்

---

* சூத்திரப் பொருள்: தலைவனும் தலைவியும் தம் காம இன்பத்துக்குரியன யாவும் துய்த்து மனநிறைவு பெற்ற காலத்து அவ்வாறே இன்பம் நிறைந்த முடிவுள்ள மற்றைய மக்களொடு சேர்ந்து தம்போல் முன்னரே துறவறத்தை மேற்கொண்டுள்ள சுற்றத்தாரோடு சிறந்ததாகிய வீடுபேற்றுக்குரிய அறத்தைப் பயிலுதல் கடந்த கால இல்லறத்தின் பயனாம் என்றவாறு.—சிவ.

1. காமம் சான்ற என்பதைச் சான்ற காமம் என மாற்றியது தவறு. பெயரெச்சச் சொல் இறுதியில் வராது.

திலே, சிறந்தது ஏமஞ்சான்ற பயிற்றல்—அறம் பொருளின் பத்திற் சிறந்த வீட்டின்பம் பெறுதற்கு ஏமஞ்சான்றவற்றை அடிப்படுத்துதல், இறந்ததன் பயனே—யான் முற்கூறிய இல்லறத்தின் பயன் என்றவாறு.*

'சான்ற காமம்' என்றார் நுகர்ச்சியெல்லாம் முடிந்தமை தோன்ற. இது கடையாயினார் நிற்கும் நிலையென்று உரைத்தற்குக் 'கடை' என்றார். ஏமஞ் சான்றவாவன; வானப்பிரத்தமுஞ் சந்நியாசமும்; எனவே, இல்லறத்தின் பின்னர் இவற்றின் கண்ணே நின்று பின்னர் மெய்யுணர்ந்து வீடு பெறுப என்றார். இவ்வீடு பேற்றினை இன்றியமையாது இவ்வில்லறமென்பது இதன் பயன். இது காஞ்சியாகாதோவெனின் ஆகாது [தங்குறிப்பினானன்றி நிலையாமை தானே வருவது தான் சிறந்து நிலைபெற்று நிற்குமெனச் சான்றோர் கூறுதலும் அது தானே வந்து நிற்றலுங் காஞ்சி. இஃது அன்னதன்றிச் சிறந்த வீட்டின்ப வேட்கையால் தாமே எல்லாவற்றையும் பற்றுறத் துறத்தலின் அகப் பொருட் பகுதியாம்]. இதனானே இவ்வோத்தினுட் பல வழியுங் கூறிய காமம் நிலையின்மையின்மேல் இன்பத்தை விளைத்தே வருதலிற் காஞ்சியாகாமை யுணர்க.

உதாரணம்

''அரும்பெறற் கற்பினயிராணியன்ன
பெரும்பெயர்ப் பெண்டிரெனினும்-விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற் பாரின்மையே பேணு
நறுநுத லாணன்மைத் துணை[1].''

(நாலடி-381)

இதனுள், அருந்ததியைப் போலுந் (?) தமக்குப் பெரும் பொருள்களை நச்சுதலாலே இரப்பாரது வறுமையே விரும்பிப்

உண்டு சென்றான் என்பது 'சென்றான் உண்டு' என எச்சம் மாறும். உண்ட சோறு என்பது 'சோறு உண்ட' எனப் பெயரெச்சம் மாறாது.

* நச்சினார்க்கினியரின் இவ்வுரையும் விளக்கமும் வலிந்து கொள்ளப்பட்டன.

1. பொருள்: பெறுதற்கரிய கற்பினையுடைய இந்திராணி போலும் பெரிய புகழுடைய பெண்டிராய் இருந்தாலும் அவருள், பொருளைப் பெறும் பெருவிருப்பத்தால் தன்னை இரந்து பின்னிற்பவரின் வறுமையை விரும்பிக் காக்கும் (போக்கும்) நன்னுதலாளே கணவன் அடையும் நல்லதற்குத் துணையாவாள்.

பாதுகாத்து, அவர்க்கு வேண்டுவன கொடுக்கும் மகளிர்—நாஞ் செல்கின்ற வானப் பிரத்த காருகத்திற்குத் துணையாவரெனத் தலைவன் கூறவே தலைவியும் பொருள்களிற் பற்றற்றாளாய் யாமுந் துறவறத்தின் மேற்செல்வாமெனக் கூறியவாறு காண்க. பிறவும் வந்துழிக் காண்க.[1]

வாயில்கள்

191. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப. (52)

பி. இ. நூ.

நம்பியகம் 68.

கொளைவல் பாணன் பாடினி கூத்தர்
இளையோர் கண்டோர் இருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி அறிவர்
காமக் கிழத்தியர் காதற் புதல்வன்
விருந்து ஆற்றாமை என்று இவை ஊடல்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் தாமே.

இல. வி. 436.

நம்பியகச் சூத்திரமே.

இளம்

இது கற்பின்கண் வாயில்களாவாரை யுணர்த்திற்று.

இ—ள்: பாட்டி என்பது பாடினி என்றவாறு. தோழி முதலாகச் சொல்லப்பட்ட பன்னிருவரும் வாயில்கள் ஆவார் என்றவாறு.

நச்

இது, வாயில்களைத் தொகுத்து அவருந் துறவிற்கு உரியா ராவர் என்கின்றது.

---

1. மேற்பாடலைத் தலைவன் தலைவியிடம் கூறியதாகக் கொண்டு இவ்வாறு எழுதினார்.

(இ-ள்): தோழி-அன்பாற் சிறந்த தோழியும், தாய்-அவளே போலுஞ் செவிலியும், பார்ப்பான்-அவரின் ஆற்ற லுடைய பார்ப்பானும், பாங்கன்-அவரே போலும் பாங்கனும், பாணன் - பாங்குபட்டொழுகும் பாணனும், பாடினி-தலைவி மாட்டுப் பாங்குபட்டொழுகும் பாடினியும், இளையர்-என்றும் பிரியா இளையரும், விருந்தினர் - இருவரும் அன்பு செய்யும் விருந்தினரும், கூத்தர்-தலைவற்கு இன்றியமையாக் கூத்தரும், விறலியர்-தாமே ஆடலும் பாடலும் நிகழ்த்தும் விறலியரும், அறிவர்-முன்னே துறவுள்ளத்தராகிய அறிவரும், கண்டோர்-அவர் துறவு கண்டு கருணை செய்யுங் கண்டோரும், யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப-இந்தத் தலைவனுந் தலைவி யும் பெற்ற துறவின் கண்ணே மனம் பிணிப்புண்ட சிறப்பினை யுடைய வாயில்களென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

என்றது, இவர் அத்துறவிற்கு இடையூறாகாது முன் செல்வர். தாமும் அவரைப் பிரிவாற்றாமையினென்பதாம். இதனைக் 'கற்புங் காமமும்' என்னுஞ் (152) சூத்திரத்து முன்னாக வாயில்களைத் தொகுத்துக் கூறிய சூத்திரமாக வைத்தல் பொருத்தமுடைத்தேனும் 'யாத்த சிறப்பின்' என்ற துறவு நோக்குதலின் இதன்பின் வைத்தார். இதற்குக் கோப்பெருஞ் சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதா ரணம் என்றவாறு.

வினைமுற்றிய தலைவன் வருகை

192. வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கின் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி யுதவும்
புள்ளியற் கலிமா வுடைமை யான. (53)

இளம்

இது, வினைமுற்றி மீண்ட தலைவற்குரியதோர் மரபு உணர்த்திற்று.

சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

'இடைச்சுர மருங்கிற்றவிர்தலில்லை' என்பது வழியில் இடையிற்றங்காது இரவும் பகலுமாக வருமென்பது கருத்து. தங்குவானாயின் மனையாள் மாட்டு விருப்பின்றாம்.

உதாரணம்

''இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன்றல்லது வந்தவாறு
நனியறிந்தன்றோ இலனே தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின்சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்ற நின்மொழி மருண்டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட்டினையோ
மானுரு வாகநின் மனம்பூட்டினையோ
உரைமதி வாழியோ வலவஎனத்தன்
வரைமருள் மார்பின் நளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழையோளே''[1]

(அகம்–384)

எனவரும். பிறவும் மன்ன.

கற்பியல் முற்றிற்று

நச்.

இது, பிரிந்து மீளுங்காற் செய்யத் தகுவதோர் இயல்பு கூறுகின்றது.

இ–ள்: வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை– யாதானுமோர் செய்வினையிடத்துப் பிரிந்தோன் அதனை முடித்து மீண்டுவருங்காலத்து, இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை—எத்துணைக் காதம் இடையிட்டதாயினும் அவ்விடையின்கணுண்டாகிய ஒருவருவழியிடத்துத் தங்கிவருத லில்லை. உள்ளம் போல உற்றுழி உதவும்-உள்ளஞ் சேட்புலத்தை ஒருகணத்திற் செல்லுமாறு போலத் தலைவன் மனஞ் சென்றுற்ற விடத்தே ஒருகணத்திற் சென்று உதவி செய்யும், புள்இயல் கலிமா உடைமையான–புட்போல நிலந்தீண்டாத செலவினை யுடைய கலித்த குதிரையுடையனாதலான் என்றவாறு.

தேருங் குதிரையாலல்லாது செல்லாமையிற் குதிரையைக் கூறினார். இஃது இடையில் தங்காது இரவும் பகலுமாக வருதல் கூறிற்று. இதனை மீட்டுக்கெல்லை கூறிய சூத்திரங்

1. பொருள் புக்கம் 68ல் காண்க.

களின் பின்வையாது ஈண்டுத் துறவு கூறியதன் பின்னர் வைத்தார். இன்ப நுகர்ச்சியின்றி இருந்து அதன் மேல் இன்ப மெய்துகின்ற நிலையாமை நோக்கியும், மேலும் இன்பப் பகுதி யாகிய பொருள் கூறுகின்றதற்கு அதிகாரப்படுத்தற்கு மென்றுணர்க.

உதாரணம்

* ''வேந்து வினைமுடித்த காலைத்தேம் பாய்ந்
தினவண் டார்க்குந் தண்ணறும் புறவின்
வென்வேலினையரின்புறவலவன்
வள்புவவித்தூரி னல்லதை முள்ளூறின்
முந்நீர் மண்டில மாதியாற்றா
நன்னல்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வாங்குசினை பொலிய வேறிப்புதல
பூங்கொடியவரைப் பொய்யதளன்ன
வுள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கியன்ன தாழ்பெருஞ் செவிய
புன்றலைச் சிறாரோடுகளிமன்றுழைக்
கவையிலை யாரினிளங்குழை கறிக்குஞ்
சீறூர் பல்பிறக்கொழியமாலை
யினிது செய்தனையா லெந்தைவாழிய
பனிவார் கண்ணள் பலபுலந்துறையு
மாய்தொடி யரிவை கூந்தற்
போதுகுரலணிய வேய்தந்தோயே''

(அகம்-104)

---

* பொருள்: எந்தையே! வேந்தன் தன் போர் வினையை முடித்த பின்னர் முல்லைநிலத்தே வேல்வீரர் யாவரும் இன்பம் அடைய நீ பாகன் கடிவாளத்தை இழுத்துச் செலுத்தன் அல்லது தாற்றுக்கோல் உறுத்தின் இவ் வுலகம் முழுதுமே புறப்பாட்டின் தொடக்க இடமாகும். என்னும்படி விரையும் நல்லநான் குதிரைகள் பூட்டப் பட்ட நெடியதேரில் கொடிஞ்சி விளங்க ஏறி, உள்ளீடற்ற அவரைத் தோல்போலும் வயிற்றையும் தொங்கிய செவியையும் உடைய வெள்ளை ஆட்டுக் குட்டிகள் புன்தலைச் சிறுவரோடு துள்ளி மன்றத் துள்ள ஆத்தித் தழையைக் கறிக்கும்படியான சீறூர்கள் பல கடந்து வந்து இம் மாலைக் காலத்தில் நீர்த்துளி வார்ந்த கண்ணனாய்ப் பலவாக வெறுத்துத் தனித் துறையும் தலைவியின் கூந்தலில் மலர் சூட்டினாய். இனியதொன்றை நீ செய்தாய்: வாழ்க.

இதனுள், வினைமுடித்த காலைத் தேரிளையர் செலவிற் கேற்ப ஊராது கோன்றூன்றின் உலகிறந்தன செலவிற்குப் பற்றாத குதிரைத் தேரேறி இடைச்சுரத்தில் தங்காது மாலைக் காலத்து வந்து பூச்சூட்டினை இனிது செய்தனை எந்தை வாழிய எனத் தோழி கூறியவாறு காண்க.

'இருந்த வேந்த னருந்தொழின் முடித்தென' என்னும் அகப்பாட்டி (284)னுள்

"புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறியதல்லது வந்தவாறு
நனியறிந்தன்றோவிலனே
இழிமினென்ற நின்மொழி மருண்டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட்டினையோ
மானுருவாக நின்மனம் பூட்டினையோ
வுரைமதி வாழியோ வலவ"

என 'உள்ளம் போல உற்றுழி உதவிற்று' எனத்[1] தலைவன் கூறியவாறு காண்க.

கற்பியல் நச்சினார்க்கினியர் உரை முடிந்தது.

---

1. பொருள் பக்கம் 68ல் காண்க.

பின் இணைப்பு

கற்பியல்-ஆங்கில மொழிபெயர்ப்பு

சி.இலக்குவனார்

A. KARPU IYAL

140. 'Karpu' is said to be that 'would-be-husband' will have his 'would-be-wife' being given by those who are legally entitled to do so with the usual ceremony.

141. The marriage will take place even without the givers when they (Bridegroom and wife) resort to elopement.

142. There was a time when the ceremony enjoined to the people of upper class was followed by the lower class also.

143. It is said that after falsehood and failure appeared (in the conduct of love) the leaders of the society caused ceremony to be held.

144. After the ceremony is being held in conformity with tradition, during the act of union freed from mental reservation; at the time of having endless joy; while having rights being, feared; at the benefit of good conduct coming traditionally; while pointing out the action of commission and omission in daily life; after having established the honour of the country in which they are born; after having worshipped benevolent God saying it would help in time of fear; at the pleasure talk of themes which will help to tide over the difficulties; when the lady-love touches the rice and flour on his extolling "that the things of bitter taste would be like ambrosia of heavenly being if touched by your hand"; while pointing out the conduct towards the saints, the great men and others who are virtuous; while having conversation with a sorrowful heart, lamenting the dearness of her contact in the conduct of secret love; at the behaviour of dispelling the fault that took place as a letter written in

the sky; on two themes requesting her, not to be disheartened and not to be feared; during the period in which he harmed her at having the fitness of being patient and great on her part because of him with the help of messengers; when joining her at the time of delivery after she having finished the ceremony of taking oil bath; doing the acts of holiness towards saints and celestiels; at his pleading by the act of caressing her small feet with the thought of embracing her; losing his balance of mind, on his approach towards the lady-love who was lying in the bed suffering from want of his embrace, having embraced the pillows; at the act of clearing her doubts about his conduct with the help of other ladies as she is in the state of picking love-quarrels; at the act of uniting the two who are lamenting during the separation; at his fearing of affliction during the separation; on thinking of her again after having left her because of love-quarrel; at the excess power of love; at the fear when being left by her; at the stage of harming her; at the talk of the maid exhibiting her ignorance regarding the elopement and such other actions; at having infliction while leaving for foreign country; at the stage of reviewing the possible ways of returning; at having gain and honour during separation; on talking to the famous driver of the car; while replying to sorrowful words of wife and paramour; while describing his state of ritual in the foreign country; at his desire of having good things with the guest, during the eventful hour he had finished his arduous duty; at the welcoming of ladies, sons and daughters, and relatives having garlands in their hands; and at the reply to the other mediators in love affairs-these are the thirty three occasions which belong to the great honoured lover for making expressions.

145. At paying tributes to him for she knows well his ability; at controlling him; at showing love deviat-

ing not from honour towards the husband who gave liberty; at the intense love which created sorrow at his separation; at the time of pleasure and pain; at the despised state of the husband who wanted to be present at the ceremony of the child-birth and who was grieved at heart for not being allowed to do so; at the mercy shown at the time of the return of her husband who had gone to the house of his parmours for enjoying their fresh beauty describing her loneliness and refusing admission; at the act of begging her husband to speak to her sisters while bowing to him who is in the habit of staying with his parmour; at the act of sending him away when he is not in a mood of getting cut; at the end of the play which the parmour (who had married him) had with her son joyfully; being good at heart, at his action of wishing to dispel her sorrow by his appearance in his house, without being seen by her, when some grand function takes place; while approaching him despising the son for they say that the sons resemble fathers; at the propriety of pointing out his fault, when he joined the party of his friends without fearing the harm of those who are cruel to her; at the nobility of the wife who wished the action of his falling down at her feet to be seen by the sisters in love; when the parmour of vanity thought of the son who is wearing beautiful ornaments and who is being respected and loved by the mother; while holding the son to her as though he were imprisoned; while allowing him to go to him (father); while taking traditional vow of harmful nature; on themes where love-lorn ladies ('Kama-kkilaththiyar') are extolled to such an extent as to end it bitterness; on themes where the maid speaks of the bad conduct of thelover; on many themes where the lady, without deviating from faultless virtue, is in the state of hating, fondling, separating and loving the lord and on themes of varied nature that the go-bet-

weens may cause, the expressions of the lady take place-so they say.

146. The act of expressing kind words, referring to the things found in the desert and to his action on the part of the wife who has eloped with him and who is now in the house will betray her fear about the action undertaken by her husband.

147. The poets say that the above expressions may take place even when the go-betweens including the maid are sent (to him).

148. On the honour of undefiling disposition which he possesses after the completion of the great achievement of rare nature; when saying about the end of the sufferings; on the duty of thanks-giving towards the God whom the ladylove prayed to help her for getting over the difficulties; when he forgets her on undertaking the task of noble ideals; on the theme of showing him being controlled in his conduct when she is disheartened of his uncontrolled conduct; on the act of presenting the wife to him when he has returned after committing the fault (of having contact with his paramour); when she makes salutations in the words of adoration; when he is engaged in the enjoyment of plays (with the paramour) outside the house; when she laments not having received the honoured son sent by him (husband) to pacify her; on the act of entreating him to revive her (lost) excellence of grace; on the theme of being ashamed of his undesirable conduct when she suffers on hearing his vow of tactful nature; when she fails to respect him saying the conduct of the great people is great; on the act of putting away the love-quarrel, having taken sides with the wife who is absorbed in the freigned-dis like of her husband; at the propriety of admonition having stood by him for bringing her to senses as she is bent upon the love-quarrel that cannot be

got over easily; at the state of being pitiful by making herself unaccessible during the period in which she is to be easily accessible; at the act of replying to the requests of musicians, actors and dancing women; at the act of sending him away mercilessly with the idea of safeguarding him in the domestic life against his estrangement; and (including) at the act of the traditional retort when he leaves her, all these expressions of classified nature belong to the maid friend-say the poets.

149. At the occurrence of love-quarrel ('pulavi') either on the part of the wife or on the part of the 'Kamakkilaththi'; at the act of reproach; at the act of rejoicing when seeing his many sons; when having sorrow which developed limitlessly on hearing the action of the wife who had married secretly; when making the wife join the husband without being angry after advising her as a mother because of the courage of unfailing duty and love; when having messenger after she adorned the smiling son with the jewels and embraced him; when thinking of herself highly among the ladies of the same status; at the plays which are planned and at such other-the 'Kamakkilaththiyar' will have the occasions for making expressions.

150. Chastity, love, the good behaviour, the patience of tender nature, magnanimity, entertaining the guests promptly, supporting the relations and such others are the excellences of the wife, the talking of which to the husband by way of introduction belongs to the 'Vayils' who have the right of entering into the house and moving with her.

151. They say that it is the duty of the foster-mother to speak of good things and to prevant bad ones in accordance with the past, future and present.

152. The expression of the above said nature belongs to the learned men also.

153. To make them behave within the moral code by admonition belongs to them, for the husband and wife stand by their advice.

154. The husband will have feigned dislike and discord towards the wife when she is beyond his pacification and when he fails to know her signals (dur ing the period of secret love.)

155. At these two occurrences of 'pulaththal' (feigned dislike) and 'udal' (discord) the maid-friend will have the right of making expressions.

156. The maid-friend will have the right of saying 'you are wicked' at the face of the lover for preventing him from going astray while the lady-love is in the habit of feigning ignorance over his aotions.

157. The expression, betraying their difference (of opinion) may occur when she wants to know the mind of the husband and when the feigned dislike finds no limit.

158. The husband will have the expression showing his obedience when he is in excessive love, for it is her nature to adore him always.

159. The expression, pregnant of love which begets mercy, may be said in an obviously impressive way by the lady-love also.

160. The secret love and married love are not without scandal.

161. The excessive love springs forth from scandal.

162. The play of the husband is of the same nature in producing the excessive love.

163. The 'vayils' have no liberty of speaking about the wickedness of the husband to the wife.

164. In the presence of the wife, the expression of helplessness may take place when it benefits her.

165. Addressing the lover in third person who is in front of them belongs to all 'Vayils' when they seek to have their requests granted.

166. Speaking of the old traditions, praising highly of the enjoyment, pacifying the feigned love-quarrel by all means, emphasising the benefit of the domestic life, advising him to behave as being worthy of his knowledge, making him understand his fault, putting forth the reasons citing examples, and describing the ways of beautification are the functions of the actors.

167. The time of leaving the place and that of returning to the place are the themes of expression belonging to the actors and musicians.

168. The nature of the routes, the result of the action, the execution of the command, the question and the answer, things found in the route, fauna and flora of the place and such others which may occur are the subjects of the themes pertaining to the young attendants.

169. The services in the immediate presence, the protection, and the behaviour worthy of their superiors are all which also belong to them.

170. The poets say that when the first wife who was married in accordance with the ancient tradition, welcomes the second wife who is credited with great wealth, and when the first wife enters the house having her son as a mediator, the husband may repent for his past actions and feel remorse.

171. They say that the good wife of the house may have him in her embrace after admonishing him, as a mother, when he is mad after her embrace.

172. As it is said that the duty of the wife is to safe guard him against ill-fame, she has to respect the honour of the co-wife, who is to be considered the mother of her son, and her honour is her self-honour for the command of the lord is such as laid down in the scriptures.

173. They will not take their wives to the war-camp.

174. With others outside the 'Aham' this rule will not be applicable.

175. The speech about the state of love, the condition of the car, the intention of the lord, the omen of the cow, the time for out-going, and stopping the departure and such others is the theme where the seers make expressions.

176. All the 'vayils' will have as their object making the two (husband and wife) happy.

177. If the expression depicting no love occurs, it is to be made when the lover is in the out-skirts of the house-premises.

178. The expression of self-praising will not be made by the wife in the presence of the husband in any way except those two already mentioned.

179. The self-praising of the husband in the presence of the wife is proper when he goes on his duties.

180. Speaking against the words of the lord is appropriate on the part of the male-friend.

181. The reply on assumption is rare.

182. When the wife is found to be grieved at the departure of her husband he shall not depart until she is consoled (by his assertions).

183. The interruption in his going is not the stopping of his going. It is only a break in his journey for consoling his wife.

184. They will not say about the state of the wife when he is engaged in his duty; such sayings will occur at the time of success.

185. When he is away from the wife for having intimacy with the paramour, he must not live without his wife for the twelve days after the menstruation-say the poets.

186. The required education does not exceed three years.

187. The service undertaken for the sake of the king ends within a year.

188. The other separations also are in the same nature.

189. It is said that the enjoyment in sports and games pertaining to the river, tank and park outside the town-limit is due to them.

190. After the enjoyment of love is fulfilled, being surrounded by the pleasure-giving children and having the virtuous relatives with them the husband and the wife must perform what is best for the world and die for it; this is the way of reaping benefit of this life.

191. The 'vayils' who have the honour of being attached to them are 'Tholi' (maid friend) 'Thay' (foster-mother) 'Parppan' (seer) 'Pangan' (male friend) 'Panan' (Musician) 'Padini' (lady-musician), young attendant, guests, 'Kuththar' (actors) 'Viraliyar' (dancing girls) 'Arivar' (learned men) and 'Kandor' (on-looker).

192. When the lover who has gone to perform some duty returns, he will not be hindered in the middle of the journey, for he is in possession of the horses which help him in times of need just as his mind, flying fast like birds.

பயன்பெற்ற நூல்கள்

இலக்கண விளக்கம், *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973*

இறையனார் அகப்பொருள் (களவியல்), *தெய்வப் புலமை நக்கீரனார் அருளிய உரையுடன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.*

தமிழ்நெறி விளக்கம், *(பதி.), உ. வே. சாமிநாதையர், உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, சென்னை, 1947.*

தொல்காப்பியம்—பொருளதிகாரம், இளம்பூரணம், *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.*

தொல்காப்பியம்—பொருளதிகாரம்-முதற்பாகம், நச்சினார்க்கினியம், *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1935.*

தென்னூல் விளக்கம், *(பதி.), டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.*

நம்பி அகப்பொருள், *சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1966.*

Tholkappiam (in English) with Critical studies, S. Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai, 1963.

சூத்திர முதற்குறிப்பகராதி

(எண். பக்க எண்)

சொல், தொடர் அகராதி

(எண். பக்க எண்)

—6—

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன
தொல்காப்பிய உரைவள வெளியீடுகள்

			ரூ. பை.
1.	தொல்காப்பியம்-பொருளதிகாரம்—	அகத்திணையியல்	60—00
2.	தொல்காப்பியம்-சொல்லதிகாரம்	எச்சவியல்	45—00
3.	,, ,,	உரியியல்	20—00
4.	,, ,,	இடையியல்	22—00
5.	,, ,,	வினையியல்	20—00
6.	,, ,,	பெயரியல்	12—00
7.	,, ,,	விளிமரபு	6—00
8.	,,	வேற்றுமை மயங்கியல்	12—00
9.	Tolkappiam Phonology Morphology		25—00